www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

# இலங்கையின் இன, வர்க்க முரண்பாடுகள்



குமாரி ஜெயவர்த்தன

படிப்பகம்

www.padippakam.com

நன்றி - நூலகத்திட்டம்

# இலங்கையின் இன, வர்க்க முரண்பாடுகள்

ETHNIC AND CLASS CONFLICTS IN SRI LANKA

சென்ற 100 ஆண்டுகளில் சிங்கள-பௌத்த விழிப்பு நிலையின் சில பண்புகள்

ஆங்கிலத்தில் :
குமாரி ஜெயவர்த்தன

தமிழில் ;
சித்திரலேகா
நித்தி
செ. க.

விற்பனை உரிமை :

பாரி நிலையம்

184, பிராட்வே : : சென்னை-600 108.

படிப்பகம்

www.padippakam.com

நன்றி - நூலகத்திட்டம்

முதற் பதிப்பு ; செப்டம்பர், 1987

(C)

விலை : ரூபா 12/-

வெளியீடு:

குமரன் பதிப்பகம்

13/2, கஜபதி தெரு,

சென்னை-5,

அச்சிட்டோர் :

வேளாங்கன்னி அச்சகம்

சென்னை-17

# பொருளடக்கம்

1. இன உணர்வும் சிங்கள விழிப்பு நிலையும் .... 1

2. கிறிஸ்தவ எதிர்ப்பியக்கம் .... 9

3. முஸ்லிம்களுக்கு எதிரான சிங்கள வர்த்தகர்களின் ஆர்ப்பாட்டம் .... 17

4. தொழிலாளர் வர்க்கத்தினரிடையே இன ஒற்றுமை (1890-1930) .... 24

5. வர்க்க, இன உணர்வுகளும் மலையாளத் தொழிலாளர்களும் .... 39

6. பெருந்தோட்டத் தொழிலாளரின் அரசியல் உரிமைகள் (1928-1948) .... 59

7. சிங்களம் மட்டும் சட்டத்திலிருந்து இனக் கலவரத்தை நோக்கி .... 93

8. மார்க்ஸிஸத்திலிருந்து மேலாதிக்க வெறியை நோக்கி .... 117

9. மக்கள் விடுதலை முன்னணியும் இனப் பிரச்சினையும் .... 131

10. 1970களில் சிங்கள பௌத்தக் கருத்தியலின் மேலாண்மை .... 142

11. இன உணர்வின் தொடர்ந்த நீடிப்பு .... 153

படிப்பகம்

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

# அறிமுகம்

இந்நூலில் பதினொரு கட்டுரைகள் உள்ளன. 'லங்கா கார்டியன்' இதழில் இவை வெளிவந்தன. சிறு திருத்தங்களுடன் இங்கு வெளியிடப்படுகிறது. இலங்கையின் இனக் குழுக்களிடையான முரண்பாடுகளுக்கும் அவற்றைத் தேக்கி வளர்க்கும் கருத்தியல் (Ideology) களுக்கும் இடையிலுள்ள இயல்பைப் புரிந்து கொள்ளும் நோக்குடனேயே இக்கட்டுரைகள் 1984-ல் எழுதப்பட்டன.

பெரும்பான்மைச் சிங்களவருக்கும் மற்றைய இனத்தவருக்கும் இடையில் 100 ஆண்டு காலத்தில் ஏற்பட்ட முரண்பாடுகளைப் புரிந்து கொள்வதும் சிங்கள - பௌத்த விழிப்பு நிலையின் பரிணாமத்தை அறிவதுமே என் நோக்கமாகும்: தேசிய சுதந்திரக் கோரிக்கைக்கு ஆரம்பத்தில் இவை அடிப்படையாக அமைந்து, ஒரு கால கட்டத்தில் காலனி ஆதிக்கத்திற்கு எதிராக இருந்தது. துரதிஷ்டவசமாக இவ்விழிப்பு நிலை பின்னர் சிங்கள இனவெறியுடன் இணைந்து பிற இனங்களைக் கடுமையாகத் தாக்கியது. பிரச்சனையின் இப்பண்புகளையே என் ஆய்வுக்கு எடுத்துக் கொண்டேன்.

சென்ற 100 ஆண்டுகளில், நீண்ட இடைக் காலங்களில் இலங்கையில் இன அமைதி நிலவியது. பல இனங்களும் வர்க்க நலனில் இணைந்து, இன வேறுபாடுகளை மறந்திருந்தனர். அதனால் வர்க்க உணர்வு நிலையின் வளர்ச்சியை இங்கு கூறியுள்ளேன்: பின்னர் இன உணர்வு, வர்க்க உணர்வை மீறும் அளவிற்கு வளர்ச்சியடைந்து சிங்கள தமிழ் மக்களின் எல்லா வர்க்கங்களிடையேயும் இனப் பகைமை ஏற்பட்டது.

பொருளாதார, கருத்தியல் மாற்றங்களால் ஏற்பட்ட இனமுரண்பாட்டின் யதார்த்தத்தையும் அதன் வரலாற்றுப் பின்னணியையும் புரிந்துகொள்வதே இவ்ஆய்வின் நோக்கம். இன முரண்பாட்டிலிருந்து விடுதலை பெற்ற, ஒன்றிணைந்த சமுதாயத்திற்கு வழிவகுப்பதற்குரிய தடைகளை நீக்குவதில் இவ்வாய்வு உதவும் என நம்புகிறேன்.

கொழும்பு,
ஆகஸ்டு 1985

குமாரி ஜெயவர்த்தன

# இலங்கையின் இன, வர்க்க முரண்பாடுகள்

## 1. இன உணர்வும் சிங்கள விழிப்பு நிலையும்

நூறு வருடங்களுக்கு முன்னர், 1883 ஆம் ஆண்டில், கொழும்பு நகரின் தெருக்களில் பௌத்தரும் கத்தோலிக்கரும் ஒருவரோடு ஒருவர் சண்டையிட்டுக் கொண்டிருந்தனர். 1983 ஆம் ஆண்டு ஜூலையில் இலங்கையின் சமீபகால வரலாற்றிலேயே மோசமான இனவெறித்தீ சுவாலை விட்டெரிந்தது. ஆனால் இம்முறை இது தமிழருக்கெதிராக சம்பவித்தது. இத்தகைய நிகழ்ச்சிகளும், இதேபோல் சிறுபான்மையினருக்கு எதிரான ஏனைய வன்செயல் அனுபவங்களும், காலனித்துவ ஆட்சிக் காலத்திலும் அதற்குப் பின்னரும் இச்செயல்கள் தொடர்வதற்கான காரணங்களை அறியத் தூண்டுகின்றன. அது மட்டுமன்றி எல்லா வர்க்கத்தினர் மத்தியிலும் இன உணர்வு வளர்ந்தமைக்கும் சகல இனங்களையும் சேர்ந்த தொழிலாளர் மத்தியில் வர்க்க உணர்வு வீழ்ச்சியடைந்தமைக்குமான காரணங்களை ஆராயவும் வேண்டியுள்ளது. இலங்கையில் மத, மொழி, இன அடிப்படையில் மக்கள் மத்தியில் வேறுபாடுகள் நிலவின,

பெரும்பான்மையினர் மதத்தால் பௌத்தராகவும், இனத்தால் சிங்களவராகவும் உள்ளனர். ஆனால் சிங்களவரல்லாத சிறுபான்மையினர் 26 சதவீதமாகவும் பௌத்தரல்லாதோர் 33 சதவீதமாகவும் உள்ளனர். கடந்த நூறு வருடங்களில் சிங்களவரல்லாதோர் பௌத்தரல்லாதோர் என்றெல்லாம் அழைக்கப்பட்டோருக்கு எதிராக வன்செயல்கள் ஏவிவிடப்பட்டன.



படிப்பகம்

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

சிங்கள பௌத்த மேலாதிக்கமானது சகல சிறு பான்மையிருக்கும் எதிராக எவ்வாறு தொடர்சியாக வெளிப்படுத்தப்படுகிறது என்பதனையும் சமயத்தாலும் இனத்தாலும் சிறுபான்மையினராய், இருந்தவர்களுக்கு எதிராக இம்மேலாதிக்கம் எத்தகையை வடிவத்தில் செயற் பட்டது என்பதனையும், இந்த சிங்களபௌத்த சித்தாந்தம் இன்று இலங்கையின் சகல சமூக வர்க்கங்களின் மத்திலும் எத்தகைய ஆதிக்கம் வகிக்கிறது என்பதனையும் பற்றி இந்த ஆய்வு சுருக்கமாகப் பரிசீலனை செய்கிறது.

## அன்மைய கருத்துகள்

சிங்கள-பௌத்த உணர்வின் சமீபகாலத் தன்மையை ஆராய்வதற்கு 1970 களிலிருந்து தமிழருக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட பிரசாரங்களும் வெளியிடப்பட்ட பிரசுரங்களும் முக்கிய சான்றுகளாக அமையும். இத்தகைய பிரசுரங்களில் அடிக்கடி கையாளப்படும் கருத்துக்கள் சிங்கள பௌத்தர்கள் அல்லது தமிழரல்லாத ஏனைய சிறு பான்மையினரும் முன்னைய காலகட்டத்தில் முரண்பட்டுக் கொண்டபோது கையாளப்பட்டவை என்பது குறிப் பிடத்தக்கது. இப்பிரசுரங்களிற் காணப்படும் அடிக்கருத்து களைப் பொதுவாக பின்வருமாறு பாகுபடுத்தலாம்.

சிங்கள இனமே முதன்மையானதும், உயர்ந்த இனமு மாகும் என்ற கருந்தோட்டம்; சிங்கள இனமே இலங்கைத் தீவின் உண்மையான ஆதிக்குடிகள் என்ற கருத்துடனும் வங்கத்திலிருந்து குடிபெயர்ந்து வந்த ஆரியரே சிங்களவர் கள் என்ற ஐதீகத்துடனும் இக்கருத்தோட்டம் இணைந் துள்ளது. 1980ல் வெயிடப்பட்ட பிரசுரம் ஒன்று பின் வருமாறு கூறுகிறது :

1. ''சிங்கள இனம் இரண்டாயிரத்தைந் நூறு வருடங் களுக்கு மேற்பட்ட சான்றுதாரமுள்ள தொடர்ச்சி யான வரலாற்றைக் கொண்டது. இலங்கைச் சிங்களவரின் வரலாற்றைவிடப் பழைமையான வரலாறு வேறொன்று மில்லை. இலங்கை



சிங்களவருக்குரியது என்ற கருத்து வெறும் வாய் மொழி மரபாக வழங்கும் ஐதீகங்களையோ கட்டுக் கதைகளையோ அடிப்படையாகக் கொண்டதல்ல. பண்டைய குகைச் சாசனங்கள், மாபெரும் பௌத்த தூபிகள், விகாரைகள், பாறைகளிற் செதுக்கப்பட்ட புத்த பெருமானின் உருவச் சிலைகள், மிகப்பெரிய குளங்கள், நீர்ப்பாய்ச்சல் முறைமைகள் யாவும் சிங்கள இனத்தினதும் சிங்கள தேசத்தினரும் பாரம்பரியத்துக்கு அசைக்க முடியாத சான்றுகளாகும்...''

—கௌத கொட்டியா ? புலிகள் யார் ?
திகதியிடப்படாதது 1980

2. இலங்கைத்தீவு அபாயத்திற்குள்ளாகி யிருக்கிறது என்ற இரண்டாவது கருத்தோட்டம் மேற் கூறப் பட்டதுடன் தொடர்ப்புடையதாகும். இலங்கை யில் வாழும் சிறுபான்மை இனத்தவர்கள் அனே வரும் பிறநாடுகளில் இனரீதியான நெருக்கம் கொண்டிருக்கும்போது சிங்களவர்கள் மாத்திரமே இலங்கையை விட்டால் வேறு போக்கிடம் இல்லாத நிலையில் இப்பிராந்தியத்தில் சிறுபான்மை யினராக உள்ளனர் என்ற அச்சத்திலிருந்து இக் கருத்தோட்டம் உருப்பெற்றுள்ளது.

சிங்களவருக்கு தாய்நாடு என்று கூறுவதற்கு இலங்கையைவிட வேறு நாடு எதுவும் இல்லை. இந்திய தொழிற் சங்கத் தலைவர்கள் 'போரா' வியாபாரிகள், பெரும்பான்மையான தமிழ்த் தொழிலாளர் யாவரும் இலங்கையை ஒரு தங்கச் சுரங்கமாகவே கருதுகின்றனர். இங்கிருந்து பணத்தை உழைத்து இந்தியாவில் தமது பிள்ளை கள், உறவினர் பெயரில் பெரிய வீடுகளையும் நிலங்



படிப்பகம்

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

களையும் வாங்குகின்றனர். இவர்கள் யாவரும் இலங்கையில் ஒரு காலும், இந்தியாவில் ஒரு காலு மாக வாழ்கின்றனர். இலங்கை தங்கச் சுரங்க மாக இருக்கிறது என்பதில் மட்டும் தான் இவர் களுக்கு அக்கறை. இவர்களுக்கு சிங்கள கலாச் சாரம், சிங்கள மொழி, பௌத்தமதம் என்ப வற்றின்மீதோ பாரம்பரியமான சிங்கள மக்களின் மீதோ எத்தகைய அனுதாபமும் அக்கறையும் இல்லை.

- சிங்களயாகே அதிசி ஹத்துற - சிங்களவரின் கண்ணுக்குத் தெரியாத பகைவர் - 1970

3. பௌத்த சமயத்தின் பாதுகாவலர் சிங்களவரே. பௌத்தத்தை பௌத்தரல்லாதோரிடமிருந்து காப்பாற்ற வேண்டுவதும், பௌத்த சின்னங் களையும், பௌத்த சமயத்தையும் பேண தர்ம யுத்தம் செய்யும்படி அழைப்பதுமாகும் :

''சிங்கள இனத்துக்கும் பௌத்தத்துக்குமுள்ள தொடர்பு வேறுபடுத்திப் பார்க்க முடியாத அளவுக்கு மிகவும் நெருக்கமானது. சிங்களவரின்றி பௌத்தம் இல்லை, பௌத்தமின்றி சிங்களவரில்லை என்ற நிலைக்கு வளர்ந்துள்ளது. இது எவ்வாறு யினும் மறுக்க முடியாத உண்மையாகும். சிங்கள வரின் இலக்கியம் பௌத்த இலக்கியமே. சிங்கள வரின் வரலாறு பௌத்தத்தின் வரலாறுகும்- சிங்கள மொழி புத்தரின் போதனையால் வளம் பெற்றது. சிங்களவருடைய சகாப்தம் என்பது பௌத்த சகாப்தமேயாகும். சிங்கள கலாசாரம் பௌத்த கலாசாரமாகும். சிங்களவரின் கொடி பௌத்த சிங்களக் கொடியாகும்.''

''பௌத்தத்தின் நிலைபேற்றுடன் சிங்கள நாகரிக மும் பண்பாடும் புதிய வளர்ச்சி நிலை பெற்றன.



சிங்கள மக்களின் வாழ்வு பௌத்தத்தால் வழி நடத்தப்படத் தொடங்கியது. எனினும் சில ஆண்டுகளின் முன்னர், சிங்கள பௌத்தத்தை எதிர்க்கும் காட்டுமிராண்டிகளால் எமது விலை மதிப்பற்ற தொல்பொருட்களையும் புத்த கோயில் களையும் அழித்தொழிக்கும் இயக்கம் ஆரம்பிக்கப் பட்டது ..''. ''இனத்தின் சுதந்திரத்திற்காகவும் மதத்தின் மகத்துவத்திற்காகவும் தமது உயிரை அர்ப்பணித்த எமது முன்னோர்களும், எதிர்காலச் சந்ததியினரும் எமது மௌனத்திற்காக எம்மைச் சபிப்பார்கள் என்பதில் ஐயமில்லை. இவ்வேளை யாவது இனத்தின் பெயரால், எமது முன்னோரின் பெயரால், எமது எதிர்காலச் சந்ததியின் பெய ரால் இன்றைய நிலைமைபற்றி விழிப்படைவோம்''

- சிங்களுனி புத்த சகன பேரகெனி (சிங்களவரே பௌத்த சமயத்தைக் காப்பாற்றுங்கள்-1981)

இத்தகைய கருத்துகளின் அடிப்படையிலே சிங்கள பௌத்த கோட்பாடானது இலங்கை, சிங்கள பௌத்தர் களின் நாடு என்றும் இங்கு வசிக்கும் ஏனையோர் ''அந்நியர் கள்'' என்றும், நாட்டையும் நாட்டு மக்களையும் தமது இலாபத்திற்காகச் சுரண்டுபவர்கள் என்றும், சிங்கள- பௌத்த மக்களின் புனிதத்துவத்திற்கும் ஒருமைப்பாட்டுக் கும் பக்கம் விளைவிப்பவர்கள் என்றும் கருதுகின்றது. இக் குற்றச்சாட்டுகள் தற்போது தமிழருக்கெதிராகக் கூறப் வது பற்றி அண்மைய பிரசுரமொன்றிலிருந்து தெரியவரும்.

''இந்தச் சிங்களவரல்லாத சிறுபான்மையினர், தமது சொந்த மண்ணின் மீது சிங்கள மக்களுக் குரிய உரிமையை மிகவும் அநீதியான முறையில் அழிக்க முயல்வது மாத்திரமல்லாது ஐயமற்ற அப்பாவிச் சிங்கள மக்களுக்கும் வேறு பல அநீதிகளை இழைத்துவருகின்றனர்'' — புலிகள் யார்?



படிப்பகம்

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

## பிற அநீதிகள்

அப்பாவிச் சிங்களமக்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட வேறும் பல அநீதிகளில், முக்கியமான இரு அநீதிகள் இன்று காணப்படுகின்ற சிங்கள-பௌத்த உணர்வை வளப்படுத்தியதில் பெரும் பங்கு வகிக்கின்றன.

(அ) அந்நியருக்கு அல்லது சிறுபான்மையினருக்குச் சொந்தமான வாணிபம், சிங்களவரின் தொழில் முயற்சிகளைக் குன்றச் செய்துவிட்டது. எனவே அந்நிய வியாபாரிகளுக்கெதிராக நடவடிக்கை எடுக்கும் படியும் சிங்கள வியாபாரிகட்கு சலுகை வழங்கும்படியும் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன.

"இது ஒரு நேர்மையான தேசிய அரசாங்கமாயிருப்பின் இந்தியர்களின் செல்வாக்கினுல் பாதிக்கப்பட்ட சிங்கள வியாபாரிகளின் துரதிர்ஷ்ட நிலையை விசாரிக்க ஓர் ஆணைக்குழுவை நியமித்து நிவாரண நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். இந்நாட்டின் பெருந்தோட்டங்களையும், வர்த்தகத்தையும் கட்டுப்படுத்தும் அந்நியர், இந்தியர் ஆகியோரால் சிங்களவருக்கு ஏற்படும் அபாயத்தைத் தடுப்பதற்காக அவர்களை இந்த மண்ணிலிருந்தே விரட்டியடிக்க வேண்டும்"

"கொழும்பு மத்திய சந்தையில் (புறக்கோட்டை) நடைபெறும் வியாபாரத்தில் உள்நாட்டுச் சிங்கள வியாபாரிகட்கு ஐந்து சதவீதமாவது சொந்தமில்லை. இந்த வியாபாரம் எல்லாம் இந்தியர், போரா (Borahs) இனத்தவர், சிந்திக்காரர் ஆகியோரின் கைகளிலேயே உள்ளது."

"ஏற்றுமதி இறக்குமதி வர்த்தகம் முழுவதும் அந்நியர் ஆதிக்கத்திலுள்ளது. கொழும்புக் கோட்டையிருந்து வெள்ளவத்தைக்குக் காலி வீதி



வழியாகச் செல்லும் ஒருவர் அவ் வீதியின் இரு மருங்கிலும் சிந்திக் கடைகள் எத்தனை இருக்கின்றன எனக் காணமுடியும். இவ்வர்த்தக நிலையங்கள் யாவும் 1948 ஆம் ஆண்டு இலங்கையில் சுதந்திர அரசு நிறுவப்பட்டதன் பின்னரே ஆரம்பிக்கப் பட்டவையாகும்"

-சிங்களவரின் கண்ணுக்குத் தெரியாத பகைவர்கள் — 1970.

(ஆ) சிங்களவரல்லாதோர், அரசாங்க பதவிகள், பல்கலைக் கழக அனுமதி முதலியவற்றில் அதிக இடம் பெறுகின்றனர் எனப் பரவலானஅபிப்பிராயம் ஒன்று உண்டு. எனவே பல்கலைக்கழக அனுமதி போன்றவை இன விகிதாசாரப்படி வழங்கப்பட வேண்டும் என ஆலோசனை கூறப்பட்டது. தமிழர்கள் திருட்டுத்தனமாகப் பல்கலைக் கழகத்துக்கு அனுமதிக்கப்படுகின்றனர் எனப் பின்வரும் பிரபலமான பிரசுரம் ஒன்று கூறுகிறது.

"பேராதனைப் பல்கலைக்கழகம் ஆரம்பித்த நாளிலிருந்து இந்நாட்டின் சாதாரண மக்கள் வைத்தியம், பொறியியல் போன்ற துறைகளில் கல்வி கற்கும் வாய்ப்பை இழந்துவிட்டனர். அப்படியானுல் வேறு யார்தான் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் படிக்கின்றனர்? தமிழர்கள்தான்."

"கல்வி வாய்ப்புகள் சிங்களவரின் இயல்பான உரிமைகள் என்ற கருத்து எல். எச். மேத்தானந்த, கலாநிதி எவ். ஆர் ஜயசூரிய, கே. எம். பி. ராஜரட்ண போன்றவர்களால் பிரபலப் படுத்தப் பட்டது. அதனுல் அவர்கள் இன வெறியர்கள் என்றும் தூற்றப்பட்டனர். பத்தேகம விமலவன்ச, தேவமொட்டாவ அமரவன்ச போன்ற புத்த பிக்குகள் பெரும்பான்மை இனத்துக்கு இழைக்கப்படும் இத்தகைய அநீதிகளை எடுத்துக் காட்டியபோது அவர்கள் நகைப்புக்கும் தொல்லைக்கும் உள்ளா



படிப்பகம்

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

னர். பெரும்பான்மைச் சமூகம் எவ்வாறு ஏமாற்றப் பட்டது என்பதை இன்றுதான் உணர்ந்துள்ளது'' (திருட்டு வழிகளில் பல்கலைக்கழகப் பிரவேசம், 1970) ''...வைத்தியம், பொறியியல், விஞ்ஞானப் பீடங்களுக்கும் ஏனைய பீடங்களுக்கும் அனுமதி பெறும் எல்லாத் தமிழ் மாணவர்களும் தகுதியற்ற முறையில் பெறும் புள்ளிகளாலேயே பல்கலைக்கழக அனுமதி பெறுகிறார்களா? என்று முக்கியமான கேள்வி தவிர்க்க முடியாமல் எமது சிந்தையில் எழுகின்றது. இது ஒரு எரியும் பிரச்சினை மட்டுமல்ல; எமது சிங்கள மாணவர்கள், பெற்றோர், ஆசிரியர் ஆகியோரின் இதயத்தை வெடிக்கச் செய்யும் வேதனைமிக்க ஒரு வினவுமாகும்.''

(நாசகார சதித்திட்டம்) திகதியிடப்படாதது. (1980)

இத்தகைய சமீபகால சிங்கள-பௌத்த உணர்வும் சிறுபான்மையினரின் எதிர்ப்புணர்வும் வெளிப்பட்ட விதத்தை விளங்கிக் கொள்வதற்குச் சில வரலாற்று நுண்ணாய்வுகள் அவசியமானவையாகும். ஏறக்குறைய சிங்களவரின் கருத்தியல் ஒன்றாகவே இருந்தபோதிலும் எதிர்ப்புக்கு இலக்கான சிறுபான்மை இனங்கள் காலத்துக்குக் காலம் வேறுபட்டன என்பதை இத்தகைய வரலாற்று விளக்கம் காட்டும்.

இலங்கையின் வெவ்வேறு வர்கத்தினரிடையே வெவ்வேறு கால கட்டங்களில் இன, மதப் பகைமைகள் விரிவடைந்ததென்பது குறிப்பிடத் தக்கதாகும். இத்தகைய பகைமைகள் குட்டி பூர்ஷ்வா அடிப்படை கொண்டவையாயிலும் சில சமயங்களில் இவை சிங்கள பூர்ஷ்வாக்கள் மத்தியிலும் சிங்கள தொழிலாள வர்க்கத்தினரிடையேயும் காணப்பட்டன. இதனை விளக்குமுகமாக சிங்கள பௌத்தருக்கும் நான்கு வெவ்வேறு சிறுபான்மையினருக்கும் இடையே சச்சரவுகள் ஏற்பட்ட கால கட்டங்களை முதலில் எடுத்து ஆராய்ந்து அவற்றை வர்க்க முரண்பாடுகளுடன் தொடர்புபடுத்த முயல்கிறேன்



## 2. கிறிஸ்தவ எதிர்ப்பியக்கம்

ஏகாதிபத்திய எதிர்ப்புணர்வுடன் எல்லா இனங்களையும் ஒன்றிணைக்கும் விடுதலைப் போராட்டம் இலங்கையில் நசிவுற்றமைக்கான காரணங்களில் ஒன்று, இலங்கையின் இன, மத பூசல்களாகும். காலனித்துவ காலகட்டத்தில் இத்தகைய பூசல்கள் பல தடவைகள் தொழிலாளர்களின் வர்க்க உணர்வைப் பலவீனப்படுத்தின. அவர்களது சக்தியை வர்க்க எதிரிகள் பக்கம் திருப்புவதற்குப் பதிலாக சிறுபான்மையினருக்கு எதிராகத் தவறான வழியில் திருப்பிவிட்டன. மூன்றாம் உலக நாடுகளில் மத, கலாசார மறுமலர்ச்சி, தேசியத்தின் ஆரம்ப கட்டமாக இருந்தபோது, (இலங்கையில் 19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும், 20ஆம் நூற்றாண்டின் முற்பகுதியிலும்) பௌத்த மறுமலர்ச்சி மதம், கலாசாரம், மதுவிலக்கு சுலோகங்களைக் கிருஸ்தவ மதத்திற்கு எதிராகத் தூண்டிவிட்டது காலனித்துவ அரசை எதிர்ப்பதற்குப் பதிலாக கிறிஸ்தவ மிசனரிமாரின் குறைகளும் செயல்களுமே எதிர்ப்புக்குரியதாயின. இக் கிறிஸ்தவர்களில் பெரும்பாலானோர் ஏழைச் சிங்களவரும் தமிழருமே. யதார்த்தமான பிரச்சனையிலிருந்து திசை திருப்பப்பட்ட தேசிய உணர்வின் வெளிப்பாடாகவே கிறிஸ்தவ எதிர்ப்பியக்கம் அமைந்தது.

எவ்வாறாயினும் காலனித்துவ இலங்கையில் அந்நிய உள்நாட்டு கிறிஸ்தவர்கள் (கத்தோலிக்க, புரட்டஸ்தாந்து மொத்த குடித்தொகையில் பத்துச்சத விகிதத்திற்கு குறைந்தவரே. ஆயினும் கிறிஸ்தவ உயர் வகுப்பினரே அரசியலில் முதன்மை வகித்து, சமூகத்தில் கௌரவமான அந்தஸ்தும் பெற்றிருந்தனர். சில உதாரணங்களைக் காட்டலாம்: 1983 ஆம் ஆண்டிலிருந்து 1912 வரை கரையோரச் சிங்களவரில் அரசால் நியமிக்கப்பட்ட பிரதிநிதிகள் (ஒருவரைத் தவிர) யாவரும் புரட்டஸ்தாந்து கிறிஸ்தவர்கள். சிங்கள, தமிழ் உத்தியோகத்தர்கள், தொழிற்றுறை உடைமையாளர், அரசாங்க சேவையினர் யாவரும்



படிப்பகம்

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

கிறிஸ்தவ பாடசாலைகளில் கல்வி கற்றவர்களே. அரசியல், சமூக, பொருளாதார மட்டங்களில் கிறிஸ்தவர் பெற்ற நன்மைகளைக்கண்டு பௌத்த மறுமலர்ச்சி இயக்கத்துக்கு நிதியுதவி வழங்கிய சிங்கள பௌத்த பூர்ஷ்வாக்கள் ஆத்திர மடைந்தனர். பௌத்த குட்டி பூர்ஷ்வா வகுப்பைச் சேர்ந்த சிறு வியாபாரிகள், அரச உத்தியோகத்தர், எழுத்தாளர், பத்திரிகையாளர் ஆகியோர் பௌத்த குருமாரின் ஆதர வுடன் கிறிஸ்தவரின் மேலாண்மையை எதிர்த்தனர். இக் குழுக்கள் சிங்கள பௌத்தரிடையே தேசிய, நாட்டுப் பற்றைத் தூண்டினர். மிசனரிகளின் செல்வாக்கிற்குச் சவால் விட்டனர். மறுமலர்ச்சி இயக்கத்தைத் தூண்டிப் பௌத்த கல்வியை முன்னேற்றும்படி கோரினர். உயரதிகாரிகளும் மிசனரிகளும் மதத்தையொட்டிய எதிர்ப்புக்கு ஆளாகினர். பிரித்தானிய காலனி ஆதிக்கத்துக்குப் பதிலாக, 'கிறிஸ் தவர்' அதிகாரமே எதிர்ப்புக்குள்ளாகியது. பிரித்தானிய அரசுத் துரோகம் என்ற குற்றச்சாட்டைத் தவிர்ப்பதற்கு இது ஓர் உபாயமாக இருப்பினும் இம்முறை பௌத்தரை ஒரு புனிதப் போருக்குத் தூண்டியதே அன்றி, காலனி ஆதிக்க எதிர்ப்புப் போராட்டத்திற்கு அல்ல.

கிருஸ்தவ எதிர்ப்பியக்கம் சமயப் பற்றின் எழுச்சியுடன் பௌத்தத்தைப் பாதுகாக்கும் கடப்பாடு இலங்கைக் குரியது; இலங்கை 'தம்மதுவீபம்' (தர்மத் தீவு) பௌத்த மதத்தைப் பாதுகாக்கும் கடமை 'ஆரிய' சிங்கள மக்களுக் குப் புத்தரால் அளிக்கப்பட்டது என்ற கொள்கையும் இவ் வியக்கத்திடம் காணப்பட்டது. இத்தகைய சூழலில் சிங்கள பௌத்தரின் இன, மத, கலாசார தனித்துவத்தை வற்புறுத் தும் மரபு ரீதியான, சிறப்புகள் கொண்ட கருத்தியல் கிறிஸ் தவர்களுக்கு எதிரான பலமான பிரசாரமாக மாறியது. பல்வேறு மட்டங்களிலும் சில வேளை வன்முறையாகவும் சில சமயம் அகிம்சா ரீதியிலும் அமைந்தன;

1. கிறிஸ்தவருக்கும் பௌத்தருக்கும் இடையில் பொது மேடையில் விவாதங்கள் நடந்தன. 1873ஆம் ஆண்டு பாணந்துறையில் மிகுத்துவத்த குணனந்த தேரோ என்னும் பௌத்த பிக்கு. டேவிட் டி சில்வா (Rev. David de Silva) என்ற கிறிஸ்தவ மத குருவுடன் இரு மதங்களின் சிறப்பு கள் பற்றி விவாதம் நடத்தி கிறிஸ்தவர் பிரச்சாரம் பொய்யானது எனக் காட்ட முயன்றார், குணு னந்தாவின் பேச்சுத் திறமையும் பைபிள் அறிவும் இலக்கியச் சிந்தனையும் விவாதப் போரில் பௌத்தர் களிடையே தம் மதச் சிறப்புப் பற்றிய நல்லபிப் பிராயத்தை ஏற்படுத்தியது. 19ம் நூற்றாண்டில் ஒரு கிருஸ்தவ மத குரு பின்வருமாறு எழுதினார்: "நான் கண்டவற்றில் மிகவும் சிறப்பாகக் குறிப் பிடத்தக்க சம்பவம் மக்களின் ஆர்வத்தை ஆணித் தரமாக நிரூபித்தது.... பரந்துபட்ட மக்களிடை தமது மதம் பற்றிய எண்ணம் நிலைத்திருப்பதைக் காட்டியது. கால கட்டத்தின் விழிப்புணர்வு (ஜெயவர்த்தன 1972 : 45)



2. துண்டுப் பிரசுரங்கள், பத்திரிகைகள், பௌத்தர் களைக் கதாநாயகர்களாகவும் கிறிஸ்தவரை வில்லன்களாகவும் கொண்ட நாவல்கள் என்பவற் றின் மூலம் கிறிஸ்தவருக்கு எதிரான மக்கள் எதிர்ப்பு வளர்க்கப்பட்டது. கிறிஸ்துவம் கேலிக் குள்ளானது. மிசனரிமார் 'கீழ்த்தர, மூட நம்பிக் கைகளை'க் கற்பிக்கும் 'எதிரிகளாக'க் கூறப்பட் டனர். அத்துடன் அவர்கள் 'எமது தெருக்களில் நோய் பரப்பும் மூடப் போதகர்கள்' எனவும் குற்றம் சாட்டப்பட்டனர். (மேற்கூறியபடி '61)

3. பௌத்த ஸ்தாபனங்களது தோற்றத்தால் பௌத்த கல்வியும் பௌத்தமும் முன்னேற்ற மடைந்தன. குறிப்பாக 1880இல் ஒல்கொட்டும் (Colonel Olcott) ஹெலனு பிளவட்ஸ்கியும் (Helena Blabatsky) இலங்கை வந்து பௌத்த



படிப்பகம்

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

தியோசொபிகல் சங்கத்தை (Buddhist Theosophical Society) உருவாக்கியமை பௌத்த கல்வியின் முன்னேற்றத்துக்கு நன்கு உதவியது. இக்காலத்தில் பிரித்தானியத் தீவிரவாதிகளினதும் சுதந்திர சிந்தனையாளர்களினதும் (அன்னி பெசன்ட், சார்லஸ் பிறட்லோ, ஜீ. டபுள்யூ. பூட்டி) கருத்துக்கள் இலங்கையில் பரவின' 1883இல் வெளியாகிய 'சிலோன் பிரீதிங்கர். (Ceylon Free Thinker) என்ற பத்திரிகையின் முதலாவது இதழில் 'மிசனரிக் கல்வியின் தீய விளைவுகள்' எனும் கட்டுரையும் இடம் பெற்றது. (மேற்கூறியபடி 52)

கிறிஸ்தவ எதிர்ப்பியக்கத்தில் சில சிறப்பம்சங்களும் உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. கிறிஸ்துவத்தை எதிர்ப்பது காலனித்துவத்தை எதிர்ப்பதாகும். அந்நிய ஆட்சியையும், 'அந்நிய' கருத்தியல் ஆதிக்கத்தை எதிர்ப்பதாகவும் விளக்கங் கூறலாம். மேலும் ஐரோப்பிய, அமெரிக்கரில் பகுத்தறிவும் சுதந்திரச் சிந்தனையுமுள்ள அறிஞர்கள் இப்பௌத்த இயக்கத்திற்கு ஆதரவளித்தனர். அவர்கள் இந்தியாவிற்கும் இலங்கைக்கும் பிரசங்கிகளாக வந்தனர். நியூயோக் நகரில் 1875ல் ஆரம்பிக்கப்பட்ட இறைஞான சங்கம் சார்ந்து ஒல்கொட்டும் பிளர்வற்ஸ்கியும் மேல் நாடுகளில் இவற்றிற்கு ஆதரவு திரட்டினர். இவர்கள் கிறிஸ்துவத்தை எதிர்த்ததோடு தம் நாட்டு ஏகாதிபத்தியக் கொள்கைகளையும் எதிர்த்து வந்தனர். இறைஞானம் 'உண்மைக்கு' மாற்று வழி கூறியது; அது ஐரோப்பாவோடும் கிறிஸ்தவத்தோடும் மட்டும் இணைந்துவிடவில்லை; எல்லா மதங்களும் கூறும் சகோதரத்துவம், மனித இன ஐக்கியத்தினது அடிப்படையில் அமைந்தது. கிழக்கிந்திய சித்தாந்தங்களின் சிறப்புகளை இவர்கள் நம்பினர். இவ்வாறு தாராள அரசியல் கருத்துக் கொண்ட இறைஞானம் பல ஆசிய தேசியத் தலைவர்களையும் கவர்ந்தது. மேலும் கிழக்கிந்திய மதங்களின் உயர்வும் 'கிழக்கிலிருந்து ஒளி' என்ற பலமான உணர்வெழுச்சியும் அவர்கட்கு ஆர்வ மூட்டியது. எல்லா மதங்களிலிருந்தும் இவற்றின் சித்தாந்தங்கள் உயர்வு நவிற்சியுடன் அணுகப்பட்டதோடு ஒவ்வொரு நாட்டினதும் தலையாய மதங்களிலிருந்தும் இறைஞான கருத்துகள் எடுத்தாளப்பட்டது



தொழிற்சங்க ஆர்ப்பாட்டம், மது ஒழிப்பு இயக்கம் உட்பட பல்வேறு மட்டங்களிலும் பல உள்ளூர் பௌத்தர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதினால் கிறிஸ்தவருக்கு எதிரான வன்செயலும் நடைபெற்றது. பௌத்தரான பெருந்தோட்ட உடைமையாளர், மது வியாபாரிகள், விற்பனையாளர், காலனித்துவ பொருளாதாரத்தில் பணம் திரட்டினோர் ஆகியோர் பௌத்த எழுச்சியாளர்கட்குப் பொருளுதவி செய்தனர்; ஆரம்பத்தில் சாராயக் குத்தகை மூலம் பணம் திரட்டிய தோமஸ் அமரசூரியா, ஜெரோயியஸ் டயஸ் ஆகியோர் பௌத்த பாடசாலைகளை நிறுவினர்.

தர்மபாலா (1864-1933)வின் தந்தை புறக்கோட்டையில் வீட்டுத் தளவாட வியாபாரியாக இருந்தார். குமாஸ்தாவாக வாழ்க்கையை ஆரம்பித்த தர்மபாலா பின்னர் அபயசேகரா வர்ணித்தபடி 'புரொட்டஸ்தாந்து பௌத்தத்'தின் அப்போஸ்தரானார். 'பௌத்தர்கள் ஒன்று திரள வேண்டும். கடினமாக உழைத்து நாட்டை அபிவிருத்தி செய்ய வேண்டும். தமது நிறுவனங்களில் மறுமலர்ச்சி ஏற்படுத்த வேண்டும். விஞ்ஞானம் கற்க வேண்டும். பொருளாதாரத்தை நவீனமயப் படுத்த வேண்டும்' என்று கூறினர். தொழில் வளப் பெருக்கமும் வியாபார விருத்தியும் கொண்ட சமூகத்தை வேண்டினர்; அத்தோடு வர்க்க, சாதி அமைப்புக்களோடு அடக்க ஒடுக்கமாக பெண்கள் வாழும் பரம்பரையான சமூக அமைப்பையும் வேண்டினர். தர்மபாலா ஜப்பானைப் பாராட்டினர்; அதன் ஆட்சியாளர் மேல்நாட்டுத் தொழில் நுட்பங்களோடு பொருளாதாரத்தை நவீனப்படுத்துவதுடன் தங்கள் பழமையான சமூக அமைப்பையும் பேணினர். தர்மபாலா சிறந்த பேச்



படிப்பகம்

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

சாளராக மத்திய தர வர்க்கத்தவரிடையும் கிராம ஏழை களிடையும் மதிப்பும் பெற்று பரவலாக மக்களைத் தன் பின்னே ஈர்த்தார். அவர்களில் சிலர் தர்மபாலா போல 'அனாகாரிக'ர் ஆகினர். அதாவது காவியுடை தரித்து, பழமை வாழ்வைத் துறந்து, பிரச்சாரகர் ஆகினர். அவர் களில் பிரதானமானவர் நீர் கொழும்பைச் சேர்ந்த வாலி சிங்க ஹரிச்சந்திரா (1877 - 1913). இவர் தர்மபாலா வுடன் இந்தியாவிலும் இலங்கையிலும் மறுமலர்ச்சிப் பிர சாரத்தில் ஈடுபட்டார். இப் பௌத்த மறுமலர்ச்சியாளர் மேல்நாட்டவரையும் கிறிஸ்தவர்களையும் எதிர்த்தனர்.

## வன்முறை மோதல்கள்

இத்தகைய மறுமலர்ச்சி இயங்கங்களால் உந்தப்பெற்ற சூழலும், உணர்ச்சி நிலையும் இலங்கை வரலாற்றில் முதன் முதலாக வன்முறை வகுப்புக் கலவரம் நடப்பதற்கு வழி கோலியது. கொட்டாஞ்சேனையில் 1883ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் பௌத்தருக்கும் கத்தோலிக்கருக்குமிடையில் இக்கலவம் நடந்தது. புனித லூசியா தேவாலயத்துக்கு அருகே உள்ள கோயிலில் இருந்து மிகுத்துவத்த குணனந்த என்ற பிக்கு ஈஸ்டர் பண்டிகை நாட்களில் நடைபெறக் கூடியதாகத் தன் கோயிலிலும் சில சடங்குகளை ஒழுங்கு செய்தார். இது தமக்கு எதிரான செயல் எனக் கிறிஸ்த வர்கள் நினைத்தனர். பெருங் கலவரம் ஒன்று நடந்தது. ஒருவர் இறந்தார். 12 போலீஸ்காரர் உட்பட 30 பேர் காயமுற்றனர். இதனை விசாரிக்க நியமிக்கப்பட்ட விசாரணைக் குழு ஒன்றேடொன்று முரண்பட்ட சமய விழாக் களே இதற்குக் காரணமென்றும், கிறிஸ்தவ மதத்தின் கடும் எதிர்ப்பாளர் குணனந்த தேரோவின் தலைமையும் தமது அறியாமை நிறைந்த மக்களைக் கத்தோலிக்கர் கட்டுப்படுத்தத் தவறியமையும் கலவரத்தைத் தூண்டின என்றும் கூறியது.

கிறிஸ்தவ எதிர்ப்பியக்கத்தின் அடுத்த கட்டத்துக்கு 20ஆம் நூற்றுண்டின் முற்பகுதியில், அனகாரிக தர்ம



பாலா, வலிசிங்க ஹரிச்சந்திரா ஆகியோர் தலைமை தாங்கினர். இவர்கள் சமூகத்தைப் பாதிக்கும் பல்லா யிரக் கணக்கான தீமைகளுக்குக் காரணம் கிறிஸ்தவர் என்று கூறினர். எவ்வித குற்றமோ, வன்செயலோ, மதுப் பழக்கமோ அற்ற சிங்கள பௌத்த கலாசாரத்தின் பொற்காலம் பற்றியும் விதந்துரைக்கப்பட்டது. அனகாரிக தர்மபால 1902ஆம் ஆண்டு பின்வருமாறு எழுதினர்:

> "காட்டுமிராண்டிக் கொள்ளையோரால் அழிவு உண்டாகு முன்னர் இந்த அழகான இலங்கைத்தீவு ஆரிய சிங்களவர்களால் ஒரு சொர்க்கமாக ஆக்கப் பட்டிருந்தது. கிறிஸ்தவரும் பலதெய்வ வணக் கமுமே உயிர்க் கொலை, களவு விபச்சாரம், பொய், மதுப்பழக்கம் யாவற்றுக்கும் காலாக இருந்தன. பண்டைப் பெருமைமிக்க, நாகரிகமடைந்த சிங்கள மக்கள் பிரித்தானிய நிர்வாகத்தினுல் அறிமுகப் படுத்தப்பட்ட சதித்திட்டங்களினுல் வீழ்ச்சியடை கின்றனர். உயர் அதிகாரிகள் தேயிலைச் செய்கைக் காகக் காடுகளை அழிக்கின்றனர். அபின், கஞ்சா, விஸ்கி, சாராயம் போன்ற மதுசார்ந்த நஞ்சுகளை அறிமுகப்படுத்தியுள்ளனர். ஒவ்வொரு கிராமத் திலும் சாராயக் கடைகளையும் சிகையலங்கார நிலையங்களையும் திறந்துள்ளனர். பழைய கைத் தொழில்களை அழித்து மக்களைச் சோம்பலாக்கினர். (குருகே 1965 : 482)

ஹரிச்சந்திரா அநுராதபுரத்திலுள்ள புனித பௌத்த கட்டிடங்களைப் பாதுகாக்கும் ஓர் இயக்கத்தையும் நடத்தினர். 1903 ஆம் ஆண்டு ஜூன் மாதம் பௌத்த போசன் விழாக் காலத்தில் பௌத்த மத ஊர்வலங்களுக்கு இருந்த கட்டுப்பாடுகளை எதிர்த்தார். கிறிஸ்தவ எதிர்ப்புக் கலகம் அங்கு நடந்து ஹரிச்சந்திராவும் கைதுசெய்யப் பட்டார். இது சம்பந்தமாக ஹரிச்சந்திரா மேல் தொடரப் பட்ட வழக்கும், விடுதலையும் மத வெறி வேகமடையக் காரணமாயிற்று. இவ்விடயத்தைப் பற்றிப் பிரித்தானிய



படிப்பகம்

www.padippakam.com


அரசருக்கு அனகாரிக தர்மபாலா ஒரு விண்ணப்பம் எழுதினர் :

> ''மேன்மை தங்கிய தங்களது அரசாங்கத்தின் கீழ்நிலை உத்தியோகத்தர்களின் அட்டூழியத்ததில் சிங்கள பௌத்தர்கள் இன்னலுறுகின்றனர். தமது புராதன வரலாறு மிக்க சமயத்துக்கு இடையூறு ஏற்படுவதால் அவர்கள் ஆத்திரமடைகின்றனர். நிர்வாகத்தினரால் சாராயம், அபின், மாட்டிறைச்சி முதலியவை கிராம மக்களுக்குக் கொடுக்கப்படுகின்றன. 'சாராயக் கடைகள் மாட்டிறைச்சி விற்பனை நிலையங்கள். அந்நிய தேவாலயங்கள் ஆகியவை அகற்றப்படவேண்டும் என்பதையே சிங்களவர் கோருகின்றனர்.''

எனவே கிறிஸ்தவத்துக்கு எதிரான போராட்டமானது அந்நிய ஆட்சியாளருக்கு எதிரான போராட்டமன்று. காலனித்துவ சமூகத்தில் அதிக சலுகைகளையும், அதிகாரத்தையும் பெற விரும்பிய சிங்கள பௌத்தர்களின் பகுதியினரால் உருவாக்கப்பட்ட இயக்கமாகும். இப்பிரிவினர் வாய்ப்புகள் பெற்ற கிறிஸ்தவர்களுக்கு எதிராக சிங்கள மக்களிடம் பகைமையைத் தோற்றுவித்து வளர்த்தனர்.

இலங்கையில் கிறிஸ்தவ எதிர்ப்புணர்வு வெளிப்படை ஆர்ப்பாட்டமாகவும் முரண்பாடுகளாகவும் காலத்துக்குக் காலம் நடைபெற்றது. இத்தகைய முக்கியமான சம்பவம் ஒன்று 1950-ன் பிற்பகுதியில் நிகழ்ந்தது. பௌத்தர்களுக்கும் பௌத்த மதத்திற்கும் எதிராக நடவடிக்கைகள் பற்றி ஆராய்வதற்கு ஒரு பௌத்த ஆணைக்குழு நியமிக்கப்பட்டது. பழைய பல விவாதங்கள் புதுப்பிக்கப்பட்டதுடன் 'கன்னி மரியாகே ஹட்டி' (கன்னிமேரி பற்றிய உண்மை) போன்ற பிரசுரங்கள் வெளியிடப்பட்டன. சமீப வருடங்களில் ஏனைய சிறுபான்மையினருக்கு எதிராக மக்களுடைய கவனம் திருப்பப்பட்டபோதும் கிறிஸ்தவ எதிர்ப்புணர்வு சிங்கள பௌத்த மக்களின் பிரக்ஞையில் இன்றும் உள்ளது.



## 3. முஸ்லிம்களுக்கு எதிரான சிங்கள வர்த்தகர்களின் ஆர்ப்பாட்டம்

இலங்கையில் ஏற்பட்ட ஜனங்களுக்கிடையிலான பிரச்சனைகளுக்கு வர்த்தகத்தில் நிலவிய போட்டி ஒரு முக்கிய அம்சமாகும். 1875-1900 காலகட்டத்தில் பிரித்தானிய, வட தென்னிந்திய முதலீடுகள் இலங்கையின் காலனித்துவப் பொருளாதாரத்தைக் கட்டுப்படுத்தின. இலங்கையில் சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்களிடையே பூர்ஷ்வா வகுப்பொன்றும் எழுச்சியுற்றது. முஸ்லிம் பூர்ஷ்வாக்கள் வியாபாரத்திலேயே முதன்மையாக ஈடுபட்டனர். தமிழ் பூர்ஷ்வாக்கள் தோட்டச் செய்கை, உத்தியோகம் என்பவற்றிலிருந்து பணத்தைப் பெற்றனர். சிங்களவர்கள் சாராயக் குத்தகை, சுரங்கத் தொழில், தோட்டச் செய்கையில் செல்வத்தைப் பெற்றனர் எனினும்,இலங்கைத் தமிழரும் சிங்களவரும் பிரித்தானியர், போரா, சிந்திகள், பார்சிகள், செட்டிகள், முஸ்லிம் போன்றோருடன் ஏற்றுமதி இறக்குமதி மொத்த வர்த்தகத்தில் போட்டியிடுமளவு பலம் வாய்ந்திருக்கவில்லை. எனவே, பொருளாதார ரீதியாகப் பலவீனமாயிருந்த இவ்விரு பிரிவினரும் அரசாங்க சேவையையும் ஏனைய தொழில்களையும் பெற்றுக்கொள்வதற்காகப் போட்டியிட்டனர். எவ்வாறாயினும் சிங்கள சிறு வியாபாரிகள் 'அந்நிய' வியாபாரிகளுக்கு எதிராகத் தமது ஆத்திரத்தை வெளிக்காட்டும் ஒரு குழுவாக மாறினர்.

இலங்கைச் சிங்கள-தமிழ் தொழிற்றுறை உரிமையாளர்களின் பொருளாதார பலவீனத்தை பேர்குசன் வழிகாட்டியிலிருந்து பெறப்பட்ட பின்வரும் தரவுகளால் அறியலாம். 1863 இல் 33 நபர் ஏற்றுமதி இறக்குமதியாளராகவும் முதன்மையான வர்த்தகர்களாகவும் இருந்தனர். இவர்களில் 27 நபர் ஐரோப்பியர்,4 நபர் பம்பாயைச் சேர்ந்த இந்தியர்கள். இலங்கையர் பி. பி, பெர்ணண்டோ என்பவரும் யாழ்ப்



படிப்பகம்

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

பாணத்து ஈ. நன்னித்தம்பி ஆகிய இருவருமே. 1880 இல் 54 நபரில் 50 பிரித்தானியர், பம்பாயைச் சேர்ந்த பார்சிக் காரர் இருவர், சார்ள்ஸ் டி. சொய்சா என்பவரும் ஜேரோனிஸ் பீரிஸ் என்பவருமே இரு சிங்களவர். உள் நாட்டு வர்த்தகத்தில் புறக்கோட்டை அரிசி, புடைவை வியாபாரத்தின் பெரும்பகுதி '73 நாட்டுக் கோட்டைச் செட்டிக் கம்பனிகளில் தங்கியிருந்தது. பல சரக்கு விற்பனை யில் 35 முஸ்லிம் வர்த்தகர்கள் பங்குபற்றினர். இவ்வருடத் தில் தமிழ் அல்லது சிங்களக் கம்பனிகள் ஒன்றுவது இல்லை. 1880 இல் புறக்கோட்டை வர்த்தகத்தில் 86 செட்டியார் கம்பனிகளும், 64 முஸ்லிம் கம்பனிகளும், முதன்மை பெற்றன. எச். டொன் கரோலிஸ் (தளபாடங்கள்), என் எஸ், பெர்னூன்டோ (உபகரணங்கள்) போன்ற விரல்விட்டு எண்ணக்கூடிய சிங்கள வியாபாரிகளே காணப்பட்டனர். 1890 இல் குஜராத்தைச் சேர்ந்த புதிய முஸ்லிம் வர்த்தகக் குழுவினர்-போரா, கோஷா, மேமன் போன்ரேர்-ஏற்றுமதி இறக்குமதி வர்த்தகத்தில் இடம் பெற்றனர். இவர்களே புதிய வியாபார முக்கியஸ்தர்களாக மாறி பிரித்தானிய ரின் கூட்டுப் பங்குதாரர்களாகவும் அமைந்தனர்.

## முஸ்லிம் எதிர்ப்புப் பிரசாரமும் 1915 கலவரமும்

வியாபாரத்தில் காணப்பட்ட இத்தகைய அந்நிய ஆதிக்கத்துக்கு எதிரான வெறுப்பு சிங்கள வியாபாரிகளிடம் வெளிப்பட்டது. இத்தகைய பகைமை அனகாரிக தர்ம பாலாவினல் 'பம்பாய் வணிகர்கள்', 'தென்னிந்திய தெருப் பொறுக்கியர்' என வர்ணிக்கப்பட்ட சகலருக்கும் எதிராக இருந்தது. ஆயினும் பகைமை குறிப்பாக நகர, கிராமப் பகுதிகள் எங்கும் பரந்து காணப்பட்ட, வியாபாரிகளுக்கு எதிரானதாகவே அமைந்தது. சிங்கள, முஸ்லிம் வியாபாரி கள், கடைக்காரர் ஆகியோருக்கு இடையில் தீவிரப் போட்டி நிலவியது மாத்திரமன்றி, 1915 இல் நிலவிய போர்க்காலப் பற்ருக்குறை, பணவீக்கம் ஆகியவற்ருல் அத்தியாவசியப் பொருட்கள் விலை அதிகரித்தபோது முஸ்லிம் கடைக்கார



ருக்கு எதிராக நுகர்வோரின் பகையும் தூண்டி விடப் பட்டது.

20 ஆம் நூற்றுண்டின் முற்பகுதியில் 'அந்நிய வர்த்த கர்கள்' ''மண்ணின் மைந்தர்களுக்கு'' எதிரிகள் என்ற கருத்துச் சிங்களப் பத்திரிகை உலகில் பிரபலமாக்கப் பட்டது. இக்கருத்தின் முக்கிய பிரசாரகர்களில் ஒருவர் அனகாரிக தர்மபாலா. அவரது தகப்பஞராகிய எச். டொன் கரோலிஸ் புறக்கோட்டையில் கடை வைத்திருந்த மிகச் சில சிங்களவர்களுள் ஒருவர். பல சிங்கள எழுத்தாளர், நாடகாசிரியர், பத்திரிகையாளர், பௌத்த பிக்குகள் ஆகியோர் சிங்கள அரசர்களின் வீரதீரச் செயல்கள் பற்றியும் அந்நியப் படையெடுப்புகளை வெற்றி கொண்ட மையை நினைவு கூர்ந்தும் அத்துடன் அந்நிய வியாபாரி களைக் கண்டித்தும் அவர்களது கடைகளைப் பகிஷ்கரிக்கும் படியும் சிங்களவரை வற்புறுத்தியும் எழுதினர். 1900 ஆம் ஆண்டு தர்மபாலா பின்வருமாறு எழுதினுர் ;

> ''நாட்டின் செல்வ வளத்தை அந்நியர்கள் எடுத்துச் செல்லும்போது எமது 'மண்ணின் மைந்தர்களுக்கு' போக்கிடம் எங்கே. இந்நாட்டில் வந்து குடியேறி யோர் திரும்பிச் செல்வதற்கு அவர்களுக்கு நாடு உண்டு. ஆனுல், சிங்களவர் செல்வதற்கு எந்த நாடும் இல்லை. அந்நியர்கள் குதூகலிக்கும்போது மண்ணின் மைந்தர்கள் இழப்புக்கு ஆளாவது என்ன நியாயம்? இங்கிலாந்துக்கு இரவலர் வருவதைத் தடுப்பதற்கு அந்நியர் தடைச்சட்டம் ஒன்று அந்நாட்டில் உள்ளது. ஆனுல் உதவியற்ற, அப்பாவிச் சிங்களக் கிராமவாசி அவரது மூதாதை யரது நாட்டின் செல்வத்தைத் திருடும் அந்நிய மோசடியாளருக்கு இரையாகின்றுன்''.

இக்காலத்தில் தர்மபாலாவின் கண்டனங்கள் குறிப்பாக முஸ்லிம் வியாபாரிகளுக்கு எதிராகவே அமைந்தன. 1915 இல் அவர் எழுதினுர்:



படிப்பகம்

''அந்நியரான முகமதியர் ஷைலொக்கிய வழிமுறைகளால் யூதர்கள் போன்றுசெல்வந்தராய்மாறினர். 2358வருடங்களாக அந்நிய முற்றுகைகளில்இருந்து நாட்டைக் காப்பதற்காக இரத்தத்தை ஆறுபோல் பெருக்கிய மூதாதையரைக் கொண்ட மண்ணின் மைந்தரான சிங்களவர் பிரித்தானியரின் கண்களில் நாடோடிகளாய்த் தெரிகின்றனர். தென்னிந்திய முகமதியர் இலங்கைக்கு வந்து, வியாபாரத்தில் எத்தகைய அனுபவமுமற்ற. உதாசீனம் செய்யப்பட்ட கிராமவாசியைக் காண்கிறுன். இதன் விளைவு முகமதியன் முன்னேறுகிருன். 'மண்ணின் மைந்தன்' பின்தள்ளப்படுகிருன்.''

சிங்கள குட்டி பூர்ஷ்வாக்களின் வேறு எழுத்துக்களும் சிங்களவரைத் தூண்டிவிடுவனவாக அமைந்தன. 'சிங்கள ஜாதி' என்ற பத்திரிகை ஆசிரியராக இருந்த பியதாச சிறிசேன எனும் நாவலாசியர் ''கரையோர முஸ்லிம்களிடமும் கொச்சிக்காரரிடமும் அந்நியரிடமும் கொடுக்கல் வாங்கல் வைத்திருக்க வேண்டாம்'' எனச் சிங்களவரை வற்புறுத்தினுர். சிங்களத் தினசரியான 'லக்மின' கரையோர முஸ்லிம்களைப் பற்றிப் பின்வருமாறு கூறியது: ''வெறுக்கத்தக்க இக்கும்பலை நாட்டிலிருந்து வெளியேற்றுவதற்குத் தகுந்த திட்டம் தீட்டப்படுதல் வேண்டும். 'தினமின' ''முஸ்லிம்கள் இங்கு வேரூன்றிய எம் பகைவர்கள்'' எனக் கண்டித்தது. இத்தகைய கருத்துகளை வெளியிட்ட பத்திகைகளின் ஆசிரியர்கள் சிலர் மேல் வழக்குத் தொடரப்பட்டதுடன் 'சிங்கள' 'ஜாதிய' என்ற பத்திரிகையும் தர்மபாலாவின் 'சிங்கள-பௌத்தய'வும் தடை செய்யப்பட்டன.

1915ஆம் ஆண்டில் இத்தகைய ஒரு பின்னணியிலேயே சிங்களவருக்கும் முஸ்லிம்களுக்கும் இடையே முதலாவது கலவரம் நாட்டின் பல பகுதிகளிலும் நடைபெற்றது. சமய எதிர்ப்புணர்வு இக்கலவரத்திற்கு வெளிப்படைக் காரணமாய் அமைந்தபோதும் யதார்த்தத்தில் இக்காலகட்டத்தின் பொருளாதார, அரசியல் நெருக்கடியையே இது பிரதிபலித்தது. இராணுவச் சட்டத்தின் கீழ், பிரித்தானிய துருப்புகள் எடுத்த நடவடிக்கையிலும் கலகத்திலும் நூற்றுக் கணக்கானேர் இறந்தனர். மத்தியதர வர்க்கத்தைச் சார்ந்த பல மதுவிலக்கு இயக்கத் தலைவர்கள் கைது செய்யப்பட்டனர். இவர்களில் புறக்கோட்டைச் சிங்கள வியாபாரிகளின் குடும்ப உறவினரும் அடங்குவர். புறக்கோட்டைப் பணக்கார வியாபாரியான டி. டி. பீரிஸ் என்பவர் முஸ்லிம் கடைகளைத் தாக்குவதற்காக மக்கள் கூட்டத்தைத் தூண்டினுர் என நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்டு சுடப்பட்டார். எச். டொன் கரோலினுடைய மகனுகிய எட்மண்ட் கேவவிதாரணவுக்கு விதிக்கப்பட்ட மரண தண்டனை குறைக்கப்பட்டு, பின் சிறைச்சாலையில் மரணமானுர், புறக்கோட்டையில் உபகரண வியாபாரியாக இருந்த என். எஸ். பெர்ணுன்டோ என்பவருடைய மகன் என். எஸ். பெர்ணுன்டோ விஜயசேகராவுக்கு மரண தண்டனையே விதிக்கப்பட்டுப் பின்னர் அதுவும் மாற்றப்பட்டது.

இத்தகைய கலவரங்களைப் பற்றி அனகாரிக தர்மபாலா என்ன கருத்துக் கொண்டிருந்தார்? இக்கலவரம் நடந்து ஒரு மாதத்தின் பின்னர் அவர் எழுதினுர்:

''பிரித்தானியருக்கு ஜெர்மனியர் எவ்வாறோ சிங்களவருக்கு முஸ்லிம்கள் அவ்வாறே. முகமதியர் சிங்களவருக்கு சமயத்தாலும், இனத்தாலும், மொழியாலும் அந்நியர்கள். பௌத்த சமயம் இல்லாவிடின் மரணமே சிங்களவர் வேண்டுவர். பிரித்தானிய உத்தியோகத்தர் சிங்களவரைச் சுடலாம்; தூக்கிலிடலாம்; சிறைப்பிடிக்கலாம். ஆனுல். எப்போதும் சிங்களவருக்கும் முஸ்லிம்களுக்குமிடையில் பகைமை உறவே உள்ளது. அந்நியரால் தமக்கு இழைக்கப்படும் அவமானங்களை இனி மேலும் பொறுக்க முடியாது என்பதை அமைதி



படிப்பகம்

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

மிக்க சிங்களவர் இறுதியில் உணர்ந்து விட்டனர். முழுத் தேசமும் முஸ்லிம்களுக்கெதிராக எழுச்சியுற்றுவிட்டது. இதற்குப் பொருளாதார, ஆன்மீக ரீதியான காரணங்கள் இருந்தன.''

அடுத்தடுத்த வருடங்களில் சிங்களவருக்கும் முஸ்லிம்களுக்கும் இடையிலான வெளிப்படையான பகைமைகள் குறைந்தன. ஆயினும், சிங்கள வியாபாரிகள் மத்தியில் நிலவிய சிறுபான்மையினர் எதிர்ப்புணர்வு சிங்கள பௌத்தரின் பிரக்ஞையில் ஆழப் பதிந்திருந்தது. இது 1982இல் காலி, புத்தளம் போன்ற இடங்களில் நிகழ்ந்தது போன்று முஸ்லிம்களுக்கு எதிரான குழப்பங்களால் வெளிப்பட்டது. மேலும் சமீப காலத்துச் சிங்கள மேலாதிக்கம் வெளிப் பிரசாரத்தின் பொருளடக்கத்தாலும் வெளிப்பட்டது. எல்வாறுயினும் இம்முரண்பாடு மத ரீதியாகக் குறைந்த போதும் வியாபாரப் போட்டிகளின் அடிப்படையில் தொடர்ந்து நிலவுகிறது என்பது கவனிக்கத் தக்கது.

1970களிலும் 1980களிலும் தமிழர் எதிர்ப்பியக்கப் பிரச்சாரம் கிறிஸ்தவருக்கும் முஸ்லிம்களுக்கும் எதிராக முன்னைய கால கட்டத்திற் காணப்பட்ட உணர்விலிருந்து தோன்றியனவாகும். இவற்றில் அடிப்படையாகக் காணப்படுபவை; சிங்கள இனத்தின் மேன்மை பற்றிய உணர்வு பௌத்தத்தைப் பாதுகாக்கும் விசேட பங்கு, 'அந்நிய வியாபாரிகள்' மேல் பகைமை, 'மண்ணின் மைந்தர்'கள் மேலுள்ள அக்கறை என்பனவாகும். இவற்றுடன் இந் நூற்றாண்டின் ஆரம்பத்தில் மீண்டும் மீண்டும் குரலெழுப்பப்பட்ட (Ceylon Nation என்ற பத்திரிகையிலும் கூறியபடி) ''சிங்களவர் தனித்து ஒதுக்கப்பட்டு ஆழ்கடலுக்கும் பிசாசுக்கும் இடையில் உள்ளனர், அவர்கள் செல்வதற்கு வேறு ஒரு நாடும் இல்லை, வேறு எந்த நாட்டுடனோ இனத்துடனோ இனரீதியான தொடர்பும் சிங்களவருக்கில்லை'' என்ற கருத்தும் முக்கியமானது.

கிறிஸ்தவருக்கும் முஸ்லிம்களுக்கும் எதிரான கருத்தியல் குட்டி பூர்ஷ்வா நலன்களுக்குத் சேவை செய்வதாய்



வளர்க்கப்பட்டிருந்தது. ஆயினும் இத்தகைய கருத்தியல் குறிப்பிட்ட சில சூழலில் முதன்மைப்பட்டு ஏனைய வர்க்கங்களையும் கவர்வதாய் அமைந்தன. இலங்கையில் வளர்ந்து வந்த தொழிலாளர் வர்க்கம் ஏனைய பல இனத்தைச் சார்ந்தவருடன் தோழமையுடன் இணைந்து கூட்டாகச் செயற்படுவதற்குப் பதிலாகச் சில சமயங்களில் சிங்கள பௌத்த கருத்தியலுக்குப் பலியாகியது.



தர்மபாலா உள்நாட்டு பத்திரிகைகள் மூலம் 'தேசிய விரோதிகள்' என அந்நியருக்கு எதிராக கடும் பிரச்சாரம் செய்தார். 'சிங்கள பௌத்தர்' என்ற இதழில் தன் கவிதையோடு அந்நிய வியாபாரிகளே, கடன் கொடுப்போர், நிலம் பிடிப்போர் எவ்வாறு ஆதரவற்ற சிங்களவரை அபகரிக்கின்றனர் என்ற மேலேயுள்ள கருத்துப் படத்தையும் வெளியிட்டார். (குருகே 1965 : LXXIX)



படிப்பகம்

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

## 4. தொழிலாளர் வர்க்கத்தினரிடையே இன ஒற்றுமை (1890—1930)

இலங்கைத் தொழிலாளர் இயக்க வரலாற்றுல் இன, மத உணர்ச்சிகளுக்கு மேலாக வர்க்க உணர்வு மேலோங்கி இருந்த கால கட்டங்களும் உண்டு. 19ஆம் நூற்ருண்டில் பெருந்தோட்டத்துறை முதலாளித்துவத்தின் எழுச்சியுடன் வளர்ச்சியடையத் தொடங்கியது; தொழிலாளர் வர்க்கத்தில் சிங்களவர், இலங்கைத் தமிழர், இந்தியத் தமிழர், மலையாளிகள், முஸ்லிம்கள், மலாயர், பறங்கியர் போன்ற பல்வேறு இனத்தினரும் காணப்பட்டனர். இவர்கள் பௌத்த, இஸ்லாமிய, கிறிஸ்தவ, இந்து மதத்தினராவர். இது தவிர சிங்களவர், தமிழர், மலையாளிகள் ஆகியோரிடையில் சாதி வேறுபாடுகளும் நிலவின. எனினும், ஒரே வர்க்கத்தைச் சேர்ந்தவர் என்ற உணர்வும் குறைந்த சம்பளம், நீண்ட வேலை நேரம், மோசமான வேலை நிலைமைகள் போன்ற பொதுவான ஒடுக்குமுறைகளுக்கு உட்படுபவர் என்ற உணர்வும் யாவரிடமும் நிலவின. மேலும், சுரண்டப்படும் தொழிலாளர் என்ற வகையில் தமது நிலைமைகளை முன்னேற்றுவதற்காகத் தம்மை ஒழுங்கமைத்துப் போராட வேண்டும் என்ற விழிப்புணர்வும் 19ஆம் நூற்ருண்டின் பிற்பகுதியில் நகர்ப் புறத் தொழிலாளரிடையே வளர்ந்திருந்தது. 1890ஆம் ஆண்டில் நிகழ்ந்த முதலாவது தொழிலாளர் வேலை நிறுத்தத்திற்கும் 1930ஆம் ஆண்டுகளின் பொருளாதார மந்தத்திற்கும் இடைப்பட்ட 40 ஆண்டுகளில் காணப்பட்ட வர்க்க உணர்வும் தொழிலாளரின் கூட்டு நடவடிக்கையும் குறிப்பிடக்கூடிய அம்சங்களாகும். 1880ஆம் ஆண்டுகளிலிருந்து இக்காலகட்டம் வரை இனவெறிப் பிரச்சாரத்திற்கு இடம் தராது மத, சாதி, இன பேதங்களை மறந்து பொருளாதாரக் கோரிக்கைகள் ஜனநாயக உரிமைகளுக்கான போராட்டத்தில் தொழிலாளர் ஒன்றிணைந்து போராடினர். இதற்கும்



மேலாக பிரித்தானிய முதலாளிகள், உத்தியோகத்தர் ஆகியோருக்கு எதிராக மத்திய தர வர்க்கத் தேசியவாதிகளின் எதிர்ப்புகளுக்கு முன்னேடியாகவும் இலங்கைத் தொழிலாள வர்க்கத்தினரின் போராட்டம் தீவிர நடைமுறை கொண்டதாகவும் இருந்தது.

### ஆரம்பகால வர்க்கப் போராட்டம்

1893ஆம் ஆண்டு செப்டம்பர் 14ஆம் தேதி தொழிலாளர் இயக்கத்தில் பிரெடெரிக் ஏங்கெல்சின் 0 வருட கால சேவையைப் பாராட்டி வியன்ன நகரில் ஒரு வரவேற்பு அளிக்கப்பட்டது. இவ்வரவேற்பில் பிரெடெரிக் ஏங்கெல்ஸ் தமது சேவைக்கான அதி உயர்ந்த பரிசு, சைபீரியச் சிறைச்சாலைகளிலிருந்து கலிபோர்னியாவின் தங்கச் சுரங்கங்கள் வரை, அவுஸ்திரேலியா போன்ற மிகத் தூர இடங்களுக்கும் பூமியின் நாலா பக்கங்களிலும் தொழிலாளர் இயக்கம் பரவியதுதான் எனப் பிரகடனம் செய்தார். இந்தப் பட்டியலில் அவர் இலங்கையையும் சேர்த்திருக்கலாம், ஏனெனில், அவர் கூறிய 'விழிப்புணர்வின் கீற்று' கொழும்பு தொழிலாளரிடை அவ்வேளையே இடம் பெற்றிருந்தது. 1893ஆம் ஆண்டு செப்டம்பர் 12ஆம் திகதி எச். டபிள்யூ. கேவ் கொம்பனியைச் சேர்ந்த 60 அச்சுத் தொழிலாளர்கள் தமது சம்பளம் தாமதம் ஆனதற்காக 5 நாட்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். வேலை நிறுத்தத்தின்போது கொழும்பில் பெரும்பான்மையான செய்திப் பத்திரிகைகளையும் வேறு அச்சகங்களையும் சேர்ந்த சுமார் 500 தொழிலாளர்களைக் கொண்ட பொதுக் கூட்டம் ஒன்றும் நடைபெற்றது. இக்கூட்டத்தில் இலங்கையின் முதலாவது தொழிற் சங்கமான இலங்கை அச்சகத் தொழிலாளர் சங்கம் நிறுவப்பட்டது. இச்சங்கத்தில் 200 தொழிலாளர்கள் அங்கத்தவராயினர்; ஏனைய தொழிலாளர்களையும் தொழிற் சங்கங்களை அமைக்கும்படி வேண்டும் ஒரு பிரேரணையும் நிறைவேறியது.

இவ்வியக்கம் உடனே வலுப் பெருவிடினும் தொழிலாளரில் முன்னேறிய பகுதியினரான அச்சுத் தொழி



படிப்பகம்

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

லாளரின் வர்க்க நடவடிக்கைகளின் ஆரம்ப விழிப்புணர்வாக விளங்கியது, இத்தொழிலாளர்கள் தமிழ், சிங்கள. பறங்கிய இனங்களைச் சார்ந்தவர்கள்; மூன்று மொழிகளிலும் அச்சடிக்கும் வேலை செய்பவர்கள். அச்சுத் தொழிலாளர் சங்கத்தினரின் தலைமைப் பீடத்திலும் பல இனத்தவரும் அங்கம் வகித்தனர். சங்கத் தலைவர் டொக்டர் லிஸ்போ-பின்ரோ கோவாவைச் சேர்ந்தவர், செயலாளர் ஏ. ஈ. வூள்ஜென்ஸ் ஒரு பறங்கியர் செயற்குழு அங்கத்தவர்கள் பல சமூகத்தையும் சேர்ந்தவர்கள். பௌத்த சமயத்திற்காகப் பாடுபட்ட மாட்டினஸ் பெரேரா, சீ. டொன் பஸ்தியன் போன்றவர்களும் செயற்குழுவில் அங்கம் வகித்தனர். இவ்வாறு தொழிலாள வர்க்கத்தின் முதல் நடவடிக்கை இன ஒற்றுமையின் அடிப்படையில் நிகழ்ந்தது. "ஒற்றுமையே பலம்" என்ற வாக்கியம் சங்கத்தினுடைய முதற் சுலோகமாக அமைந்தது. இச் சங்கத்தின் ஆரம்பக் கட்டத்தில் இச்சுலோகம் பெரிதாக எழுதப்பட்டுப் பலரும் பார்க்கக்கூடிய இடத்தில் வைக்கப் பட்டிருந்தது.

19ஆம் நூற்றுண்டின் பிற்கூற்றில் மேலும் பல வேலை நிறுத்தங்கள் நடைபெற்றன. அவை சலவைத் தொழிலாளர் வேலை நிறுத்தம் (1896), யாழ்ப்பாணச் சுருட்டுத் தொழிலாளர் வேலை நிறுத்தம் (1886), 'டைம்ஸ் ஒவ் சிலோன்' அச்சுத் தொழிலாளர் வேலைநிறுத்தம் (1898), துறைமுகத் தொழிலாளர் வேலைநிறுத்தம் (1901) என்பனவாகும். ஆயினும், இவற்றுள் மிகத் தீவிரமான போராட்டம் 1906ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் கொழும்பைச் சேர்ந்த ஐயாயிரம் மாட்டுவண்டிக்காரர்கள் (சிங்களவர், முஸ்லிம்கள், தமிழர்) மேற்கொண்ட வேலைநிறுத்தமாகும். கொழும்பு மாநகரசபையின் ஆத்திரமூட்டும் புதிய சட்டங்களுக்கு எதிராகவே இவர்கள் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டனர். வண்டிக்காரருடைய ஒன்றிய போராட்டம் நாட்டின் வர்த்தகப் பகுதியான புறக்கோட்டையை நிலை குலையச் செய்தது. போலீசுக்கும் அரசாங்க உத்தியோகத்



தர்களுக்கும் எதிரான அவர்களது ஆவேசம் மிக்க எதிர்ப்பு பல தசாப்தங்களுக்குத் தொழிலாளர் வரலாற்றின் முன்னேடியாக நினைவு கூரப்பட்டது. வேலைநிறுத்தத்தின் போது காணப்பட்ட இன ஒற்றுமை உணர்வை 'சிலோன் இன்டிப்பெண்டன்ட்' என்ற பத்திரிகை பாராட்டியது. இப்பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட ஒரு கடிதம் பொது மக்களிடையே காணப்பட்ட ஒற்றுமையின் பலத்தைப் புகழ்ந்தது. 'அடிமைத்தன எதிர்ப்பாளர்' ('anti-slavery') என்று கையெழுத்திடப்பட்டிருந்த மற்றுமொரு கடிதம், 'வண்டித் தொழிலாளரின் வேலை நிறுத்தம் எல்லா இனத்தவருக்கும் ஒற்றுமையின் பெறுமதி பற்றிய பாடத்தைப் புகட்டியுள்ளது.... வண்டிக்காரர்....பல்வேறு சாதியையும் இனத்தையும் சேர்ந்தவர்கள்....ஆனால், அவர்கள் சகல இன மத வேறுபாடுகளையும் ஒரு பக்கத்தில் ஒதுக்கி மிக வெற்றிகரமாக ஒன்றுபட்டுள்ளனர்'' என்று கூறியது.

ஆயினும் 1912இல் நடந்த ரயில்வே தொழிலாளர் வேலைநிறுத்தம் நாட்டின் பொருளாதார நடவடிக்கைகளைத் தொழிலாளர் வர்க்கத்தால் செயலிழக்கச் செய்யலாம் என்பதை முதல் தடவையாக நிரூபித்தது. (ரயில்வே தொழிலாளரிடையேயும் சிங்கள, தமிழ், மலையாள, பறங்கிய இனத்தவர் இருந்தனர்). சம்பள உயர்வும் ஏனைய கோரிக்கைகளையும் முன் வைத்த வேலைநிறுத்தம் நாட்டின் சகல ரயில்வேத் தொழிலாளரையும் ஒன்றிணைத்தது. சகல இனங்களையும் சார்ந்த மத்திய தர வகுப்பினரின் ஆதரவு வேலைநிறுத்தத்திற்குக் கிட்டியது. சிங்களவரிடையே காணப்பட்ட மதுவிலக்கு இயக்கத்தின் இக்காலத் தலைவர்கள் ரயில்வே தொழிலாளர் சங்கம் ஒன்றை அமைப்பதில் உதவி புரிந்தனர். தொழிலாளரின் கஷ்டங்கள் குறித்து விசாரிப்பதற்கு நியமிக்கப்பட்ட ஆணையாளர்களில் ஒருவராகிய பொன்னம்பலம் அருணுசலம் தொழிலாளர்களின் சம்பள உயர்வுக் கோரிக்கையைத் தீவிரமாக ஆதரித்து அறிக்கை ஒன்றை வெளியிட்டார். அவ்வறிக்கையில் அவர் பின்வருமாறு குறிப்பிட்டிருந்தார்; உலகப் பாட்டாளி



படிப்பகம்

வர்க்கத்தினரிடையே வளர்ந்துவரும் விழிப்புணர்வின் அலை யால் இலங்கை பாதிக்கப்படாது இருக்குமென எதிர் பார்க்க முடியாது''

## தொழிலாளர் இயக்கமும் அருணுசலமும்

பொன்னம்பலம் அருணுசலம் அரசியல், சமூக, சீர் திருத்தத்தில் மாத்திரமன்றி இலங்கையின் தொழிலாளர் இயக்கத்திற்கும் முன்னேடியாவர். இவர் காலனித்துவ சிவில் சேவையின் (Colonial Civil Service) மிகச் சிறந்த அங்கத்தவருள் ஒருவர் மாத்திரமன்றி தியோசபிஸ்டுகள், பிரித்தானிய தீவிரவாதிகள், சோசலிஸ்டுகள், பிரித்தானிய தொழிற் கட்சியினர் ஆகியோருடனும் பரவலான தொடர்பு கொண்டிருந்தார்; 1919ஆம் ஆண்டு இலங்கைத் தேசிய காங்கிரசின் முதலாவது தலைவராகத் தேர்ந்தெடுக் கப்பட்டு இலங்கையில் முதன்மை வாய்ந்த அரசியற் பிரமுக ராஞர். அக்காலத்து மிதவாதத் தலைவர்களைப் போலல் லாது பல பிரச்சினைகள் தொடர்பாகத் தீவிரமான நிலைப் பாட்டைக் கொண்டிருந்தார். குறிப்பாகத் தொழிலாள ரைப் பாதிக்கும் விடயங்கள் தொடர்பாகவும் சுயாட்சி, சர்வசன வாக்குரிமை முதலியவற்றை ஆதரித்ததிலும் தனது சகபாடிகளைவிடப் பலபடி முன்னேறியிருந்தார். குறிப்பாகத் தொழிலாளரைப் பாதிக்கும் விடயங்கள் தொடர்பாகவும் சுயாட்சி, சர்வசன வாக்குரிமை முதலிய வற்றை ஆதரித்ததிலும் தனது சகபாடிகளைவிடப் பலபடி முன்னேறியிருந்தார். 1917ஆம் ஆண்டு உலக யுத்தம், ரஷ்யப் புரட்சி என்பவை பற்றி எழுதியபோது அவர் பின் வருமாறு குறிப்பிட்டார்; ''தற்போதைய போரில் ஒரு நம்பிக்கையான அம்சம் ரஷ்ய மக்கள் போரில் பங்குபெற்ற மறுத்தமையாகும். சகல நாடுகளையும் சேர்ந்த பொது மக்களும் அவ்வாறே முடிவை எடுப்பர் என நம்புகிறேன். சகல முதலாளிகளையும், பிரபுக்களையும் ஆளும் வர்க்கத்தின ரையும் ஒன்று திரட்டி.... ஒழித்தாலொழிய இப்படு கொலையை நிறுத்த முடியாது.'' இலங்கையின் இளைய, அதி தீவிர தேசியவாதிகள் அருணுசலத்தாற் கவரப்பட்டதில்



வியப்பில்லை. இவரைப் பின்பற்றியவர்களுள் முக்கிய மானவர் பிற்காலத்தில் தொழிற் சங்கத் தலைவராகிய ஏ. ஈ. குணசிங்க ஆவர்.

அருணுசலம் உழைப்பாளர்களை முதன்மைப்படுத்து வதில் எப்போதும் ஆர்வம் காட்டிஞர். தோட்டங்களை விட்டு அகலும் பெருந்தோட்டத் தொழிலாளர்கள்மீது ஒப்பந்த முறிவுக்காகக் கோர்ட்டில் வழக்குத் தொடுத்து அவர்களை மீண்டும் அதே தோட்டத்துக்கே திரும்பவும் உழைக்க வழிசமைக்கும் 1865ஆம் ஆண்டு ''எசமான-பணி யாள்'' சட்டத்தின் அநீதிகளைச் சமூக சேவைச் சங்கம் மூலம் தொடர்ந்து எதிர்த்து வந்தார். ''ஏழையாகவும் அறிவற்றவஞகவும் உதவியற்றவஞகவும் இருக்கும் தொழி லாளி வேலைக்குச் சேர்ப்போரினதும் முதலாளிகளினதும் கொடுங்கோன்மையிலிருந்து தன்னைக் காப்பாற்ற முடி யாமல் உள்ளான்'' என்று கூறிஞர். 1919ஆம் ஆண்டு இலங்கைத் தொழிலாளர் நலச் சங்கம் (Ceylon Workers' Welfare League) உருவாக்கப்பட்டது. இதற்கு அருணு சலம் தலைவராகவும் இந்திய வம்சா வழியினரும் கேம் பிரிட்ஜ் பட்டதாரியுமான பெரி சுந்தரம் செயலாளராகவும் இருந்தனர். செயற்குழுவில் பௌத்த, மதுவிலக்கு இயக்கத் தலைவர்களும் பல இனப் பிரிவுகளையும் சார்ந்த பத்திரிகை யாளர்களும் அங்கம் வகித்தனர். (மாட்டினஸ் பெர்ஞன் டோ, கே. தியாகராஜா, ஆர்மண்ட் டீ சொய்சா, சி.எச்.சற். பெர்ஞன்டோ, சாம். ஜே. சி. கதிர்காமர், ஏ. எஸ். ஜோன், டொக்டர் ஐ. டேவிட்).

1920இல் இலங்கைத் தொழிலாளர் நலச் சங்கம் இலங்கைத் தொழிலாளர் கூட்டுக் கழகம் ஆக மாறியது. இதில் மிதவாதிகளே அங்கம் வகித்தனர் எனினும் அருணு சலம் தீவிரமானதோர் நிலைப்பாட்டை முன்வைத்து தொழிற் சங்கங்களின் அமைப்பிற்காகத் தொடர்ந்து போராடிஞர். ''அமைப்புகளால்தான் நீங்கள் பலம் பெற லாம். ஒரு டசின் மனிதர்கள்.... ஆஞல், அவர்கள் ஒன்ருக

இணைந்து ஒன்ருகச் செயற்படின் அவர்கள் பலம் வாய்ந்தவராவர். அவர்களை எளிதில் முறியடிக்கவும் முடியாது'' என்று கூறினர். மிக விரைவில் எல்லா இடங்களிலும் தொழிற் சங்கங்களை அமைக்குமாறு வற்புறுத்திஞர். வேறு வழிகள் பயன்படா வேளை வேலைநிறுத்தத்தைக் கடைப் பிடிக்கும்படியும் குறிப்பிட்டார். இக்கூட்டுக்கழகத்தில் சுமார் 5,000 தொழில் திறன் பெற்ற தொழிலாளர் அங்கத்தவராய் இருந்தனர். 1920இல் தீவிர தொழிற் சங்கவாதிகளாயிருந்த ஏ. ஈ. குணசிங்க, ஜோர்ஜ் இ. டி. சில்வா என்போர் இதன் செயற்பாடுகளாற் கவரப்பட்டனர்.

சகல இனங்களையும் சேர்ந்த மத்திய தர வர்க்கத்தினரை ஆரம்பகாலத் தேசிய அரசியல் இயக்கங்களும் சீர்திருத்த இயக்கங்களும், பொதுவான சங்கங்களில் ஒன்றிணைத்தன. (ஆனந்த குமாரசாமி நிறுவிய சமூக சீர்திருத்த சங்கமும், சமூக சேவா சங்கம், தொழிலாளர் நலச் சங்கம் இலங்கைத் தேசிய காங்கிரஸ் போன்றவையும்) ஆனல், 1920-களிலேயே இனரீதியான முரண்பாடும் வளர்ந்தது. அருணுசலம் காங்கிரசுடன் கருத்து வேற்றுமை கொண்டு 1923இல் அதன் அரசியலிலிருந்து விலகினர். 1927இல் காங்கிரசில் இருந்த சிங்களத் தலைமைத்துவம் சர்வசன வாக்குரிமையையும் இந்தியத் தொழிலாளர்களின் வாக்குரிமையையும் எதிர்த்தது. இதற்கு எதிர்மாருக தொழிலாளர் வர்க்கத்திடையே இன ஒருமைப்பாடு உச்சக் கட்டத்தில் நிலவியதும் இக்காலத்தில்தான். கொழும்புத் தொழிலாளரிடையே தொழிற் சங்கங்கள் உருவாக்கப்பட்டன. இன ஒருமைப்பாட்டுடன் கூட்டு நடவடிக்கைகளும் நிகழ்ந்தன. இக்காலத்துத் தொழிலாளர் தலைவரான ஏ. ஈ. குணசிங்க சர்வசன வாக்குரிமையையும் இந்தியத் தொழிலாளர்களின் வாக்குரிமையையும் முழுமையாக ஆதரித்தார்.

## ஏ. ஈ. குணசிங்காவும் வர்க்கப் போராட்டமும்

முழு நேரமும் பணியாற்றும் தலைவர்களற்ற நிலையிலும் கொழும்புத் தொழிலாளர் வர்க்கத்தின் மேற்கொண்ட



ஆரம்பகாலப் போராட்டங்களே, 1920-களின் ஒழுங்கமைக்கப்பட்ட வர்க்க மோதல்களுக்கு வழிவகுத்தன. முதலாம் உலகப் போரின் பின்னர் சில ஆண்டுகளுக்கு உணவுத் தட்டுப்பாடும் விலை அதிகரிப்பும் ஏற்பட்டன. இது துறைமுக, ரெயில்வே, அரசாங்கத் தொழிற்சாலைகள், ஏனைய தனியார் பொதுத் துறைகள் சேர்ந்த தொழிலாளரிடையே எதிர்ப்புணர்வை உருவாக்கியது. ரெயில்வேத் தொழிலாளரிடையே தொழிற் சங்கமொன்றை உருவாக்குவதற்கு எடுத்த முயற்சிகள் இக்கால கட்டத்தின் முக்கியமான கூட்டு நடவடிக்கையாகும். இதன் ஆரம்பக் கூட்டத்தில் 700 தொழிலாளர் பங்கு பற்றினர். கோவா வம்சா வழியினரும் பிரபல பத்திரிகையாளரும், அரசியல்வாதியுமான ஆர்மண்ட் டி. சொய்சா தலைமை வகித்தார். கூட்டம் மும்மொழிகளிலும் நடைபெற்றது என்பதும் ஒரு சுவையான செய்தியாகும். சி. எச். சற். பெர்னுன்டோ சிங்களத்திலும் பெரி சுந்தரம் தமிழிலும் சி.எம். ஜேக்கப் மலையாளத்திலும் பேசினர்.

இவ்வாண்டுகளில் தொழிலாள வர்க்கத்தின் முக்கிய பகுதியினரிடையே எதிர்ப்புணர்வு மேலோங்கியது. 1920ஆம் ஆண்டு பெப்ருவரியில் இலங்கைத் தீவு முழுவதிலும் ரெயில்வேத் தொழிலாளரின் வேலைநிறுத்தம் நடைபெற்றது. இதைத் தொடர்ந்து மார்ச் மாதம் 5,000 துறைமுகத் தொழிலாளர் சம்பள உயர்வு கோரி வெற்றிகரமான வேலைநிறுத்தமொன்றை நடத்தினர். ஆனல், 1922இல் சமூக ஜனநாயகவாதியும் தேசியவாதியுமான ஏ. ஈ. குணசிங்காவின் தலைமையில் இலங்கைத் தொழிற் சங்கம் உருவாகியது. தொழிலாளர் வர்க்கத்துக்கு முதல் தடவையாக ஒரு முழுநேரத் தலைமையும் கிடைத்தது. சங்கத்தின் முதலாவது கூட்டம், தொழிற் பிரச்சினைகளில் அக்கறை காட்டியவரும், சட்டசபை உறுப்பினருமான ஈ. ஆர். தம்பிமுத்துவின் தலைமையில் நடைபெற்றது, இலங்கைத் தொழிற் சங்கம் விரைவிலேயே கொழும்புத் தொழிலாளரை ஒருங்கிணைப்பதிலும், 1923 பெப்ருவரியில்

நிகழ்ந்த இலங்கையின் முதலாவது பொது வேலைநிறுத்தத் துக்குத் தலைமை தாங்குவதிலும் வெற்றியடைந்து. இவ் வேலைநிறுத்தம் மூன்று வாரங்களுக்குத் தொடர்ந்தது; பல்வேறு தொழில் துறைகளையும் சகல இனப் பிரிவுகளையும் சார்ந்த 20,000 தொழிலாளர்கள் இதில் பங்கு பற்றினர். நீண்ட காலமாக வழங்கப்படாமலிருந்த சம்பள உயர்வு வழங்கப்பட வேண்டுமென்பதே இவ்வேலைநிறுத்தத்தின் முக்கிய கோரிக்கையாக அமைந்தது. இதன் பயனாக இச் சம்பள உயர்வு வழங்கப்பட வேண்டுமென்பதே இவ்வேலை நிறுத்தத்தின் முக்கிய கோரிக்கையாக அமைந்தது. இதன் பயனாக இச்சம்பள உயர்வு 1925ஆம் ஆண்டு வழங்கப் பட்டது.

1933ஆம் ஆண்டின் பொது வேலைநிறுத்தம் அன்று வரை இல்லாத அளவுக்குத் தொழிலாள வர்க்கத்தின் வலிமையை எடுத்துக்காட்டியதுடன் பல்வேறு இனங் களையும் சார்ந்த தொழிலாளர் வர்க்கத் தலைவர்களையும் தன்னிடமிருந்தே உருவாக்கியது. 'கம்பன்' வில்லியம் 'யக்கா' ஜோன் (Hamban Wiliam and 'yakha' John) போன் ேறார் முன்னைய ரயில்வேத் தொழிலாளர் வேலை நிறுத்தத் தின்போது உருவாகியவர்கள். வெள்ளவத்தை நெசவாலையைச் சார்ந்த கந்தசாமி அரசாங்கத் தொழிற் சாலையைச் சார்ந்த பொடிசிங்கா போன்றோர் குறிப்பிடத் தகுந்தவர். கொழும்புத் தொழிலாளரின் வர்க்க ஒருமைப் பாடு குணசிங்காவாலும் பாராட்டப்பட்டது; ''தாம் நெடுங்காலமாக அடக்கப்பட்டதை உணர்ந்து தமது உரிமைகளைப் பெறுவதற்காக அதிசயிக்கத்தக்க முறையில் எழுச்சியுற்றனர்'' என்றும் ''எமது நாட்டின் அரசியல் விமோசனம் இம்மக்கள் திறனுடைய நேர்மையான முயற்சியில்தான் தங்கியுள்ளது'' என்றும் அவர் குறிப் பிட்டார்.

1923ஆம் ஆண்டு வேலைநிறுத்தத்துடன் தேசிய முக்கி யத்துவம் பெற்ற ஏ. ஈ. குணசிங்க கொழும்புத் தொழி



லாளருக்கு ஒரு தீவிரமான தலைமைத்துவத்தை அளித்தார். தொழிற் சங்கங்களையும் ஜனநாயக உரிமைகளையும் ஆதரித்த இவர் இலங்கைத் தேசிய காங்கிரசில் மிகத் தீவிரமான ஒரு பகுதியை நிறுவியும் செயற்பட்டார். 1920ஆம் ஆண்டுகளின் போராட்டங்களின்போது சிறு பான்மைச் சமூகத் தொழிலாளரின் விசுவாசத்தையும் ஆதரவையும் அவர் பெற்றார்; மகாத்மா காந்தி, ஏனைய இந்தியத் தேசிய இயக்கத் தலைவர்களிலும் அவருக்கிருந்த அபிமானமும் அவர் இந்தியாவுக்கு அடிக்கடி சென்றமையும் ஆதரவை மேலும் உயர்த்தியது.

இலங்கைத் தொழிற் சங்கத்தின் பல்லினத் தன்மையை அதன் தலைமைத்துவமும் பிரதிபலித்தது. சிங்களத் தலை வர்களான குணசிங்கா, சி. எச். சற். பெர்னான்டோ, ஜோர்ச் ஈ. டி, சில்வா, விக்டர் கொரியா போன்றோருடன் இலங்கைத் தமிழரும் சங்கத்தின் நடவடிக்கைகளிற் கூட் டாக ஈடுபட்டனர். ஏ. பி. தம்பிஜயா இச்சங்கத்தின் கிளை ஒன்றை யாழ்ப்பாணத்தில் அமைத்து ஊர்காவற்றுறைத் துறைமுகத் தொழிலாளரை அமைப்பு ரீதியாக ஒழுங் கமைத்தார். 1929ஆம் ஆண்டு ஜேம்ஸ் ரத்தினம் நுவ ரெலியா 'கிரவுண்ட் மோட்டார்' வேலைநிறுத்தத்துக்குத் தலைமை தாங்கினார். இந்தியத் தமிழரும் பத்திரிகை யாளரும், சட்டசபை உறுப்பினருமான கே. நடேச ஐயர் சங்கத்தின் உபதலைவர் பதவியை வகித்தார். மாநகரசபை உறுப்பினரும் சங்கத்தின் சக்திவாய்ந்த தலைவர்களில் ஒருவரும், பேச்சாளருமான எம். எல். உம். றியால் வழக் கறிஞர்களான எம்.என்.என். கனிபா, காசிம் இஸ்மாயில் போன்ற முஸ்லிம்களும் இத்தொழிற் சங்கத்தின் முக்கியஸ் தர்களாக விளங்கினர். சங்கத்தின் தலைமைப் பதவியும் பௌத்த சமயத்தவரின் தனி உரிமையாக இருக்கவில்லை. சி. எச். சற். பெர்னான்டோ, வலன்ரைன் பெரேரா, விக்டர் கொரியா, ஜேம்ஸ் ரத்தினம் போன்ற கிறிஸ்தவர்களும் இப்பதவியில் இருந்தனர். ஏ. ஈ. குணசிங்காவின் தலைமையில் 1928இல் இலங்கைத் தொழிற் கட்சி நிறுவப்பட்டபோது



படிப்பகம்

www.padippakam.com 

அதன் நிர்வாகக் குழுவில் பல சிங்களவரும் ஏ. மகாதேவா' டொக்டர் முத்தையா, திரு திருமதி சத்தியவாகீஸ்வர ஐயர் போன்ற தமிழர்களும் அங்கம் வகித்தனர்.

1928இல் அகில இலங்கைத் தொழிற் சங்கக் காங்கிரஸ் சகல இனங்களையும் சார்ந்த உறுப்பினர்களைக் கொண்டதாய் நிறுவப்பட்டது. அதன் முதற் கூட்டத்தில் ஏ. ஈ. குணசிங்கா இலங்கைத் தேசிய காங்கிரசின் தலைமையைச் "சூழ்ச்சி மிக்க அரசியல்வாதிகள், கேடு தரும் துணிச்சல் வீரர்" என்று தாக்கிப் பேசியதோடு தொழிலாள வர்க்கத்தின் நிலைமை "சீரழிந்தது, சீரழிகின்றது" என்று புலம்பி புதிதாக உருவாக்கப்பட்ட தொழிற் சங்க காங்கிரஸ் "தொழிலாளரை அவர்களது அவல நிலையிலிருந்து விடுவிக்க வேண்டும்" என்றும் வேண்டினார். ஏ. ஈ. குணசிங்கா சகல நாடுகளினது தொழிலாளர் வர்க்கத்திடையே ஒற்றுமையை வேண்டி இந்திய தொழிற் சங்க இயக்கம் உட்பட வேற்று நாட்டு தொழிலாளர் இயக்கங்களுக்கு தோழமை வாழ்த்து அனுப்பி தொழிலாளர் இயக்கத்துக்குச் சாதி, இன, நிற வேறுபாடு இல்லை என்று உறுதியாகக் கூறினார்.

## வர்க்க உணர்வும் தீவிரப் போக்கும்

இலங்கைத் தொழிற் சங்கத்தின் பெரிய வெற்றிகளுள் ஒன்று, 1927ஆம் ஆண்டுத் துறைமுகத் தொழிலாளர் வேலை நிறுத்தம். அன்று போராட்டத்தின் முக்கிய சக்தியாக இன ஒற்றுமை அமைந்திருந்தது. துறைமுகத் தொழிலாளர் சிங்கள, தமிழ், மலையாள இனத்தைச் சார்ந்திருந்தனர். இத்தொழிலாளர்களுள் தொழிற் திறனற்ற பெரும் பகுதி சிறுபான்மை இனத்தவர்கள். 13,000 தொழிலாளர் 3 வாரங்களாக வேலைக்குச் செல்லாது நின்றனர். அவர்கள் சம்பள உயர்வு கோரினர். இத் தொழிலாளர் ஏனைய துறைகளைச் சார்ந்த தொழிலாளரால் பணமும் உணவும் கொடுத்து ஆதரிக்கப்பட்டனர். இச்சந்தர்ப்பத்தில் இந்தியாவிலிருந்து இங்கு 'கருங்காலி'களாகக் கொண்டுவரப்பட்ட தொழிலாளரும் வேலைநிறுத்தக்காரருக்குப் பதிலாக வேலை செய்ய மறுத்தனர். நாட்டின் வர்த்தகத் துறை இதனால் பெரிதும் பாதிக்கப்பட்டது. இதனால் அரசாங்கம் ஏதாவது தீர்வுக்கு வர நிரப்பந்திக்கப்பட்டது. தொழிலாளர் கணிசமான அளவு சம்பள உயர்வும், அதிக நேர உணவு இடைவேளை ஓய்வும் பெற்றனர். இவ்வெற்றியையொட்டி கூட்டங்கள், ஆர்ப்பாட்டங்கள், ஊர்வலங்கள் நடைபெற்றன. ஊர்வலங்களில் தொழிலாளர்கள் செங்கொடிகளைத் தாங்கிச் சென்றனர். இவரகளுடன் நடனமாடுவோர். மேளக்காரர், செஞ்சட்டை அணிந்த தொண்டர்களும் சேர்ந்து கொண்டனர். இச்சந்தர்ப்பத்திற் காணப்பட்ட இன ஒற்றுமை உணர்வு கே. நடேச ஐயரின் ஆதரவால் மேலும் பலப்படுத்தப்பட்டது. இவர் "அரசினர்க்குப் பாடம் படிப்பிப்பதற்கு" இவ்வேலைநிறுத்தம் ஹோட்டல், வீட்டு வேலையாட்களும் பங்குபெற விரிவாக்கப்பட வேண்டும் என்று வேண்டினார். இந்திய வியாபாரிகள், கடைக்காரர் போன்றோரின் ஆதரவைப் பெற்றிருந்த நடேச ஐயர் அவர்களிடமிருந்து வேலைநிறுத்தக்காரருக்கு அரிசி போன்றவற்றைப் பெற்றார். சட்டசபையில் வேலைநிறுத்தம் பற்றிய பிரச்சினையை எழுப்பி சம்பள உயர்வைக் கொடுக்கும்படி அரசாங்கத்தை நிர்ப்பந்தித்தார்.



துறைமுகத் தொழிலாளர் வேலைநிறுத்தத்துக்கு சர்வதேச ரீதியிலான ஆதரவும் கிடைத்தது. வேலைநிறுத்த நாட்களில் கொழும்புத் துறைமுகத்தில் தரித்து நின்ற "ஜேர்விஸ்பே" என்ற கப்பலின் அவுஸ்திரேலியத் தொழிலாளர் உயர்ந்த வேதனத்துக்கு வேலை செய்ய மறுத்ததுடன் ஆதரவு தெரிவிக்கும் பொருட்டும் பண உதவி வழங்கும் பொருட்டும் தொழிற் சங்க அலுவலகத்துக்கு வந்தனர். பின்னர் இவர்கள் இலங்கையை விட்டுச் சென்ற போது இவர்களுக்கு அளிக்கப்பட்ட பிரிவுபசாரத்தில் வேலைநிறுத்த[illegible]க்கு அவர்கள் தெரிவித்த ஆதரவும் அனுதாபமும் ஆ[illegible] தொழிலாளருக்கும் வெள்ளை இனத் தொழி



படிப்பகம்

லாளருக்குமிடையில் உள்ள ஒற்றுமையுணர்வைச் செயலில் வெளிக்காட்டும் அரிய நிகழ்ச்சி என்று ஏ. ஈ. குணசிங்கா குறிப்பிட்டார். ''வெள்ளேயரோ. கறுப்பரோ தொழிலாளர் கள் உன்னதமான ஒரே குடும்பத்தைச் சார்ந்தவர்கள்'' என்ற கருத்தினை இலங்கைத் தொழிலாளர் உள்ளத்தில் பதிய வைப்பதே இவ்வைபவத்தின் நோக்கம் என்று கூறினுர்.

1926 அளவில் நாட்டின் முக்கிய ஏற்றுமதிப் பொருட் களின் விலைகள் மிகவும் உயர்ந்தது. பொருளாதாரத் திடீர் வளர்ச்சி காணப்பட்ட 1930களின் நடுப்பகுதியில் வேறு பல வெற்றிகரமான வேலைநிறுத்தங்களும் நடைபெற்றன. ஆயினும், 1929ஆம் ஆண்டு பெப்ருவரியில் நடைபெற்ற பௌஸ்ரட் சகோதரர்கள் (Boustead Brothers) கம்பனியின் 150 ட்ராம் வண்டித் தொழிலாளர்களின் வேலைநிறுத்தம் 1920களின் தீவிரமான காலகட்டத்தின் உச்சநிலையாக அமைந்தது. சகல இனங்களையும் சார்ந்த இத்தொழி லாளர்களும் தமது போராட்டத்துக்கு கொழும்புத் தொழிலாளர் வர்க்கத்தின் ஆதரவைப் பெற்றனர். கொழும்புத் தொழிலாளர் ட்ராம் வண்டிகளை தடை செய்தனர். இத்துடன் துறைமுகத் தொழிலாளர் பௌஸ்ரட் கம்பனிப் பொருட்களை ஏற்றவோ இறக்கவோ மறுத்தனர். இவ்வேலைநிறுத்தம் ஒரு சிறுபகுதித் தொழிலாளரிடையே சம்பள உயர்வு, லீவு, மேலதிக வேலை நேரம் ஆகியவற்றின் போராட்டமாகத் தொடங்கிய போதும் அக்காலத்தின் மிக வன்முறையான வர்க்க முரண்பாடாகவும் வளர்ச்சி அடைந்தது. தெருச் சண்டைகளும் குழப்பங்களும் ரெயில்வே, துறைமுகம், அரச தொழிற்சாலைகள், தனிப் பட்ட கம்பனிகள் ஆகியவற்றில் வேலை இடைநிறுத்தமும் இடம் பெற்றன. பொலிசாரின் கூற்றுப்படி, மருதானை பொலிஸ் நிலையத்தின் பக்கத்தில் இருந்த கட்டிடங்களும், வாயு நிலையங்களும் தீயிடப்பட்டபோது ''பயங்கரமான கட்டுப்படுத்த முடியாத மூர்க்கம் கொண்ட ஒழுங்கீனத்தின் காட்சிகளாக'' அமைந்தன. இவ்விடத்தில் பொலிசார்



சுட்டதனுல் 5 பேர் கொல்லப்பட்டனர். 950 பேர் காய மடைந்தனர்.

இவ்வேலைநிறுத்தம் பற்றி விபரித்த பிலிப் குணவர்த்தன (பின் வந்த தசாப்தங்களின் இடதுசாரித் தலைவர்) ''தொழி லாளர்கள் தமது வர்க்க நலன்களைப் பாதுகாக்கவும், முதலாளித்துவ அதிகாரச் சின்னத்தை உடைத்தெறியவும், அசாதாரணமான புரட்சிகர உணர்வெழுச்சியுடனும் தியாக சிந்தையுடனும் எழுச்சியுற்றனர். நெருக்கடியான கால கட்டத்தை எதிர்கொள்ளும் அரிய திறனையும் உந்துதலையும் வெளிக்காட்டினர்'' எனக் குறிப்பிட்டார். வேலைநிறுத்த ஆயுதமானது ''மிகவும் கூர்மையான கட்டத்தில் வர்க்கப் போராட்டத்தின் விளைவு'' என்று மேலும் அவர் கூறினுர்; ''முதலாளித்துவ சமூகத்தின் சட்டத்திலும் ஒழுங்கிலும் அக்கறையற்றிருந்த'' ட்ராம்வண்டி வேலை நிறுத்தக்காரர், எவ்வாறு ''சீரழிந்த முதலாளித்துவ சமூகத்தில் அதிகாரத் தை வெளியேற்ற முடிந்தது'' மாத்திரமன்றி ''உலகம் என்றும் கண்டிராத பலம் வாய்ந்த ஏகாதிபத்தியத்தின் ஆயுதப்படைகளுக்குச்'' சவாலாகவும் இருக்க முடிந்தது என்பதைப் பிலிப் குணவர்த்தன எடுத்துக்காட்டியுள்ளார். இலங்கையில் இத்தகைய வர்க்க தீவிரத்தன்மையின் ஒப் பற்ற வெளிப்பாடு, இன ஒருமைப்பாடு, தொழிலாளர் வர்க்க ஒற்றுமை ஆகியவற்றை நீண்ட காலத்திற்கு நிரூ பிக்கும் கடைசிச் செயலாக அமைந்தது.

வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இந்த ட்ராம்வே வேலைநிறுத்தத்தை அடுத்துவந்த ஆண்டுகளில் தொழிலாளர் வர்க்கத் தலைமை சிங்களத் தொழிலாளர்களை இன முரண் பாட்டுக்கும் வகுப்புவாதப் பாதைக்கும் இட்டுச் சென்றது. எவ்வாருயினும் 1929 வரைக்கும் இருந்த தலைவர்களுக்கு, அவர்களது இனபேதமற்ற நிலைப்பாட்டுக்காகப் பாராட்டப் பட வேண்டும். நீல் குருப்பு இதுபற்றிப் பின்வருமாறு கூறினுர்.



படிப்பகம்

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

"சிறிது காலத்துக்கு குணசிங்கா துறைமுக, ரெயில்வேப் பகுதிகளின் முக்கிய பகுதியினரையும் உள்ளடக்கிய ஏராளமான தொழிலாளரை ஒற்று மைப்படுத்தி ஒரு கொடியின்கீழ் ஒருங்கிணைக்க முடிந்தமை பாராட்டப்பட வேண்டியது....அது போலவே தமது உரிமைகள், மேம்பட்ட வேலை நிலைமைகள் என்பவற்றுக்காகப் போராட இந்திய, சிங்களத் தொழிலாளர் ஒன்றிணைந்தனர்....கொழும் பிலும் பெருந்தோட்டங்களிலும் இந்தியத் தொழி லாளரிடையே நடேச ஐயரின் செல்வாக்கும் தலைமையும் அதிகரித்தபோது, இந்நாட்டின் தொழிலாளர் வர்க்கம் முழுமையாக வர்க்க உணர்வு, ஒருமைப்பாடு, செயற்பாடு ஆகியவற்றின் புதிய உச்சங்களை நோக்கி விரைந்து முன்னேறுவ தாகக் கண்டோம். ஆனால், அவ்வாறு இல்லாமல் விரைவில் நிலைமை மோசமானதாக மாறியது."

சிங்களத் தொழிலாளர், சிறுபான்மை இனத் தொழி லாளர் ஆகியோர் மத்தியில் நிலவிய நாற்பது வருட வர்க்க ஒருமைப்பாடு முனைப்பாகக் காட்டப்படவும் நினைவுகூரப் படவும் வேண்டும். தொழிலாளர் இயக்கம் பொய்மை உணர்வுடனும் இனப்பற்றுடனும் திசை திருப்பப்படும் இன்றைய காலகட்டத்தில் பகுத்தறிவு சார்ந்த வர்க்க உணர்வுச் செயற்பாடுகள் நடைபெற்ற முன்னைய கால கட்டம் ஒரு பாடமாகவும் உந்துதலாகவும் பயன்படும். இக்கால கட்டத்தில் வேலைநிறுத்தத்திற்குத் தலைமைதாங்கி யோரை மட்டுமல்லாது, தொழிலாளர் இயக்கத்தின் ஆரம்ப காலத்தில் ஆட்சி புரிந்த முதலாளித்துவ, காலனித் துவ அரசுக்கு எதிராக முக்கிய போராட்டங்களில், இன, மத, சாதிவேறுபாடுகளை மறந்து கூட்டாகப் போராடிய இலங்கையின் ஒடுக்கப்பட்ட, சுரண்டப்பட்ட மக்கட் பகுதி யினரையும் நாம் நிச்சயமாகப் பாராட்டவே வேண்டும்.



# 5 வர்க்க, இன உணர்வுகளும் மலையாளத் தொழிலாளர்களும்

1930கள் வரை தொழிலாளரிடையே இனப் பகைமை உணர்வு தலைதூக்கவில்லை, தொழிற்சங்க இயக்கத்தின் ஆரம்ப காலத்தில் ஏற்பட்ட வர்க்க உணர்வினால் இன உணர்வு மேலெழும்பவில்லை. கொழும்பிலிருந்த தொழி லாள வர்க்கம் எல்லா இனத்தினரையும் உள்ளடக்கிய ஒன் றிணைந்த போராட்டத்தில் ஈடுபட்டிருந்ததால் வர்க்க உணர்வே முதன்மை பெற்றிருந்தது.

எனினும், இக்காலத்திலும்கூட தொழிலாளர் குட்டி பூர்ஷ்வாக் கருத்தியல்களான பௌத்த மறுமலர்ச்சி, மது ஒழிப்பு என்பவற்றால் கவரப்பட்ட தொழிலாளர்களிடை வகுப்புவாதச் சலசலப்பு ஓரளவு ஏற்படவே செய்தது. 1915ல் தொழிலாளர்களில் ஒரு பிரிவினர் கொழும்பில் முஸ்லிம்களுக்கெதிரான கலவரங்களில் ஈடுபட்டனர். ஆனால், அவர்கள் கிளர்ச்சி, விலையுயர்வு போன்ற பொருளா தாரப் பிரச்சினைகள் காரணமாகவே இருந்தது. 1910இல் கூட, புகைவண்டிப் பகுதி ஊழியர்கள் அப்பகுதியில் இந்தி யர்களைச் சேர்த்துக்கொள்வதை எதிர்த்து முறைப்பாடு செய்தனர். 1913இல் புகைவண்டிப்பகுதி ஆணைக்குழு விசாரணையின்போது சிங்களவர், பறங்கியர் ஆகியோரை விட அப்பகுதியில் இந்தியத் தமிழருக்கும் மலையாளி களுக்கும் நியமனத்தில் முன்னுரிமை வழங்குவதாகக் குற்றம் சுமத்தப்பட்டது. எனினும், 20ஆம் நூற்றாண்டின் தொடக்க காலத்தில் வர்க்க ஐக்கியமும் ஒன்றிணைந்த போராட்டமும் அவர்களது முக்கிய குறிக்கோளாக விளங்கியது.

## பொருளாதார நெருக்கடி

இலங்கை வரலாற்றில் 1930களில் இன உறவுகளில் நெருக்கடி ஏற்பட்டது. இக்காலத்தில்தான் தொழி



படிப்பகம்

லாளர்கள் முதன்முதலாக சிறுபான்மையினத் தொழிலாளர்களுக்கெதிரான போராட்டத்தில் ஈடுபட்டனர். இக்காலகட்டத்தில் முக்கிய அரசியல், பொருளியல் மாற்றங்கள் நிகழ்ந்தன. 1931இல் எழுதப்பட்ட புதிய அரசியல் யாப்பு ஓரளவு தன்னாட்சியை வழங்கியது. அனைவருக்கும் வாக்குரிமை என்ற முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட 50 பேரைக் கொண்ட சட்ட சபை (State Council) உருவாக்கப்பட்டது. நாட்டில் மோசமான பொருளியல் நெருக்கடி ஏற்பட்டிருந்த காலத்தில் இச்சீர்திருத்தங்கள் நடைமுறைப் படுத்தப்பட்டன. உலக பொருளாதாரச் சீர்கேடுகளால் இலங்கையின் ஏற்றுமதிப் பொருட்களின் விலை பெருமளவுக்கு வீழ்ச்சியடைந்திருந்தது. இதன் விளைவாக சம்பளக் குறைப்பு, வேலை நீக்கம், வறுமை முதலிய பல்வேறு சிக்கல்கள் ஏற்பட்டன. இவ்வாறு நொந்திருந்த மக்களை 1934இல் மலேரியா நோய் தாக்கியது. ஒரு லட்சம் மக்களை இது பலி கொண்டது. இக்காலத்தில்தான் 1920ல் ஏ. ஈ. குணசிங்கா அவர்கள் தலைமையில் இயங்கிய தீவிர தொழிற் சங்க இயக்கம் வீழ்ச்சியுறத் தொடங்கியது. 1935இல் முதன் முதலாக இடதுசாரிக் கட்சி இலங்கையில் தோன்றியது.

பொருளாதார வீழ்ச்சியால் வேலைவாய்ப்புக் குறைந்து தொழிலாளர் பாதிக்கப்பட்டனர். இது இனங்களுக்கிடையே தீவிர கருத்து முரண்பாட்டை ஏற்படுத்தியது. தேயிலை, இறப்பர்த் தோட்டங்கள் பல மூடப்பட்டதால் கொழும்பில் பொருளியல் தொழிற்பாடுகளில் வீழ்ச்சி ஏற்பட்டது. அரச திணைக்களங்களிலும் தனியார் நிறுவனங்களிலும் ஆட்குறைப்பு ஏற்பட்டது. இக்காலத்தில் கொழும்பில் இந்நாட்டிற்குரியவரல்லாத, குடிபெயர்ந்து வந்த தொழிலாளர்கள் இருந்ததால் இனரீதியான எதிர்ப்புணர்வு மிகுந்தது. 1920களின் தொழிற்சங்கத் தலைவர்கள் 'அந்நியருக்கு' எதிராக, குறிப்பாக, மலையாளிகளுக்கு எதிராகப் போராடச் சிங்களவரைத் தூண்டிவிடும் இனவாதத்தில் தஞ்சம் புகுந்தனர். எனினும், அதே காலத்தில்,



அரசியலில் இடதுசாரிகள் புகுந்ததால் இனப்பிரச்சினையில் சாதகமான நிலை ஏற்பட்டது. பல இளம் மார்க்சிஸ்ட் தலைவர்கள் ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் தமது கல்வியை முடித்துக் கொண்டு திரும்பியிருந்தார்கள். இவர்கள் அனைத்துலகக் கோட்பாடுகளையும் புரட்சிகர மாற்றம் பற்றிய சிந்தனைகளையும் மக்களிடையே பரப்ப முன்வந்தனர். 1920களின் தொழிலாளர் இயக்கத்தில் ஏற்பட்ட இன ஒற்றுமை பற்றிய கருத்துக்களாலும் மக்களிடையே இன, மத ஒருமைப்பாடு ஏற்படவேண்டுமென்ற காந்தீயக் கோட்பாடுகளாலும் ஈர்க்கப்பட்ட சோசலிசக் கருத்துள்ள இளைஞர்களும் இந்த மார்க்சீய இனத்தலைவர்களுடன் இணைந்துகொண்டனர். இடதுசாரிகள் ஏகாதிபத்தியத்துக்கெதிராக அனைத்துச் சமூகங்களும் இணைய வேண்டும், சுரண்டலுக்கெதிராக அனைத்துத் தொழிலாளர்களும் ஒன்று படவேண்டும் என்றனர். இனவாதத்தையும் எதிர்த்து சிறுபான்மையோருக்கு எதிரான பாகுபாடுகளுக்கு எதிராகவும் போராட வேண்டும் என்ற கருத்துக்கும் ஆதரவாகவும் உறுதியாக நின்றனர்.

## மலையாளிகள்

தமிழக கரையோர மாநிலங்களான திருவாங்கூரிலிருந்தும் கொச்சியிலிருந்தும் (இன்றைய கேரள மாநிலம்) குடிபெயர்ந்து வந்தவர்களே மலையாளிகளாவர். 1920களிலும் 1930களிலும் இலங்கையிலிருந்த தொழிலாளர்களுள் மலையாளிகளும் முக்கிய பகுதியினராயிருந்தனர். அவர்களிலே பெருந்தொகையானோர் கொச்சியிலிருந்து வந்ததால் கொச்சியர் என மக்களால் அழைக்கப்பட்டனர். கொழும்பில் இவர்கள் ஆலைகளிலும் தொழிற்சாலைகளிலும் பணியாற்றியதுடன் பிற முக்கிய துறைகளாகிய துறைமுகத்திலும் புகைவண்டிப் பகுதியிலும் பணியாற்றினர். மலையாளிகள், ஐரொப்பியர், உள்ளூர்ப் பூர்சுவாக்கள் ஆகியோரின் வீடுகளிலும் இவர்கள் பணியாளர்களாகத் தொழில் புரிந்தனர். கள்ளிறக்கும் தொழிலாளர்களாகப் பணியாற்ற மலையாளிகளாகிய இவரும் இலங்கைக்குக்



படிப்பகம்

குடிபெயர்ந்தனர். ஆசிரியர், சிறுவணிகர். தேநீர்க்கடை உரிமையாளர், உணவக உரிமையாளர் ஆகவும் மலையாளக் குட்டி முதலாளிகள் இங்கு வாழ்ந்தனர். 1911இல் இலங்கையில் 1000ஆக இருந்த மலையாளிகள் தொகை 1930இல் 30,000ஆக உயர்ந்தது. இக்காலம் உலகில் பொருளியல் வீழ்ச்சி ஏற்பட்ட காலமாகும். இது கேரளத்தையும் பாதித்தது.

## தொழிற் சங்க இயக்கக் கொள்கைகளில் மாற்றம்

மிக மோசமாக வீழ்ச்சியடைந்த பொருளியல் நிலைமைகளின் தாக்கத்தால் தொழிற் சங்க இயக்கக், கொள்கைகளிலும் வன்மையான மாற்றங்கள் ஏற்பட்டன. தொழிற் சங்கத் தலைவர்கள் தொழிலாளர் வேலை நீக்கம் வாய்ப்புக் குறைதல் ஆகியவை பொருளாதார நெருக்கடியின் விளைவு என்பதை உணராது சூழ்நிலையைச் சாதகமாக்கித் தமது செல்வாக்கை வளர்க்க முனைந்தனர்.

உண்மை நிலையை தமது உறுப்பினருக்கு விளக்க முடியாத, விளக்க விரும்பாத, இத்தலைவர்கள் தமது ஆதரவுக்கு பெரும்பான்மையினரான தொழிலாளர்களின் வேலை வாய்ப்புக்களைப் பாதுகாக்க முயன்றனர். மலையாளிகள் குறைந்த சம்பளத்துக்கு வேலை செய்யத் தயாராக இருந்ததால் அவர்கள் தமது வேலை வாய்ப்புக்களைப் பறிக்கும் முக்கிய போட்டியாளர்கள் எனச் சிங்களத் தொழிலாளரிடை பிரசாரம் செய்தனர். முதன் முறையாக, தொழிற் சங்கத் தலைவர்களே தொழிலாள வர்க்கத்தினரில் ஒரு பகுதி மக்களுக்கெதிராக எதிர்ப்புப் போராட்டத்தை முன்னின்று நடத்தினர். 1920களில் இன ஒற்றுமையை வலியுறுத்திய இலங்கைத் தொழிலாளர் சங்கத் தலைவர் ஏ. ஈ. குணசிங்காவே தமது சங்கத்தினூடாக மலையாளி எதிர்ப்புப் போராட்டம் ஒன்றை நடத்தி முடித்தார். இதுவே முப்பதுகளின் பிற்கூற்றில் உக்கிரமடைந்தது. வர்க்க உணர்வு



வேகமாக வீழ்ச்சியடையத் தொடங்கியது. பொருளியல் கஷ்டங்களுக்கு இனரீதியான விளக்கங்கள் பிரசாரஞ் செய்யப்பட்டது. சிங்களத் தொழிலாளர் படிக்கும் பத்திரிகைகளும் வெளியீடுகளும் இதற்கு முக்கிய இடம் அளித்தன.

வேலைநிறுத்தக் காலங்களில் பயன்படுத்தப் பெருமளவில் குறைந்த கூலியில் தொழிலாளர் கிடைக்கப் பெற்றதனால் நிலைமை மேலும் மோசமானது 1929கும் 1932கும் இடையில் ஏரிக்கரையகம் (Lake House - 1929), கண்டி குவீன்ஸ் ஹோட்டல் (1931), கொழும்பு காலிமுகத்திடல் ஹோட்டல் ஆகியவற்றில் நடைபெற்ற வேலைநிறுத்தங்களின்போது வேலைகொள்வோர் சிங்களவருக்குப் பதிலாக இந்தியர்களை நியமித்தனர். இது அப்போது நிலவிய இந்திய எதிர்ப்புணர்வை மேலும் வளர்த்தது. 1931இல் சிங்களவருக்குப் பதிலாக மலையாளிகளை வீட்டு வேலைக் கமர்த்தியதால் குழப்பமும் ஒழுங்கின்மையும் ஏற்பட்டதாகவும் கொரில்லா முறையில் கொழும்பு நகர வீதிகளில் மலையாளிகள் தாக்கப்பட்டதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. ஏ. ஈ. குணசிங்காவின் தொழிற்சங்க இயக்கச் சிங்கள மொழி ஏடான 'வீரயா' (வீரன்) இவ்வெதிர்ப்பியக்கப் பிரசாரத்தில் முன்னணியில் நின்றது. 1930களில் இது சிங்களவரல்லாதோருக்கு எதிரான கிளர்ச்சிகளைத் தூண்டிவிடும் பிரசாரத்துக்குப் பயன்பட்டது. அனகாரிக தர்மபாலாவின் வழியில், அவரது குரலில் 1930இல் 'வீரயா' ஏடு வெள்ளையர், கரையோர முஸ்லிம்கள், போராக்கள், மலையாளிகள் ஆகியோரது ஆக்கிரமிப்பால் தங்கள் இனம் வீழ்ச்சியடைவதாகப் பிரசாரம் செய்தது. இப்பிரசாரம் வலுவடைந்து, பின்வந்த ஆண்டுகளில், மலையாளிகளையே பிரதான எதிரிகளாக்கியது.

## வேலையில்லாப் பிரச்சினை

வேலையில்லாமையே கிளர்ச்சிகளுக்கும் இனப் பிரச்னைக்கும் முக்கிய காரணமாக அமைந்தது. தொழிலாளர்களுக்கென ஏற்படுத்தப்பட்ட கொழும்பு மத்திய தொகுதியி



படிப்பகம்

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

லிருந்துதேர்ந்தெடுக்கப்பட்ட குணசிங்கா சட்டசபையில் பல முறை இப்பிரச்சினைகளை எழுப்பினார். 1931இல் புகையிரதப் பகுதியில் நாளாந்தச் சம்பளம் பெறும் 3000 பேரில் 1700 மலையாளிகள் இங்கு வந்து இலங்கைத் தொழிலாளிகளின் வேலைவாய்ப்பைப் பறிப்பதாக' அவர் குற்றம் சாட்டினார். (உறன்சாட், 7 அக்டோபர், 1931இ ப. 506). மே தின ஊர்வலங்களில்கூட இந்தப் பகைமையுணர்வு எதிரொலித்தது. 1931இல் பொலிசார், குணசிங்காவின் மேதின ஊர்வலத்தில் மலையாளிகளுக்கெதிராக நிலவிய கொடூர மனப்பான்மைபற்றிக் குறிப்பிட்டார். முப்பதுகள் முழுவதும் வேலையின்மை தொடர்ந்து நிலவியதால் மலையாளிகளுக்கெதிரான குரல்கள் தொடர்ந்து வெளியிடப்பட்டன. மலையாளிகளைத் திட்டும் வகையில் அமைந்த பத்திரிகை அறிக்கைகளில் வேலைப் போட்டியே பெரும்பாலும் முதன்மைப்படுத்தப்பட்டது. 'வீரயா' ஏடு தன் முக்கிய படைப்புக்களிலும் ஆசிரியர் தலையங்கங்களிலும் கடிதங்களிலும் மலையாளிகளிக்கெதிரான பிரச்சாரத்தைத் தொடர்ந்து மேற்கொண்டது. இந்த இயக்கத்துக்குச் சிங்களவரல்லாத, 'இலங்கைவாசி'களினது ஆதரவும் திரட்டப்பட்டது "இலங்கையில் மரபு வழிவந்த நிரந்தரவாசிகளான சிங்களவரும் பிற நிலையான குடிகளும் வேலையின்மையால் பெரும் இன்னல்களை எதிர்நோக்குகின்றனர். ஆனால். ஆயிரக்கணக்கான மலையாளிகள்.... வேலைகளைப் பெற்று வருகின்றனர்'' என 'வீரயா' ஏடு (28 பெப்ரவரி 1936) குறிப்பிட்டது.

மலையாளிகளுக்கெதிரான பொதுக் கூட்டங்களில் வேலையில்லாப் பிரச்சினை எழுப்பப்பட்டது. மலையாளிகள் பிரச்சினையை ஆராய 1936, மார்ச் மாதத்தில் கொழும்பு வடக்கில் ஒரு கூட்டம் நடந்தது. இக்கூட்டத்தில் ஏ. ஈ. குணசிங்கா நீண்ட நேரம் பேசினார். அதில் அவர் உள்ளூர்த் தொழிலாளர்களுக்கு ஏற்படும் தொந்தரவுகள், இன்னல்கள் பற்றியும் 'மலையாளிகள் அவர்களுக்குரிய வேலைகளைப் பறிப்பதால்' அவர்கள் வேலைகளை இழக்கும் ஆபத்தை எதிர்



நோக்குவது பற்றியும் உரையாற்றினார். இக்கூட்டத்தில், மலையாளிகளை ஆட்குறைப்புச் செய்யாது நாடு கடத்தாதது பற்றியும் குணசிங்கா அரசை வன்மையாகக் கண்டித்தார். இலங்கையரின் நலன்களைக் காக்க முன்வருவோரைப் பொலிசார் வகுப்புவாதத்தைத் தூண்டுவதாகக் குற்றம் சாட்டுகின்றனர் எனவும் அவர் முறைப்பட்டார் ('வீரயா' 31 மார்ச், 1936)

இக்கூட்டங்களிலும் பத்திரிகைகளிலும் மலையாளிகளுக்கெதிராக அடிக்கடி கூறப்பட்ட முக்கிய குற்றச்சாட்டு தவறான வழிகளில் அவர்கள் வேலைகளைப் பெறுகிறார்கள் என்பதாகும்.

> 'எவ்வாறு ஒரு மலையாளி தொழிசாலைக்குள் நுழைகிறான்' என நாம் பல வழிகளில் அறிகிறோம்.... பின்னர் எல்லா வழிவகைகளையும் கையாண்டு தன் சொந்த நாட்டுக்காரரால் தொழிற்சாலையை நிரப்பி மலையாளி பிற வேலையாட்களின் வாழ்க்கைக்குப் பெரிய அச்சுறுத்தலாக அமைகின்றான். மலையாளிகள் குறைந்த ஊதியத்துக்குப் பணியாற்றக்கூடியதாக, இலங்கையின் வேலைவாய்ப்புக்களைப் பறிக்கும் நிலையில் இருப்பதாலும் அவர்கள்....இலங்கைத் தொழிலாளருக்கு அச்சுறுத்தலாக அமைகின்றனர்.''
>
> —'வீரயா' ஆசிரியத் தலையங்கம், 31, மார்ச், 1936

## மலையாளிகளைப் புறக்கணித்தல்

மலையாளிகளுக்கு எதிரான இயக்கம் பல்வேறு மட்டங்களில் நடைபெற்றது. சட்டசபையில் ஏ. ஈ. குணசிங்கா மலையாளிகளை நாடு கடத்தி, அவர்களது வேலைகளை உள்ளூரவர்களுக்குக் கொடுக்கும்படி அரசை வற்புறுத்தினார். குறைந்த ஊதியத்துக்கு வேலை செய்யும் மலையாளிகளை வேலைக்கமர்த்த வேண்டாமென வேலை கொள்வோருக்கு



படிப்பகம்

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

வேண்டுகோள் விடப்பட்டது. மலையாளிகளுக்கு வீட்டை வாடகைக்குக் கொடுக்க வேண்டாம் என வீட்டுரிமையாளர் கேட்டுக்கொள்ளப்பட்டனர். மலையாளிகளின் கடைகளையும் தேநீர்க் கடைகளையும் பகிஷ்கரிக்கும்படி மக்கள் கேட்கப் பட்டனர், ''மலையாளிகளை நாம் ஒதுக்கலாமா?'' என்ற ஆசிரியத் தலையங்கத்தில் 'வீரயா' (1 ஏப்பிரல், 1936) ஏடு ''மலையாளிகளை ஒதுக்கும் இயக்கத்துக்கு ஆதரவு நல்கும் படியும் சிங்களவரை ஒன்றுபடும்படியும்'' வேண்டுகோள் விடுத்தது. மறு வாரம், ''எவ்வாறு மலையாளிகளை நாம் ஒதுக்கலாம்?'' என்ற ஆசிரியத் தலையங்கத்தில் 'வீரயா' ''எல்லாத் திசைகளிலுமிருந்து மலையாளிகளை ஒதுக்கும் குரல் கேட்கிறது'' என எழுதியது. அது தொடர்ந்து ''உங்கள் தொழிற்சாலை, தோட்டம், கடை, மாளிகை, காணி என்பவற்றில் பணியாற்றும் மலையாளிகளை வேலை நீக்கம் செய்ய வேண்டும் என்று நீங்கள் கேட்க வேண்டும். அவர்களுடைய இடத்தில் சிங்களவர் நியமிக்கப்பட வேண்டும் என்று கோருங்கள்'' இது வன்முறையின்றி அமைதியாக நிகழும் எனக் கூறப்பட்டது. ஆனால் இயக்கம் வன்முறையில் அமைந்தது.

> ''அகிம்சை முறையில், 'தரும யுத்தம்' என்ற முறையில் இப்போராட்டத்தை வெற்றி பெறச் செய்யும் வழிமுறைகளை நாம் சிந்தித்துக் கண்டறிய வேண்டும். தன் தாய் நாட்டையும், தன் சக நாட்டு மனிதனையும் நேசிக்கும் ஒவ்வொருவரும் ஒவ்வொரு கிராமத்திலும் உக்கிரமான இயக்கத்தை நடத்தவேண்டும். மலையாளிகளுடனான தொடர்புகளையும் வணிகத்தையும் நிறுத்தும்படி கோர வேண்டும். மலையாளிக்கு வீடு வாடகைக்குக் கொடுப்பதை நிறுத்தும்படி கேட்க வேண்டும். அமைதியான பகிஷ்கரிப்பு மூலம் எல்லா தொடர்புகளையும் நிறுத்தவேண்டும். இதன் மூலம் எமது கௌரவத்தையும் காக்கவேண்டும்''
>
> —'வீரயா'. 6 ஏப்பிரல், 1936.



மலையாளிகளுக்கு எதிரான போராட்டத்தில் தமிழர்களையும் சிங்கள மக்களோடு 'மண்ணின் மைந்தர்கள்' பக்கத்தில் சேர்த்திருப்பது விசித்திரமானதே. சிங்களவரும் தமிழரும் மலையாளிகளின் தேநீர்க் கடைகளில் புறக்கணிக்கப்படுவதாக முறைப்பாடுகள் செய்யப்பட்டன,

> ''மலையாளிகளுக்குச் சிறப்பாக ஒதுக்கப்பட்ட குவளைகளும் தட்டுகளும் இருந்தன....வேறு இனத்தவர்களான சிங்களவருக்கும் தமிழருக்கும் வேறு தட்டுகள் வைக்கப்பட்டன. ஒரு சிங்கள ஐயாவும் ஒரு தமிழ் ஐயாவும் இக்கடைகளுக்குள் சென்றால்.... அங்குள்ள பணியாள் 'இரண்டு ஐயாக்களுக்குத் தேநீர்' என்று குரல் கொடுப்பான், தேநீர் தயாரிப்பவனுக்கு வந்திருப்பவர்கள் மலையாளிகள் அல்லர் என்பதையும் வேற்றினத்தவர்கள் என்பதையும் அவன் இதனால் புரிய வைப்பான்.''
>
> —'வீரயா' 16 ஏப்பிரல், 1936.

## தேர்ந்தெடுக்கப்பட்ட ஆரிய மக்கள்

1930களில் இலங்கையில் ஏற்பட்ட வகுப்புவாத வெறி ஜேர்மனியிலும் இத்தாலியிலும் ஏற்பட்ட பாசிச வெறியோடு சமகாலத்தில் நிகழ்ந்தது. உள்ளூரில் வெளி வந்த பல செய்தி ஏடுகள் ஹிட்லர், முசோலினி ஆகியோரது வெளிநாட்டுக் கொள்கைகளுக்கு ஆதரவான விவரங்களை வெளியிட்டன. பல தேசியவாதிகளும் தொழிற்சங்கத் தலைவர்களும் சிங்களவர் 'ஆரியர்' என்ற பௌராணிக வரலாற்று மாயையால் புத்துணர்வு பெற்ற நிலையில் ஜேர்மனியிலும் இத்தாலியிலும் பயன்படுத்தப்பட்ட மொழியும் பாணியும் தமது சொந்தப் பிரசாரத்துக்கும் பயன்படும் என்று கண்டனர்.

1939இல் ஏ. ஈ. குணசிங்கா கொழும்பில் சிங்களப் புத்தாண்டுக் கொண்டாட்டங்களை நிகழ்த்தினர். அதில்



படிப்பகம்

www.padippakam.com


"சிங்களவராகிய நாம் அனைவரும் ஒரே கொடியின் கீழ் அணி திரள வேண்டும்' என்று பிரகடனம் செய்தார். இந்நிகழ்ச்சியில் விவசாயத்துறை அமைச்சர் டி. எஸ். சேனநாயக்க முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டார். அவருடைய பேச்சு சிங்கள மக்களைத் தூண்டிவிடும் ஆற்றல் வாய்ந்ததாக இருந்தது.

> "(சிங்களவராகிய) எம் உடலில் ஓடுவது ஒரே குருதி. நாம் ஒரே இனத்தவர். நாம் தனிச் சிறப்புள்ள மக்கள். 5500 ஆண்டுகளுக்குத் [illegible] தம் நிலைக்குமென்று புத்தர் கூறினார் புத்த[illegible]த்தின் பாதுகாவலர்கள் என்ற முறையில் நாமும் அதே அளவு காலம் நிலைத்து வாழ்வோம்"
>
> —(சிலோன் டெயிலி நியூஸ், 17 ஏப்பிரல், 1939).

இதே போன்ற உணர்வுகள் சமகாலத்தில் தொழிற்சங்க ஏடுகளிலும் வெளியிடப்பட்டன. 'வீரயா' ஏட்டில் வெளியிடப்பட்ட ஒரு கடிதம் "சிங்கள மக்கள் மேய்ப்பவனில்லாத மந்தைபோல வாழும் விதிபற்றிக் கவலைப்படுகிறது. சிங்கள இனத்தை (அழிவிலிருந்து) காக்க நற்பண்புகளும் தளரா உறுதியும் மிக்க மக்கள் குழுவும், நற்பண்பும் வீரமும் பொருந்திய வீரத் தலைவனும் இன்றைய தேவையாகும். ஆரிய இனம் அழிவதைத் தடுக்கப் போரிடும் கொள்கைகளை நடைமுறைப்படுத்தும் ஹிட்லர் போன்று அத் தலைவன் அமைய வேண்டும்.?'

—'வீரயா' 17 ஏப்பிரல், 1936)

## மகளிரும் இனவாதமும்

இனவாதத்தோடு தொடர்புடைய இன்னொரு பௌராணிக மாயை இனத்தூய்மையாகும். இத்தூய்மை மகளிரால் காக்கப்பட வேண்டும் என்று எண்ணப்பட்டது. இலங்கைக்கு வந்த மலையாளிகள் சிங்களப் பெண்களை



மணந்த காலமாதலால் 1930களில் இனத்தூய்மை உணர்ச்சியூட்டும் வகையில் பிரச்சாரம் செய்யப்பட்டது.

1930களில் 'வீரயா' ஏடு சிங்களவர் தமது வேலை வாய்ப்பை இழப்பதோடு மங்கையரையும் மலையாளிகளிடம் இழந்து வருகின்றனர் என்று விமர்சித்தது. அதுமட்டுமன்றி, மலையாளிகள் தம்மிடமிருந்த புகழ்பெற்ற மலையாள மந்திரங்களாலும் வசிய முறைகளாலும் இதனைச் சாதிப்பதாக அவ்வேடு குற்றம் சுமத்தியது. "மலையாளிகளின் இத்தகைய மத்திர, மாயங்களுக்குச் சிங்களப் பெண்கள் பலியாவது இலங்கைக்குப் பெரும் அவமானம்'' என ஏ. ஈ. குணசிங்கா 1936இல் ஒரு பொதுக் கூட்டத்தில் பேசினர். ('வீரயா' 31 மார்ச், 1936). சிங்களப் பெண்களோடு கூட்டு வைத்திருந்த மலையாளிகள் கத்தியால் குத்தப்பட்டது அல்லது தாக்கப்பட்டதை ஆதரித்து 'வீரயா' குறிப்புகளையும் வெளியிட்டது. ('வீரயா', 7 சனவரி 1931). மலையாளிகளுடன் தொடர்பு கொள்வதன் மூலம் இனத்துக்கு இழிவு தேட வேண்டாம் எனச் சிங்களப் பெண்களுக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டது. மலையாளிகளால் வசீகரிக்கப்பட்டுக் கெடுக்கப்பட்ட சிங்களப் பெண்கள் பின் கைவிடப்பட்டதால் அடையும் அவலங்களைச் சித்தரிக்கும் நாடகங்களும் மேடையேற்றப்பட்டன. "கலப்புத் திருமணங்களும் தேசிய அபிவிருத்தியும்'' என்ற தலைப்பில் பி. சிறிசேன என ஒப்பமிட்ட ஒருவர் 'வீரயா' ஏட்டில் எழுதிய கடிதத்தில் இவ்விஷயம் முழுமையாக இனவாத நோக்கில் விரித்து எழுதப்பட்டிருந்தது. ஹிட்லரின் யூதர் எதிர்ப்புக் கொள்கைகளைப் பெரிதும் ஆதரிக்கும் அவர் பின்வருமாறு எழுதுகிருர் :

> ஜேர்மனியின் தலைவரான ஹிட்லர் ஆரியக் குருதி ஓடாத! எவனிடமும் தலைமைப் பண்பைக் காண முடியாது என்று கூறினர். எனவே, அவர் தமது நாட்டில் ஆரியரும் ஆரியரல்லாதாரும் மணம்



படிப்பகம்

புரிவதைத் தடுத்துள்ளார். ஆரியரல்லாதார் வீடுகளில் இளம் ஆரிய ஜெர்மன் பெண்களை வேலைக்கமர்த்துவது சட்ட விரோதம் ஆகுமென ஹிட்லர் பிரகடனம் செய்தார். கலிபோனியா, பேர்சியா போன்ற நாடுகளில் கூட அந்நியரை மணம் செய்வது தடுக்கப்பட்டுள்ளது. இந்த நடவடிக்கைகளின் நோக்கமெல்லாம் தூய ஆரிய இனத்தை உருவாக்குவதேயாகும். ஆரியருக்கும் ஆரியரல்லாதவருக்கும் பிறந்த பிள்ளைகள் எவ்வித உயர் பண்புகளுமின்றி அழிந்துபடுவர் என அவர்கள் நம்புகிறார்கள்'' ('வீரயா' 17 ஏப்பிரல், 1936).

பாசிச ஜேர்மனியின் அனுபவங்களிலிருந்து சிங்களவரும் படிப்பினையைப் பெற்று 'ஆரிய' சிங்களப் பெண்கள் மலையாளிகளை மணப்பதைத் தடுத்து நிறுத்த வேண்டும், என்று மேலும் அவர் (சிறிசேனா) தெரிவித்தார்:

''சட்டபூர்வமாகவோ அல்லது களவாகவோ சிங்களப் பெண்களுக்கும் மலையாளிகளுக்குமிடையே நிகழும் மண உறவுகள் தடுக்கப்பட வேண்டும். அடிமைத்தனத்துக்கு வழிவகுக்கப் போகும் இந்நடைமுறையைத் தடுத்துவிட்டால் சிங்கள இனத்தின் இலட்சியத்தை அடையக்கூடிய நன்முயற்சியாக இது அமையும், எல்லாச் சிங்களவரும் இதனை ஆதரிப்பது அவர்களது கடமையாகும்,'' ('வீரயா', 17 ஏப்பிரல், 1936).

## மலையாளிகளுக்கு ஆதரவு

மலையாளத் தொழிலாளர்களுக்கு எதிரான கருத்து வளர்ந்து வந்தது. வகுப்பு வாதத்தை எதிர்த்தவரான முற்போக்காளர் இடதுசாரி அரசியல்வாதிகள் ஆகியோரை தாக்குவதற்கு ஏ. ஈ. குணசிங்கா மலையாளிகளைப் பகிஷ்கரிக்கும் இயக்கத்தைப் பயன்படுத்தியது வியப்பன்று. இலங்கையின் முதலாவது இடது சாரிக் கட்சியான இலங்கைச் சமசமாசக் கட்சி (L.S.S.P.) 1936ல் உருவாக்கப்பட்டது. தொழிற்சங்கத்தின் ஏகபோக தலைவராக குணசிங்கா இருந்த நிலையில் இவ் இடதுசாரிகளின் வருகை அவருக்கு ஓர் அறைகூவலாக அமைந்தது. இதற்கு முன்னர் 1933லேயே இடதுசாரிக் குழுக்கள் குணசிங்கா தலைமையிலிருந்த வெள்ளவத்தை நூற்றல், நெய்தல் ஆலைத் (Spinning and Weaving Mills, Wellawatte) தொழிற்சங்கத்தைக் கவர்ந்து கொண்டன. நீண்டகால வேலைநிறுத்தத்தின்பின் இது நிகழ்ந்தது. இந்த ஆலைத் தொழிலாளரில் அதிகமானோர் மலையாளிகள் வேலை நிறுத்தக் காலத்தில் இவர்களுக்கும் குணசிங்காவின் ஆதரவாளர்களுக்கும் பெரும் மோதல்கள் ஏற்பட்டன. இதற்குப் பழிவாங்குவது போல 'வீரயா' ஏடு சமசமாசக் கட்சி சிங்களவரைக் காட்டிக் கொடுத்து வருவதாகத் தொடர்ந்து குற்றம் சாட்டியது. 'மலையாளிகள் சமசமாஜிஸ்டுக்களின் ஆதரவைப் பெற்றார்களா?' என்ற தலைப்பில் அமைந்த ஆசிரியத் தலையங்கத்தில் பின்வருமாறு எழுதியது:

''ஐயோ! பெருமையும் புகழும் வாய்ந்த எமது இனத்துக்கு இந்தக் கொம்யூனிஸ்டுக்கள் செய்வது என்ன ? சமசமாஜிஸ்டுக்களாலும் மலையாள வியாபாரிகளாலும் ஏழைச் சிங்கள மக்கள் பட்டினி கிடந்து சாக நேர்கிறது. அவர்களுடைய உணவு அந்நியனுக்குக் கிடைக்கிறது, கொம்யூனிஸ்டுக்களின் ஆதரவைப் பெறும் மலையாளிகளுடன் ஏழைச் சிங்கள மனிதன் எப்படிப் போட்டியிட முடியும்?''

—'வீரயா', 31 மார்ச், 1936.

சமசமாஜிஸ்டுக்கள் நம்பிக்கைத் துரோகம் செய்துவிட்டதாக 'வீரயா' சமசமாஜத் தலைவர்கள்மீது குற்றஞ் சாட்டியது. 1935க்கும் 1939க்கும் இடையே 'வீரயா' ஏட்டில் சமசமாஜக் கட்சித் தலைவர் கலாநிதி கொல்வின்


படிப்பகம்

www.padippakam.com 

ஆர். டி. சில்வா, பிற முன்னணித் தலைவர்களான பிலிப் குணவர்த்தன, கலாநிதி, என். எம். பெரேரா, லெஸ்லி குணவர்த்தன, கலாநிதி எஸ். ஏ. விக்கிரமசிங்க முதலியோர் மீது தனிப்பட்ட முறையில் எல்லையற்ற அவதூறு எழுதப் பட்டது ;

> "இனத் துரோகிகளின் பாதகச் செயல்களால் இனம் வீழ்ச்சி அடையும். மலையாளிகளுக்கெதிரான பகிஷ்கரிப்பு இயக்கம் நடைபெறும்போது பித்துப்பிடித்த பல சமசமாஜ சிங்களவர் இந்தப் போக்குக்கு எதிராக செயற்பட முயல்கின்றனர். என். எம். பெரேரா, கொல்வின் ஆர். டி. சில்வா, கலாநிதி எஸ். ஏ. விக்கிரமசிங்க முதலியோர் இவ் வியக்கத்துக்கெதிராக ஆதாரமற்ற குற்றச் சாட்டுக்களைச் சுமத்துகின்றனர்,...கலாநிதி விக்கிரமசிங்கா அளுத்கடை எண்ணெய் ஆலையில் வேலை நீக்கம் செய்யப்பட்ட மலையாளிகளுக்குத் தாம் உதவியது பற்றிப் பெருமையடித்துக்கொண்டு திரிகிறார். மலையாளிகளுக்கு உதவிய இத்தனி நபர்களின் செயல் முழுச் சிங்கள இனத்துக்குமே அவமானம் தருவதல்லவா?"
>
> - ('வீரயா'. 16 ஏப்பிரல், 1936)

சட்டசபையில் கொழும்பு தெற்குத் தொகுதியின் சுயேச்சை உறுப்பினராக இருக்கும் கலாநிதி ஏ. பி. டீ. சொய்சா போன்றோரிடமிருந்தும் மலையாளிகளுக்கு ஆதரவு கிடைத்தது. ஒரு கூட்டத்தில் பேசிய அவர் "மலையாளிகள் மீது கருணை காட்டுங்கள், அவர்கள் எமது உறவினர்கள்" என்று கூறினர். இதற்கு 'வீரயா' கடுமையான கண்டனம் தெரிவித்தது.

> 'இலங்கையர் அனைவரும் மலையாளிகள் என்ற கொள்ளை நோய்க்கெதிராக ஒன்றுபட்ட குரலில் கண்டனம் தெரிவிக்கும்போது, இப்பேரிடரிலிருந்து எமது நாட்டைக் காக்க முயலும் இவ்வேளையில் மலையாளிகளின் மேடையில் நின்று கலாநிதி டீ. சொய்சா பேசிய பேச்சு சிங்கள மக்கள் அனைவருக்கும் பேரவமானமாகும்,"
>
> –'வீரயா' 5 யூலை, 1936

பின்னரும் பல ஆண்டுகளாக டீ. சொய்சா, மீதான தாக்குதல் தொடர்ந்தது. அவர் பேசிய கூட்டங்களில் 'அரோகரா' என்றும் 'கொச்சி சொய்சா' என்றும் அவமானப்படுத்தும் கூக்குரல்கள் எழுந்தன.

## ஏ. கே. கோபாலன் வருகை

எப்படியிருப்பினும், மலையாளிகள் இலங்கையில் வாழ்ந்தது இடதுசாரி அரசியலுக்கு ஊக்கமளித்தது. 1930 - ளில் கேரளத்தில் ஏகாதிபத்திய எதிர்ப்பு, நிலமானிய எதிர்ப்புப் போராட்டம் பேரலையாக எழுந்தது. 1937 முதல் கேரளத்தில் இந்திய தேசிய காங்கிரசின் சோசலிசப் பிரிவினர் தலைமையில் தொழிலாளர்கள், உழவர்கள், மாணவர்கள் முதலிய பல பிரிவினர் இப்போராட்டத்தில் தீவிரமாக ஈடுபட்டனர், கேரள காங்கிரஸ் சோசலிஸ்ட் கட்சியின் இணைச் செயலாளர்களாக ஈ. எம். எஸ். நம்பூதிரிபாத்தும் (கேரளத்தில் 1957-59 இல் முதன்முதல் உருவான கம்யூனிஸ்ட் அரசின் முதலமைச்சர்) ஏ. கே. கோபாலனும் (மிகச் செல்வாக்குப் பெற்ற கேரளக் கம்யூனிஸ்ட் தலைவரும் விவசாயிகள் இயக்கத்தின் முக்கிய அமைப்பாளருமாவர்) அப்போது பணியாற்றினர்.

1939இல், ஏ. கே. கோபாலன் இலங்கைக்கு வருகை தந்தார், இலங்கையில் இடதுசாரி யியக்கத்துடன் உறவை வளர்த்தல், இலஙகைவாழ் மலையாளிகளுடன் தொடர்பு ஏற்படுத்துதல், 1935இல் நம்பூதிரிபாத் வெளியிட்ட 'பிரபாதம்' (Prabhatham) பத்திரிகைக்குச் சந்தா சேர்த்தல்



படிப்பகம்

ஆகிய நோக்கங்களுடன் கோபாலன் இலங்கைக்கு வந்தார். அவர் கொழும்பில் பல கூட்டங்களில் பேசினர். கொழும்பு நகர மண்டபக் கூட்டத்தில் சோசலிசம் பற்றியும் கேரள உழவர்களின் போராட்டங்கள் பற்றியும் பேசினர். சம சமாசக் கட்சி வெள்ளவத்தை நூற்றல், நெய்தல் ஆலையில் ஏற்பாடு செய்த கூட்டத்திலும் 1939இல் அவர்கள் நடத்திய மேதினக் கூட்டத்திலும் பேசினர். இக்கூட்டத்தில் இலங்கையிலுள்ள புரட்சிகர மலையாளிகள் அனைவரும் சமாஜிகளுடன் இணைந்து செயற்படவேண்டுமென்று விடுத்தார்.

கோபாலன் இலங்கை வந்த போது மலையாளிகளுக் கெதிராக நிலவிய பகைமையை நேரடியாக உணர்ந்து கொள்ள நேர்ந்தது. வெள்ளவத்தையில் அவரது கூட்டம் காடையர்களால் குழப்பப்பட்டது. மலையாளிகளுக்கெதி ராக மேடையேற்றப்பட்ட நாடகங்களை அவர் பார்த்தார். அவர்களுக்கெதிரான பாடல்களை அவர் கேட்டார். 'ஆபத் தான காலகட்டத்தில் நான் இலங்கைக்குச் சென்றேன்.... அப்போது சிங்கள-மலையாளிகள் பகைமை அதன் உச்ச நிலையை அடைந்திருந்தது'' எனக் கோபாலன் இதனைத் தமது சுயசரிதையில் குறித்துள்ளார்.

(கோபாலன், மக்களுக்கான போராட்டத்தில். சென்னை 1976)

## மலையாளத் தொழிலாளர்களும் கம்யூனிஸ்டுகளும்

1930களில் சமசமாசக் கட்சியினர் வகுப்புவாதமற்ற நிலைப்பாட்டைக் கொண்டிருந்தனர். சிறுபான்மையினரான மலையாளிகளுக்கு எதிராக, மூர்க்கமாக மேற்கொள்ளப் பட்ட இயக்கங்களைக் கடுமையாக எதிர்த்தனர். இக்கால கட்டத்தில் இந்தியா முழுவதும் நடைபெற்ற போராட்டங் களாலும் அதனை வழி நடத்திய போர்க்குணம் கொண்ட தலைவர்கள்மீது கொண்ட ஈடுபாடு காரணமாகவும் சம சமாஜிகள் காங்கிரசு சோசலிசக் கட்சியுடன் நெருங்கிய



தொடர்புகளை ஏற்படுத்திக்கொண்டார். இவர்கள் ஆண்டு தோறும் பாரதத்தில் நடைபெற்ற சோசலிச காங்கிரஸ் மாநாடுகளுக்குச் சென்றதுடன் அக்கட்சித் தலைவர்களாகிய நேரு, கமலாதேவி சட்டோபாத்தியாய, ஏ.கே. கோபாலன் ஆகியோர் இங்கு வந்த போது அவர்களை வரவேற்று உபசரித்தனர்.

1940இல் சமசமாசக் கட்சியிலிருந்த ரொஸ்கியவாதி கள் கம்யூனிஸ்டுக்களைக் கட்சியிலிருந்து வெளியேற்றினர். வெளியெறியவர்கள் 1940இல் ஐக்கிய சோசலிசக் கட்சியை நிறுவினர். 1943இல் இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியை உருவாக்கினர். ஐக்கிய சோசலிசக் கட்சிக்கான பெருமளவு ஆதரவு இலங்கைவாழ் மலையாள சோசலிசக் குழுவினரிட மிருந்தும் கள்ளிறக்குவோர் சங்கத்தில் இருந்தும் கிடைத் தது இச்சங்கம் போர்க்குணம் கொண்ட மலையாளத் தொழிலாளிகளைக் கொண்டிருந்தது 1939இலும் 1940இலும் சம்பளம் தொடர்பான பல மோதல்களில் ஈடுபட்டதுடன் வேலைநிறுத்தங்களையும் இக்குழு நடத்தியது. இச்சங்கத்தின் தலைவர் இந்தியத் தமிழரான கே இராமநாதன் அதன் செயலர் எம். ஜி. மெண்டிஸ். இக்காலகட்டத்தில் மிக ஊக்க முள்ள மலையாளக் கம்யூனிஸ்ட் பி. சங்கர். இக்கம்யூனிஸ்டுக் கள் வழிகாட்டியபடி சங்கம் சிறப்பாக இயங்கியது. பெருந் தோட்டம் சாராப் பகுதிகளில் இதுவே மிகப் பெரிய சங்க மாயிருந்தது. வேலைநிறுத்தத்தில் சங்கம் பெற்ற வெற்றி நகர்ப்புறங்களிலிருந்த மலையாளிகளையும் பிற தொழிலாளர் களையும் ஊக்குவித்தது. கம்யூனிஸ்டுக்கள் தலைமையிலான 16 சங்கங்களைக் கொண்ட இலங்கை வர்த்தக ஊழியர் சங்கங்களின் கூட்டணி (C.T.U.F.) 1940இல் உருவாக்கப் பட்டபோது கள்ளிறக்குவோர் (சீவல் தொழிலாளர்) சங்கமே முன்னணிச் சங்கமாக இருந்தது. வர்த்தக ஊழியர் சங்கத் தலைவர்களுள் மலையாளிகளும் முன்னணியிலிருந்தனர் கே. மாதவன் என்பார் அவர்களுள் குறிப்பிடத்தக்கவர். கம்யூனிஸ்ட்டுக்கள் நவசக்தி என்ற மலையாள ஏட்டையும் வெளியிட்டனர். வாசு, தங்கப்பன் என்ற முழுநேர மலை யாள அரசியல் ஊழியர்கள் இதனை நடத்தினர். கொழும்பு



படிப்பகம்

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

மாநகரசபையில் குறிப்பிட்ட சில இடதுசாரி வேட்பாளர்கள் இக்காலப் பகுதியில் நடைபெற்ற தேர்தல்களில் வெற்றி பெற மலையாளிகளின் வாக்குகளே காரணமாயின என்பதையும் இங்கு குறிப்பிட வேண்டும்.

மலையாளிகளிடம் காணப்பட்ட வலுவான வர்க்க உணர்வுக்கும் முன்னோடிக் கம்யூனிஸ்டுக்கள் என்ற நிலையில் அவர்கள் திகழ்ந்ததற்கும் பல காரணங்களைக் குறிப்பிடலாம். 1920களில் அவர்கள் போர்க் குணத்தோடு நடத்திய வேலைநிறுத்த மரபுகள், கேரளத்தில் வளர்ந்துவந்த கம்யூனிஸ்ட் இயக்கத்தின் தாக்கம், மலையாளக் கம்யூனிஸ்ட் தலைவர்கள் இலங்கைக்கு வருகை தந்தமை, இலங்கைத் தொழிற் சங்க இயக்கத்தில் வகுப்புவாதம் ஆட்சி செலுத்தியமை, மலையாளிகளின் போராட்டங்களுக்கு உள்ளூர் இடதுசாரிகள் வழங்கிய ஆதரவு, கள்ளிறக்குவோரின் வேலைநிறுத்தப் போராட்ட வெற்றி என்பன இவற்றுட் சில. ''மலையாளத் தொழிலாளர் •இனவாதப் பகையுணர்வு, வேலை கொள்வோரின் கடுமை என்பன காரணமாக அங்குமிங்கும் தூக்கி வீசப்பட்டனர். உறுதிமிக்க தொழிலாளர்கள் புதிதாக உருவான இடதுசாரிக் கட்சியில் சேர்ந்து தமது மனக்குறையை எடுத்துக் கூறிவந்தனர்'' என மலையாளிகளை இயக்குவதில் கம்யூனிஸ்ட்டுக்கள் வெற்றிபெற்றதற்கான காரணத்தை தொழில் பகுதி சார்ந்த அலுவலர் விளக்கினர்.

1940களில் மலையாளிகளில் பெருந்தொகையானோர் இந்தியாவுக்குத் திரும்பிச் சென்றார்கள். ஆனால், இங்கேயே தங்கிவிட்டவர்கள் சிங்களவரை மணந்தனர். அடுத்த சந்ததியினர் சிங்கள இனத்துடன் இரண்டறக் கலந்து விட்டனர். 1930களில் மலையாளிகள் இனவாதிகளால் பெரிதும் தாக்கப்பட்டார்கள். அவ்வேளை அவர்கள் இடதுசாரி இயக்கங்களின் முக்கிய பங்காளிகளாக இருந்தார்கள் என்பதனை எண்ணும்போது வர்க்க, இன உறவுகளைத் தீர்ப்பதற்கும் விளங்கிக்கொள்வதற்கும் இது வழிகாட்டக் கூடியது எனலாம்.



## குட்டி முதலாளி வர்க்கம்

1930இல் மேற்கொள்ளப்பட்ட மலையாளி எதிர்ப்பியக்கம் தொழிலாளர் வர்க்கத்தினரின் முன்னணியில் இனவெறியை தோற்றுவித்தது. இதனால் மலையாளிகளே முக்கிய பகைவர்கள் என்ற எண்ணம் சிங்களத் தொழிலாளரிடையே பரப்பப்பட்டது. குடியேற்ற நாட்டுப் பொருளாதாரத்தின் விளைவாக ஏற்பட்ட வறுமை, வேலையின்மை என்பனவும், உலகப் பொருளாதார நெருக்கடியால் விதிக்கப்பட்ட வரிகளும், சில காலத்திற்கு முன்னர் வரை ஒரே அணியில் இணைந்து நின்று போராடிய தொழிலாளரிடையே இனவாதத்தை விதைத்தது.

இச்சூழ்நிலையில் தொழிலாளருக்குத் தலைமை தாங்கிய குட்டி முதலாளி வகுப்பாரின் சந்தர்ப்பவாதப் போக்கு அம்பலப்படுத்தப்பட்டது. இந்தக் குட்டி முதலாளி வர்க்கத்தினர் இன்றுபோலவே அன்றும், புரட்சிகர அரசியல்வாதிகள் என்ற நிலையிலிருந்து குறுகிய காலத்திற்குள் இனவாதிகளாக மாறிவிட்டனர். அனகாரிக தர்மபாலாவின் சகாவும் பௌத்த-கல்வி மரபு, மிதவாதம் என்பவற்றின் படைப்பான ஏ. ஈ. குணசிங்கா, 1920களில், தான் மேற்கொண்டிருந்த புரட்சிகர அரசியற் கொள்கைகளை விட்டுவிட்டு 1930களில் இனவாதியாக மாறி, இறுதியில் ஆளும் வர்க்கப் பக்கம் சாய்ந்துவிட நேர்ந்தது.

## பாசிசத் தொடர்புகள்

19ஆம் நூற்றாண்டிலும் 20ஆம் நூற்றாண்டிலும் சிங்கள-பௌத்த உணர்வின் சில கூறுகளைச் சிங்களக் குட்டி முதலாளி வகுப்பினர் எவ்வாறு முஸ்லிம்களுக்கும் எதிராகப் பயன்படுத்தினர் என முந்திய கட்டுரைகளில் கண்டோம். 1930களில் இந்தக் கருத்தோட்டம் சிங்களத் தொழிலாளி வர்க்கத்தினரிடையே பரவியது. இவ்வாண்டுகளில் 'ஆரிய' சிங்களவர் பௌத்தத்தையும் இனத் தூய்மையையும் காக்கத் தேர்ந் தெடுக்கப்பட்டவர்கள் என்ற நம்பிக்கை



படிப்பகம்

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

புத்துயிர்ப்படைந்தது. இந்த 'மண்ணின் மைந்தர்கள்' என்ற வகையில் இந்த நாடு அவர்களது பிறப்புரிமை. சிங்கள-பௌத்தரல்லாதாரை அவர்கள் அந்நியர் என்று கூறியதோடு அவர்களை அகற்றப் 'புனிதப் போர்' வேண்டும் என்றும் பிரசாரம் செய்யப்பட்டது.

தொழிலாளி வர்க்கச் செய்தி ஏடுகள் இக்காலத்தில் சிங்கள-பௌத்த மேலாண்மையை வலிபுறுத்தின. தர்மபாலா, "சிங்களவர் அந்நியரால் சூழப்படுகிறார்கள்: அவர்களது வேலைவாய்ப்புக்களைப் பறிக்கிறார்கள்" என்ற கூக்குரலை எழுப்பியது போல தொழிற்சங்க ஏட்டின் ஒவ்வோர் இதழும் அக்குரலை ஓங்கி ஒலித்தது. பொதுக் கூட்டங்களிலும் தொழிற் சங்கங்களின் மேதின ஊர்வலங்களிலும் சம்பளம், வேலை நிபந்தனை போன்ற தொழிலாளர் பிரச்சினைகளைப் பற்றிய அறைகூவல்களை அடக்கிக்கொண்டு சிறுபான்மையோருக்கெதிரான கோஷங்கள் முழங்கப்பட்டன. இவ்வாண்டுகளில் தொழிலாளர்கள் தாம் சிங்கள பௌத்தர்கள் என்பதை மறந்துவிடக்கூடாது என்று பன்னிப் பன்னிப் பேசப்பட்டது. இவ்வுணர்வுகளை வலியுறுத்தி மனதிற் பதிக்கும்வகையில் சிங்களப் புத்தாண்டு, வெசாக் பண்டிகைகளின் கொண்டாட்டங்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. இதன் மூலம் சிங்களத் தொழிலாளரின் உள்ளத்தில் சிங்கள, பௌத்த உணர்வு தூண்டப்பட்டது. 1920 களில் எழுப்பப்பட்ட 'ஆரிய இனம்' என்பது அப்போது தொழிலாளர் தலைவர்களிடம் செல்வாக்குப் பெறவில்லை. ஆனால், இக்கால கட்டத்தில் அது அவர்களாலும் புத்துயிர் தரப்பட்டு ஐரோப்பாவில் வளர்ந்துவந்த பாசிசத்தினால் மேலும் வளமாக்கப்பட்டது.

தொழிலாளர் வர்க்கம், முந்திய காலகட்டத்தில் கட்டியெழுப்பிய வர்க்க ஒற்றுமையையும் தீவிர போராட்டங்களையும் மிக விரைவிலேயே மறந்து இனவாத இலட்சியங்களை ஏற்றுக் கொண்டுவிடும் என்பதற்கு இன்றைய நிலைபோலவே அன்றைய காலகட்டமும் சான்றாக அமைந்தது எல்லா வர்க்கத்தினரிடையேயும் உள்ளத்தின் அடி ஆழத்தில்



புதைந்து கிடக்கும் சிங்கள பௌத்த உணர்வின் வன்மையைக் காட்டும் அளவுகோலாக இது உள்ளது. அவ்வுணர்வு சில காலம் தூங்கிக் கிடந்தாலும் மிகக் குறுகிய காலத்தில் தட்டி எழுப்பப்படலாம். அவர்களுடைய பொருளாதார வாழ்வுக்கு ஆபத்து என்று கூறப்பட்டால் அது கனன்று எழும். வகுப்புவாதம் வர்க்க உணர்வுகளின் வளர்ச்சியைப் பின்படுத்தப் பயன்படுவதோடு ஆளும் குழுக்கள் அதனைத் தமது சொந்த நலனுக்குப் பயன்படுத்தும் என்பதையும் நாம் இலங்கையின் கடந்தகால வர்க்க, இன உணர்வு வரலாற்றை ஆராய்வதன் மூலம் ஒரு பாடமாக அறியலாம்.

## 6. பெருந்தோட்ட தொழிலாளரின் அரசியல் உரிமைகள் (1928-1948]

1930ஆம் ஆண்டுகளிலிருந்து இன்றுவரையும், இலங்கையின் பெருந்தோட்டத் துறையின் வரலாறானது இந்திய வம்சாவழித் தொழிலாளரின் பொருளாதார, சமூக நீதிகளையும் அடிப்படை ஜனநாயக உரிமைகளையும் மறுப்பதாகவே அமைந்துள்ளது. இத்தொழிலாளர்களே தேயிலை, இறப்பர் ஆகிய இலங்கையின் முக்கிய ஏற்றுமதிப் பொருள்களுக்காக உழைத்து நாட்டின் அந்நியச் செலாவணியில் பெரும்பகுதியை ஈட்டித்தருவோர். இவர்களின் உரிமைகளைப் பறித்தல் பலவழிகளிலும் நடைபெற்றது. வாக்குரிமையைப் படிப்படியாக அவர்களிட மிருந்து பறித்ததால் பாராளுமன்ற மட்டத்திலும் உள்நாட்டு நிர்வாகத்திலும் அவர்கள் தமது பிரதிநிதித்துவத்தை இழந்தனர். இவர்களிற் பெருந்திரளானோர், நாடற்றவராகி, நாட்டு மக்களின் ஏனைய பிரிவினருக்கு உள்ள சம்பளக் கல்வி, சமூக, சுகாதார வசதிகள் இவர்கட்கு மறுக்கப்பட்டு இந்தியாவுக்கு குடிபெயர நிர்ப்பந்திக்கப் பட்டனர். இவர்கள் 1970ஆம் ஆண்டுகளின் பஞ்சத்தால் பீடிக்கப்பட்டு இறுதியாக 1977, 1981, யூலை 1983 ஆகிய காலங்களில் இனக் கலவரத்தால் ஏற்பட்ட அரசியல் எதிர்ப்புகளையும், 1928-1948 காலப்பகுதியில் சிங்களவர் மத்தியில் இனவாதக் கருத்தியலாக்கத்தின் வளர்ச்சியையும் இறுதியில் 1948ஆம் ஆண்டு



படிப்பகம்

அவர்கள் குடியுரிமையை இழந்தமையையும் இங்கு நான் சிறப்பாக எடுத்துக்காட்டுவேன்.

தோட்டக் தொழிலாளரை அரசியலில் இருந்து வெளியேற்றுதல் 1920 களின் பிற்பகுதியில் சிங்கள பூர்ஷ்வாக்களால் தலைமை தாங்கப்பட்டது. வர்க்க உணர்வு கொண்ட தோட்டத் தொழிலாளர், இலங்கையின் ஏனைய தொழிலாளர்களுடன் இணைதல், நிலவும் சிங்கள சமூக அமைப்புக்குப் பெரும் அச்சுறுத்தல் என்பதை உணர்ந்த சிங்கள அரசியல்வாதிகள் தம் பலம் நாட்டில் குறைந்துவிடும் எனப் பிரச்சாரம் செய்தனர்.

1920களின் பிற்கூற்றில் இந்தியக் தொழிலாளரின் அரசியல் உரிமைகட்கெதிராக இனவாதப் பிரசாரம் சிங்கள அரசியல்வாதிகளால் முதன்முதலில் மேற்கொள்ளப்பட்டது. எனினும் ஏ. ஈ. குணசிங்கவின் சமூக - ஜனநாயகத் தலைமையில் இன ஒற்றுமை, வர்க்க ஒருமைப்பாடு ஆகியவை உச்சநிலையில் இருந்த காலகட்டத்தில் சிங்களத் தொழிலாள வர்க்கம் தோட்டத் தொழிலாளருக்கெதிரான நடவடிக்கைகளை வன்மையாக எதிர்த்தது. இப்பிரச்சனை தொடர்பாக குணசிங்காவின் கொள்கைகள் மாறியபோது 1930களிலும் 1940களிலும் இடதுசாரிகள், இனவாதமற்ற தலைமையை அளித்து, நகரப் பகுதியிலும் தோட்டத்துறையிலும் இந்தியத் தொழிலாளரின் உரிமையை நசுக்கும் நடவடிக்கைகள் ஒவ்வொன்றையும் எதிர்த்தனர். தோட்டத் தொழிலாளரின் குடியுரிமை, வாக்குரிமைப் பிரச்சினையில் 1928-48க்கும் இடையில் தொழிலாளி வர்க்கக் கட்சிகள் தோட்டத் தொழிலாளரையே மிக உறுதியாக ஆதரித்தன ஆனல் பூர்ஷ்வாக் கட்சிகளோ இவர்களது உரிமைகளைப் பறிக்கவே தொடர்ந்து பிரசாரம் செய்தன.

இந்நூலின் முற்பகுதியில், சிங்கள-பௌத்த உணர்வின் உருவாக்கத்தையும் அதன் விளைவாக பௌத்தரல்லாத கிறிஸ்தவ, முஸ்லிம், மலையாளிகளுடன் ஏற்பட்ட முரண்பாட்டையும் ஆராய்ந்தேன். எல்லாச் சந்தர்ப்பங்களிலும்



இன முரண்பாடு இச்சிறுபான்மையினருக்கு எதிரான வன்முறையாகக் கிளர்ந்தது. எனினும் இன எதிர்ப்புகள் மக்களுக்கும் சொத்துக்களுக்கும் எதிராக வன்முறையாக மாத்திரமன்றி, தோட்டத் தொழிலாளரைப் பொறுத்தவரை, சிறுபான்மைக் குழுவின் அடிப்படை மனித, குடியியல் உரிமை மறுப்பாகவும் வளர்ச்சியடைந்தது.

1830களிலிருந்து 1930 வரை இந்தியத்தொழிலாளரின் வருகை கணிசமான அளவு அதிகரித்த போதிலும் "இந்தியப் பிரச்சனை" இக்கால கட்டத்தில் சிங்களவரின் எதிர்ப்பின் மையப் பொருளாக இருக்கவில்லை, 1911ஆம் ஆண்டு இந்தியத் தமிழரின் தொகை 530.000 ஆக இருந்தது. 41 லட்சமான மொத்தக் குடித் தொகையில் இவர்கள் 12.9 வீதத்தினராவர். இவர்கள் மிகப் பெரும்பாலார் தோட்டத் தொழிலாளரும் அவர்களைச் சார்ந்தோருமே. ஏனையோர் நகரத்தில் வேலை செய்பவர்களும் வியாபாரிகளுமாவர். 1921இல் இவர்களது எண்ணிக்கை 602,000 ஆக அதிகரித்தது. இவர்களில் 536.000 பேர் தோட்டத் தொழிலாளரும் அவர்களைச் சார்ந்தோருமாவர். இவ்வாறு பெருந்தொகையாக இலங்கையில் குடியேறுவது இலங்கை மக்களுக்கு ஆத்திரமூட்டியது, வெறுப்பையும் காட்டினர். ஆயினும் 1880ஆம் ஆண்டுகளிலிருந்து சிங்கள-பௌத்தர்களின் எதிர்ப்புக்கு இலக்கானோர் இந்தியத் தமிழரைவிட எண்ணிக்கையில் குறைவாக இருந்த வசதி பெற்ற சிறுபான்மையினரே.

பல இலட்சக் கணக்கான இந்தியத் தொழிலாளரின் வருகை சிங்களவரது எதிர்ப்பைச் சம்பாதிக்கவில்லை என்று கூறுவது பிழையாகும். அனகாரிக தர்மபாலா, இந்தியத் தொழிலாளர் பற்றிய இகழ்ச்சிக் குறிப்புகளை அடிக்கடி கூறினர். உதாரணமாக, 1902ஆம் ஆண்டு அவர் "ஆங்கிலேய நிர்வாகத்தில் தென்னிந்தியாவின் கீழ்சாதியினர் எமது தீவில் குடியேற அனுமதிக்கப்படுகின்றனர்", என்றார். இதே போல தோட்டத் தொழிலாளர் பற்றி



படிப்பகம்

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

சிங்களத் தலைவர் குற்றம் சாட்டினர். 'கூலி' என்ற சொல் அவர்களை அவமதிக்கும் சொல்லாகவும் பயன்பட்டது.

தோட்டத்துறையின் அமைப்பு இந்த ''அடிமை முறையின் அடிமை உழைப்பு புதிய வடிவத்தை'' தோக்கியதாய் அமைந்தது. இங்கு கொண்டு வரப்பட்ட இந்தியத் தொழிலாளர்கள் பல்வேறு அடக்குமுறைக்கு உட்பட்டனர்; வேலை பிரித்தானிய நிர்வாகத்தின் இராணுவ முறை ஆதிக்கத்துக்கும் கங்காணியின் தந்தை முறையான பரம்பரைக் கட்டுப்பாட்டுக்கும் அடக்கி ஒடுக்கும் சட்டங்களையும் பொலிசையும் கொண்ட காலனித்துவ அரசு யந்திர வன்முறைக்கும் ஆளாகினர். தொழிலாளர்கள் தோட்டங்களில் 'லைன்' (Lines) அறைகளில் வைக்கப்பட்டு, திரும்பி ஓடிவிட முடியாது, தோட்டப் பாதுகாப்புச் சேவையாலும், நாட்டின் சட்டங்களாலும் தடுக்கப்பட்டிருந்தனர். அவர்களது சுகாதார, கல்வி நிலைமைகள் மிக் மோசமாயிருந்தன. அவர்களது சம்பளம் 1927ஆம் ஆண்டுவரையும் ஒரு நாளுக்கு ஆண்களுக்கு 33 சதமாகவும் பெண்களுக்கு 25 சதமாகவும் இருந்தது. (ரூபா - 100 சதம்)

எவ்வாறுயினும் இன உறவுகளைப் பொறுத்தவரையில் மிக முக்கியமான அம்சம் தோட்டத் தொழிலாளர்களுடைய வேலைக்குச் சிங்களவர்கள் போட்டியிடவில்லை என்பதாகும். தமது இனம், சமயம், அந்தஸ்து பற்றிய பெருமித உணர்ச்சியால், 'கூலி' என்ற நிலைக்குத் தள்ளப்படும் தோட்டத் தொழிலாளர் வேலையை அவர்கள் மறுத்தனர் என்பது பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒரு ஐதீகமாகும். தோட்டத்துறை முதலாளித்துவத்தின் வருகைக்குப் பின்னரும் சிங்கள விவசாயிகள் சிறு நிலமாவது உடையவராய் இருந்ததனாலேயே தோட்டங்களில் கூலித் தொழிலாளராய் வேலை செய்ய அவர்கள் மறுத்தனர் என்பதை சமீபகால ஆய்வுகள் காட்டுகின்றன. சுருக்கமாகக் கூறுவதானால் சிங்களவர் எவ்வித வாய்ப்புமற்ற பாட்டாளிகளான தோட்டத் தொழிலாளரது நிலைக்கு தள்ளப்படவில்லை என்பதேயாகும்.



எனவே, 19ஆம் நூற்றுண்டின் ஆரம்பத்திலும், தோட்டத் தமிழர்கள் இனவெறி வன்செயலுக்கு ஆளாகவில்லை. இந்தியாவுக்கு அவர்களைத் திருப்பி அனுப்பும்படி எவரும் கிளர்ச்சி செய்யவுமில்லை. வேலையைப் பொறுத்து போட்டி ஏற்படுத்தாமல், அரசியல் பொருளாதார உரிமை அற்று, தொழிற் சங்கங்களோ, வேறு இயக்கங்களோ இல்லாத மலைநாட்டில் பூகோள ரீதியாகத் தனிமைப்பட்டு, சிறைப்பட்ட தொழிலாளராக இருக்கும்வரை, அவர்களது எண்ணிக்கையைப்பற்றி எவரும் கவலைப்படவில்லை; அவர்கள் எத்தகைய கண்டிப்புக்கும் ஆளாகவில்லை,

## சர்வசன வாக்குரிமையும் இந்தியர் வாக்கும்

1920களின் பிற்பகுதியில், சர்வசன வாக்குரிமை பற்றியும், அரசியல் யாப்புச் சீர்திருத்தங்கள் பற்றியும் விவாதங்கள் நடந்தபோதே தோட்டத் தொழிலாளர்களுக்கெதிரான சிங்கள பூர்ஷ்வாக்களின் தாக்குதல் ஆரம்பித்தது. தோட்டத் தொழிலாளர்கள் இலங்கையின் பொருளாதாரத்துக்கு இன்றியமையாதவர்கள். ஆனுல், அரசியல் செயற்பாட்டுக்கு அல்ல; அடிமைகளுக்குக் சமமாக அவர்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டனர். ஆனல் அவர்கள் வாக்குரிமை பெற்று தேர்தல் முடிவுகளிற் செல்வாக்குச் செலுத்திய தேர்தல் தொகுதிகளில் சிங்களவர் சிறுபான்மையினராகிவிடுவர் என்ற அச்சத்தை சிங்கள பூர்ஷ்வாக்கள் தம் பிரசாரத்திற்குப் பயன்படுத்தினர்.

டொனமூர்ச் சீர்திருத்தங்களுக்கு முன்னர், வாக்குரிமை வழங்கல் நபரின் சொத்து, கல்வித் தகைமை என்பவற்றின் அடிப்படையில் அமைந்திருந்ததால், குடித்தொகையில் 4% மக்களே வாக்களிக்கும் தகைமை பெற்றனர். இம்முறையின்படி இந்தியத் தொழிலாளர் வாக்களிக்கும் உரிமை பெற்றிருக்காவிடினும், இந்தியரது நலன்களைப் பிரதிநிதித்துவப்படுத்த இரு அங்கத்தவர்கள் சட்ட நிர்வாக சபைக்கு நியமிக்கப்பட்டனர். 1927இல் இலங்கைக்கு வந்த



படிப்பகம்

டொனமூர் ஆணைக்குழு இன ரீதியான பிரதிநிதித்துவத்தை நீக்கியது. ''நாட்டில் நிலையான அக்கறை உடையோர் அல்லது நாட்டில் நிலையாக வசிப்போர் ஆகியோருக்கே வாக்குரிமை'' என்று கூறியதுடன் 21 வயதுக்கு மேற்பட்டோருக்கு இவ்வுரிமை அளிக்கப்படல் வேண்டும் என்றும் சிபார்சு செய்தது.

பிரிட்டிஷ் சாம்ராஜ்ஜியத்தில் முதன் முதலாக தொழிலாள வர்க்கத்திற்கும் பெண்களுக்கும் வாக்குரிமை வழங்கியமை இரு முக்கிய விளைவுகளை ஏற்படுத்தியது. இடதுசாரி இயக்கங்களை தேர்தல் அரசியலுக்கு இட்டுச் சென்றது; இரண்டாவதாக 60 ஆண்டுகளுக்கு (1927-1986) தோட்டத் தொழிலாளரின் முக்கிய போராட்டம் வாக்குரிமை பெறுவதாக அமைந்தது.

## சட்டசபையில் விவாதம்

சர்வசன வாக்குரிமை தொடர்பான பிரச்சினை, குறிப்பாக பெண்களுக்கும் இந்தியத் தொழிலாளருக்கும் வாக்களிக்கும் உரிமை பற்றிய பிரச்சினை 1928ஆம் ஆண்டு மிகுந்த வாதப் பிரதிவாதங்களை ஏற்படுத்தியது. சட்ட நிர்வாக சபையில் சிங்களவரின் பிரதிநிதி ஒருவரைத் தவிர, ஏனைய அங்கத்தவர்கள் அனைவரும் இந்தியருடைய வாக்குரிமையால் அரசியல் ரீதியாக செயலற்றுப் போய்விடுவோம் என வெளிப்படையாகக் கூறினர். டொனமூர் ஆணைக்குழுவினுடைய சிபார்சில் அபாய அறிவித்தலாக அமைந்தது, இந்தியத் தொழிலாளருக்கு வாக்குரிமையளிக்கும் பிரேரணை என டி. எஸ். சேனநாயக்க கூறினார். இந்தியாவைப் பொறுத்தவரையிங் சிங்களவர் சிறுபான்மையினர் மாத்திரமன்றி அநீதிக்குப் பலியாவார் என்றும் அவர் கூறினார்;

> ''சிங்களவர் துரதிஷ்டம் பிடித்த சமூகத்தினர்....... அவர்களுடைய தாராள மனப்பான்மை மறக்கப்பட்டு தவறாக விளங்கப்பட்டுள்ளனர். மற்றவர்களின் நன்மைக்காகத் தம்மை ஒறுப்பதற்குச் சம்மதிக்கும் சிங்களவர் போன்று வேறு ஒரு சமூகம் இருக்கும் என நான் எண்ணவில்லை,... இந்தியர்களுக்கு ஒரு பெரிய நாடு உள்ளது, எங்களுக்கு இச்சிறு துண்டு நிலமே உள்ளது. இந்த நாடு எங்களுக்கு வேண்டும்.'' [ ஹன்சாட், 8 நவம்பர், 1928. ]

சட்டசபையில் இருந்த ஏனைய சிங்கள அரசியல் வாதிகளும் இதே கருத்தைக் கூறினர். பிரான்சிஸ் மொலாமூர் 'இந்திய அச்சுறுத்தல்'' பற்றி உரிய நேரத்தில் எச்சரிக்கிறேன் என்று கூறினார்:

> ''இது ஒரு நீண்ட நோக்குப் பற்றிய பிரச்சினை: தம்மைப் பாதுகாப்பது பற்றிய பிரச்சினை. குடித்தொகையில் மிகப்பெரும்பான்மையினரின் உணர்வுகளுக்கே நான் குரல் கொடுக்கிறேன். பழைய காலத்தில் இலங்கையை லிப்டன் தேயிலைத் தோட்டம் என்றனர், எதிர்காலத்தில் இலங்கையை இந்திய ஆலமரத் தோட்டம் என்று குறிப்பிடக் கூடும்.''

பொதுசன வாக்குரிமை அடிப்படையிலான தேர்தலில் எதிர்காலத்தில் இனவாதத்தை ஒரு சுலோகமாக்குவதில் உள்ள அரசியலை அவர் தெளிவாகக் காட்டினார். அவரை விமர்சித்தவர்களுக்குப் பதிலளிக்கும்போது இன வேறுபாடு காட்டாத கொள்கைகளை ஆதரிக்கும் வேட்பாளர்களுக்கு தேர்தலில் தோல்வி ஏற்படும் என்றும் கூறினார் :

> ''நான் இந்தச் சவாலை விடுக்கிறேன். அவர்கள் கிராமங்களுக்குப் போய் தமது மேடைப் பிரசாரத்தில் என்னைச் சட்டசபைக்கு அனுப்புங்கள். நான் இலங்கையர்களுக்கும் இலங்கையர் அல்லாதவர்களுக்கும் இடையே எந்த வேறுபாடும் காட்டமாட்டேன் என்று கூறட்டும்.. அவருடைய எதிர்

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

வேட்பாளரோ "இலங்கையருக்காக இலங்கையைக் காப்பதே என் நோக்கம்" என்று சொல்லட்டும்"

(ஹன்சாட், 15 நவம்பர் 1928)

இவ்விவாதத்தில் சி. டபிள்யூ. டபிள்யூ. கன்னங்கராவும் "இலங்கையின் நிலையான மக்களை" செயலறச் செய்யக் கூடிய இந்திய அச்சுறுத்தல்பற்றிக் கூறி இந்தியரின் வாக்குரிமையை எதிர்க்காதார் துரோகிகள் என்றும் மறைமுகமாக குறிப்பிட்டார். (ஹன்சாட். 9 நவம்பர், 1928) சட்டசபையில் ஒரு அங்கத்தினராக வி, டி. எஸ். விக்கிரம நாயக்க என்பவரால் இப்பிரச்சினைக்கு ஒரு வர்க்கப் பார்வையும் கொடுக்கப்பட்டது.

"கொழும்பில் வசிக்கும் இந்கியரைவிட தோட்டத்துக் கூலிக்கு நான் மிகவும் அஞ்சுகிறேன்... இந்தியத் தொழிலாளி காலையில் 6 மணிக்கு வேலைக்குப் போய் மாலை 6 மணிக்கே தனது கூலி லைன்களுக்குத் திரும்புகிறார். இத்தீவில் நிகழ்வனபற்றி அவனுக்கு என்ன தெரியும்? எனவே அரசியல் விடயங்களில் வாக்களிக்கும் தகைமை அவனுக்கு இல்லை என்றே கூறுவேன்,"

(ஹன்சாட், 2 நவம்பர்,1928)

## தொழிற் புரட்சியும் இந்திய பிரச்சினையும்

சட்டசபை அங்கத்தவர்களுள் புறநடையாக இருந்தவர் தொழிற் கட்சியின் அங்கத்தவரான சி. எச். சற். பெர்ணன்டோ என்பவர், நகரத் தொழிலாளர் இயக்கத்துக்கு இவர் பத்து வருட காலமாக ஆதரவு அளித்தவர், 'செயலிளக்கச் செய்வது' பற்றிய எச்சரிக்கைக் கருந்துகளை அவர் நிராகரித்தார். இவை உண்மையற்றவை என்றார். "இந்திய ஆதிக்கத்தின் அபாயக் கட்டுக்கதையை" எள்ளி நகையாடினார். எவ்வாறுயினும் அவர் இனவாதத் தேர்தல்களின் தீமை



களைக் குறைத்து மதிப்பிடவில்லை. டாக்டர் டிபிள்யூ. ஏ. டி. சில்வாவை மேற்கோள் காட்டி அவர் பின்வருமாறு கூறினார்:

"இந்நாட்டில் எத்தகைய நிலையான அக்கறையுமற்ற இந்தியர்களிடம் இந்நாட்டின் தலைவிதியை நிர்ணயிக்கும் பொறுப்பை கையளிக்கப் போகிறோம் என்று பொதுமக்களுக்கு விளக்கிக் கூறினால் அவர்கள் அதற்கெதிராக எழுச்சியுற்று தமது கருத்துக்களை உறுதியாக வெளிப்படுத்துவார்கள். இதனை நான் ஏற்றுக் கொள்கிறேன். இது ஓர் உண்மையான அறைகூவல் என நான் ஏற்றுக்கொள்ளவில்லை. யாராவது, இத்தகைய அறைகூவலுடன் மக்களிடம் சென்றால் அவர்களை எளிதாகச் செயலுக்குத் தூண்ட முடியும். ....... என்று காங்கிரஸ் தலைவர் கூறினார்."

(ஹன்சாட், 2 நவம்பர், 1928)

இக்காலத்தில் தொழிற் கட்சியின் ஆதரவாளர்களாக இருந்த பல சிறுபான்மைச் சட்டசபை அங்கத்தவர்கள் இனவாதத்தின் அபாயம் குறித்து எச்சரித்தனர். நடேச ஐயரும், ஏ. மகாதேவாவும் "எமக்கு இந்தியர்கள் வேண்டும், அத்துடன் அவர்கள் இலங்கையருடன் சமமான உரிமை பெற்றிருத்தலும் வேண்டும் என்று தொழிற்கட்சி கூறுகிறது" என்றும் கூறினர்.

தொழிற் கட்சியில் இல்லாதபோதும் மலேயரான ரி. பி, ஜயா இந்தியர்களின் வாக்களிக்கும் உரிமையை ஆதரித்தார், 'இந்தியர்களுக்கு வாக்குரிமை அளிப்பதை தொழிற்கட்சி மிகத் தீவிரமாக ஆதரிக்கிறது. சிங்களத் தொழிலாளி தனது. இந்தியச் சகோதரனுக்கு வாக்குரிமை அளிப்பதைத் தடுக்க மாட்டான்" என்று அதன் தலைவர் கூறுகிறார்."

(ஹன்சாட், 8 நவம்பர், 1928.)



படிப்பகம்

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

இன ஒற்றுமை, வர்க்க ஒருமைப்பாடு ஆகியவற்றைத் தமது அடிப்படைக் கொள்கைகளாகக் கொண்டிருந்தது வரை, கொழும்பு தொழிற் சங்கத்தில் மிகுந்த செல்வாக்குப் பெற்றிருந்த தலைவரான ஏ. ஈ. குணசிங்கா இந்தியத் தொழிலாளரின் வாக்குரிமையை ஆதரித்தார். சிங்களப் பத்திரிகைகளில் ஒரு பகுதி இனவாதப் பிரசாரத்தை விரைவு படுத்திய அக்காலத்தில் (1928இல்) 'பிரைஸ்' பூங்காவில் (Price Park) காந்தி சங்கத்தின் கூட்டமொன்றுக்குத் தலைமை வகித்த ஏ. ஈ. குணசிங்கா இந்தியத் தொழிலாளரின் உரிமைக்குச் சாதகமாகக் குரல் கொடுத்தார் சிங்களத் தலைவர்களை குணசிங்கா தாக்கியது பற்றி 'சிலோன் டெய்லி நியூஸ்' (10 செப்டம்பர், 1928) செய்தி வெளியிட்டது.

> "இந்தியர்கள் சிங்களத் தொழிலாளர்களுக்குப் பெரும் அச்சுறுத்தல் எனச் சில செல்வந்தர் பேசுகின்றனர். தமது தொழிலாளர் துன்பமும், தொல்லையும் உற்றபோது மனச்சாட்சியும் நாட்டுப் பற்றுமுடைய இந்தச் செல்வந்தர் என்ன செய்தனர்? தமது நாட்டு ஏழை மக்களுக்கு உதவுவதற்குப் பதில், ஏழைக் கிராமத்தவனை அவனது சிறு துண்டு நிலத்திலிருந்து விரட்டியடிப்பதில் தமது சக்தியைச் செலவழித்தனர். இப்போது இவர்களுக்கு நாட்டுப்பற்று வளர்ந்துள்ளது. இந்த அக்கறைக்குக் காரணம் என்ன? ஏழைக்குக் கொடுக்கப்பட்ட வாக்குரிமையே காரணம். இதே செல்வந்தர்கள் தான் விசேட ஆணைக்குழுவுக்கு சர்வசன வாக்குரிமை வழங்குவதை எதிர்த்துக் கூறியவர்கள். தமது திட்டத்தில் தோல்வியுற்ற இவர்கள் இப்போது இந்தியர்களுக்கு வாக்குரிமை மறுப்பது பற்றிப் பேசுகின்றனர்."

இந்தியத் தொழிலாளர்களின் உரிமைகளை ஆதரிப்பதால் ஏற்படக்கூடிய விமர்சனத்தையும், செல்வாக்குக் குறைவையும் பொருட்படுத்தாது, அவ்வேளை



ஏ. ஈ. குணசிங்கா துணிச்சலான நிலைப்பாட்டை எடுத்தார். இது முப்பதாம் ஆண்டுகளில் சிறுபான்மையினரின் உரிமைகள் பற்றிய திடீர்க் கொள்கை மாற்றத்துக்கு நேரெதிராக அமைந்தது.

## தேர்தல்கள்

இறுதியாக, திருத்தம் செய்யப்பட்ட சிபார்சுகள் அமுலாக்கப்பட்டபோது, இலங்கையைத் தாயகமாகக் கொண்டோர் அல்லது 5 வருடங்கள் வாழ்ந்து கல்வி, சொத்து, வருமானத் தகைமை கொண்டோர் அல்லது 5 வருடங்கள் தொடர்ச்சியாக வசித்து, மேலும் நிலையாக வசிக்கும் நோக்கமுடையோருக்கு வழங்கப்பட்ட குடியிருப்புச் சான்றிதழ் கொண்டோர் என்போருக்கு வாக்குரிமை அளிக்கப்பட்டது. இச்சட்டத்தால், முதல் தடவையாக தோட்டத் தொழிலாளரில் ஒரு பகுதியினர் வாக்களிக்கும் உரிமை பெற்றனர்.

1931இல் இலங்கையின் முதல் பொதுத் தேர்தலில் தோட்டப் பகுதிகளில் கணிசமான அளவு அரசியல்பிரசாரம் நடைபெற்றது. எஸ் பி. வைத்தியலிங்கம் (தலவாக்கொல்லை), பெரி சுந்தரம் (ஹட்டன்) ஆகிய இரு இந்திய வம்சாவழியினர் தேர்ந்தெடுக்கப்பட்டனர். பெரி சுந்தரம் புதிய அரச கவுன்சிலில் (State Council) தொழில், கைத்தொழில், வர்த்தக மந்திரியானார். 1936இல் இந்திய வாக்காளர்களின் தொகை 145,000 ஆக உயர்ந்தபோது தோட்டப்பகுதியில் அரசியல் குழப்பம் புதுப்பிக்கப்பட்டது. 1936ஆம் ஆண்டுப் பொதுத் தேர்தலில் இரு இந்தியர்களான எஸ். பி. வைத்தியலிங்கம் (தலவாக்கொல்லை), கே. நடேச ஐயர் (ஹட்டன்) ஆகிய இரு இந்தியர்கள் தேர்ந்தெடுக்கப் பட்டனர். ஐந்து வருடத்துக்கொரு தரம் பொதுத் தேர்தல் நடப்பதால் 1941ஆம் ஆண்டுத் தேர்தலுக்காக மிகுந்த தயாரிப்புகள் இடம் பெற்றன. (ஆனால் 2-ஆம் உலகப் போரினால் இது பின் போடப்பட்டது.) இவ்வாண்டில் இந்திய வாக்காளர்



படிப்பகம்

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

தொகை 225,000 ஆக உயர்ந்தது. தோட்டத்துறையில் தேர்தல் உற்சாகம் பரவியதும், 1939க்குப் பின்னர் பரவிய தொழிற்சங்க ஆதரவும் அரசியல் விழிப்புக்கு வழிகோலியது.

## கிராமிய வாக்குரிமை மறுப்பு

தோட்டத் தொழிலாளர்களுக்கு குறிப்பிட்ட சில கட்டுப்பாடுகளுடன் வாக்குரிமை அளிக்கப்பட்டதும் தம்மைப் பதிவு செய்து, வாக்களிப்பதில் அவர்கள் காட்டிய ஆர்வம் சிங்கள அரசியல் தலைவர்களிடையே அச்ச உண ப ஏற்படுத்தியது பாராளுமன்ற மட்டத்தில் . பினர் உரிமை அவர்கட்கு இல்லாமற் செய்வதில் தோல்வி அடைந்தாலும், உள்நாட்டு, கிராமப்புற மட்டத்தில் வாக்குரிமை மறுப்பதற்கு முயற்சி செய்யப்பட்டது.

1889ஆம் கிராமியக் கமிட்டிச் சட்டத்தின்படி ஐரோப்பியர், பறங்கியர், இந்தியர் ஆகியோருக்கு இக்கமிட்டிகளில் பங்குபற்றும் உரிமை மறுக்கப்பட்டது. அவர்கள் கிராமிய வாழ்க்கையுடன் இணைந்த பகுதியினர் அல்ல என்று இதற்குக் காரணம் கூறப்பட்டது.

கிராமப் பகுதியில் அமைந்திருக்கும் தோட்டங்களுக்கு வரி அறவிடுவது என்றும், ஐரோப்பியருக்கும், பறங்கியருக்கும் கிராமிய உறுப்பினர் உரிமை அளிப்பதென்றும் 1937இல் சட்டம் திருத்தப்பட்டது. ஆனல் இந்தியர்களுக்கு இவ்வுரிமை அளிக்கப்படவில்லை. இதனல் கிராப்புற ஆட்சியில் இத்தொழிலாளர்கள் பங்கேற்காதவாறு தடுக்கப்பட்டனர்.

இச்சட்டத்திற்கு பெரிய எதிர்ப்பு ஏற்பட்டது, இலங்கையிலிருந்த பல இந்தியச் சங்கங்கள் சட்டசபை இந்தியருடைய அரசியல் உரிமைகளைப் பறிக்கிறது என்று குற்றஞ் சாட்டின. இச்சட்டம் இன வேறுபாடு காட்டலின் அடிப்படையில் அமைந்தது என்று இந்திய அரசாங்கம் கூறியது. சட்டசபையில் இலங்கை சமசமாசக் கட்சி (L. S. S. P.)



உறுப்பினராகவிருந்த கலாநிதி என். எம். பெரேரா மந்திரி சபையின் கொள்கைகளைக் கண்டித்துப் பேசினர்.

> ஐரோப்பிய தோட்ட முதலாளிகளுக்கு வாக்குரிமை வழங்குவதை அவர்கள் எதிர்க்கவில்லை. சொத்துடையோரும் சுரண்டலை அதன் முழு அர்த்தத்தில் செயற்படுத்தி மக்களைச் சுரண்டுவோரும் வாக்குரிமை பெறுகின்றனர். ஆனல் நிலத்தை உடைமையாகக் கொண்டிருக்கும் வாய்பற்ற ஏழைத் தொழிலாளிக்கு வாக்குரிமை வழங்கப்படவில்லை. பயத்தோடு பெரிது படுத்திக் காட்டும் பொய்த்தோற்றம் ஒரு சிலரால் உருவாக்கப்பட்ட கற்பனையே. இந்தியத் தொழிலாளரின் நலன்களும் இந்த நாட்டில் மிகப் பெருந் தொகையாக வாழும் நாட்டுப்புற மக்களது நலன்களும் ஒரே தன்மையானவையே. உண்மையான போராட்டம்முதலாளி வர்க்கத்துக் கெதிரானதே. அவர்கள் இலங்கையர்களா? இந்தியர்களா? என்பதல்ல.
>
> —ஹன்சாட் 1937, நிரல் 4150

இந்த எதிர்ப்புகளின் பயனக இனவேறுபாடின்றி எல்லா தோட்டத் தொழிலாளர்களுக்கும் கிராமச் சங்கத்தின் உரிமையை மறுக்கும் இன்னேர் திருத்தம் கொண்டு வரப்பட்டது. ஆனல் தோட்டங்களில் வசிக்கும் சிங்களவர் மிகக் குறைவாக இருந்ததால் இந்தியத் தொழிலாளருக்கு எதிரானதாகவே இச்சட்டம் அமைந்தது.

## குடிபெயர்தலுக்குத் தடை

இந்திய வம்சாவழியினரான நகர்புறத் தொழிலாளரை இளைப்பாறவும், திரும்பிப் போகவும் செய்யும் நடவடிக்கைகள் 1930களின் பிற்பகுதியில் எடுக்கப்பட்டபோது, இந்தியச் சிறுபான்மையினரான மலையாளிகள், தமிழரது நிலை ஈடாட்டம் கண்டது. பொருளாதாரத்தின் முக்கிய



படிப்பகம்

www.padippakam.com 

துறையாக இருந்த பெருந் தோட்ட வேலைகளுக்கு இந்தியாவிலிருந்து குடியேறல்பற்றிய விவாதங்களுக்கு உள்நாட்டு வேலையில்லாத் திண்டாட்ட நிலை வழிவகுத்தது. இதில் வேடிக்கை யாதெனில் சிங்களத் தொழிலாளருடன்போட்டியிடுபவர் எனக் கருதப்பட்ட நகரத் தொழிலாளரை நாடு கடத்தப் பிரசாரஞ் செய்த சிங்கள பூர்ஷ்வாக்கள் தோட்டங்களில் வேலை செய்வதற்காக இந்தியாவில் இருந்து குடிபெயர்ந்து வருவதைத் தடுப்பதற்கு எதிர்த்தனர். ஏனெனில் இவ்வாறு தடுப்பது தோட்டத்துறைப் பொருளாதார நலன்களைப் பாதிக்கும். எவ்வாறுயினும் 1939இல் இந்திய அரசு இந்தியாவிலிருந்து தொழிலாளர் குடிபெயர்தலைத் தடை செய்தது.

## போர்க்குணம் மிக்க தோட்டத் தொழிலாளர்

தொழிற் சங்கமயமாதல், தீவிர போராட்டங்கள் வளர்ந்து வரும் அரசியலுணர்வு கண்டும் சிங்களவர் அஞ்சினர். 1930இல் கே. நடேச ஐயர் முதலாவது தொழிற் சங்கத்தை நிறுவினர். ஆயினும் அன்றைய பொருளாதார மந்த நிலையால் விரைவாக முன்னேற முடியவில்லை. பின்னர் நிலைமை மாறியது. லங்கா சமசமாஜக் கட்சி தோட்டத் தொழிலாளரை ஒழுங்கமைத்து 1939இலும் 1940லும் தீவிரமான போராட்டங்களை நடத்தியது. இப்போராட்டங்களை முதலாளிகள் மிக வன்மையாக எதிர்த்தனர். நேருவின் ஆதரவுடன் 1939இல் தொடங்கப்பட்ட இலங்கை இந்திய காங்கிரசும் தொழிற்சங்க நடவடிக்கைகள் மூலம் 1940இல் மலைநாட்டில் தீ பரவுவது போல வேலை நிறுத்தங்கள் பரவின. தலைமுறை தலைமுறையாக அடிமையாக சுரண்டிய தோட்டக்காரர் விழிப்படைந்தனர். உலகப் போரின் ஆரம்பத்தின்பின் ஏற்பட்ட அமைதியின்மை கண்டு அச்சமடைந்தனர், தொழிற் சங்கங்களுக்கு விரைவாக அங்கீகாரம் அளித்து சங்கங்களுக்கும் தோட்ட முதலாளிகள் ஸ்தாபனங்களுக்கு மிடையில் 1940இல் கூட்டு ஒப்பந்தம் ஒன்றும் கைச்சாத்திடப்பட்டது.



தோட்டங்களில் இடம்பெற்ற கிளர்ச்சியும் திடீரென ஏற்பட்ட வன்செயல்களும் சிங்களத் தலைவரிடை பதட்டம் ஏற்படுத்தியது. இடதுசாரிக் கட்சிகளுடன் இணைந்த தோட்டத் தொழிலாளரால் ஏற்படக்கூடிய 'அபாய'த்தை இவர்கள் உணரத் தலைப்பட்டனர். இடதுசாரிகளால் நடத்தப்பட்ட நகரத் தொழிலாளர் 1945, 1946ல் தீவிரமான வேலை நிறுத்தங்களை மேற்கொண்டு 1947ஆம் ஆண்டில் பொது வேலை நிறுத்தம் நடைபெற்றது. இரண்டாம் உலகப் போரின் இறுதியில் "சிவப்பு அரசியல் நெருக்கடி" குறித்த எச்சரிக்கைகள் பூர்ஷ்வாக்களிடை ஏற்பட்டன. 1947ன் பாராளுமன்றத் தேர்தலில் இடதுசாரிக் கட்சிகளின் பிரதிநிதித்துவம் 12ல் இருந்து 20 ஆக அதிகரித்தது தோட்ட, நகர்ப்புறத் தொழிலாளரது புரட்சிகரக் கூட்டு சிங்கள பூர்ஷ்வாக்களுக்கு மேலும் அச்சமூட்டியது.

இலங்கை-இந்திய காங்கிரஸ் பாராளுமன்றத்துக்கு 7 அங்கத்தவர்களை தேர்ந்தமையும் தோட்டத் தொழிலாளரின் அரசியல் ஆற்றலைப் புலப்படுத்தியது. காங்கிரஸ் போட்டியிடாத தொகுதிகளில் தோட்டத் தொழிலாளர் இடதுசாரிக் கட்சிகளை ஆதரித்தனர். 14 தொகுதிகளில் இந்தியத் தொழிலாளரின் ஆதரவுடன் வேட்பாளர் வெற்றி பெற்றனர். லங்கா சமசமாஜக் கட்சியைச் சார்ந்த என். எம். பெரேரா எதிர்க்கட்சித் தலைவரானர். தேர்தலுக்குப் பின் இலங்கை-இந்திய காங்கிரஸ் அங்கத்தவர்கள் பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சியினருடன் அமர்ந்து முக்கியமான விடயங்களில் இடதுசாரிகளுடன் சேர்ந்து வாக்களித்தமை சிங்கள பூர்ஷ்வாக்களின் மனக்கசப்பை மேலும் அதிகரித்தது.

## இந்திய அச்சுறுத்தலும் 'இடதுசாரி நெருக்கடி'யும்

சிங்கள பூர்ஷ்வாக்கள், 1947ஆம் ஆண்டில் எல்லா இனங்களையும் இணைத்துஐக்கிய தேசியக் கட்சியை நிறுவினர்.



படிப்பகம்

இலங்கையின் சுதந்திரத்திற்குப் பிந்திய கால கட்டத்தில் இக்கட்சி பூர்ஷ்வா வர்க்க நிலைப்பாட்டை உறுதிப்படுத்தத் தொடங்கியது. 1947இல் மார்க்ஸிஸ்ட் கட்சிகள் கணிசமான அளவு பாராளுமன்றத்தில் வெற்றி பெற்றது மாத்திரமன்றி (ரொட்ஸ்கியவாதியான கலாநிதி என்,எம். பெரேரா எதிர்க்கட்சித் தலைவராக இருந்தார்) பாராளுமன்றத்துக்கு வெளியிலும் இடதுசாரிகள் 1947-48-ல் தீவிரமான பல பொது வேலை நிறுத்தங்களை நடத்தினர். டி.எஸ். சேனநாயக்காவை பிரதம மந்திரியாகக் கொண்டு 1947இல் உருவாகிய புதிய அரசின் கொள்கைகளை நிர்ணயிப்பதற்கு மேற்கூறிய அம்சங்களும் காரணமாக இருந்தன.

காலனித்துவக் கட்டத்தில் பிரித்தானியர் ஆட்சி இருந்தமை இன, மத முரண்பாடுகள் வன்முறையாக வளர்ச்சி அடைவதைத் தடுத்தது. 1915ஆம் ஆண்டு நடந்த முஸ்லிம் எதிர்ப்புக் கலவரமே வன்முறையாக அமைந்தது. எனினும் 1930ஆம் ஆண்டுகளில் சிறுபான்மையினருக்கு எதிரான இன உணர்வு வேகமாக வளர்ந்தது. 1948-ஆம் ஆண்டின் சுதந்திரத்துடன் சகல வர்க்கங்களையும் சேர்ந்த சிங்கள மக்கள் இனம், மொழி அடிப்படையில் பௌத்தரல்லாத மக்களுக்கு எதிராகப் "புனிதப் போருக்கு" தயாராயினர். முதல் தாக்குதல் சுதந்திரம் பெற்ற ஆறுமாதத்தின் பின்னர், இலங்கையின் இந்திய வம்சாவழியினருக்கு எதிராக நடைபெற்றது. 1953ஆம் ஆண்டு இவர்களது குடித்தொகை 974,000 ஆகும். (இலங்கையின் 80 லட்சம் குடிதொகையில் இவர்கள் 12 சதவீதமாக இருந்தனர்) இவர்களிற் பெரும் பகுதியினர் தோட்டத் தொழிலாளர் ஆவர்.

அத்து மீறிய சுரண்டலுக்கும், ஒடுக்குமுறைக்கும் ஆளாகும் தோட்டத் தொழிலாளருக்கு எதிராக முதலாளித்துவ நலன் கொண்ட ஏனைய இனக் குழுக்களின் ஆதரவுடன், சட்டங்களை நிறைவேற்றினர். இந்திய வம்சாவழித் தமிழரின் குடியுரிமை (பிரஜாவுரிமையையும்) வாக்குரிமையைப் பறித்த 1948ஆம் ஆண்டுச் சட்டம் இனவாதமானது மட்டு



மல்ல தொழிலாள வர்க்கத்தினருக்கு எதிரானதும் ஆகும். தொழிலாள வர்க்கம், சிறுபான்மை இனம் ஆகிய ரீதியில் அவர்களது அரசியல் செல்வாக்கைக் குறைக்கவேண்டும் என்ற இலங்கைப் பூர்ஷ்வாக்களின் நீண்டகால நோக்கம் இச்சட்டத்தின் மூலம் நிறைவேறியது மட்டுமன்றி இத் தொழிலாளரை பொருளாதார ரீதியில் ஒடுக்கி வைக்கவும் முடிந்தது.

## குடியுரிமைச் சட்டங்கள்

1948ஆம் ஆண்டு பெப்ருவரி மாதம் நாடு சுதந்திரம் பெற்றபோது, நடைமுறையிலிருந்த யாப்பு, குடியுரிமையை வரையறுப்பதாய் இருக்கவில்லை. எனவே உடனேயே அது திருத்தியமைக்கப்பட்டது 1949ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்ட இலங்கைக் குடியுரிமைச் சட்டம் குடியுரிமை பரம்பரையாலோ அல்லது இலங்கையில் மூன்று தலைமுறைக்குத் தந்தை வழிப் பரம்பரை இருப்பின் பதிவாலோ வழங்கப்படும் எனக் கூறியது. ஆனல் வியாபாரம், பதவிகள் போன்றவற்றில் மதிப்புவாய்ந்த சேவையாற்றியோருக்கு அரசாங்கம் குடியுரிமை வழங்கவும் சட்டம் இடந்தந்தது. 1948ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் குடியகல்வுச் சட்டம் (Emigrants Act) ஒன்றும் நிறைவேற்றப்பட்டது. இந்தியர், பாகிஸ்தானியர் குடியிருப்போர் (குடியுரிமை) சட்டம் வதிவிடம், வருமானம் ஆகியவை உட்பட சில குறிப்பிட்ட நிலைமைகளில் பதிவால் குடியுரிமை வழங்குவதற்கும் இடமளித்தது.

"குடியுரிமைச் சட்டங்கள், இலங்கைச் சுதேசிகளான சிங்களவர். தமிழர், இலங்கை முஸ்லிம், பறங்கியர் ஆகியோருக்கு எத்தகைய சம்பிரதாயமுமற்று. தாமாகவே பரம்பரையால் குடியுரிமை அந்தஸ்தை வழங்கின. ஆனல் இச்சட்டத்தின் கீழ், குடியுரிமை கோரக்கூடிய இந்தியர்கள் இலங்கையிலிருந்த இந்தியர் சனத்தொகையில் மிக மிகச் சிறு வீதத்தினராகவே இருந்தனர்" என கொடிக்கார கூறுவது முற்றிலும் சரியானது. இச்சட்டங்களைத் தொடர்ந்து தேர்தல்



படிப்பகம்

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

சட்டங்களில் திருத்தம் செய்த, பாராளுமன்ற தேர்தல்கள் (திருத்திய) சட்டம் நிறைவேற்றப்பட்டது. இச்சட்டம் இலங்கைப் பிரஜைகளுக்கே வாக்குரிமை அளித்தது; இது தோட்டத் தொழிலாளரை பிரஜாவுரிமை அற்றவராக்கி தொழிலாளர் வர்க்கத்தின் பெரும்பான்மையினரின் வாக்குரிமையைப் பறித்தது - இவ்வாறாக சிங்களப் பெரும்பான்மையினரின் சட்டச் சூழ்ச்சிகள் முடிவுக்கு வந்தன.

## 1948-ம் ஆண்டில் சிங்கள பூஷ்ர்வாக்களின் உணர்வு நிலை

இச்சட்டங்கள் பற்றிய விவாதங்களின் போது இலங்கையில் வசிக்கும் இந்தியர் பற்றி சிங்களப் பூர்ஷ்வாக்களுக்கிருந்த ஐயப்பாட்டையும், அச்சத்தையும் பிரதிபலிக்கும் வகையில் சிங்களத் தலைவர்கள் பேசினர். இவர்களது மனோபாவத்தை இரண்டாகப் பிரிக்கலாம். ஒன்று, சிங்கள இனம் என்ற வகையில் அவர்களது உணர்வு: இரண்டாவது, வர்க்க நலன் பேணும் பூர்ஷ்வாக்கள் என்ற நிலையில் அவர்களது எண்ணங்கள். சிங்கள மக்களில் மிகப் பெரும்பான்மையோருக்கும், பூர்ஷ்வாக்களுக்கும் பொதுவாக இருந்த நோக்கங்கள் வருமாறு;

1. இந்தியர்கள் குடியுரிமை பெறின் வாக்களிக்கும் உரிமையுடன் தோட்டப் பகுதியின் தேர்தல் தொகுதிகள் சிலவற்றில் அவர்கள் பெரும்பான்மையினராகி 1947இல் 7 அங்கத்தவர்களை அனுப்பியது போல, இந்தியப் பிரதிநிதிகளை பாராளுமன்றத்துக்கு அனுப்புவர் என அஞ்சினர். மேலும் 14 தேர்தல் தொகுதிகளின் வெற்றியை இந்தியரின் வாக்குகள் தீர்மானிக்கும் எனவும் பயந்தனர். பொதுவாகச் சிங்களவரும், சிறப்பாகக் கண்டியரும் இந்தியரால் பலமிழப்பர் என்றும் கண்டியர் போதியளவு பிரதிநிதித்துவம் பெற முடியாது எனவும் கூறினர். உதவியற்ற நிலமற்ற கண்டிய விவசாயியின் நிலை இத்தகைய சர்ச்சைகளில் இடம் பெற்றது. பொருளாதார ரீதியாக பின் தங்கிய இம்மக்கள் அரயசில் ரீதியாக பிரதிநிதித்துவப்



படாவிடில் அவர்களது குறைகள் சரியானபடி தீர்க்கப் படாது எனவும் கூறினர்.

2. இவ் வச்சத்திற்குப் பின்னே அவர்களது உணர்வில் நிலையாக இருக்கும் இந்திய அச்சுறுத்தலும் காணப்பட்டது. இந்திய விரிவாக்கல் நோக்கம் இந்தியாவுக்கு உண்டு எனவும் பிரித்தானியர் வெளியேறியதால் ஏற்பட்ட வெற்றிடத்தை நிரப்ப முயலலாம் எனவும் கருதப்பட்டது, இத்தகைய நோக்கில் இலங்கையிலுள்ள இந்தியர்கள் ஐந்தாம் படையாக கருதப்பட்டனர். 1948இல் இராணுவ படையெடுப்பு உட்படப் பல நடவடிக்கை மூலம் ஐதராபாத்தையும் ஏனைய சிறு மன்னர்களின் மாநிலங்களையும் இந்திய யூனியனில் இணைப்பதில் இந்தியா ஈடுபட்டபோது இலங்கையரின் பயம் மேலெழுந்தது.

இந்தியத் தொழிலாளர் குறித்து, சிங்கள பூர்ஷ்வா வர்க்கம் அச்சமடைந்தே இருந்தது. தம் அதிகாரத்திற்கு அச்சுறுத்தலாய் இருக்கக்கூடிய தோட்டத் தொழிலாளருடன் சகல இனங்களையும் சார்ந்த தொழிலாளர் ஒன்றிணைவு பற்றியும் பூர்ஷ்வா கட்சிகள் பயந்தன. உலகப் போருக்குப் பிந்திய காலத்தில் தோட்டப் பகுதிகளிலும், நகர்புறத்திலும் நடந்த தீவிரமான வேலைநிறுத்தங்களாலும் புரட்சிகர எழுச்சியாலும் இந்த பயமானது மேலும் வலுவடைந்தது, இதுமட்டும் சீன. வியட்னாமிய புரட்சிகர இயக்கங்களும் மலேசியாவில் நடைபெற்ற ஆயுதப் போராட்டமும் 1949இல் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியால் மேற்கொள்ளப்பட்ட 'போராட்ட நிலைப்பாடு' ஆகியனவும் இலங்கையில் புரட்சி ஏற்படலாம் என்ற பயத்தை மேலும் வலுப்படுத்தின.

1947ஆம் ஆண்டு தேர்தல் முடிவுகள் ஐக்கிய தேசியக் கட்சிக்கு வியப்பூட்டியது. 95 தொகுதிகளில் 42ல் மட்டுமே வெற்றி பெற முடிந்தது. இடதுசாரிக் கட்சிகள் 18 இடங்களும் இலங்கை-இந்திய காங்கிரஸ் 7ம் பெற்றன.



படிப்பகம்

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

21 சுயேச்சை அங்கத்தவரில் பலரைத் தன் பக்கம் சேர்த்தே ஆட்சி அமைக்கும் நிலை ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஏற்பட்டது. இலங்கை-இந்திய காங்கிரஸ் பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சியினருடன் சேர்ந்து நின்றது எனவே, இடதுசாரிகள், அன்றைய அமைப்புக்குப் பெரிய அச்சுறுத்தல் எனவும், பல தேர்தல் தொகுதிகளில் இந்தியருடைய வாக்குகள் இடதுசாரி வேட்பாளர்களுக்குக் கிடைத்தன எனவும் சிங்கள அரசியல்வாதிகள் நம்பினர்.

இந்த இன, வர்க்க பேத உணர்வு வேறும் பல தப்பெண்ணங்களால் வலுவடைந்தது தோட்டங்களிலும் நகரங்களிலுமுள்ள இந்தியத் தொழிலாளர் ஏழைகள், படிப்பற்றவர்கள், ஒழுக்கமற்றோர், தாழ்ந்தோர் எனக் கணிக்கப்பட்டு வாக்களிக்கத் தகுதியற்றோர் என்றும் கூறினர். மேலும், சராசரி இந்தியத் தொழிலாளரைப் பிரதிபலிக்கும் ராமசாமியும். மீனாட்சியும் வாக்களிப்பதில் எத்தகைய அக்கறையும் அற்றவர்கள் எனவும் அவர்களுக்குப் பிரஜா உரிமையும் வாக்குரிமையும் அளிப்பது அநாவசியம் எனவும் அரசியல்வாதிகள் பிரசாரம் செய்தனர்.

## 1948ல் நடைபெற்ற விவாதங்கள் —இந்திய அச்சுறுத்தல்

இந்திய அச்சுறுத்தல், இடதுசாரி நெருக்கடி ஆகியவை பற்றிய கருத்துக்களின் அடிப்படையில் அரசியல் நடவடிக்கையாக இலங்கையிலுள்ள இந்தியத் தொழிலாளர் வர்த்தகத்தை தள்ளிவைக்கும் குடியுரிமைச் (பிரஜாவுரிமைச்) சட்டத்தை சிங்கள அரசியல்வாதிகள் அறிமுகப்படுத்தினர். மீரிகமத் தொகுதியின் பிரதிநிதியான டி.எஸ், சேனநாயகா இருபது வருடங்களுககு முன்னர், இந்தியர் வாக்குரிமையை எதிர்த்து, "இந்திய அச்சுறுத்தல்" பற்றித் தெளிவான தனது கருத்துக்களையும் கூறியிருந்தார். 1948இல் பிரஜாவுரிமை பற்றிய முதலாவது சட்டத்தை சமர்ப்பித்த போது பிரதமர் டி.எஸ். சேனநாயக்கா பாராளுமன்றத்தில்



தீவிரமான எதிர்ப்பை எதிர்நோக்கினர். சட்டவிதிகளின் அம்சங்களை விபரிக்கும் வேளை சுருங்கிய உரையையே ஆற்றினர், இச்சட்டத்தை அறிமுகப்படுத்துவதற்கான விளக்கம் எதையும் அவர் கூறவில்லை.

> "இது எளிமையான சட்டமாயிருந்தாலும், மிக முக்கியமான சட்டமாகும். எவரது நலன்களுக்கும் நாம் தீங்கு விளைவிக்க எண்ணவில்லை. வேறு ஒரு நாட்டின் பிரஜைகளல்லாத இலங்கையிலுள்ள மக்களுக்கு பிரஜா உரிமை (குடியுரிமை) வழங்க முயற்சிக்கிறோம் .... நாம் எமது சொந்த பிரஜாவுரிமைச் (குடியுரிமை) சட்டங்களை வைத்திருப்பது அவசியமானதாகும்." (ஹன்சாட், 19 ஆகஸ்ட் 1948).

கண்டியரான உணவு மந்திரி ஏ. ரத்நாயக்கா வெளிப்படையாகப் பேசினர் - கண்டிய விவசாயிகளின் துயர்கள் குறித்தும், இந்திய ஆதிக்க அச்சம் குறித்தும் வெளிப்படையாகக் கூறினர், இலங்கை – இந்திய காங்கிரஸ் தலைவர் எஸ், தொண்டமான் இந்தியாவின் கூட்டாட்சியில் இணைந்த ஆதிக்கத்துக்குட்பட்ட ஒடுக்கப்பட்ட இலங்கை பற்றிய பார்வையையே கொண்டிருந்தார் என ரத்நாயக்க குற்றம் சாட்டினர். மேலும் அவர் பின்வருமாறு கூறினர்.

> "நானும் அச்சச் சிக்கலால் உந்தப்பட்டுள்ளேன். நாம் பயப்படுவதால்தான் எமது தேசிய இனங்களின் நிலையைக் கட்டுப்படுத்தவேண்டும் என்று எண்ணுகிறோம். நாம் பெற்ற சுதந்திரம் ஆபத்தில், மிகுந்த ஆபத்தில் உள்ளது என எண்ணுகிறேன். ஆபத்து உள்ளேயே உள்ளது." (ஹன்சாட், 19 ஆகஸ்ட், 1948),

இந்தியர் பாகிஸ்தானியர் குடியிருப்பாளர் சட்டத்தைச் சமர்ப்பித்தபோது டி. எஸ். சேனநாயக்க எதிர்காலம் பற்றியும் இந்தியப் பிரச்சினை பற்றியும் பேசினர். "இந்தியா



படிப்பகம்

வுடன் எமது நெருக்கமும் தொடர்பும்.... அந்நாட்டுடன் நாம் நெருங்கிய நட்புறவு கொண்டிருப்பது அவசியமானது என்பதை உணரவைக்கிறது'' என்று கூறினர். ''நாம் சிறிய நாடாயிருக்கலாம். ஆனல் எவ்வளவு சிறிதாயிருந்தபோதி லும் எமது நாட்டில் எமக்கு உரிமை உண்டு.... தமக்கு உரிமை இல்லாத இடத்து உரிமையையும், சலுகை இல்லாத இடத்துச் சலுகையையும் நிறுவி, ஏனைய நாடுகளின் உரி மையை இந்தியா பறிப்பதை நாம் விரும்பவில்லை.''

ஐக்கிய தேசியக் கட்சி அரசில் அமைச்சராக இருந்த எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கா ஜவர்லால் நேருவுடன் தமக்கிருக்கும் நட்பையும் மதிப்பையும் பற்றி அழுத்திக் கூறிவிட்டு பின்வருமாறும் குறிப்பிட்டார்.

> ''இந்தியத் துணைக் கண்டத்துடன் நாங்கள் நட்பா யிருக்க வேண்டும். இந்தியாவைப் போற்றுவதற்கும் அவர்களிடமிருந்து அறிவதற்கும் பல உண்டு. நாங்கள் நண்பர்களா யிருக்கவேண்டும் ஆனல் எந்த அடிப்படையில்? எமது மக்களுக்கு துரோக மிழைப்பதன் அடிப்படையிலா? ஒரு போதும் இல்லை. எமது மக்களுக்குத் துரோக மிழைப்பதன் அடிப்படையில் எமது நட்பு இருக்கமுடியாது.''

**(ஹன்சாட், 20 ஆகஸ்ட், 1948)**

இந்தியாவைப் பற்றி இடதுசாரிகளுக்கு வேறுவித கருத்து இருந்தது. கலாநிதி என். எம். பெரேரா, கொல் லின் ஆர், டி. சில்வா போன்றவர்கள் லங்கா சமசமாசக் கட்சிக்குத் தடைவிதிக்கப்பட்ட பின்னர், கொழும்புச் சிறையிலிருந்து தப்பி, இந்தியா சென்று போர்க்கால ஆண்டுகளை அங்கு கழித்தனர். இந்திய இடதுசாரி இயக்கத் துடன் சேர்ந்து அவர்கள் உழைத்தனர். இலங்கையிலுள்ள இந்தியரை வர்க்கப் போராட்டத்தில் நேச சக்திகளாகக் கருதினரே அன்றி அந்நியர்களாக அல்ல. கலாநிதி என்.எம். பெரேரா குடியுரிமைச் சட்டத்தை விமர்சித்தபோது



''பிரதமர் இரு வியாதிகளால் அவதிப்படுகிறர். ஒன்று இந்திய வெறுப்பு, மற்றது ஆங்கில வெறுப்புக் கோளாறு.

**(ஹன்சாட். 19 ஆகஸ்ட், 1948)**

## வகுப்புவாதமும் வர்க்கமும்

பிரஜா உரிமைச் சட்டம் பாராளுமன்றத்தில் 1948-ம் ஆண்டு ஆகஸ்டிலும் டிசெம்பரிலும் விவாதிக்கப்பட்ட போது இடதுசாரிக் கட்சிகளின் தலைவர்கள் இச்சட்டங் களின் வகுப்புவாத, வர்க்க நோக்கங்களை அம்பலப்படுத் தினர். லங்கா சமசமாசக் கட்சியின் தலைவரான என். எம். பெரேரா ''இச்சட்டங்கள் முழுமையான வகுப்புவாத நோக்கம் கொண்டவை'' எனக் கூறினர்.

> ''இவ்வகையான இனவாதம் ஹஸ்டன் சம்பர் லேன், அடல்வ் ஹிட்லர் போன்ருேரின் இனவாத மாகவே முடியும். ஓர் அரசியல்வாதி, நாட்டுத் தலைவர் என்று தன்னைக்கூறும் ஒருவர் இத்தகைய ஒரு சட்டத்துக்கு ஆதரவளிக்கும்படி எம்மைக் கேட்பார் என நான் நினைக்கவில்லை. கடவுளால் தேர்ந்தெடுக்கப்பட்ட, உலகிலிருந்து வேறான ஒரு தனிச் சாதியாக எம்மை கற்பனை செய்து இதனை அனுமதிக்க முடியாது. நாம் மட்டுமே இந்நாட்டின் பிரஜைகளாக இருக்கும் பேறு பெற்றவர் என்பது தவறு.''

பிரஜா உரிமை தொடர்பான வருமானக் கட்டுப்பாடு கள் பற்றிப் பேசும்போது இச்சட்டத்தின் வகுப்புவாதச் சாய்வு பற்றியும் அவர் சுட்டிக் காட்டினர்.

> ''எவ் வேலையுமற்ற சிங்களவர் ஒருவர் பிரஜா உரிமை பெறுவதற்குத் தகுதியுடையவராளுல் வருமானம் எதுவுமற்ற ஓர் இந்தியருக்கு ஏன் இந்த உரிமை விலக்கப்படவேண்டும்? இத்தகைய அளவு கோல் மிக மோசமான வகுப்பு வாதச் சார்பு

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

உடையது அல்லவா! வகுப்பு வாதச் சார்பு கீழிருந்து வருவதில்லை. எப்போதும் மேலிருந்தே வருவது,''

(ஹன்சாட், 10 டிசம்பர், 1948)

போல்ஷவிக் லெனினிஸ்ட் கட்சியைச் சேர்ந்த கொல்வின் ஆர். டி. சில்வா இனவாதத்துக்கும் பிற்போக்கிற்கும் இடையிலான தொடர்பு பற்றிக் குறிப்பிட்டார். மட்டமான அரசின் மோசமான செயலே இச்சட்டம் என விபரித்து இச்சட்டத்தை எதிர்த்தவர்கள் இந்நாட்டின் அரசியல் வாழ்க்கையை இழிவு படுத்திய வகுப்புவாதப் பிரச்சாரத்துக்கு எதிராகச் செயற்பட்டதற்காகப் பாராட்டினர். அவர் கூறினர்:

''இச்சட்டத்தின் பின்னணியை... இதன் அரசியற் காரணிகளையும் சமூக நோக்கங்களையும் பார்த்தால் பிற்போக்குத்தனத்தில் சிறந்த உதாரணமாக காணலாம். வகுப்புவாதம் பிற்போக்கிற்கு வாய்ப்பான ஆயுதம், இச்சட்டம் சர்வஜன வாக்குரிமையின் எதிர்காலச் சவக்குழியைத் தோண்டப் பயன்படுவதாகும்.''

''ஒரு குறிப்பிட்ட குழுவுக்கு எதிராக வகுப்பு வாத அடிப்படையைப் பிரயோகிக்க அரசாங்கம் தொடங்குவது இன்றி இலங்கையர் என ஏற்றுக்கொள்ளப்படும் ஏனைய சிறுபான்மையினருக்கெதிராகவும் வேறுபாடு காட்டுவதற்கு வழிகோலும்'' என்றும் கொல்வின் மேலும் தீர்க்கதரிசனத்துடன் குறிப்பிட்டார். (ஹன்சாட், ஆகஸ்ட், 1948)

சிங்கள அரசியல்வாதிகள் பலர் இப்பிரச்சினையில் வகுப்புவாத நிலைப்பாட்டையே எடுத்ததுடன் அத்தகைய தமது சார்புகளை மறைக்கவும் இல்லை. இதற்குச் சிறந்த உதாரணம் ரி. எவ். ஜெயவர்த்தன ஆவர்.

'தமது கொச்சி சகோதரர்களுக்கு (மலையாளத் தோழர்கள்) இரங்குவதுபோல தம் சொந்த மக்களுக்கு எதிர்க்கட்சி அங்கத்தவர் சிலர் இரங்குவார்களானல் நான்கு, ஐந்து தமிழர் அல்லது சிங்களப் பெண்களுடன் ஒரே வீட்டில் 40 ஆண்கள் வாழும் ஆட்கள் இந்நாட்டின் பிரஜைகள் ஆவதற்கு எவ்விதத்திலும் ஆதரவு அளிக்கமாட்டார்கள் என்பதை ஏற்பர்'

(ஹன்சாட், 10 டிசம்பர், 1948)

சிலர் ஒழுக்கம் பற்றிப் பேசும் வேளை இலாகா இல்லாத அமைச்சராக நியமிக்கப்பட்ட தொழிலாளர் தலைவரான ஏ. ஈ. குணசிங்காவை அவரது இனவாத நிலைப்பாட்டிற்குரிய பொருளாதார அடிப்படையை தெளிவாக விளக்குமாறு கோரினர். இம்மசோதாவை வகுப்புவாத பாகுபாடு காட்டுவது என வெளிப்படையாகக் கண்டித்த லங்கா சமசமாசக் கட்சியைச் சேர்ந்த ரி. பி சுபசிங்காவிற்குவும் தனக்கும் எதிராகச் சுமத்தப்பட்ட இனவாதக்குற்றச்சாட்டுகளுக்கும் பதிலளிக்கும் வகையில் ஏ. ஈ. குணசிங்கா கூறினர்.

''இந்நாட்டுப் பிரஜைகளானதும் இந்நாட்டில் நூருயிரக்கணக்கான தொழிலாளர்களின் நலன்களும் பாதுகாக்கப்படவேண்டுமாயின் நான் இனவாதியாக இருக்கவேண்டியவனுகிறேன், உண்மையாக இனவாதியாக இருக்கிறேன். தொடர்ந்தும் இனவாதியாகவே இருப்பேன்,''

இவ்விவாதத்தில் குணசிங்கா 1920களில் ஆரம்பமான பொருளாதார மந்தநிலையினுல் தொழிற் சங்கக் கொள்கைகளில் ஏற்படுத்தப்பட்ட மாற்றங்களை வெளியிடும் அறிக்கைகளை விடுத்தார்,

''தொழில் கொள்கைகளுக்கும், தொழிற் சங்க தத்துவங்களுக்கும் இசைவாக தோட்டங்களில் வேலை செய்பவர்களைத் தவிர ஒவ்வொரு இந்தியத் தொழிலாளியையும் எமது தொழிற் சங்கங்களில் சேர்த்திருந்தோம். ஆனுல் 1929ஆம் ஆண்டு



படிப்பகம்

வேலையில்லாப் பிரச்சினை எம்மை எதிர்கொண்ட போது நாம் எல்லா நிலைமைகளையும் மீளாய்வு செய்ய வேண்டியவர்களாக இருந்தோம். வெளி நாடுகளிலிருந்து மக்களை அழைக்கவோ ஏற்றுக் கொள்ளவோ முன்னர் எமது நாட்டுப் பிரஜை களுக்கு வேலைகள் வழங்கப்படவேண்டும். அவர் களது நலன்கள் பாதுகாக்கப்படவேண்டும் எனத் தீர்மானித்தோம்.''

(ஹன்சாட், 10 டிசம்பர், 1948)

1930களில் தேர்தல் காலத்தில் தன் தொகுதியில், (கொழும்பு மத்தி) நடைபெற்ற வகுப்புவாத அரசியல் பிரச்சாரங்கள் பற்றிக் குறிப்பிடுகையில் ஒருபக்கச் சார்பின்றி அவர் குறிப்பிட்டார்.

''என் நல்ல நண்பர் ரி. பி. ஜயாவிற்கு 10,000 வாக்குகள் குறைவடைய வைத்ததுடன் எந்த வொரு இந்தியரின் வாக்கையும் நான் ஏற்றுக் கொள்ளமாட்டேன். ஏனெனில் நான் இந்தியர்கள் வெளியேற்றப்படவேண்டும் என்ற கருத்துடை யவன். ஏனெனில் எமது சொந்த மக்கள் தொழி லின்றி இருக்கிறார்கள்''

## தோட்டத் தொழிலாளருக்கு எதிராகப் பூர்ஷ்வாக்கள்

இலங்கைத் தொழிலாளர் வர்க்கத்தின் மிகப் பெரிய பகுதியினருக்கு அடிப்படை ஜனநாயக உரிமைகள் மறுக்கப் பட்டமை பாராளுமன்ற விவாதங்களின்போது இடதுசாரி களின் வாதத்தில் முக்கிய இடம் பெற்றது. அரசுக்கு அரசியல் அச்சுறுத்தலாக அமையக்கூடிய தொழிலாளரின் பெரும் பகுதியினரைத் தாக்குவதற்காக இனரீதியான



பயத்தைச் சிங்களப் பூர்ஷ்வாக்கள் ஏற்படுத்தினர் எனக் குற்றம் சாட்டினர்.

கம்யூனிஸ்ட் கட்சி பிரஜா உரிமைச் சட்டத்தின் வர்க்கச் சார்பு பற்றி அழுத்திக் கூறியது. இக்கட்சியின் பிரதான பேச்சாளரான பீற்றர் கெனமன் இச்சட்டம் ''பணக்காரர் படித்தவரது நன்மைக்காகச் செயல்படுகிறது. இந்நாட்டின் தொழிலாளர்களுக்கும், ஏழைகளுக்கும் எதிரானது'' எனப் பாராளுமன்றத்தில் கூறியபோது இனத்தைவிட வர்க்கமே தீர்மானிக்கும் சக்தி என்பதை மேலும் உறுதிப்படுத்தினர்.

''வர்க்க நலன்கள் இச்சட்ட விதிகளில் சேர்ந் திருப்பதால் நாம் இம்மசோதாவை எதிர்க்கிறோம். இச்சட்டம் தொழிலாளி வர்க்கத்தைச் சேர்ந்த இந்தியர்களுக்கு எதிரானது. இங்கு எழும் வினு வர்க்கத்திற்கும் அப்பாற்பட்டது. இம்மசோதா வின் அடிப்படைத் தத்துவம் நேர்மையற்றது..... ஒரு வர்க்கத்துக்கு எதிராக வேறுபாடு காட்டும் முறையும் இந்நாட்டு மக்களுக்குப் பிரஜா உரிமை வழங்கும்படி கூறிக்கொண்டு யூ. என். பி. அரசு தன் அரசியல் அமைப்பை நிலைநிறுத்த முயல் வதைக் காணலாம்.

(ஹன்சாட், 19 ஆகஸ்ட், 1948)

கம்யூனிஸ்ட் கட்சியின் செயலாளரான ஹரி அபேகுண வர்த்தன இந்தியத் தொழிலாளரை இந்திய பாசிஸ்ட் அரசாங்கத்தின் 'ஐந்தாம் படை'யாகக் கொள்ளும் போக் கைக் கண்டித்தார்.

''நாம் அவர்களை நேச சக்தியாகவும் இலங்கையில் ஒரு சோசலிஸ அரசை நிறுவுவதற்குப் போராடும் இலங்கைத் தொழிலாளர் வர்க்கத்தினராகவும் கருதுகிறோம்.''

பொதுசனப் பாதுகாப்புச் சட்டம், பொலிஸ் சட்டம், தொழிற்சங்கச் சட்டம் உட்பட அரசாங்கத்தால் அமுலாக்கப்பட்ட அடக்குமுறைச் சட்டங்களில் பிரஜா உரிமைச் சட்டமும் ஒன்று என அவர் மேலும் கூறினர்.

> ''இந்தியர் என்று சொல்லப்படும், தொழிலாளர் வர்க்கத்தின் ஒரு பகுதியினருக்கு மாத்திரம் இச்சட்டம் எதிரானதல்ல; ஆனல்.... முழு இலங்கைத் தொழிலாளருக்கும் எதிரானதாகும். தொழிலாளரைப் பிரிப்பதற்காகவும், அவர்களது உரிமைகளை மறுப்பதற்கும், அரசாங்கம் தன்னை அதிகாரத்தில் நிலை நிறுத்துவதற்கும் எடுத்த இன்னேர் நடவடிக்கை.''

இவ் விவாதத்தில் போல்ஷவிக் லெனினிஸ்ட் கட்சியைச் சேர்ந்த கொல்வின் ஆர். டி. சில்வா, தர்க்க ரீதியான நோக்கை வற்புறுத்திக் கூறினர்:

> "குடியுரிமைக் கோட்பாட்டுக்கு வரைவிலக்கணம் வகுப்பதில்.... நடுநிலை தவருத குடியுரிமைக் கோட்பாடு என்ற போர்வையுனூடு வர்க்க அணுகுமுறை என்ற குரூர முகமொன்று எட்டிப் பார்க்கிறது. இந்த அரசின் உட்கிடை மனித நீதியோ சமூக நீதியோ அல்ல. மாருக குறிப்பிட்ட ஒரு வர்க்கத்தின் நலனேயாகும்.''

(ஹன்சாட் 19, ஆகஸ்ட் 1948)

இது போலவே லங்கா சமசமாசக் கட்சியைச் சேர்ந்த ரெபட் குணவர்த்தன, 'இந்நாட்டின் செல்வத்தை உற்பத்தி செய்யும் தொழிலாளரில் ஒரு பகுதியினரின் பிரஜாவுரிமையை மறுப்பதற்காக வரையப்பட்ட வெட்கக்கேடான சட்டம் என கண்டித்தார். "சிங்களத் தொழிலாள வர்க்கத்தினதும், இந்தியத் தொழிலாள வர்க்கத்தினது ஒற்றுமை உள்நாட்டுப் பூர்ஷ்வாக்களுக்கு சாவு மணியாக இருக்கும்'' என அரசாங்கம் அஞ்சியது என்று கலாநிதி என். எம். பெரேராவும் அரசைக் குற்றம் சாட்டினர்.

(ஹன்சாட், 19 ஆகஸ்ட், 1948.)

''தொழிலாளர் வர்க்கத்தின் மிகப் பெரும் பகுதியினருக்கு அநீதியானது'' என அரசை அவர் தூற்றினர், அதனுடைய சட்டங்கள் ''வெளிப்படையாக தொழிலாளருக்கு எதிரானது மட்டுமல்ல. இந்தியத் தொழிலாள வர்க்கத்துக்கு எதிராகத் திட்டமிட்டு வரையப்பட்டவை'' என்றும் அவர் கூறினர்.

(ஹன்சாட், 10 டிசம்பர், 1948)

## பிற கண்ணேட்டங்கள்

பிரஜா உரிமை பற்றிய விவாதங்களின்போது சிங்கள பூர்ஷ்வாக்களாலும், சிங்கள இடதுசாரிகளாலும் கூறப்பட்ட இனரீதியான, வர்க்கரீதியான அம்சங்களைவிட வேறு அபிப்பிராயங்களும் நிலவின. இலங்கையிலிருந்த இந்தியர்களுக்கு எதிரான அநீதிகள் பற்றி இலங்கை இந்தியக் காங்கிரசின் பாராளுமன்றப் பிரதிநிதிகள் பலத்த எதிர்ப்புத் தெரிவித்தபோது, மற்றைய சிறுபான்மை இனப் பிரதிநிதிகள் அதே அளவு அக்கறை காட்டவில்லை. முதலாவது வாக்களிப்பில் பிரஜா உரிமை மசோதாவுக்கு ஆதரவாக 53 வாக்குகளும் எதிராக 35 வாக்குகளும் கிடைத்தன இரண்டாவது வாக்களிப்பில் 52 வாக்குகளும் எதிராக 32 வாக்குகளும் கிடைத்தன. வாக்களிப்பு முறை பெரிதும் வர்க்க அடிப்படையிலேயே அமைந்திருந்தது.

1948ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் முதலாவது பிரஜாவுரிமைச் சட்டத்தின்போது யூ. என். பி. அரசாங்கத்தில் இருந்த இரு தமிழ் அமைச்சர்களான சி. சுந்தரலிங்கம், சி. சிற்றம்பலம் ஆகியோர் ஆதரவாக வாக்களித்தனர், ஆனல் விவாதங்களில் கலந்துகொள்ளவில்லை. ஜீ ஜீ பொன்னம்பலம் தலைமை தாங்கிய தமிழ் காங்கிரஸ் எதிராக

வாக்களித்தது. ஆனால் இப்பிரச்னை பற்றி தீவிரமான கருத்துக்கள் கொண்டிருந்த சுந்தரலிங்கம் அரசாங்கத்திலிருந்து இராஜினாமாச் செய்தார். ஆனால் ஜீ. ஜீ. பொன்னம்பலம் விரைவில் அமைச்சராக்கப்பட்டார். 1948ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் இந்தியக் குடியிருப்போர் சட்டம் கொண்டு வரப்பட்டபோது பொன்னம்பலம் அதற்கு ஆதரவாக வாக்களித்தார். தமிழ் காங்கிரசைச் சேர்ந்த எஸ், ஜே. வி- செல்வநாயகம் எதிராக வாக்களித்தார். இச்சட்டத்திற்குஆதரவாக வாக்களித்தசிறுபான்மை இனத்தவர்: அமைச்சர் ரி. பி. ஜயா (1928 இல் இந்தியர் வாக்குரிமைக்கு ஆதரவு அளித்தவர்) உட்பட சுயேட்சை அங்கத்தவர்களான எஸ். யூ. எதிர்மன்னசிங்கம், வி. நல்லையா, ஏ. எல். தம்பையா (1920களின் பிற்பகுதியில் தொழிற்கட்சியில் ஏ. ஈ. குணசிங்காவின் நேச சக்தியாக இருந்தவர்) ஆகியோர், இவர்களுடன் தமிழ் காங்கிரஸ் பிரதிநிதிகள் கே. கனகரத்தினம், ரி. ராமலிங்கம், பல முஸ்லிம் பிரதிநிதிகள் - எச். எஸ். இஸ்மாயில், எம். எஸ். காரியப்பர், ஏ. எல். சின்னலெப்பை, எம். எம். இப்ராகிம் (முதலில் சுயேட்சையாக இருந்து பின் யூ. என், பியில் சேர்ந்தவர்) போன்றோர் அரசாங்கத்துடன் சேர்ந்து வாக்களித்தனர். நியமிக்கப்பட்ட ஐரோப்பிய அங்கத்தினர்களாகிய எவ். எச். கிரிவ்த், மேஜர். ஜே. டபிள்யூ. ஓல்பீல்ட், எஸ். ஏ, பகீமன், ஈ. ஈ. ஸ்பென்சர் நியமிக்கப்பட்ட பறங்கி இன அங்கத்தவராகிய ஜே. ஓ. மாட்டென்ஸ் போன்றோரும் அரசாங்க ஆதரவாகவே வாக்களித்தனர்.

எனினும் அரசாங்கத்தின் சார்பில்கூட இம்மசோதாவைச் சிலர் கண்டித்தனர், இதற்குச் சிறந்த உதாரணமாக விளங்குபவர் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சராக இருந்து, இரு வருடங்களுக்குப்பின், யூ. என், பியை விட்டு விலகி சிறிலங்கா சுதந்திரக் கட்சியை நிறுவிய எஸ். டபிள்யூ. ஆர், டி. பண்டாரநாயக்கா ஆவர். பிரஜாவுரிமைச் சட்டம் பற்றிய விவாதத்தை முடித்து வைக்கும்போது அவர் யூ. என். பி. அரசாங்கத்திடம் இருந்து தன்னை வேறுபடுத்திக் காட்டினர்;



"எவ்த வேலையுமற்ற சிங்களவர் ஒருவர் பிரஜா உரிமை பெறுவதற்குத் தகுதியுடையவரானல் வருமானம் எதுவுமற்ற ஓர் இந்தியருக்கு ஏன் இந்த உரிமை விலக்கப்படவேண்டும்? இத்தகைய அளவுகோல் மிக மோசமான வகுப்புவாதச் சார்பு உடையது அல்லவா? வகுப்புவாதச் சார்பு கீழிருந்து வருவதில்லை. எப்போதும் மேலிருந்தே வருவது."

(ஹன்சாட், 10 டிசம்பர், 1948)

இந்தியத் தொழிலாளர் இன்னும் தேவை என்று கருதப்பட்டதால், அவர்களுக்குரிய சகல உரிமைகளும் "இந்நாட்டின் தொழிலாளர்களுக்குரிய எல்லா நலன்களும் அளிக்கப்படவேண்டும் என்பதும் பண்டாரநாயக்காவின் கருத்தாகும்: இந்தியாவுக்குத் திரும்ப விரும்புவோருக்கு நீதியான, சிறந்த வசதிகள் அளிக்கப்பட வேண்டும் என்றும் அவர் கூறினர். எதிர்காலத்திலும் இலங்கையர் பெருந்தோட்டங்களில் வேலை செய்வர் என்பது குறித்து நம்பிக்கை தெரிவித்துப் பேசிய பண்டார நாயக்கா "இந்நாட்டு மக்கள் வாய்ப்பான தொழில் நிலைமைகள் ஏற்படின் தோட்டங்களில் வேலை செய்வது மட்டுமல்ல அவற்றை நிர்வகிக்கவும் கூடியவர்களாக இருப்பர்.... இதுவே நாங்கள் விரும்ப வேண்டியது; இதுவே பண்டித நேரு.... என்னிடம் தெரிவித்ததும் ஆகும்." (ஹன்சாட் 80 ஆகஸ்ட், 1948) என்று குறிப்பிட்டார்.

## பட்டியல்

மற்றொரு சுவையான அம்சம் யாதெனில் பிரபல அரசியல்வாதிகளாக இருந்த, பாராளுமன்ற சுயேட்சை அங்கத்தவர்கள் லங்கா சமசமாசக் கட்சி, போல்ஷிவிக் லெனினிஸ்ட் கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி, இலங்கை-இந்தியக் காங்கிரஸ் என்பவற்றுடன் சேர்ந்து இம்மசோதாவுக்கு எதிராக வாக்களித்தமை ஆகும். லக்ஷ்மன் ராஜபக்ச, வில்மட் பெரேரா, ஆர். எஸ். பெல்பொல, ஐ. எம். ஆர். ஏ. இரிய

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

கொல்ல, எச். சிறிநிசங்க ஆகியோரும் எதிர்த்து வாக்களித்தனர். இவர்களுள் பிரபலம் வாய்ந்த பௌத்தரான எச். சிறிநிசங்க "சட்ட ஆக்கலின் கோட்பாடுகளின் முதலாவது விதியை அலட்சியப்படுத்தும் ஒரு நடவடிக்கைக்கு நான் வாக்களிக்க மாட்டேன். இத்தகைய கடின பிரச்சினையின் தீர்வுக்கான அணுகுமுறை வேறுகவே இருக்க வேண்டும்," (ஹன்சாட், 20 ஆகஸ்ட், 1948) என்று குறிப்பிட்டார்.

## தேர்தலும் சத்தியாகிரகமும்

1952ஆம் ஆண்டு பாராளுமன்றம் கலைக்கப்பட்டு, இந்தியர்கள் பெரும்பான்மையோர் நீக்கப்பட்ட 1950ஆம் ஆண்டுத் தேர்தல் பதிவேட்டின் அடிப்படையில் தேர்தல்கள் நிச்சயிக்கப்பட்டபோது, இலங்கை இந்தியக் காங்கிரஸ் இலங்கைப் பிரஜா உரிமை வேண்டி விண்ணப்பித்தவர்களுக்கு வாக்களிக்கும் உரிமையைப் பெறுவதற்காகப் பிரசாரம் செய்தது, தோட்டத்தொழிலாளரின் அவலங்களை எடுத்து விளக்கி அவர்களது கோரிக்கைகளுக்கு ஆதரவு பெறும் நோக்கில் பிரதம மந்திரியின் அலுவலகத்துக்கு முன்னுலும் இக்கட்சி சத்தியாக்கிரகம் ஒன்றை ஒழுங்கு செய்தது. இப்பிரசாரத்தின் நூருவது நாளன்று, 5-8-1952 இல் கொழும்பு நகரமண்டபத்தில் நடைபெற்ற கூட்டத்தில் எதிர்க்கட்சிகள் ஒன்றுபட்டன. மக்களில் முக்கியமான ஒரு பகுதியினரின் வாக்குரிமையைப் பறிப்பது பற்றி இலங்கை-இந்திய காங்கிரஸ் மட்டுமன்றி எல்லாச் சமூகங்களுமே கவனமெடுக்க வேண்டும் என்றும் தொழிலாளர் வர்க்கத்திடையே ஒற்றுமை உணர்வு நிலவவேண்டும் என்றும் கலாநிதி கொல்வின் ஆர். டி. சில்வா குறிப்பிட்டார். தோட்டத் தொழிலாளர். "மிக அநீதியாக மனிதாபிமானம் அற்ற முறையில்" நடத்தப்படுகின்றனர் எனப் பிலிப் குணவர்த்தன கண்டித்தார். இக்கூட்டத்தில் கம்யூனிஸ்ட் கட்சி (பீற்றர் கெனமன்), சமஷ்டிக் கட்சிப் பிரதிநிதிகளும் (எஸ். ஜே. வி. செல்வநாயகம்) தோட்டத் தொழிலாளர்



தலைவர் எஸ். தொண்டமான். ஏ, அஸீஸ் ஆகியோரும் உரையாற்றினர்.

சத்தியாக்கிரகத்திற்கான பிரச்சாரத்தையும் தோட்டத் தொழிலாளருடைய உரிமைகளையும் பௌத்த குருமாரில் ஒரு பகுதியினர் ஆதரித்தனர். கம்பளையைச் சேர்ந்த பிரபுத்த பிக்கு மண்டலய என்ற அமைப்பைச் சேர்ந்த 29 பௌத்த பிக்குகள் சார்பாக கே. இந்தசார தேரோ பிரதம மந்திரிக்கு ஒரு வேண்டுகோள் விடுத்தார்:

> "அறிவு மிக்க அரசியல்வாதி என்ற வகையிலும், பௌத்தர் என்ற முறையிலும் நெருக்கடி மிகுந்த இக்கட்டத்தில் இலங்கையின் தலைவிதியை வழி நடத்துவதில் சட்டரீதியான முறையில் அல்லாது பிரச்சினையை மனிதாபிமான முறையில் தாங்கள் அணுகவேண்டும் என்பது எங்கள் விருப்பமாகும்.... இங்குள்ள இந்தியர்கள் எங்கள் நாட்டின் விவசாய, கைத்தொழிலினது மிக முக்கியமான அங்கம் ஆவர். இதற்கும் மேலாக அவர்கள் இங்கு பிரிட்டிஷாரால் கொண்டுவரப்பட்டு மறைமுகமாகவோ நேரடியாகவோ நாட்டின் அபிவிருத்திக்கு உதவியவர்கள். எமக்குப் பயனற்ற அந்நியர்கள் என இவ்வேளை கருதுவது பெரும் அநீதியாகும். எமது பொருளாதாரத்தை நிலைநிறுத்த அவர்களது சேவையை நாம் பயன்படுத்துகிறோம். அவர்கள் கோரும் அடிப்படை உரிமைகளை நாம் வழங்க வேண்டும்.

(காங்கிரஸ் செய்தி 26 மே. 1952-)

1952ஆம் ஆண்டு புதிய பிரதமரான டட்லி சேனநாயக்கா இராமசாமிக்கும், மீனுட்சிக்கும் வாக்குரிமையைத் தடுத்தோம். இவ் எளிமையான முறையைப் பயன்படுத்தி இலங்கையில் வாழும் இந்தியர் பற்றிய தொல்லையை யூ.என். பீ. இலகுவாகத் தீர்த்துக் கட்டிவிட்டது "என வெளிப்



படிப்பகம்

படையாகக் கூறி பூர்ஷ்வாக்களின் இன வர்க்கச் சார்பைக் காட்டிக் கொண்டார். (காங்கிரஸ் நியூஸ் - 12 மே, 1952). எவ்வாறிருந்தபோதும் தொழிலாளருக்கும் சிறுபான்மை யினருக்கும் சட்டங்கள் நிறைவேற்றப்பட்ட இவ்வருடங் களில் இடதுசாரித் தலைமைத்துவம் இன உணர்வினைவிட வர்க்க உணர்வையே வலியுறுத்தியது. இனரீதியான கொள் கைகளை எதிர்ப்பதற்கு முற்போக்குத் தத்துவங்கள் இன்னும் பலம் வாய்ந்தவையாக இருந்தன. மேலும் 1960களில் தமது கொள்கைகளை மாற்றிக்கொள்ளும் நிலை ஏற்படும் வரையிலும், சிறுபான்மையினரின் உரிமைகளுக்கு மிக உறுதி யாக ஆதரவு அளித்து வந்தமைக்கு தொழிலாளர் வர்க்க மும் அதன் தலைவர்களும் பாராட்டப்படுதல் வேண்டும்.

சிறுபான்மை இனத்தவர்களுக்கு எதிரான வேறுபாடு, வன்முறை ஆகியவற்றின் கருத்தியலை உருவாக்கிய சிங்கள-பௌத்த உணர்வின் சில கூறுகளும் தோட்டத் தொழிலாள ருக்கு எதிரான பிரசாரத்தில் ஒருங்கிணைந்தன. இலங்கை யின் ஆதிக் குடிகளான சிங்களவரிடமே சிறுபான்மையின ருக்கு உரிமை வழங்குவதோ மறுப்பதோ தங்கியுள்ளது என்பது தோட்டத் தொழிலாளரின் வாக்குரிமை, பிரஜா உரிமை ஆகியவற்றைப் பறிக்கும் முயற்சியின் பின்புறத்தில் நடைபெற்றது. சிங்களவரால் சிங்களவர் நீண்ட காலமாக எதிர்த்து வந்த இந்திய ஆக்கிரமிப்பின் பிந்திய மற்றொரு வடிவத்தின் உருவாக தமிழ்த் தோட்டத் தொழி லாளர் கருதப்பட்டனர். இவ் எண்ணக்கரு சிங்கள பொது மக்களிடையே இந்திய ஆக்கிரமிப்பு பற்றிய பயத்தை கருத் தியல் மட்டத்திற்கு வளர்த்துள்ளது. எனினும் தோட்டங் களுக்குத் தேவையான தொழிலாளரை வழங்குவதற்கு இடையூறு ஏற்படவில்லை. இந்திய வம்சாவழியினரான தொழிலாளரின் ஜனநாயக உரிமைகளுக்கு எதிராக சிங்கள மக்களை அணிதிரட்ட இனவாத உணர்வைப் பயன்படுத்த முடியும். எனினும் இறுதியில் தோட்டப் பொருளாதாரத் திற்கு மலிவான உழைப்புச் சக்தி தேவைப்படும்வரை பூர்ஷ்வாக்களின் வர்க்க நலன்கள் தொடர்ந்து நிலவவே செய்யும்.



# 7. சிங்களம் மட்டும் சட்டத்திலிருந்து இனக் கலவரத்தை நோக்கி

1950ஆம் ஆண்டுகள்வரை இலங்கைத் தமிழர்களைத் தவிர்த்த பிற இன, மத மக்கள் வெவ்வேறு வர்க்கங்களைச் சார்ந்த சிங்கள பௌத்தர்களின் தாக்குதலுக்கு இலக்காகி யிருந்தனர். முன்னர் கூறியது போல 19ஆம் நூற்றுண்டின் பிற்பகுதியில் கிறிஸ்தவரின் மேலாதிக்கத்திற்கு சிங்கள பௌத்த பூர்ஷ்வாக்கள் எதிர்ப்புத் தெரிவித்தனர். குட்டி பூர்ஷ்வா வர்க்கத்தைச் சார்ந்த வர்த்தகரும் வியாபாரி களும் 1915ல் முஸ்லிம்களுக்கு எதிரான வன்செயலில் ஈடு பட்டனர். சிங்களப் புத்திஜீவிகள், நகர்ப்புறப் பூர்ஷ்வாக் களின் சில பகுதியினரின் ஆதரவுடன் சிங்களத் தொழிலாள வர்க்கத்தினர் 1930களில் மலையாளிகளுக்கு எதிரான நட வடிக்கைகளில் ஈடுபட்டனர். சுதந்திரத்திற்குப் பின்னர், இந்திய வம்சாவழித் தொழிலாளரின் பிரஜா உரிமை, வாக்குரிமை ஆகியவற்றைப் பறிப்பதில் சிங்கள பூர்ஷ் வாக்கள் முன்னின்றதுடன் அவர்களின் மேலாதிக்க மனோ பாவம் மேலும் உச்சமடைந்தது. இங்கு இனவாதக் கொள்கைகள் வர்க்கச் சார்புடன் திசை திருப்பப்பட்டு தொழிலாளர் இயக்கத்தைப் பலவீனப்படுத்தியது,

ஆயினும் வகுப்புவாத. சமய வன்செயல்களுக்கு ஆளா காது இருந்த சிறுபான்மையினர் இலங்கைத் தமிழராவர், 1958ஆம் ஆண்டு இவர்கள் தொகை 885.000ஆக, அதாவது 10.6 மில்லியன் இலங்கை மக்கள் தொகையில் 11 சதவீத மாக இருந்தனர். இவர்கள். இலங்கையில் சிங்களவர் வாழ்ந்த காலத்தில் இருந்தே அல்லது (சிலவேளை) அதற்கு முன்பிருந்தே இங்கு வசித்திருக்கவேண்டும். மேலும் சில சமயங்களில் சிங்களவர் இவர்களையும் மண்ணின் மைந்தர் களாகவும் கருதினர். உண்மையில் ஆரம்பகால இனம் பற்றிய பிரசாரம் வேற்றுநாட்டு மதங்களுக்கும், வேற்று இனக் குழுக்களுக்கும் எதிரானதாகவே இருந்தது. வர்த்த கத்திலும், தொழில்களிலும் சிங்களவரின் வாய்ப்புக்களையும்



படிப்பகம்

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

உரிமைகளேயும் மறுத்தவராக கருதப்பட்ட அந்நிய உத்தியோகத்தர், வர்த்தகர், தொழிலாளர் முதலியோருக்கு எதிராகவே இத்தாக்குதல் அமைந்தது. எனவே தாக்குதலின் இலக்காக அமைந்தோர் இலங்கைத் தமிழர் அல்லர். ஆனல் 'போரா' சமூகத்தவர், சிந்திக்காரர், கரையோர முஸ்லிம்கள், மலேயாளிகள், கிறிஸ்தவர்கள் ஆகியோர், 'எதிரிகள்? என்று சுட்டிக் கூறப்பட்டவர்கள் ஆவர். நாட்டைக் 'கிறிஸ்தவ மயமாக்கி' அதனல் சிங்கள மொழிக்கும் பௌத்த கலாசாரத்திற்கும் ஊறு விளேவிப்பவர்களாக மிசனரிகளும், பிரித்தானிய நிர்வாகிகளும் குற்றஞ்சாட்டப்பட்டனர். 1950களின் நடுப்பகுதியிலிருந்து இந்நிலைமை மாறியது. அடுத்த 30 வருடங்களுக்கு சிங்கள பௌத்தர்களின் போராட்டங்கள் 'சிங்களவரின் பாரம்பரியப் பகைவர்! எனத் தமிழருக்கு எதிராகத் திரும்பியது. இக் கருத்து குட்டி பூர்ஷ்வாக்களின் கருத்தாக ஆரம்பிக்கப்பட்டபோதும் 1980களில் எல்லா வர்க்கத்தினரையும் இணைத்தது.

## மொழிப் பிரச்சனை

1950களில் முன்னணிப் பிரச்சினையாகிய தமிழர் சிங்களவருடைய மொழி உரிமைப் பிரச்சினைகளே அடிப்படையாகக் கொண்டே எதிர்ப்புகள் வளர்ந்தன. இலங்கையில் 1955ஆம் ஆண்டு சுமார் 60 சதவீதம் (மூன்று வயதுக்கு மேற்பட்டோர) சிங்கள மொழியை மட்டுமே பேசினர். 20 சதவீதத்துக்கு சற்று மேற்பட்டோர் தமிழை மாத்திரம் பேசினர். எனினும் சிங்களவரின் சனத்தொகை 70 சதவீதமாக இருந்தது. தமிழ்பேசும் மக்களின் தொகை (இலங்கைத் தமிழர், இந்தியத் தமிழர், முஸ்லிம்கள்) 30 சதவீதமாக இருந்தது. ஆங்கிலம் மட்டும் பேசும் சிறுபகுதியினரை (0.2%) விட இலங்கையின் முழு மக்களையும் சிங்களம் பேசுவோர், தமிழ் பேசுவோர் என மொழி ரீதியாக இரு குழுக்களாகப் பிரிக்கலாம்.

மக்களில் ஒரு சிறுபகுதியினர் மட்டுமே புரியக்கூடிய ஆங்கில மொழி நிர்வாகம் ஜனநாயகத், தன்மை



வாய்ந்த மொழிக் கொள்கையை வற்புறுத்தும் பிரசாரத்துக்கு வழிசமைத்தது. நகர்ப்புறப் பாடசாலைகளில் கல்வி கற்றவர்களுக்கே ஆங்கில அறிவு இருந்தாலும் இப்பிரச்சனை ஒரு வர்க்கப் பிரச்சினையாகவே இருந்தது, ஆங்கிலக் கல்வி கற்று வாய்ப்புப் பெற்ற ஒரு சிறு பகுதியினரே உயர் நிர்வாகப் பதவிகளை வகித்தனர்; இப்பகுதியினரே சகல அரசியல் இயக்கங்களிலும் ஆதிக்கம் செலுத்தினர். இச் சூழலில் மிகவும் பாதிக்கப்பட்ட பகுதியினர் சிங்களம் தமிழ் மூலம் கல்வி கற்ற அறிவுஜீவிகளே. இவர்கள் சுதந்திரத்திற்குப் பின்னர் கூட கௌரவமான பதவிகளிலிருந்து விலக்கி வைத்தமை கண்டு ஆத்திரமடைந்தனர். மொழிப் பிரச்சினையில் தமது கருத்துக்களைத் தீவிரமாக முன் வைத்தனர்.

காலனித்துவச் சூழலில், சிங்கள தமிழ் மொழி உரிமைகளுக்கான கோரிக்கைகள் இடதுசாரிகளாலும் தேசிய உணர்வுகொண்ட பூர்ஷ்வாக்களாலும் முன் வைக்கப்பட்டன: 1935ஆம் ஆண்டு லங்கா சமசமாசக் கட்சி உருவாகியபோது அதனுடைய அடிப்படை நோக்கங்களில் ஒன்ருக அமைந்தது. (அரசாங்கத் திணைக்களங்களிலும், பொலிஸ் நிலையங்களிலும், கீழ் நீதி மன்றங்களிலும் தமிழ், சிங்கள மொழிகளைப் பயன்படுத்தவேண்டுமென்ற கோரிக்கை) சர்வசன வாக்குரிமை மூலமும் சிங்கள தமிழ்க் கல்வின் விரிவாக்கல் மூலமும் அரசியல் ஓரளவு ஜனநாயகப் படுத்தப்பட்டவேளை (1940களில்) மொழிப் பிரச்சனை நன்கு விவாதிக்கப்பட்டது.

இக்கால கட்டத்தின் முக்கியமான அரசியல் தலைவர்கள் இரு மொழிகளும் அரசகரும மொழியே என்ற கருத்தில் இணக்கமுடையோராய் இருந்தனர்.

1944இல் ஜே. ஆர். ஜயவர்த்தன, சிங்களம் "சில வருட காலத்துள்" அரசகரும மொழியாக்கப்பட வேண்டும் எனப்



படிப்பகம்

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

பிரேரித்தார். இதனுடன் தமிழ்மொழியும் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும் எனப் பிரேரணை திருத்தப்பட்டு ஆதரவாக 27 வாக்குகளும், எதிராக 2 வாக்குகளும் பெற்றது. மேலும் சிங்களமும் தமிழும் பாடசாலைகளில் போதனு மொழியாகவும் பொதுச் சேவைப் பரீட்சைகள், சட்ட நடவடிக்கைகள் என்பவற்றை நடத்துவதற்கும் உரிய அரசகரும மொழியாகவும் ஆக்கவேண்டும் என்றும் பரிந்துரைக்கப்பட்டது. 1944இல் எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டார நாயக்கா பின்வருமாறு கூறினர்: ''இவ்விரு மொழிகளும் அரசகரும மொழிகளாகக் கொள்வதில் எனக்கு எத்தகைய தனிப்பட்ட எதிர்ப்பும் கிடையாது. இதனுல் எத்தகைய தீங்கோ, அபாயமோ, இடர்ப்பாடோ ஏற்படும் என்றும் நான் கருதவில்லை.''

சுதந்திரத்திற்குப் பின்னர் சிங்களத்தையும் தமிழையும் அரசகரும மொழிகளாக்கும் நடைமுறைகள் பற்றித் தீர்மானிக்க அரசகரும மொழி ஆணைக்குழு ஒன்று நியமிக்கப்பட்டது. 1951இல் எஸ். டபிள்யூ. ஆர். டி பண்டார நாயக்கா யூ. என். பியிலிருந்து பிரிந்து சிறிலங்கா சுதந்திரக் கட்சியை நிறுவியபோது மொழிப் பிரச்சினையில் செயலாற்ற யூ. என். பி. தாமதம் செய்கிறது எனக் குற்றஞ்சாட்டினுர். அன்னுரின் முதற் கட்சி அறிக்கை பின்வருமாறு கூறியது:

> ''சிங்களத்தையும் தமிழையும் உடனடியாக அரசகரும மொழியாக்க வேண்டும். அப்பொழுதுதான் இந்நாட்டு மக்கள் தமது சொந்த நாட்டிலேயே அன்னியராக இருக்கும் நிலை ஒழியும். சிங்களம் மூலமும் தமிழ் மூலமும் கல்வி கற்றோர் இன்று வாழ்க்கையின் கடைநிலையில் இருப்பதற்கு முடிவு கட்டலாம்.''
>
> (கேனி மேற்கொள் காட்டியது. பக்கம் 65.)

1952ஆம் ஆண்டுத் தேர்தலில் எத்தகைய பெரிய ஆர்ப்பாட்டத்துக்கும் அடிப்படையாக மொழி அமையவில்லை.



ஆயினும் ஜோன் கொத்தலாவலை பிரதம மந்திரியாக இருந்த காலத்தில் (1953-56) இப்பிரச்சினை முக்கியத்துவம் பெற்றது. இப்பிரச்சினை வேகமடைய சிங்களம், தமிழ் இரண்டும் அரசகரும மொழிகளாக வேண்டும் என்ற முற்போக்குக் கோரிக்கையில் இருந்து விலகி, 'சிங்களம் மட்டும்' என்ற மேலாதிக்க நிலைப்பாடு ஏற்பட்டது. சிங்கள மக்களது ஆதரவைப் பெறுவதற்கான அரசியல் போட்டியில் இக்கோரிக்கை முக்கிய இடத்தைப் பெற்றது. 1953க்கும் 56க்கும் இடைப்பட்ட காலத்தில் 'சிங்களம் மட்டும்' கோரிக்கை நாடு முழுக்கப் பரந்தது. விவாதங்கள் இம்முறை தமிழை விலக்கி சிங்களம் மட்டும் அரசகரும மொழியாக்குவதற்கு ஆதரவாக வேகமடைந்தன.

இப்பிரச்சினையில் அரசியற் கட்சிகள் தீர்க்கமான ஒரு நிலைப்பாட்டை எடுக்க நேரிட்டதால் சில கட்சிகள் தம் கொள்கைகளை மாற்றும் நிலை ஏற்பட்டது. சுதந்திரக் கட்சி 'சிங்களம் மட்டும்' நிலைக்கு 1955ல் மாறிய வேளை யூ. என்- பி. தலைமைப்பீடம் சம அந்தஸ்துக்குச் சார்பாக இருந்தது. 1954இல் ஜோன் கொத்தலாவலை யாழ்ப்பாணத்திற்குச் சென்று தமது நிலைப்பாட்டுக்கு ஆதரவு தேடினுர். எனினும் எதிர்ப்பு அதிகரிக்க யூ. என். பியும் தன் நிலைப்பாட்டை மாற்றியது. 1956 ஜனவரியில் 'சிங்களம் மட்டுமே அரசகரும மொழியாக்கப்படவேண்டும்' என்று தீர்மானித்தது.

## குடியேற்ற ஆட்சிக்குப்பின் ஏற்பட்ட புத்தெழுச்சி

1950களின் முற்பகுதியில் மொழியின் அடிப்படையில் மட்டுமல்லாது, மத எழுச்சியிலிருந்து சிங்கள பௌத்த தேசியத்தின் புத்தெழுச்சி ஏற்பட்டது. பல்வேறு ஐதீக காரணிகளால் மட்டுமின்றி, சிங்கள மக்களிடையே பௌத்த மதம் சிங்கள மொழி ஊடாக பரவியதாலும் பொது மக்களின் உணர்வில் மொழியும் சமயமும் ஒன்ருகக் கலந்திருந்தன.



படிப்பகம்

இக்காலகட்டத்தில், பௌத்த புத்தெழுச்சியை புத்த பெருமானின் 2500ஆவது புத்த ஜயந்திக் கொண்டாட்ட ஏற்பாடுகளும் ஊக்குவித்தது. சுதந்திரம் பெற்ற போதும் பௌத்தம் தனக்குரிய இடத்தை இலங்கையில் பெறவில்லை என்ற அதிருப்தி அடிக்கடி வெளியிடப்பட்டது; அகில இலங்கை பௌத்த காங்கிரசின் 1956ஆம் ஆண்டின் 'பௌத்தத்துக்கு துரோகம்' என்ற பிரபல அறிக்கையிலும் இந்த அதிருப்தி வெளிவந்தது. அந்நியப்பட்ட பார்வை, மதிப்பீடுகளாலும் தாக்குதலாலும் தமது தேசிய வரலாறு, கலாசாரம் ஆகியவற்றின் ஆதிக்கத்திலிருந்து விடுபட்ட அரசியல் தலைவர்களுக்கு எதிரான கண்டனம் இவ்வறிக்கையில் வெளிப்படையாகக் காணப்பட்டது.

இத்தகைய மறுமலர்ச்சிப் போக்கினைப் பிரதிபலித்த இன்னொரு நூல் டி. சி. விஜயவர்த்தன எழுதிய புத்த கோயிலில் கிளர்ச்சி நூலாகும். 700 பக்கங்கள் கொண்ட இந்நூலில் வெளிப்படையாக சிங்கள இன மேலாதிக்கக் கருத்துக்கள் காணப்படுகின்றன. பல்வேறு விடயங்கள் பற்றியும் கூறும் இந்நூலின் முக்கிய செய்தி சிங்களவருடைய 'புனித உரிமைகள்' பற்றியதாகும். 40 வருடங்களுக்கு முன்னர் அனகாரிக தர்மபாலா கூறியவற்றை இந் நூல் மீண்டும் அழுத்திக் கூறியது.

> "இலங்கையின் வரலாறு சிங்கள இனத்தின் வரலாறு ஆகும்... 2500 வருடங்களுக்கு முன்னர் பௌத்த மதத்தைப் பாதுகாக்கும் மகத்தான கடமை இவர்களுக்கு வழங்கப்பட்டது. 1956ம் ஆண்டு மூன்று முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சிகள் நடைபெறும். இலங்கை வரலாற்றினதும் சிங்களவரினதும், பௌத்த மதத்தினதும் 2500 வருட நிறைவு அதுவாகும்."
>
> (விஜயவர்த்தன 1953 ; 25-27)



கட்டுக்கதைகளும், மூடநம்பிக்கைகளும்கூட வரலாற்று உண்மைகளாக முன்வைக்கப்பட்டன. அக்காலத்துச் சிங்கள அறிவுஜீவிகள் இவைபற்றி எத்தகைய வினுக்களையும் எழுப்பவில்லை,

> "புத்தபெருமான் குசிநாராவில் இருந்த அன்றே சூரிய வம்சத்தைச் சேர்ந்த விஜயனும் அவனது சிங்கபுரத்தைச் சார்ந்த பரிவாரங்கள் 700 பேரும், கடவுளர்களுடையதும் புத்தபெருமானதும் சித்தத்தால் இலங்கையில் வந்திறங்கினர். இவர்களே பின்னர் சிங்கள இனத்தவர் என அழைக்கப்பட்டனர்.
>
> எனவே, சிங்கள இனத்தின் தோற்றம் தற்செயலானது அல்ல. உள்நோக்கங்கொண்டு முன்பே நிர்ணயிக்கப்பட்ட ஒரு நிகழ்ச்சியாகும். இவ்வினம் தன்னுடைய தோற்ற காலத்திலிருந்தே உலக இரட்சகரால் 25 நூற்றுண்டுகளுக்கு முன்பு ஏற்றப்பட்ட தீபத்தை 50 நூற்றுண்டுகளுக்கு எடுத்துச் செல்வது என்பது விதிக்கப்பட்டுள்ளது."
>
> (மேலது பக். 32.)

எனினும், கடந்த காலம் பற்றி முற்றிலும் கற்பனையான ஐதீகங்கள் 'விதி' ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டது மட்டுமல்ல வரலாற்றுத்தன்மை அற்ற நோக்கும், புத்த கோயிலில் கிளர்ச்சி என்ற நூலின் குறிப்புகளில் காணப்படுகிறது. விஜயனுடைய வம்சாவழியினராக 'ஆரிய சிங்களவர்கள்' இலங்கைக்கு வருமுன்னரே 'சிங்களவராய்' இருந்தனர் என்று இந்நூல் கூறுகின்றது.

> "தமது தாய்நாட்டை விட்டுப் புறப்பட முன்னரே இவர்களிற் பெரும்பாலோர் தமது இதயத்தாலும் சிந்தனையாலும் சிங்களவராய் இருந்தனர். பல நூற்றுண்டு நாகரிகத்தின் கனிகளாக இலக்கியம்,



படிப்பகம்

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

கலை, கவிதை, இசை ஆகியவற்றை இவர்கள் தம்முடன் கொண்டுவந்தனர். இலங்கையில் புத்தம் புதிய நாகரிகத்தைத் தோற்றுவிக்கவும், வளம் படுத்தவுமே ஆரியப் பண்பாடு இங்கு கொண்டு வரப்பட்டது.'' (மேலது, பக். 31,)

காலனித்துவ கட்டத்திற்குப் பின்னரும் திருத்தப்படக் கூடிய பல தவறான எண்ணங்கள் தொடர்ந்து நிலைத்திருந்தமை சிங்கள மக்களில் பெரும்பான்மையினர் மத்தியில் பகுத்தறிவு சார்ந்த உணர்வு வளரா திருந்தமைக்கான முக்கிய காரணமாகும்.

## வர்க்கமும் மொழியும்

இலங்கையில் குட்டி பூர்ஷ்வாக்களின் சில வர்க்க நலன்களுடன் மொழி தொடர்புள்ளது. பூர்ஷ்வாக்களுக்கு சுய பாஷை, ஒரு பிரதானமான வர்க்கப் பிரச்சினை அல்ல; அதனால் இப்பிரச்சினையில் அவர்கள் தீவிரம் காட்டவில்லை, ஆங்கிலத்தில் புலமை உடையவர்களாகவும் சிங்களத்தில் தங்கள் செயல்களைக் கவனிக்கக் கூடியவராகவும் இருந்தனர். பலதரப்பட்ட அரசியல் தலைவர்களும், சுயபாஷையை ஆதரிக்கும் அதே சமயம், ''சிங்களம் மட்டும்'' சுலோகத்திற்கு உணர்ச்சிபூர்வமாக சார்புடையோராக இருக்கவில்லை, உதாரணமாக, 1944இல் ஜே. ஆர். ஜயவர்த்தன, சிங்களத்தை அரசகரும மொழியாக்கும் பிரேரணையில் தமிழையும் சேர்த்துக்கொள்ளும் திருத்தத்தை ஏற்றுக்கொண்டார். 1954ஆம் ஆண்டுவரை எஸ். டபிள்யூ. ஆர்.டி. பண்டார நாயக்காவும், ஜோன் கொத்தலாவலையும் அரசகரும மொழிகளில் சம அந்தஸ்தை ஆதரித்தனர். அரசியல் அதிகாரத்தைப் பெறுவதற்கான ஒரு வழியாக மொழி மாறியபோதே தலைவர்களும் இப்பிரச்சினையில் தம் முன்னைய நிலைப்பாட்டிலிருந்து மாறினர்.

இலங்கையின் உழைக்கும் மக்களுக்கும் மொழி ஒரு முக்கியமான பிரச்சினை அல்ல. அரச அலுவல்களிலும் ஏனைய



துறையிலும் தம் தாய் மொழிகளாகிய சிங்களத்திலோ தமிழிலோ தொடர்பு கொள்ளும் தேவைக்காகவும், தாய் மொழிக்கு அங்கீகாரம் கிடைப்பின் தம் பிள்ளைகள் சிறந்த கல்வி, தொழில் வசதிகள் பெறுவர் என்பதற்காகவும் சுய பாஷைக் கொள்கையை ஆதரித்தனர். 'சிங்களம் மட்டும்' கோரிக்கை முற்றிலும் சிங்கள தொழிலாள) விவசாயிகளின் ஆர்வமாகவோ, கோரிக்கையாகவோ, இருக்கவில்லை. இவர்களுக்குத் தமிழை ஒதுக்குவதற்கான காரணம் எதுவும் இருக்கவில்லை. உண்மையில் 1953 ஆகஸ்ட் மாதம் தொழிலாளர் வர்க்கம் பொருளாதாரப் பிரச்சினை தொடர்பாக தீவிர ஹர்த்தால் ஒன்றை நடத்தியது. உணவுப் பொருளுக்கிருந்த மானியத்தை வெட்டியமைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கு முகமாக இந்த ஹர்த்தால் நடைபெற்றது. இந்நிகழ்ச்சி தோட்டத் தொழிலாளர் தவிர்ந்த ஏனைய சகல இனத் தொழிலாளரையும் ஒற்றுமைப்படுத்தியது மாத்திரமின்றி கிராமப்புற மக்களிடையேயும் பரவியது.

நகர்ப்புற, கிராமப்புற குட்டி பூர்ஷ்வாக்களுக்கு மொழி உணர்ச்சியைத் தூண்டுவதாகவும், முக்கியத்துவம் வாய்ந்ததாகவும் விளங்கியது இவ்வர்க்கம் நகர்ப்புறத்தையும், கிராமத்தையும் சேர்ந்த சிறு சொத்துடைமையாளர், வர்த்தகர்கள், சிங்களப் புத்திஜீவிகள், பௌத்த பிக்குகள், எழுத்தாளர், நாவலாசிரியர், கவிஞர்கள், பத்திரிகையாளர்கள், பாடசாலை ஆசிரியர், மாணவர்கள், அரசுத் துறைகளில் கடைநிலை உத்தியோகத்தர் முதலியோரைக் கொண்டிருந்தது. ஆங்கிலம் கற்ற கிறிஸ்தவரின் ஆதிக்கம் மிக்க சமூகத்தில் இவர்கள் சமூக, பொருளாதார, அரசியல் ரீதியாக ஒதுக்கப்பட்டு சமூகத்தின் பல்வேறு சலுகைகளிலிருந்து விலக்கப்பட்டும் இருந்தனர்.

1950களில் தொழிலும் கல்வியும் ஒன்றுடன் ஒன்று இணைந்து தமிழருக்கு எதிரான பிரச்சினையாகவும் எழுந்தது. இக்காலம் வரை சிங்கள, தமிழ் பூர்ஷ்வாக்கள் பல்கலைக் கழகங்களில் ஒன்றாகவே கல்வி கற்று, உயர் பதவிகளில் சகபாடிகளாய் இருந்தனர். அரசுப்பணிகளிலும் கீழ்மட்டப்



படிப்பகம்

பகுதிகளிலும் ஒன்ருகவே வேலை செய்தனர். தொழிலிலும் கல்வி நிறுவனங்களிலும் இரு இனத்தவருக்கும் போதுமான அளவு இடம் இருந்தபோது, இதில் எத்தகைய பிரச்சினை களும் எழவில்லை. சிங்களத்திலும் தமிழிலும் உயர்நிலைக் கல்வியின் விரிவாக்கத்துடன் 1950களில் வேலையின்மையின் அதிகரிப்பு அதிக பாதிப்பை ஏற்படுத்தியது, மேலும் இந்நிலை உயர் கல்வி முறைகளையும் பாதித்தது. இத்தகைய காரணிகள் உருவாகி பரபரப்பை ஏற்படுத்தியதும் மொழி பொருளாதாரப் பிரச்சினை போன்று நோக்கப்பட்டது.

## ஆசிரியர்கள்

குட்டி பூர்ஷ்வாக்களில் நான்கு முக்கிய பிரிவினரே மொழிப் பிரச்சினையில் தீவிரம் காட்டினர். முதலாவதாக, 1956இல் 35,000 வரையான சிங்கள ஆசிரியர்கள் பயிற்சி பெற்ற ஆங்கில ஆசிரியர்களது சம்பளத்தில் பாதியையே பெற்றதால் மாத்திரமன்றி சமூக அந்தஸ்தில் ஆங்கில அறிவு உள்ளோர் உயர்நிலையில் இருப்பதையும் கண்டு ஆத்திரமடைந்தனர். அத்துடன் ஆங்கில பாடசாலைகளின் நிலையும், வசதிகளும் சிங்களப் பாடசாலைகளைவிட அதி உயர் நிலையில் இருந்தன. மாணவரது தேர்வுப் பெறுபேறுகளை இவ்வேறுபாடுகள் பாதித்தன. இது ஆங்கிலக் கல்வி முறைக்கு எதிர்ப்பை வளர்த்தது. சிங்கள ஆசிரியர்கள் பலரைப் பேட்டி கண்ட ஹவாட் றிக்கின்ஸ் அவர்கள் கூறிய கருத்துக்களைப் பின்வருமாறு சுருக்கித் தந்துள்ளார்:

> "சிங்களம் அரசகரும மொழியாக்கப்படின் தற்போதைய வசதியீனங்களில் பல மறைந்துவிடும். ஆங்கிலம் அரசகரும மொழியாக இருக்கும் வேளை அதற்கு வழங்கப்பட்ட அந்தஸ்து அனைத்தும் சிங்கள மொழிக்கும் சிங்கள ஆசிரியர்களுக்கும் கிடைக்கும். அவர்கள் சிங்கள மொழியிலும் கலாசாரத்திலும் உயர்ந்தவர்கள்: அவர்களது திறமை அரசின் அங்கீகாரம் பெறின், அவர்களும் அந்தஸ்தில் உயர்வர். சிங்களம் அரச மொழியாஞல் சம்பள வேறுபாடு, கல்வி வசதிகள், தொழில் வாய்ப்புகள் ஆகியன ஆங்கிலம் பேசும் உயர் வகுப்பினருக்கு மாத்திரம் உரித்தாக மாட்டா. ஆங்கிலத்தின் இடத்திற்கு சிங்களம் முன்னேற்றப்படின் பெருந்தொகையான அரச பதவிகள் கிராமத்தில் கற்கும் மாணவர்களுக்கு உடனடியாகக் கிடைக்கும்."



## மாணவரும் இளைஞரும்

சிங்கள மாணவர்களும் சிங்களத்தில் கல்வி கற்ற வேலையற்ற இளைஞர்களும் 'சிங்களம் மட்டும்' கோரிக்கையில் முன்னின்றனர். 1940களில் சுயபாஷைக் கல்வி விரிவு அடைந்தமையால் சிங்களத்திலும் தமிழிலும் கல்வி கற்கும் மாணவர் தொகை அதிகரித்தது. 1950 வரையில் வேலையற்ற இளைஞர்களின் பிரச்சினை அரசியற் பிரச்சினையானது. 'சிங்களம் மட்டும்' கொள்கை அதிகளவு தொழில் வாய்ப்புகளைத் தரும் என சிங்கள மாணவர்கள் நம்பியதால் மொழி பற்றிய கருத்தில் தீவிரமாக இருந்தனர். கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த பீற்றர் கெனமன், சிங்கள இளைஞர்களுக்கு தொழில் வாய்ப்புகள் பற்றிய பொய்மையான நம்பிக்கையை ஏற்படுத்திய 'சிங்களம் மட்டும்' கோரிக்கையின் "பொருளாதார மாயைகளை" பாராளுமன்றத்தில் எடுத்துக் காட்டினுர்.

> "உள்நாட்டுகுகிளெக்ஸ்கிளான்களின் (Klu Klu Klyx Klan) பிரதிநிதி ஒரு வாதத்தை முன் வைத்தார்..... சிங்களவருடைய வேலையில்லாப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காகவே இம்மசோதா என அவர் கூறியுள்ளார்.... எஸ், எஸ். சி. மாணவர்களும் மற்றவர்களும் ஏன் இக்கருத்துக் கொண்டிருந்தனர்.....? இவர்களிற் பலர் இம்மசோதா நிறைவேறிய உடனே தமது பொருளாதாரப் பிரச்சினைகள் தீர்ந்துவிடும் என நம்புகின்றனர்."
>
> (ஹன்சாட், 14 ஜுன், 1956)



படிப்பகம்

## ஆயுர்வேத வைத்தியர்கள்

7000 தொடக்கம் 10,000 வரையான ஆயுர்வேத வைத்தியர்களும் சிங்கள மொழியை வலியுறுத்தினர். அவர்கள் பரம்பரையாக சமூகத்தில் அந்தஸ்துப் பெற்றிருந்தனர். ஆனல். 'மேனுட்டு' மருத்துவத்தை அடிப்படையாகக் கொண்ட அரசின் வைத்திய சேவையால் இவர்கள் முக்கியத்துவம் அங்கீகரிக்கப்படவில்லை. எனவே இப்பிரிவினரும் சிங்களம் அரசகரும மொழியாக உயர்ந்தால், சிங்கள கலாசாரமும் புத்தெழுச்சி பெறுவதோடு ஆயுர்வேத மருத்துவ முறையும் உரிய உயர்ந்த இடத்தைப் பெறும் எனவும் நம்பினர். ஆயுர்வேத வைத்தியர்கள் கிராமப் பகுதிகளில் 'நோய் தீர்ப்பவர்' என்ற வகையில் மக்களிடை மதிப்பும் அதிகாரமும் பெற்றிருந்ததனுல் கோரிக்கையில் இவர்களது ஈடுபாடு மொழிப் பிரச்சினையைக் கிராம மக்களிடையே பரவலாக்கியது.

## புத்தமத குருமார்

மொழிப் பிரச்சினையில் மிகத் தீவிரமாக ஈடுபட்டு குட்டி பூர்ஷ்வாக்களுடன் இணைந்தவர் பௌத்த பிக்குகளாவர். இவர்கள் 1950களின் முற்பகுதியில் சங்கங்கள் அமைத்து, பின்னர் சங்கங்களின் ஒன்றியங்களையும் நிறுவி, புத்த ஜயந்திக்கான ஆரம்ப வேலைகளில் ஈடுபட்டனர். இரு பெரிய ஒன்றியங்கள் இணைந்து 'எக்சத் பிக்கு பெரமுன்' என்ற அமைப்பை உருவாக்கினர். யூ. என். பியைத் தேர்தலில் தோற்கடிப்பதற்கு பிக்குகளை ஒழுங்கமைக்கவே இவ்வமைப்பு ஏற்பட்டது. புத்த ஆணைக்குழு அறிக்கையில் கூறப்பட்ட கருத்துகளும் இவ் ஒன்றியத்தின் முக்கிய அம்சங்களில் அடங்கின. அவையாவன: அரச அங்கீகாரமும் ஆதரவும் பெற்று புத்த மதத்தைப் பேணுதல், கல்விச் சீர்திருத்தங்கள், பௌத்த சொத்துக்களுக்கு சலுகைகள், ஆபாச நூல், திரைப்படங்களையும் குதிரைப் பந்தயம், மதுபானம் அருந்துதல் ஆகியவற்றையும் தடைசெய்தல் போன்றவை.



மேலும் பௌத்த பிக்குகள் ஒன்று திரண்டு 'சிங்களம் மாத்திரம்' கோரிக்கையின் முக்கிய பிரசாரகர்களாக விளங்கினர். பிக்குகள் மொழிப் பிரச்சினைபற்றி மிக்க ஆர்வமும் காட்டினர். இவர்கள் சிங்களம் மூலம் கல்வி கற்றவர்கள். சிங்களத்தில் உள்ள பண்டைய இலக்கியங்களையும் பாளி மொழியையும் படித்தோர். இவர்களே சிங்களக் கலாசாரத்தின் பாதுகாவலராகக் கருதப்பட்டனர். ஆனல் ஆங்கிலம் பேசும் உயர் வகுப்பினர் ஆதிக்கம் செலுத்தும் நிர்வாகம், உயர் கல்வி, அரசியல் ஆகியவற்றில் இவர்களுக்கு அங்கீகாரமோ செல்வாக்கோ இருக்கவில்லை,

ஆங்கிலம் கற்றவர்களுக்கு எதிராக சிங்கள குட்டி பூர்ஷ்வா வர்க்கத்தைச் சேர்ந்த சகல பிரிவினரதும் கண்டனம் கடுமையாக இருந்தது. ஆட்சியிலுள்ள யூ. என். பி. கட்சிக்கெதிராக இவர்களது பிரசாரம் ஒரு முகப்படுத்தப்பட்டது. இக்கட்சித் தலைவர்கள் மேல்நாட்டு மோகம் கொண்டவர்கள், கலாசாரத்தில் கிறிஸ்தவர்கள் எனவும், மது அருந்துதல், சூதாட்டம், மாட்டிறைச்சி உண்ணுதல் போன்ற சீரழிந்த பழக்கங்கள் கொண்டனர் என்றும் குற்றம் சாட்டப்பட்டனர். "உயர் இடங்களில் ஒழுக்கவீனம்" என்ற கருத்துகள் (முந்திய காலத்தில் தர்மபாலாவின் கண்டனத்தின் எச்சங்கள்) உடனடி விளைவை ஏற்படுத்தின. சிங்களத் தன்மையற்றவை, பௌத்த மதத்திற்கு எதிரானவை எனக் கூறுவதில் மகிழ்ச்சியுற்ற நடுத்தரக் குழுவினரது பொருமையையும் கண்டனத்தையும் இவை தூண்டின. சிங்கள மக்கள் மீண்டும் பொய்மை உணர்வுக்குப் பலியாகினர். முதலாளி வர்க்கத்தினர் தொழிலாள வர்க்கத்தைச் சுரண்டுகின்றனர் என்பதை மறைத்து மொழி. மதம், வாழ்க்கைப்பாணி. 'தீய' பழக்கங்கள் என்பவற்றை முன்வைத்து அவர்கள் தாக்கப்பட்டனர். சிறுபான்மையினர் எதிரிகளாக நோக்கப்பட்டனர். சிங்களக் குட்டி பூர்ஷ்வாக்கள் தம் பகுத்தறிவை மறந்து 'சிங்களம் மட்டும்' கொடியுடன் மேலாதிக்க பிற்போக்குப் பாதைகளில் விரைவாக இன வன்செயல் சேற்றுள்

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

நாட்டை மீண்டும் ஒருமுறை தள்ளிவிட வழியமைக்கப் பட்டது.

## 1950ஆம் ஆண்டுகளில் சிங்கள மேலாதிக்க வெறி

1956ஆம் ஆண்டு தேர்தல் நடந்த காலத்தில் ஐக்கிய தேசியக் கட்சி, சிறீலங்கா சுதந்திரக் கட்சி, பிலிப் குணவர்த்தனவின் புரட்சிவாத சமசமாசக் கட்சி விப்லவகாரி சம சமாஜ கட்சி முதலிய கட்சிகள் சிங்களம் மட்டும் சட்டத்திற்கு ஆதரவு அளித்தன. லங்கா சமசமாஜக் கட்சியும் கம்யூனிஸ்ட் கட்சியும் சிங்களம் மொழிக்கும் தமிழ் மொழிக்கும் சம அந்தஸ்து என்ற நிலைப்பாட்டைத் தொடர்ந்து கடைப்பிடித்தன. இக்கொள்கையைப் பிரசாரம் செய்ய ஒழுங்கு செய்யப்பட்ட பல கூட்டங்கள் சிங்கள மேலாதிக்க வாத வெறியர்களால் குழப்பப்பட்டன. 1956ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் நடைபெற்ற தேர்தலில் எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கா தலைமை தாங்கிய மக்கள் ஐக்கிய முன்னணி என்ற மகாஜன எக்சத் பெரமுன (எம் ஈ. பி) நாடாளுமன்றத்தின் 95 இடங்களை வென்று பெரும்பான்மை வெற்றி பெற்றது. இடதுசாரிகள் 17 இடங்களைப் பெற்றனர் யு. என். பி. 8 தொகுதிகளையே கைப்பற்ற முடிந்தது. மொழி பற்றிய பிரச்சினையே தேர்தல் பிரச்சாரத்தின் அடிப்படையாக அமைந்ததனால் புதிய அரசாங்கத்தின் முதல் மசோதா (Bill) சிங்களத்தையே தனியொரு அரசகரும மொழியாக்குவதாக ஆக்கப்பட்டது.

பண்டாரநாயக்கா இம்மசோதாவைச் சமர்ப்பித்துப் பேசும்போது, ஆங்கிலத்தைத் தொடர்ந்து பயன்படுத்தியதால் ஏற்பட்ட அநீதிகளைச் சுட்டிக் காட்டினார். யாழ்ப்பாணத்தில் சேர். ஜோன் கொத்தலாவல தமிழ், சிங்கள மொழிகளுக்கு சம அந்தஸ்து வழங்க வேண்டும் என்று பேசிய பேச்சையும் குறிப்பிட்டு சம அந்தஸ்தில் இருந்து 'சிங்களம் மட்டும்' என்ற நிலைக்கு மாறுவதற்கான அடிப்படையையும் விளக்கினார். கொத்தலாவலையின் இந்த உரை



குறித்து ஏற்பட்ட எதிர்விளைவுகளையும் அவர் குறிப்பிட்டார்:

> "பின்னரே கொந்தளிப்பு வெடித்தது. தென் இலங்கை மக்கள் இவ்விடயம் — அரசகரும மொழியின் சம அந்தஸ்து — தமது முகத்தில் அறைவதாய் உணர்ந்தனர். சிங்கள மொழியின் தொடர்ச்சிக்கும் வளர்ச்சிக்கும் குந்தகம் விளைக்கும் எனவும் கண்டனர். இது சிங்கள மொழியின் அழிவுக்குக் காரணமாகும் எனவும் எண்ணினர்."
>
> (ஹன்சாட், 6 யூன், 1956).

எனினும் முன்பு சம அந்தஸ்துக்காக வாதாடிய பண்டாரநாயக்கா ஆர்வத்தைத் தூண்டும் சில முக்கியக் கருத்துக்களைக் கூறினார். "சிங்களம் மட்டும்" கிளர்ச்சியைப் பற்றி விவரித்தபோது அவர் பின்வருமாறு கூறினார்: "சிங்களவரில் பெரும்பான்மையினர் இதனை மிகத் தீர்க்கமாக வேண்டுகின்றனர் என்பது ஓர் உண்மையாகும். அவர்களது கோரிக்கை நியாயமானதா? என்பது வேறொரு பிரச்சினையாகும்."

இனப்பிரச்சினை தொடர்பான முற்போக்கு நிலைப்பாட்டை முதன்முதலில் கைவிட்டவர் இடதுசாரித் தலைவர் பிலிப் குணவர்த்தன. இதனால் இவரது கட்சியான வி. எல். எஸ். எஸ். பி. இம்மசோதாவுக்கு அளித்த ஆதரவு பலரது கவனத்தையும் கவர்ந்தது. பிரஜாவுரிமை மசோதா 1948-ல் பாராளுமன்றத்துக்கு வந்தபோது அது குறித்து குணவர்த்தன கூறியதை மேற்கோள் காட்டிய எல். எஸ். எஸ். பி. கட்சி அங்கத்தவர் ஒருவர் அன்னாரைப் பழித்துரைத்தார். எல். எஸ். எஸ். பி.யும் வேறு புரட்சிகரக் கட்சிகளும் இவ்வகுப்புவாதத்துக்கு எதிராகப் போராடும். எந்தச் சூழ்நிலையிலும் இனவாதத்தை நாம் ஆதரிக்கோம், இத்தீவில் வசிக்கும் ஒவ்வொரு நபருக்கும் ஒரே விதமான உரிமைகளைப் பெற்றுக்கொடுப்பதற்காக நாம் போராட



படிப்பகம்

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

வேண்டும். (அனில் முனசிங்காவே இவ்வாறு கூறியவர். ஹன்சாட், 11 யூன், 1956). 1956ஆம் ஆண்டளவில் பிலிப் குணவர்த்தனவின் கருத்துகள் மாற்றமடைந்தன. அது மாத்திரமன்றி ''சிங்களம் மட்டும்'' சட்டம், வரலாற்று குறைபாடுகளை சீர்செய்வதற்கும் அத்தியாவசியமானது என்றும் கூறினர்.

> ''எம் தேசியப் போராட்டத்தில் ஒரு முக்கிய கட்டத்தை இம்மசோதா மூலம் நிறைவேற்றுகிறோம். இந்நாட்டை அந்நிய சக்திகள் ஆக்கிரமித்த காலத்தின் முன்னர் சிங்கள மொழி பெற்றிருந்த இடத்தை நாம் மீண்டும் பெறுவது இத்தீவின் அபிவிருத்தி வரலாற்றில் ஒரு முக்கிய கட்டமாகும்.''
>
> (ஹன்சாட், 14 ஜூன், 1958)

## இடதுசாரிகள் எதிர்ப்பு

''சிங்களம் மட்டும் என்ற அலை''யுடன் சேர்ந்து போக விரும்பிய அபிப்பிராயப் போக்குகள் காணப்பட்டபோதும் முக்கிய இடதுசாரிக் கட்சிகள் இரு மொழிகளுக்கும் சமத்துவ அந்தஸ்து கொடுப்பதை ஆதரித்தன. 1955ஆம் ஆண்டில் ''சிங்களம் மட்டும்'' அரசகருமமொழி என்ற குரல்களின் மத்தியில் எல். எஸ். எஸ். பி. கட்சியின் ஊர்வலம் கொழும்பு நகர மண்டபத்தில் சிங்களத் தீவிரவாதிகளால் குழப்பப்பட்ட மூன்று நாட்களின் பின்னரும் கலாநிதி பெரேரா சிங்களமும் தமிழும் சமத்துவ அடிப்படையில் அரசமொழியாக ஆக்கப்படவேண்டுமெனப் பிரேரணை கொண்டுவந்தார்.

> ''இன்று பிரபலமான கருத்தாகிய சிங்களம் மட்டும் என்பதை ஆதரிப்பது எனக்கும் எனது கட்சி அங்கததவர்களுக்கும் எளிதாக இருந்திருக்கும். மற்றவர்களைப்போல நாமும் வீரபுருஷர்களாகப் போற்றப்பட்டிருப்போம்.



> ஆனல் நாம் தொடர்ந்து உறுதியான நிலைப்பாட்டை எடுத்துள்ளோம். இந்நிலைப்பாடு மிகவும் சரியானது எனக் கருதியதால் நாம் அதிலிருந்து மாறவில்லை, இன்று வரை அதனையே கைக்கொண்டுள்ளோம். இது மற்றவர்கள் எதிர்ப்பைப் பெருமளவில் பெற்றபோதும் இந்தக் கருத்து சரியானது என்பதில் நான் மிகவும் உறுதியாக உள்ளேன். இவ்வாறு கூறுவதால் அரசியல் பதவியில் சிலகாலம் நாம் இல்லாமல் போவதற்கு வழி வகுத்தாலும் எல். எஸ். எஸ், பி. அங்கத்தினர்களாகிய நாம் அவற்றை எதிர்கொள்ளத் தயாராய் உள்ளோம்.

1956ஆம் ஆண்டின் 'சிங்களம் மட்டும்' சட்டம் தமிழ் காங்கிரஸ் அங்கத்தவர்கள், பாராளுமன்ற இடதுசாரி அங்கத்தவர் ஆகிய இருபகுதியினராலும் கடுமையாக எதிர்க்கப்பட்டது. இனவாதத்தை நோக்கிய சீரழிவுக்கான காரணத்தைக் கண்டறிய மார்க்ஸிஸ்டுகள் முற்பட்டனர். சில வருடங்களின் பின்னர் அவர்களது சொந்தக் கொள்கைகளில் ஏற்பட்ட மாற்றங்களின் பின்னணியில் அவர்கள் முன்னர் கூறிய கருத்துக்களைக் காண்பின் பல உண்மைகள் வெளி வரும்.

## பிரிவினை பற்றிய முன்னெச்சரிக்கைகள்

பாராளுமன்ற விவாதங்களின்போது, லெஸ்லி குணவர்த்தன, சிறுபான்மையினரின் கருத்துகளுக்குக் காட்டப்பட்ட கவனக் குறைவின் காரணம் இலங்கையின் தேசிய உணர்வின் வளர்ச்சியின்மையே எனக் கூறினர்.

> ''அரசமொழிப் பிரச்சினை மோசமடைந்தமைக்கும் தீர்வு காணமுடியாமைக்குமுரிய காரணம் இலங்கை மக்களிடை தேசிய உணர்வு மிகக் குன்றியிருப்பதாகும். சுதந்திரம் பெறுவதற்கு ஏகாதிபத்தியத்தை எதிர்த்து நாம் பரந்துபட்ட மக்களின் போராட்டங்கள் நடத்தவில்லை. ஆயிரக் கணக்கில்



படிப்பகம்

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

தமிழரும், சிங்களவரும் சிறை சென்றிருப்பின் அப் போராட்டத்தால் சிங்களத் தேசிய இனம், தமிழ்த் தேசிய இனம் என்ற உணர்வு குறைந்து இலங்கைத் தேசிய இனம், என்னும் உணர்வு எழுந்திருக்கும்.''

சிறுபான்மையினரை வலிந்து சிங்கள மொழியை ஏற்கும்படி நிர்ப்பந்திப்பது இனக்கலவரத்துக்கு வழிவகுக்கும் எனவும் லெஸ்லி மிகுந்த தீர்க்கதரிசனத்துடன் குறிப்பிட்டார். மேலும் அவர் பின்வருமாறு கூறினுர்:

> "இலங்கைக்கு மிகப் பெரிய ஆபத்து வர உள்ளது. அம்மக்கள், தமக்கு அநியாயம் நடப்பதாக உணர்ந்தால் அவர்கள் நாட்டிலிருந்து பிரிந்து போகக்கூடத் தீர்மானிக்கலாம்.''

(ஹன்சாட், 8 யூன். 1956).

இத்தகைய கருத்தையே கொல்வின் ஆர். டி. சில்வாவும் கூறினுர், மொழிகளின் சம உரிமையை ஏற்றுக்கொள்ளுதல் "எமது நாட்டின் சுதந்திரத்துக்கும், அதன் கூட்டு ஒற்றுமைக்கும்'' வழியாகும் எனவும், "சிங்களம் மட்டும்'' சட்டம் எதிர்பாராத விளைவுகளைத் தரும் எனவும் அவர் கூறினுர்.

> "இரத்தம் வடியும் துண்டிக்கப்பட்ட இரு சிறு அரசுகள் ஒரு அரசிலிருந்து தோன்றக்கூடும்.... அண்மையில் வெளியேறிய ஏகாதிபத்தியவாதிகள் மீண்டும் எம்மை ஏப்பம்விட ஏதுவாகலாம்.''

(ஹன்சாட், 14 யூன், 1956.)

அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்ற அரசு, மொழிப் பிரச்னையை பயன்படுத்துகிறது என இடதுசாரிப் பேச்சாளர்கள் பலர் கூறினர். அனில் முனசிங்கா 1947, 1952ஆம் ஆண்டுத் தேர்தல்களை ஒப்பிட்டு 52ஆம் ஆண்டுத் தேர்தலின் பிரதான சுலோகமான "சிங்கள மொழியைப் பாதுகாப்பீர்'' என்பது 42ஆம் ஆண்டில் இடம் பெறவேயில்லை



என்று கூறினுர். "அதிகாரத்தைக் கைப்பற்ற குறிப்பிட்ட ஒரு சிலர் இதனைத் தேர்தல் பிரச்சினையாக்கினர் என்பதைத் தவிர வேறு எவ்வாறு இதனை விளங்கிக் கொள்ளலாம்?'' என்று கூறிய அவர் எம். ஈ. பியின் சோசலிசம் பற்றிய கருத்தை விமர்சித்து மேலும் கூறினுர்.

> ''அவர்கள், சோஷலிசம் ஒரு இனத்தவர்க்கும் மக்களில் ஒரு பகுதியினருக்கும் மட்டுமே தேவையானது என நம்புகின்றனர். பில்சுட்ஸ்கி, ஹிட்லர், முசோலினி போன்றவர்களிடமின்றி, இத்தகைய சோசலிசத்தை நான் வேறு எங்கும் அறியேன்."

(ஹன்சாட், 11 யூன், 1956).

1956ஆம் ஆண்டு யூன் மாதம் இம்மசோதாவுக்கு வாக்களிப்பட்டபோது ஆதரவாக 66 வாக்குகளும் (எம். ஈ. பி, யு. என். பி., வி. எல். எஸ், எஸ். பி.) எதிராக 29 வாக்குகளும் (எல். எஸ். எஸ். பி., கம்யூனிஸ்ட் கட்சி, தமிழ்க் காங்கிரஸ்) கிடைத்தன. பூர்ஷ்வாக்களினதும், குட்டி பூர்ஷ்வாக்களினதும் இரு பெரிய கட்சிகளும் தொழிலாளர் வர்க்கக் கட்சியிலிருந்து பிரிந்த இன்னொன்றும், வரலாற்றில் நிகழ்ந்த அநீதிகளுக்கு பரிகாரம் செய்வதாகவும், சிங்களப் பொதுமக்களின் தேவைகளைக் கவனிப்பதாகவும் கூறி சிறுபான்மையினரின் நலன்களுக்கு எதிரான கொள்கையைக் கடைப்பிடித்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. முன்பு நடந்தது போலவே மீண்டும் ஒரு தடவை ஜனநாயகக் கொள்கை ஆனது சிறுபான்மையினரின் உரிமைகளைத் தாக்கும் எதிர் - ஜனநாயகக் கொள்கையாக மாறியது. ஒரு முற்போக்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதெனக் கூறிச் சிங்களத் தலைவர்கள் சிங்கள மக்களை நம்ப வைத்தனர். ஆனுல் இதற்கு மாருக, இன வன்செயலை நோக்கிய விரைவான ஒரு சரிவு - இம்மசோதாவின் மீது விவாதம் நடக்கும் போதே ஏற்பட்டது.



படிப்பகம்

www.padippakam.com


## இன வன்முறைகளும் முரண்பாடுகளும் 1956-1958.


ஐம்பது ஆண்டுகளின் பின்னர் முதலாவது கொடுமை யான இன வன்செயலுக்கு 1956ஆம் ஆண்டில் மொழிப் பிரச்சினை தொடர்பான வற்புறுத்தல் வழிவகுத்தது. சமஷ்டிக் கட்சி (Federal Party) அங்கத்தவர்கள் யூன் 5ஆம் திகதி சத்தியாக்கிரகம் ஒன்றைத் தொடங்கியபோது (சிங்களம் மட்டும் மசோதா அறிமுகப்படுத்தப்பட்டபோது) சிங்களக் கும்பல் ஒன்றினால் தாக்கப்பட்டனர். கொழும்புத் தமிழருக்கு எதிராகவும், கிழக்கு மாகாணத்தில் கல்ஓயாப் பள்ளத்தாக்குக் குடியேற்றத் திட்டங்களில் வசித்த தமிழருக்கு எதிராகவும் வன்முறைகள் நிகழ்ந்தன. இவ்வன் முறையின் போது 150க்கு மேற்பட்ட மக்கள் கொல்லப்பட்டிருக்கலாம் என மதிப்பிடப்பட்டது.

இந்த நாட்டின் அரசியலில் இதன் பிறகு இனப் பிரச்னை தீவிரமுற்று ஆதிக்கம் செலுத்தியது. இக்காலத்தில் சமஷ்டிக் கட்சி, அரசாங்கத்தின் மொழிக் கொள்கைக்கு எதிரான, தீவிர இயக்கங்களை ஒழுங்கு செய்தது. 1957 ஆகஸ்டில் மேலும் சத்தியாக்கிரகம் ஒன்றை நடத்தப் போவதாகவும் அறிவித்தது. சமஷ்டிக் கட்சித் தலைவருடன் ஒரு ஒப்பந்தத்திற்கு வருவதன் மூலம் பிரதம மந்திரி இதனைத் தடுக்க முனைந்தார். பண்டாரநாயக்கா - செல்வநாயகம் ஒப்பந்தத்தின் மூலம் சத்தியாக்கிரகம் கைவிடப் பட்டது. தேசிய சிறுபான்மையினரின் மொழியாகவும், வடக்கு, கிழக்கு மாகாணங்களில் நிர்வாக மொழியாகவும் தமிழ் அங்கீகரிக்கப்பட்டது. கல்வி, குடியேற்றத் திட்டங் களுக்கு ஆட்களைத் தேர்வு செய்தல் ஆகியவற்றுக்கான அதிகாரம் கொண்ட பிரதேச சபைகளுக்கும் இவ் ஒப்பந்தத் தில் இடமளிக்கப்பட்டது.

தீவிரப் போக்கான பிக்குகள் உட்பட சிங்களவரில் ஒரு பகுதியினர் இவ் ஒப்பந்தத்தை சிங்களவரின் நலன்களைப் பாதிக்கும் துரோகச்செயல் எனப் பிரகடனம் செய்ததுடன்,



இம் மசோதாவுக்கு எதிராகக் கண்டியை நோக்கி ஓர் எதிர்ப்பு ஊர்வலத்தை (கண்டி யாத்திரை) நடத்தியது. யாழ்ப்பாணத்தில் வாகனங்களின் இலக்கத் தகட்டில் உள்ள சிங்கள சீறி எழுத்துக்குத் தார் பூசி அழிக்க வேண்டும் (சீறி எதிர்ப்பு இயக்கம்) என்று பிரசாரம் செய்தபோது நிலைமை மேலும் மோசமாகியது, கொழும்பில் காணப்பட்ட தமிழ் எழுத்துடைய அடையாளத்துக்கும் சிங்களக் கும்பல் தார்




பல்கலைக் கழகத்தில் ஆங்கிலக் கல்விக்கு மாணவர்க்கு எதிர்காலத்தில் வாய்ப்பில்லை, தமிழ் மூலம் கற்பது மரத் திற்கு இட்டுச் செல்லும் என்பவற்றைக் காட்டும் கார்ட்டூன் படம். சிங்களம் மட்டும் அவரவர் விரும்பும் தொழில் வாய்ப்புக்கு இட்டுச் செல்லும் என்பதையும் காட்டுகிறது. (ரிகின்ஸ் 1960—263)



படிப்பகம்

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

பூச முற்பட்டது. இவை யாவற்றுக்கும் மேலாக பௌத்த பிக்குகள் பண்டார நாயக்காவின் வீட்டைச் சுற்றி வளைத்து, பண்டாரநாயக்கா செல்வநாயகம் ஒப்பந்தத்தைக் கைவிடும் படி தொடர்ந்து வற்புறுத்தினர். இறுதியில் இவ் வற்புறுத் தல்களுக்கு அவர் இணங்கவேண்டியதாயிற்று.

1958ஆம் ஆண்டு மே 23ஆம் திகதி நாடெங்கிலும் உருவான கலவரங்களின் பின்னணி இதுவாகும். கொழும்பு, மட்டக்களப்பு, பொலநறுவை, பதுளை, குருநாகல், பாணந் துறை, காலி, மாத்தறை ஆகிய இடங்களில் இக்கலவரம் மோசமாக நிகழ்ந்தது. கடைகள் தீயிடப்பட்டன. தமிழர் கொல்லப்பட்டனர். புகையிரதங்கள் தடம் புரட்டப்பட் டன. நான்கு நாட்களாக வன்முறை நிலவிய பின்னர் அவசரகாலச் சட்டம் பிரகடனப்படுத்தப்பட்டது. கலவரங் களின் விளைவாக 12,000 தமிழர் தமது வசிப்பிடங்களை விட்டு அகதிகள் முகாமில் தஞ்சமடைந்தனர். பின்னர் இவர்கள் யாழ்ப்பாணத்துக்கு அனுப்பப்பட்டனர். மே மாதம் 26, 27ஆம் திகதிகளின் அரசாங்க அதிபரின் அறிக் கையிலிருந்து இக்காலத்தில் கொழும்பில் காணப்பட்ட நிலைமை புலனாகும்;

> "வாகனங்கள் தடுத்து நிறுத்தப்பட்டுப் பிரயாணி கள் இரக்கமின்றித் தாக்கப்பட்டனர். புகையிரதம் நிறுத்தப்பட்டும் பிரயாணிகள் தாக்கப்பட்டனர், தீ வைப்புகள் நிகழ்ந்தன. அத்துடன் மனிதர் களும் உயிருடன் தீயில் இடவும்பட்டனர். களவுக்கோ அளவில்லை. குழப்பக்காரரைப் பொலி சார் கட்டுப்படுத்த முடியாதிருந்தனர்.
>
> (கேர்ணியில் மேற்கோள் காட்டப்பட்டது, ப 87)

1957ஆம் ஆண்டின் வன்முறையின் முக்கிய அம்சம் கூலித் தொழிலாளர்களாக காட்டுப்பகுதிகளில் வேலை செய்த நிலமற்ற சிங்களக் குடியேற்றக்காரர் வாழ்ந்த வடமத்திய, கிழக்கு மாகாணங்களில் வன்முறை வெடித் தெழுந்ததாகும்.



'சிங்களம் மட்டும்'' பிரசாரத்தின் வெற்றியும், 1958ஆம் ஆண்டின் கலவர நிகழ்வுகளும் சிங்கள பௌத்த உணர்வின் உருவாக்கத்துக்கு உதவியன என்பன நாம் இனம் காண முடிந்தது சிங்கள மக்களின் முதன்மை, பௌத்தத் தைப் பேணும் அவர்களது தீவிரம் ஆகியன இக்கால கட்டத்தில் செயற்பட்டதுடன் இலங்கைத் தமிழ ருக்கெதிராக வன்முறையில் ஈடுபடவும் சிங்கள மக்களைத் தூண்டும் அளவுடையதாய் இருந்தது. வர்க்க ரீதியாக நோக்கும்போது, சிங்களப் புத்தி ஜீவிகள், மாணவர், எழுதுவினைஞர் ஆசிரியர்கள், பிக்குகள் சிறு வியாபாரிகள், கடைக்காரர் ஆகியோரைக் கொண்ட சிங்களக் குட்டிபூர்ஷ் வாக்களின் பொருளாதார நலன்களே பேணப்பட்டதைக் காணலாம். இப்பிரிவினர்க்கு மொழிப் பிரச்சினை அவர்களது வாழ்க்கையைப் பாதிக்கும் முக்கியம் வாய்ந்ததாகத் தென் பட்டது. 'சிங்களம் மட்டும்' சட்டம், அதிக தொழில் வாய்ப்பு, ஆங்கிலம் பேசும் உயர் வகுப்பினரால் வகிக்கப் பட்ட கௌரவம் மிக்க உத்தியோகங்களுக்கான வாய்ப்பு ஆகியவற்றைத் தரும் என்ற போலியான நம்பிக்கையை அளித்தது. மேலும் நாம் இங்கு குறிப்பிடும் சிங்கள பௌத்த உணர்வானது, நகரத்து ஏழை மக்கள், நிலமற்ற விவசாயிகள், குடியேற்றத் திட்டங்களில் வாழ்ந்தோர், லும்பன் மக்கள் ஆகியோர் உட்படச் சிங்கள மக்களின் ஒரு பகுதியினரை தமிழருக்கு எதிரான பொதுப் போராட் டம் எனத் திசை திருப்பும் வல்லமை கொண்டதாக இருந் தது: தேர்தல் ரீதியில் வெற்றி பெறுவதற்கு சிங்களம் மட்டும் கோரிக்கையை பூர்ஷ்வா அரசியல் தலைவர்கள் ஆதரிக்க வேண்டிய நிர்ப்பந்தத்தையும் உருவாக்கியது.

1958ஆம் ஆண்டு வன்முறை அரசு வட்டத்தில் புனரா லோசனைக்கு இடமளித்தது. கலவரம் முடிந்த பின்னர் தமிழ் மொழியின் நியாயமான பயன்பாட்டை வடக்கு கிழக்கு மாகாணங்களில் அங்கீகரிக்கும் சட்டம் அமுலாக்கப் பட்டது. ஆனால் இச்சட்டம் சமஷ்டிக் கட்சிப் பாராளு மன்றப் பிரதிநிதிகள் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்த



படிப்பகம்

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

காலத்திலே நிகழ்ந்தது. 1950களின் முற்பகுதியில் கட்டவிழ்த்து விடப்பட்ட வகுப்புவாத சக்திகள் 1958ஆம் ஆண்டு வன்முறை, கொள்ளை, தீவைப்புகளை தூண்டியதுடன் மேலும் தொடர்ந்தது. இத்தொடர்வுகளில் ஒன்று 1959 ஆண்டு செப்டம்பரில் பிரதம மந்திரி எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கா ஒரு பிக்குவினால் சுட்டுக்கொல்லப் பட்டமை ஆகும்.



2500 ஆண்டுகளின் முன்னர் தீய சக்திகளுக்கெதிராக ஏற்பட்ட போராட்டம் இன்றும் தொடர்கிறது. புத்த ஜெயந்திக் காலத்தில் உங்கள் நாட்டையும் இனத்தையும் மதத்தையும் தீயசக்திகளிலிருந்து காப்பாற்றுங்கள் - மரபுச் செய்தியும் அண்மைய அரசியலும் இங்கு திறமையாக இணைக்கப்பட்டுள்ளது.

(ரிகின்ஸ் 1960; 357)



# 8 மார்க்ஸிஸத்தில் இருந்து மேலாதிக்க வெறியை நோக்கி

இலங்கையின் இரு மார்க்சிஸ்ட் கட்சிகளால் தொழிலாளர் மத்தியில் பரப்பப்பட்ட மேலாதிக்கவாதக் கருத்தோட்டமானது முக்கிய சம்பவங்களில் ஒன்றாகும். இந்த அம்சத்தைப் பற்றி விரிவாக ஆராய்வதற்குப் பல காரணங்கள் உள்ளன. இலங்கையின் அரசியல் வரலாற்றுக்கு இடதுசாரிக் கட்சிகளின் முக்கிய பங்களிப்பு - அவை 25 வருடங்களுக்கு மேலாக இலங்கையில் சகல பிரஜைகளின் சம அந்தஸ்துப் பற்றி வற்புறுத்தி வந்தமையாகும் எனலாம். 1965 வரை சிறுபான்மை மக்களின் உரிமைகளுக்கு ஆதரவு வழங்குவதில் இடதுசாரிகள் பின்னிற்கவில்லை.

மதம், இனம், சாதி போன்ற பாரம்பரிய அம்சங்களுக்கு அப்பாற்பட்டதாய் பகுத்தறிவு சார்ந்த, மதச்சார்பற்ற உணர்வினை விருத்திசெய்ய இடதுசாரிகள் முனைந்தனர். சமூகத்தின் பிற்போக்குத்தனம் சாதியும் இனவேறுபாடும் என அழுத்திக் கூறினர். மதத்தை நேரடியாக எதிர்க்காது. மதத்தின் செல்வாக்கை குறைக்கவும் முனைந்தனர். தமது அரசியல் தொழிற்சங்க அமைப்புகளில், வர்க்க ஒற்றுமையின் முக்கியத்துவத்தை வலியுறுத்தினர். பல்லின, பல்மதக் குழுக்களாகப் பிரிபட்டிருந்த ஒரு வர்க்கத்துள் பணி செய்யும் வேளை ஏனைய வேறுபாடுகளை மறந்து வர்க்க ஒற்றுமையையே வலியுறுத்தினர்.

இன உணர்வுக்கு எதிராக வர்க்க உணர்வை வலியுறுத்தியமை, சிறுபான்மையினரின் படுகொலையில் ஈடுபடாது தொழிலாளர் வர்க்கத்தின் பெரும்பகுதியினரைத் தடுத்தது. பின்னர் இன உணர்வினை அங்கீகரித்து குறிப்பிட்ட இனக்குழுவின் அங்கத்தவர்கள் என்று கூறத் தொடங்கியபோது, தொழிலாளரிடையே சிங்கள மேலாதிக்க வெறி பரவியது. இதைத் தடுப்பதற்கு வேறு முக்கிய சக்தி எதுவும் இல்லாமற் போய்விட்டது. 60களின் முற்பகுதியில் முக்கிய இடதுசாரிகளின் (கம்யூனிஸ்ட் கட்சி,



படிப்பகம்

எல். எஸ், எஸ் பி.) கொள்கை மாறியது. முதல் தடவையாக, மேலாதிக்கவாத வெறி அற்ற தலைமைத்துவம் ஒன்றை உருவாக்க எப் பெரிய அரசியற் கட்சியும் இல்லை என்ற நிலை ஏற்பட்டது.

1920களில் பூர்ஷ்வாக்கள், குட்டி பூர்ஷ்வாக்கள் ஆகியோரில் ஒரு பகுதியினர் தோட்டத் தொழிலாளருக்கு எதிராகப் பிரசாரம் செய்தபோது ஏ.ஈ. குணசிங்கா தலைமையிலான தொழிற்சங்கம், இந்தியத் தோட்டத் தொழிலாளரின் வாக்குரிமைக்கு ஆதரவு அளிக்கும் அளவுக்கு இனவாதம் அற்ற நிலையை எடுத்தது. 1930களில் குணசிங்கா மேலாதிக்கவாத வெறிச் சார்புடையவராக மாறியபோது "சாதி, நிற, இனத் தடைகளைத் தொழிலாளர் வர்க்கம் அறியாது" என்ற அவரது சொந்தச் சுலோகம் இடதுசாரிகளால் கைக்கொள்ளப்பட்டது. எதிர்ப்புக்கு உள்ளான மலையாளிகள், தோட்டத் தொழிலாளர், வேறு சிறுபான்மையினரின் உரிமைகளை எல். எஸ். எஸ். பியும் கம்யூனிஸ்ட் கட்சியும் சகல பிரச்சினைகள் தொடர்பாகவும் மேலாதிக்கவாத வெறியற்ற நிலைப்பாட்டையே மேற்கொண்டு இதனைத் தமது கொள்கைகளில் முக்கியமாகக் கைக்கொண்டது. ஆனால் 60களின் நடுப்பகுதியில் அலை திசைமாறியது. வெகுசனங்களின் முக்கிய பகுதியினரை இனவாதம் பற்றிப் பிடித்தது மாத்திரமன்றி, தொடர் வருடங்களில் இனக் கலவரங்களில் பங்கு பற்றவும் வழிகாட்டியது. இதன் உச்சமாக அமைந்த 1983ஆம் ஆண்டு இனப் படுகொலையில் 'தொழிற் சங்கங்கள் பங்கு பற்றின எனச் சந்தேகிக்கப்பட்டது

இனப் பிரச்சினையைப் பொறுத்தவரை இடதுசாரிகளின் கொள்கை மாற்றம் நீண்டகால விளைவுகளைத் தருவதாய் இருந்தது. கூட்டு அரசாங்கங்களுடன் இணைதல் குறுகிய காலத் தந்திரோபாயமாகக் கூறியபோதும் பிற்கால ஆய்வுகளில் இப்போக்குத் தவறு எனவும் மேலாதிக்கவாத வெறியைக் கைக்கொள்ளல் சோஷலிசக் கோட்பாடுகளை மீறுவது எனவும் கூறப்பட்டது.



வெகுஜனங்களிடை மேலாதிக்க வெறி பரவியமை, வர்க்க உணர்வு வளர்வதைத் தடுக்கப் பயனுள்ள ஆயுதமானது. இன்று காணப்படும் போக்குகள் யாவும் வர்க்க அடிப்படையின்றி இனத்தையே அடிப்படையாகக் கொண்டுள்ளன. சிங்களவருக்கும் தமிழருக்கும் இடையிலான இனரீதியான முனைப்பும் வடக்கில் தொடரும் 'இனப் போரும்' தெற்கில் வேகமடையும் வர்க்க உணர்வை மேலெழாது தடை செய்கிறது. சிங்களத் தொழிலாளர் இனவேறுபாடுகளைக் கடந்து, சமூக மாற்றம் ஒன்றை ஏற்படுத்த உழைக்கத் தூண்டப்படுவதற்குப் பதிலாக, வர்க்க ஏற்பாடுகளை மறந்து ஏனைய சிங்களவருடன் சேர்ந்து சிங்கள-பௌத்த அதிகாரத்தை ஏற்படுத்தத் தூண்டப்படுகின்றனர்.

மதச் சார்பற்ற வர்க்க உணர்வை வளர்த்தெடுக்கும் போராட்டத்தை இடதுசாரிகள் கைவிட்டமை, இந்நாட்டின் வெகுஜனங்களிடையே இனவாதக் கருத்தியல் வளர்வதற்கு வழிசமைத்தது.

## 1953ஆம் ஆண்டு ஹர்த்தால்

1950ஆம் ஆண்டுகளின் அரசியல் பொருளாதார எழுச்சி இனவாதமற்ற நிலையிலிருந்து வகுப்புவாதச் சந்தர்ப்பவாத நிலைக்கு மாறியமைக்கான முக்கிய காரணி ஆகும். 1950களில் வளர்ச்சியடைந்த சிங்கள - பௌத்த உணர்வுகள் மேலாதிக்க வெறித் தன்மையும் (தமிழருக்கும் கிறிஸ்தவருக்கும் எதிராக) சமத்துவவாதமும் (அரசியல் செல்வந்த உயர் வகுப்பினரையும் நோக்கியது) கொண்டனவாய் இருந்தன. இவை 1950ஆம் ஆண்டுகளில் நிலவிய பொருளாதார நிலைமைகளுடன் தொடர்பு அற்றன என்று கூறுவதற்கு இல்லை 1950களின் வேறுவேறான இரு 'வெகுசன' நிகழ்வுகளில் வர்க்க உணர்வு, இனஉணர்வு இரண்டும் தெளிவாக வெளித் தெரிந்தன. 1953ஆம் ஆண்டின் ஹர்த்தால், 1958ஆம் ஆண்டின் இனக் கலவரம் ஆகிய இரண்டும் நெருக்கடி மிகுந்த இக்கால கட்டத்தின் வெளிப்பாடுகள் ஆகும்.



படிப்பகம்

www.padippakam.com 

1950ஆம் ஆண்டுகளின் முற்பகுதியில் நிகழ்ந்த கொரிய யுத்த காலத்து பொருளாதார எழுச்சியின் வீழ்ச்சிக்குப் பின்னர் முப்பது ஆண்டுகளாக வேலையில்லாத் திண்டாட்டம், வணிக மாற்றுவீத வீழ்ச்சி ஆகியவற்றுடன் தொடர்பு பட்ட மோசமான பொருளாதாரப் பிரச்சினை இலங்கையில் நிலவியது. இறப்பர் விலை, அந்நியச் செலாவணி வீழ்ச்சியும் ஏற்பட்டபோது 1952ஆம் ஆண்டே இந்நெருக்கடி நன்கு உணரப்பட்டது. இத்துடன் 1953ஆம் ஆண்டு ஏற்பட்ட அரிசிப் பற்றுக்குறையும் விலை உயர்வும் ஏற்பட்டன. 1950 களின் பிற்பகுதியில் இறக்குமதிப் பொருட்களின் விலை வீழ்ச்சியடைந்தது. உள்நாட்டு உற்பத்திப் பொருட்கள் 1956-57ஆம் ஆண்டு வரட்சி, வெள்ளம் ஆகியவற்றால் பாதிக்கப்பட்டன. இதனால் வேலையில்லாத் திண்டாட்டம் மேலும் மோசமாகியது.

1953ஆம் ஆண்டின் ஹர்த்தால், இலங்கைத் தொழிலாளரின் மிக முக்கியமான போராட்டங்களில் ஒன்று ஆகும். உலகப்போருக்குப் பிந்திய ஆண்டுகளில் தொழிலாள வர்க்கத்தின் தீவிர செயற்பாடுகளில் பெருமளவு வளர்ச்சி ஏற்பட்டது. 1945, 46. 47ஆம் ஆண்டுகளில் இடதுசாரிக் கட்சிகளால் வழிநடத்தப்பட்ட பொது வேலை நிறுத்தங்கள் இவற்றுக்கு உதாரணமாகும். சகல இனங்களையும் சேர்ந்த தொழிலாளர்கள் இப்போராட்டங்களில் ஒன்றிணைந்தனர். 1947ஆம் ஆண்டு வேலை நிறுத்தம் செய்தோரைப் பொலிசார் சுட்டபோது மரணமான தமிழ் எழுதுவினைஞர் கந்தசாமி பின்வந்த ஆண்டுகளில் வருடாவருடம் தொழிற் சங்கங்களால் நினைவு கூறப்பட்டார்.

1947ஆம் ஆண்டு வேலைநிறுத்தம், அரசாங்கத்தால் உடைக்கப்பட்டபோது தொழிலாளரின் தீவிரம் தற்காலிகமாகவே தணிந்தது. ஆனால் 1953ஆம் ஆண்டு அரிசி மானியம் வெட்டப்பட்டு, அரிசிவிலை உயர்ந்தபோது இத்தீவிர உணர்வு மீண்டும் வேகமடைந்தது, 1953ஆம் ஆண்டு ஜூலை மாதம் 26ஆம் திகதி கொழும்பு காலிமுகத் திடலில் வெகுசன எதிர்ப்பு ஊர்வலம் ஒன்று நடத்தப்பட்டது, அவ்வேளை பொலிசார் கண்ணீர்ப்புகைப் பிரயோகம் செய்தனர். ஆகஸ்ட் 12ஆம் திகதி நடந்த 24 மணிநேர ஹர்த்தால் எதிர்பாராத விளைவைத் தந்தது. வேலைத் தளங்களை விட்டு சகல இனத்தையும் சேர்ந்த நகர்ப்புற உழைப்பாளர் இந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் கலந்தது மாத்திரமன்றி, கிராமப்புற மக்களும் (குறிப்பாக தெற்கில்) தீவிரமாகப் போராட்டத்தில் ஈடுபட்டனர். இவர்கள் சகல போக்குவரத்துக்களையும் நிறுத்தி, தெருக்களில் தடைபோட்டு, ரெயில்களை நிறுத்தி சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டும் படையினரை எதிர்த்தனர். இதனால் பரந்த அளவில் ஏராளமானோர் கைது செய்யப்பட்டனர். 11 பேர் மரணமாகினர். யங் சோசலிஸ்ட் பத்திரிகை இது பற்றிப் பின்வருமாறு எழுதியது:

> "ஹர்த்தால் 24 மணி நேரம் எனக் குறிப்பிட்ட போதும் அது மக்களுடைய உணர்விலும் இந்நாட்டின் அரசியல் உறுதியிலும் பெரிய தாக்கத்தை உண்டாக்கியது.... அது பிரதமரின் ராஜினாமாவுக்கு வழி வகுத்தது.... மக்களது அரசியல் வாழ்வில் பெரிய மாற்றத்தை ஏற்படுத்தி, அரசுகளின் தலைவிதியைத் தமது ஒருமித்த பலம் தீர்மானிக்கும் என்ற உறுதியையும் தந்தது.... மூன்று வருடங்களின் பின் யு. என். பி. ஆட்சி வீழ்ச்சியடைந்த வேளை ஹர்த்தாலுடைய விளைவுகள் தெற்றெனத் தெரிந்தன,"
>
> (யங் சோசலிஸ்ட், இல. 2, 1961).

எம். ஈ. பி.யின் 1956ஆம் ஆண்டு வெற்றி வெகுசன எழுச்சியுடன் இணைந்திருந்தது. இக்கருத்து இடதுசாரிகளின் கருத்தாகும். ஹர்த்தாலுடைய படிப்பினைகள் பற்றி 1961ஆம் ஆண்டு எல். எஸ். எஸ். பியின் ஆய்வு பின்வருவதாகும்:

> "வெகுஜனங்களின் நலனை முதலாளித்துவம் பாதுகாக்காது; துணிகரமான சோசலிசக் கொள்கையே



படிப்பகம்

வெகுசனங்களின் பொருளாதார நலனைப் பாது காத்து, நாட்டையும் பொருளாதாரத் தேக்க நிலையில் இருந்து மீட்டெடுக்கும். மக்கள் தொடர்ந்து பொறுமையை இழந்து விடுவதில்லை. வரலாறு மீண்டும் நிகழலாம்,'' (மேலது).

நல்ல எதிர்காலத்தைக் காண விரும்பிய இடதுசாரிகள் வர்க்க உணர்வு குன்றி இன உணர்வே மேலெழுந்து வருவதை முன்னுணரத் தவறிவிட்டனர்: 1958இல் நாடு இன வன்முறையில் அமிழ்ந்துகிடந்தது. இதில் பொதுமக்களில் ஒரு பகுதியினரும் பங்கு கொண்டனர். 1977, 1981, 1983இல் வரலாறு உண்மையில் மீள நிகழ்ந்தது. ஆனால் அந்த நிகழ்வுகள் வர்க்கம் சார்ந்தன அல்ல. இனப் படுகொலையே தொடர்ந்தது.

1964 - 65ஆம் ஆண்டுகளிலும் கூட்டு அரசாங்கங்களிற் சேர்ந்து இடதுசாரிகள் இழைத்த ''துரோகம்'' பற்றி அதிகம் பேசப்பட்டுள்ளது. ஆனால் சிறிது காலம் மட்டும் கூட்டரசாங்கங்களில் பங்குபற்றியமை உண்மையில் அந்தளவிற்கு கூறுவதற்கில்லை. ஆயினும் இனவாதத்துக்கு ஆளாகி வர்க்க அணிக்கு எதிராக உழைக்கும் வர்க்கத்தவரை இன ரீதியாகப் பிளவுபடுத்தியமையே உண்மையில் துரோகமாகும். இவ்வாறு செய்தமையால் தாம் 25 வருடங்களாக உறுதியாகவும் தீவிரமாகவும் கடைப்பிடித்த இனவாதம் அற்ற அடிப்படை விதிகளுக்கு முரணாக இடதுசாரித் தலைவர்கள் செயல்பட்டனர். எல். எஸ். எஸ். பி தலைவர்களில் மிக ஆற்றல் வாய்ந்தவரான கொல்வின் ஆர். டி. சில்வா 1958 ஆம் ஆண்டு இனவாதத்தை 'கற்காலத்திற்குத் திரும்புதல்' என்று கூறினார்:

> ''1956ஆம் ஆண்டு தமிழருக்கு எவ்வித சலுகை வழங்குவதையும் ஏற்றுக் கொள்ளத் தயாரில்லாத ஏராளமானவர்கள் இன்று எவ்வித வழியுமற்று நல்லது, நாம் முன்னேக்கிச் செல்ல வேண்டுமானல் தமிழும் உத்தியோக பூர்வ மொழியாக இருக்கட்டும். இதுவே ஒரே வழியாக இருப்பின் நாம் அதைச் செய்வோம்' என்று கூறுகின்றனர்.' நீங்கள் இவ்வாறு செய்தால் சிங்கள வகுப்புவாத எழுச்சி ஒன்று உண்டாகும்...' என்று என் மதிப்பிற்குரிய சில நண்பர்கள் கூறுகின்றனர். ஆனுல், வகுப்புவாத முரண்பாடுகளால் அலுப்பும் களைப்பும் அடைந்த இந்நாட்டின் பெருந்தொகையான மக்கள் மீது நம்பிக்கை வைத்து, நாம் அவர்களைச் சார்ந்து நின்று எமது கொள்கைகளை உறுதியாகக் கடைப்பிடிப்பின் இதனை நாம் அடைதல் முடியும் என்று நான் கூறுகிறேன்.''
>
> கொல்வின் ஆர். டி. சில்வா

சிட்னி வணசிங்கா (1966) மேற்கோள் காட்டியது.



மக்களுக்குத் தலைமை தாங்குவதற்குப் பதிலாக இடதுசாரிகள் தேர்தல் வெற்றி, அதிகாரத்தில் பங்கு பெறுதல் ஆகிய தந்திரோபாயங்களில் அகப்பட்டுக் கொண்டனர். தொழிலாளர் வர்க்க நோக்கில் பார்க்கும்போது, 1963ஆம் ஆண்டு இரு வரலாற்று நிகழ்வுகள் இடம் பெற்றன. ஒன்று: நகர்ப்புற பெருந் தோட்டத் தொழிலாளரில் பெரும் பகுதியினரைப் பிரதிநிதித்துவபப்டுத்தும் தொழிற்சங்கங்களின் கூட்டுக் குழுக்களால் தொழிலாளர் முன் வைக்கப்பட்ட 21 கோரிக்கைகள். இரண்டாவது, முதல் தடவையாக 1963 ஆகஸ்டில் உருவாக்கப்பட்ட இடதுசாரிகளின் (எல். எஸ். எஸ். பி., கம்யூனிஸ்ட் கட்சி, வி. எல்.எஸ்.எஸ்.பி) ஐக்கிய முன்னணி. இது நாட்டின் முற்போக்குச் சக்திகளின் உற்சாகத்தை எழுச்சியுறச் செய்தது. ஆனால், 1964 ஜூன் மாதத்தில் (ஸ்ரீமா) பண்டார நாயக்கா அரசாங்கத்தில் மூன்று அமைச்சர் பதவிகளைச் சமசமாஜிகள் ஏற்றுக் கொண்டபோது, இவ்விரு தளங்களும் சரிந்தன. 1965ஆம் ஆண்டு கூட்டரசாங்கம் தோற்கடிக்கப்பட்டு, வட கிழக்கு மாகாணங்களில் 14 தொகுதிகளைப் பெற்ற சமஷ்டிக் கட்சி

யின் (இலங்கைத் தமிழரசுக் கட்சி இவ்வாறு அழைக்கப் பட்டது.—பதிப்பாளர்) ஆதரவுடன் யு.என்.பி, அரசாங் கத்தை நிறுவியது. யு. என். பி.யுடன் சமஸ்டிக் கட்சி அரசியல்வாதிகள் இணைந்தமையும் இலங்கைத் தொழி லாளர் காங்கிரசைச் சேர்ந்த இரு நியமன அங்கத்தவர்கள் அரசுக்கு அளித்த ஆதரவும் நாட்டில் வகுப்புவாத அலை யொன்றைக் கட்டவிழ்த்துவிட்டது. யு. என் பி.க்கு அரசியல் எதிர்ப்பை ஏற்படுத்துவதற்கு இந்நிலைமை எஸ். எல் எவ். பியால் மாத்திரமன்றி எல். எஸ். எஸ். பி., கம்யூனிஸ்ட் கட்சி ஆகியவற்றாலும் தூண்டிவிடப்பட்டது. இப்போது இடதுசாரிகளின் நோக்கு வருமாறு அமைந்தது:

''ஒரு பக்கத்தில் எல். எஸ். எஸ். பி, கம்யூனிஸ்ட் கட்சி ஆகியவற்றின் ஐக்கிய முன்னணி இருந்தது. சிங்கள பௌத்தர்கள் மட்டுமே அதனை ஆதரித் தனர். யு. என். பியை யார் ஆதரித்தனர்? உள் நாட்டு, வெளிநாட்டு முதலாளிகள், தொண்ட மானால் வழிநடத்தப்பெற்ற இந்தியர், பொன்னம் பலத்தால் வழிநடத்தப்பட்ட தமிழர், கத்தோலிக் கத் திருச்சபை, கூட்டரசாங்கத் திருச்சபை, கூட்ட ரசாங்கத்தின் வணிகக் கொள்கையை எதிர்த்த முஸ்லிம்கள், எமது தேசியக் கலாசாரத்தை ஆதரிக்காத மிலேச்சர்கள், முதலாளித்துவப் பத்தி ரிகைகள், — யாவரும் யு.என். பி.யை ஆதரித்தனர், பௌத்த தத்துவம் பற்றிய தெளிவான அறிவற்ற சிங்கள பௌத்தரின் ஆதரவும் இருந்ததால் யு.என்.பி. அதிக தொகுதிகளைக் கைப்பற்ற முடிந் தது. இதனால் கூட்டரசு இந்நாட்டு மக்களின் சிறப் பான வாக்குகளைப் பெற்றது. யு. என். பி. சிறு பான்மையினரின் வாக்குகளையும், பெரும்பான்மை யினரில் சிறுபகுதியினரின் வாக்குகளையும் பெற்றது. (ஆசிரியர் தலையங்கம் — ஜனசதாய, 28 மார்ச், 1965, வணசிங்கா மேற்கோள் காட்டியது )



இவ்வாறாக, இடதுசாரிகளின் சிங்கள மேலாதிக்க வெறி சகல சிறுபான்மையினரையும் தாக்கியது. சுருங்கக் கூறின் பௌத்தரல்லாத, சிங்களரல்லாதவருக்கு எதிராக அமைந் தது. குறிப்பாக இக்காலத்திலே இடதுசாரிகள், கலாசார வேர்களற்ற கலப்புச் சாதி எனப் பொருள்படும் துப்பாஹி என்ற மதிப்புக் குறைவான சொல் ஒன்றையும் கையாளத் தொடங்கினர் இது அனாகரிக தர்மபாலா கையாண்ட ''தாழ்த்தப்பட்ட இனத்து நாத்திகர்'' என்பதை ஒத்தது. ஜனமதய பத்திரிகை (ஏப்ரல் 9, 1965) சிங்களப் புது வரு டத்தில்' நாடு துயருறுகிறது' என்ற கட்டுரையில் பின்வரு மாறு எழுதியது:-

....யு. என். பி: கத்தோலிக்க திருச்சபை, சிங்கில்டன் சல்மன், தொண்டமான், சமஷ்டிவாதிகள் ஆகியோ ரின் கூட்டால் எமது இனத்துக்குத் துரோகம் இழைக்கப்பட்டிருக்கும் இத்தருணத்தில் நாம் எவ் வாறு சிங்களப் புதுவருடத்தைக் கொண்டாட முடியும்?

இச்சிங்களப் புதுவருடத்தின்போது சிங்கள இனம் கண்ணீர் வடிக்கும். இனப்பற்று, தாய்நாட்டுப் பற்று மொழிப்பற்றுக் கொண்டோர் அனைவரும் துக்கம் கொண்டாடுவர்.''

(வணசிங்கா மேலது பக். 122)

இவ்வாறு 1960களில் தொழிலாளர் வர்க்கம் உட்பட பல்வேறு பிரிவுச் சிங்கள மக்கள் மத்தியிலும் இனப்பகை பரவியது. முக்கியமாக இது இலங்கைத் தமிழர், கிறிஸ் தவர், இந்தியத் தமிழர் ஆகியோருக்கு எதிராக அமைந்தது தொழிலாளரின் முக்கிய பகுதியாக இந்தியத் தமிழரையும் சிங்களத் தொழிலாளர் வர்க்கம் கிறிஸ்தவர்களையும் உள்ள டக்கியிருந்தது எனினும், இச்சந்தர்ப்பங்களில் எல்லாம் தொழிலாளர் வர்க்கத்தின் மத்தியில் இனப்பகை வளர்ந்த மைக்கு இடதுசாரித் தலைமை பொறுப்பாகும்.



படிப்பகம்

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

## கிறிஸ்தவர்களுக்கு எதிராக

1960களில் மீண்டும் ஒரு தடவை கிறிஸ்தவர்கள் தாக்குதலுக்கு உள்ளாகினர். 1950களில் கிறிஸ்தவ உயர் வகுப்பினரது சலுகைகளுக்கு எதிராக ஒரு பௌத்த 'மறுமலர்ச்சி' இருந்தது: அனகாரிக தர்மபாலா கருதியதைப் போன்று கிறிஸ்தவமதம் ஒழுக்க மின்மை, மதுப்பழக்கம், அந்நியரின் சூழ்ச்சி ஆகியவற்றுடன் தொடர்புடையதாய் இருந்தது. அத்துடன் முன்பு தடை செய்யப்பட்ட பிரசுரமான கன்னி மரியாகே ஹற்றி' (கன்னி மேரி பற்றிய உண்மை) மீண்டும் 1950களில் வெளியிடப்பட்டது,

> 1956ஆம் ஆண்டுத் தேர்தற் பிரசாரத்தில் ம.ஐ.மு. (M.E.P.) இத்தகைய முற்சாய்வுகளை மிகு திறமையுடன் பயன்படுத்தியது. இக்காலத்தில் வெளிவந்த உணர்ச்சியைத் தூண்டும் சுவரொட்டி ஒன்றில் மாரனின் (சேர்ஜோன் கொத்தலாவல) கும்பல் புத்தரைப் போருக்கு அழைக்கும் காட்சி சித்தரிக்கப்பட்டது, (கொத்தலாவல பதவியிழந்த யு. என். பி. அரசின் பிரதமர் - பதிப்பாளர்.) பெருவயிறு படைத்த நடனக்காரர்,குடிகாரர், பசுவதை புரிவோர், 'போல்ரூம்' நடனக்காரர்) நவநாகரிகச் சமூகத்தினர், இசைக் குழாத்தினரின் வண்டியிலிருந்து டொலர் நாணயங்களை வழங்கும் அமெரிக்கர் (மிகத் துலக்கமாகத் தெரியும்படி) ஆகியோரின் காட்சிகள் இச்சுவரொட்டியில் இடம் பெற்றிருந்தன. இவற்றின் பின்னணியில் கிறிஸ்தவ தேவாலயம் ஒன்று.

இடதுசாரிகளும் கிறிஸ்தவருக்கு எதிரான இப்பிரச்சாரத்தில் இழுக்கப்பட்டனர். கிறிஸ்தவர் 'எதிரிகள்' என்ற கருத்து 1960இல் பாடசாலைகளை அரசு கையேற்ற போது கிறிஸ்தவரில் ஒரு பிரிவினரிடமிருந்து கிளம்பிய எதிர்ப்பால் மேலும் உறுதியாகியது. தீவிரமாற்றங்களை எதிர்த்த பழமைபேணும் கிறிஸ்தவரில் ஒருபகுதியினரை



எதிர்ப்பதற்குப் பதிலாக இடதுசாரிகள் சகல கிறிஸ்தவர்களையும் நிராகரித்ததுடன் அவர்கள் தேசியத்துக்கு எதிரானவர்கள் என்றும் கூறினர்.

60களின் நடுப்பகுதியில் இடதுசாரிப் பத்திரிகைகள், கிறிஸ்தவருக்கு எதிரான தாக்குதல்களில் அடிக்கடி ஈடுபட்டன. எல். எஸ். எஸ். பி, பத்திரிகையான ஜனசத்திய 1965 ஆம் ஆண்டில் ''இராணுவத் தடையைத் தாண்டுவதற்குச் சட்ட பூர்வமற்ற குடியேற்றக்காரருக்கு கத்தோலிக்கர் உதவி'' (ஜூலை 18)'' ''பௌத்த அரசாங்க அதிபர் மாறுதல்: ஒரு கத்தோலிக்கர் நியமனம்'' (ஒக்டோபர் 20) போன்ற தலைப்புச் செய்திகளை வெளியிட்டது. கிறிஸ்தவர்கள் நியாயமற்ற முறையில் உயர் உத்தியோகங்களைப் பெறுகிறார்கள் என்ற கதையையும் இப்பத்திரிகை பரப்பியது. ''கத்தோலிக்கச் செல்வாக்கு பரவத் தொடங்கிவிட்டது.... இரு கத்தோலிக்கரையும் ஒரு புரொட்டஸ்தாந்து கிறிஸ்தவரையும் பாராளுமன்றத்தில் மூன்று அதி உயர்ந்த பதவிகளுக்கு நியமிப்பதுடன் சேர்ந்து இப்போது கொழும்பு நகரின் மேயர், உதவி மேயர் பதவிகளுக்கு கிறிஸ்தவரை நியமித்துள்ளனர்,'' (ஏப்ரல் 11) கம்யூனிஸ்ட் கட்சியும் இதற்குக் குறைந்ததாய் இல்லை. அதன் பத்திரிகையான அத்த (9, ஏப்ரல் 1965) ''பௌத்தருக்கு இடமில்லை'' என்ற தலைப்பில் தலையங்கமே எழுதியது. சபாநாயகர், பாராளுமன்றக் குழுவின் தலைவர் ஆகியோர் கிறிஸ்தவர்கள் என அது எடுத்துக் காட்டியது. (வணசிங்க, 1965, பக். 120 - 123)

## பெருந் தோட்டத் தொழிலாளருக்கு எதிராக

300,000 இந்திய வம்சாவழியினருக்குப் பிரஜா உரிமை வழங்கவும் 650,000 பேரை சுய விருப்பத்தின் பேரில் மீண்டும் இந்தியாவுக்கு அனுப்புதற்கும் இடமளிக்கும் சிறிமா - சாஸ்திரி ஒப்பந்தத்திற்கும் இடதுசாரிகள் ஆதரவு அளித்தனர். இது தோட்டத் தொழிலாளர் பற்றி முன்பு இடதுசாரிகள் கொண்டிருந்த சமரசமற்ற நிலைப்பாட்டிலிருந்து, விலகுவதைக் குறிக்கிறது. 1965ஆம் ஆண்டு



படிப்பகம்

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

யு என். பி. அரசாங்கம் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் ஆதரவைப் பெற்று அதன் தலைவர்களான தொண்டமானை யும் அண்ணுமலையையும் பாராளுமன்றத்தில் நியமன அங் கத்தவர்கள் ஆக்கியபோது தோட்டத் தொழிலாளர் அவர்களது தலைவர் ஆகியோர் மீதான இடதுசாரிகளின் தாக்குதல் மேலாதிக்கவெறி வாதத்திருப்பத்தைப் பெற்றது.

கம்யூனிஸ்ட் கட்சியின் அபிப்பிராயங்களைப் பிரதிபலிக் கும் அத்தப் பத்திரிகை இந்தப் பிரசாரத்தின் முன்னணியில் நின்றது. அரசாங்கம் சிறுபான்மையினருக்குச் சலுகைகள் அளிப்பதாகவும் சிறிமா - சாஸ்திரி ஒப்பந்தத்தின் கீழ் தோட்டத் தொழிலாளர் திரும்பிப்போதல் தடைப்படு கிறது எனவும் குற்றம் சாட்டியது. அத்த பத்திரிகையின் சில தலைப்புச் செய்திகள் அவர்களது நிலைப்பாடு பற்றி சந்தேகத்துக்கு இடமின்றித் தெரிவிக்கின்றன. திருமதி பண்டாரநாயகாவின் தேர்தல் தோல்வி, இந்தியத் தொழி லாளரைத் திருப்பி அனுப்புதல் ஆகியவற்றைப் பற்றி எழுதும்போது, "மீனாட்சியை வெளியேற்றமுன் சிறிமாவோ துரத்தப்பட்டார்'' என்று எழுதியது (30 மார்ச் 1965) "இலங்கையை வெற்றிகொண்ட சோழ அரசனைப் போல் தொண்டமான் இந்தியாவுக்குச் செல்கிறார்'' எனவும் தொண்டமானைப் பற்றி அதே இதழில் எழுதியது.

எல். எஸ். எஸ். பி. பத்திரிகையான 'ஜனதின்' தோட் டத் தொழிலாளருக்கு எதிரான உணர்ச்சியைத் தூண்ட முனைந்தது. சிறிமா சாஸ்திரி ஒப்பந்தம் தோட்டத் தொழி லாளரைக் கட்டாயமாகத் திருப்பி அனுப்பும் அம்சத்தைக் கொண்டிருந்தது எனக் கூறி, சுயவிருப்பத்தின் பேரில் திரும் பிப் போதலுக்கு எதிரான நிலைப்பாட்டை அது எடுத்தது:

> மீண்டுமொரு இரகசிய ஒப்பந்தம்:
> தொண்டமானுக்குச் சலுகைகள்:
> திரு. டட்லி சேனநாயக்கா திரு. தொண்டமானு டனும் ஓர் ஒப்பந்தத்தைச் செய்துள்ளார் என அரசியல் அவதானிகள் நம்புகின்றனர்; தாமாக விரும்புகிறவர்களே (தோட்டத் தொழிலாளர்) திருப்பி அனுப்பப்படுவர் என்பது இந்த ஒப்பந்தத் முக்கிய நிபந்தனைகளுள் ஒன்று.

(29 நவம்பர். 1966 - வணசிங்காவில் மேற்கோள் காட்டப்பட்டது பக். 219)



## இலங்கைத் தமிழருக்கு எதிராக

இடதுசாரிகளின் பிரசாரத்தின் முக்கிய தாக்கம் சமஷ் டிக் கட்சியினதும் அதன் தலைவர்களினதும் கோரிக்கைக்கு எதிராக அமைந்தது: இப்பிரசாரம் சிங்கள மேலாதிக்க வெறிவாத அடிப்படையில் அமைந்தது. பெரும்பான்மை சமூகத்தின் தவருன போக்குகள் மீண்டும் புதுப்பிக்கப் பட்டன

எல். எஸ்.எஸ்,பி. பத்திரிகையான ஜனதின் இனவாதத் தாக்குதலை முன்னெடுத்தது. "இரத்மலானையைத் தமிழ் நகர் ஆக்க இரகசிய முயற்சி'' (6 ஜுலை) "சிங்கள பௌத் தர்களே? எழுக'' (ஜுலை 9), "சமஷ்டிவாதிகள் வெற்றி - ஆங்கிலேயர் ஆட்சி - சிங்களவருக்கு முடிவு'' (23 ஜுலை) "வடக்கிலுள்ள சிங்களவருக்கு ஆபத்து'' (25 ஆகஸ்ட்) (வணசிங்க, 1966: பக் 213 - 17) இனப் பிரச்சினையைத் தணிப்பதற்காக வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தமிழைப் பயன்படுத்த சட்டவிதிகளை உருவாக்சு முயன்றபோது (டட்லி - செல்வநாயகம் ஒப்பந்தம்) "ஒப்பந்தத்தைக் கிழித் தெறி!'' என்ற தலைப்பில் ஜனதின் பின்வருமாறு எழுதியது.

> "சிங்களவரின் பிறப்புரிமைக்குத் துரோகம் இழைக் கும் டட்லி - செல்வநாயகம் ஒப்பந்தத்துக்கு எதி ராகப் பொதுசன எதிர்ப்பைத் திரட்டும் கூட்டங் களை நடத்துவதற்கான ஏற்பாடுகளை நாட்டுப் பற் றுள்ள அமைப்புகள் விரைவாகச் செய்து வரு கின்றன.'' (23 நவம்பர், 1965. வணசிங்காவில் மேற்கோள் காட்டியது, 1966, பக். 218)



படிப்பகம்

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

இக்கால கட்டத்தில் வெளிவந்த எல், எஸ். எஸ். பி., கம்யூனிஸ்ட் கட்சிச் சஞ்சிகைகளுக்கும் கடும் இனவாத சிங்கள பௌத்த பத்திரிகைகளுக்கும் இடையே வேறுபாடு காண்பது கடினமாய் இருந்தது. உதாரணத்துக்காக ஒன்று. 1965ஆம் ஆண்டு டிசம்பர் 5ஆம் திகதி ஜனதின் பின் வருமாறு எழுதியது;—

> முச்சிங்களவர் எழுச்சியுற்றனர்!
>
> நாட்டைக் காப்பதற்காக மூன்று ஊர்வலங்கள். பஞ்ச மகாபலவேகய புனித தலங்களை நோக்கி மூன்று ஊர்வலங்களை, விக்டோரியா பூங்காவிலுள்ள விகாரமாதேவி சிலை அருகே இருந்து தொடங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. சிங்கள வரது பிறப்புரிமைகளைத் தமிழருக்கு விட்டுக் கொடுக்கும் டட்லி - செல்வநாயகம் ஒப்பந்தத் துக்கு எதிர்ப்புக்காட்டு முகமாகவே இது ஒழுங்கு செய்யப்படுகிறது. (மேலது 219)

இதற்கும் மேலாக, அரசாங்கத்தைப் பலவீனப்படுத்தும். இகழும் இனவாத சுலோகங்கள், 1965ஆம் ஆண்டு மே தின ஊர்வலங்களிலும், பொதுக்கூட்ட உரைகளிலும் இடதுசாரிகளாலேயே முன்வைக்கப்பட்டன. இதில் முக்கியமான சுலோகம் ''டட்லி மசால வடையை விழுங்கிவிட்டார்'' என்பதாம். இச்சுலோகம் அரசாங்கத்தைச் சமஷ்டிக்கட்சி ஆதரித்ததைக் குறிப்பிடுவதாகும். சிங்கள மேலாதிக்க வெறிவாத சுலோகங்கள் இம்மாபெரும் தொழிலாளர் தினத்தைக் கறைப்படுத்தியது. மேலும் பொதுவேலை நிறுத்தம், கறுப்புக்கொடி பிடித்தல், (சிங்களவரது உரிமைகளைப் பாதுகாப்பதற்காக) விகாரமாதேவி சிலையின் முன்னல் பாராளுமன்றப் பிரதிநிதிகளின் சத்தியப் பிரமாணம் செய்தல் முதலியவற்றை உள்ளடக்கிய தேசிய துக்க தினத்திலும் (ஜனவரி 8, 1966) இடதுசாரிகள் பங்கெடுத்தனர், கறுப்புக்கொடி பிடித்தலுக்கோ பொது வேலை நிறுத்தத்திற்கோ அதிக ஆதரவு இருக்கவில்லை. ஆனல் சத்தியப்



பிரமாணச் சடங்கிற்குப் பின் ''பறத்தமிழோ அப்பிட்ட எப்பா'' (பறைத் தமிழர் எமக்கு வேண்டாம்) என்று கோஷித்துக்கொண்டு பாராளுமன்றத்தை நோக்கிச் சென்ற ஒரு சனக் கும்பலைப் பொலிசார் சுட்டதில் ஒரு பௌத்த பிக்கு கொல்லப்பட்டார். இச்சந்தர்ப்பத்தைத் தொழிலாளரைப் பழிவாங்குவதற்குப் பயன்படுத்திய அரசாங்கம் அவசரகால நிலைமையைப் பிரகடனம் செய்தது.

(வணசிங்க, 1566, பக். 223 - 24)

இனவாதம் அற்றதும் தொழிலாளர் வர்க்க ஒருமையும் செயற்பாடும் கொண்ட அடிப்படையில் அமையும் ஜனநாயக சோசலிஸ கருத்தியலை வளர்ப்பதை நாட்டில் அரசியல் வாழ்வுக்கு முக்கிய பங்களிப்பாகச் செய்ய வேண்டிய இடதுசாரிகள், தொழிலாளர் வர்க்கத்தை முதலாளித்துவ கூட்டரசாங்கங்களுடன் இணைவதற்கு வழி நடத்தியது மாத்திரமன்றி, மிக அபாயகரமான இனவாத அரசியலுக்குள்ளும் தள்ளிவிட்டனர், பல இனம் சார்ந்த தொழிலாள வர்க்கத்தினரிடையே வர்க்க உணர்வைக் கட்டி எழுப்பப் பல வருடங்களாக நடந்த போராட்டம் கைவிடப்பட்டது. பதிலாக இனவாதத்தின் நச்சுத் தாக்கம் உட்செலுத்தப்பட்டது. இது 1977, 83ஆம் ஆண்டு நாட்டில் நடந்த இனப்படுகொலைகளில் தொழிலாளர் வர்க்கத்தின் சில பகுதியினர் பங்குபற்ற வழி அமைத்தது.

## 9. மக்கள் விடுதலை முன்னணியும் இனப் பிரச்சினையும்

1965ஆம் ஆண்டுகளில் பிரதான இடதுசாரிக் கட்சிகள் இனவாத அரசியலைச் சரணடைந்தன. 1970 ஆம் ஆண்டுகளிலும் 1980இன் முற்பகுதியிலும் சிங்கள மேலாதிக்க வெறி வாதத்தின் ஆதிக்கம் சமூகத்தின் சகல வர்க்கத்தினரிடையேயும் செறிந்து பரவியது. தொழிலாளர் வர்க்கக்



படிப்பகம்

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

கட்சிகளுடைய கொள்கைகள் மேலாதிக்கம் பெற்று மக்களால் பரவலாகப் படிக்கப்பட்ட இடதுசாரிப் பத்திரிகைகளால் இனவெறி ஊக்குவிக்கப்பட்டது. நகர்ப்புற, கிராமப்புற சிங்களத் தொழிலாளி மக்களிடையே இடம்பெற்ற இனவாத கருத்தியலுக்கு எதிராகச் செயற்படுவது கடினமாயிற்று (மரபுவழி இடதுசாரிகளுக்கு) மாற்றுன குழுக்களில் மிகப் பெரியது ஜனதா விமுக்தி பெரமுன. 1965 - 66ஆம் ஆண்டுகளில் உருவாகி அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றும் நோக்குடனும் 71ஆம் ஆண்டு இளைஞர் கிளர்ச்சியை முன்நடத்திய ஜனதா விமுக்தி பெரமுன (J.V.P.)வும் அடிப்படையில் சிங்கள இன உணர்வுகட்கே இடம் கொடுத்தது என்பது குறிப்பிடத் தக்கது.

1964ஆம் ஆண்டு சிறிமா பண்டாரநாயக்காவின் எஸ். எல். எவ். பி. அரசில் சேர்ந்த பழைய இடதுசாரிகளின் 'திரிபுவாதம்', 'துரோகம்' ஆகியவற்றுக்கு எதிராகப் புரட்சிகரக் கட்சி ஒன்றை அமைப்பதற்கு ஒன்றுபட்ட,பீகிங் சார்பு கம்யூனிஸ்ட் கட்சியிலிருந்து பிரிந்த சில சிறு குழுக்களைக் கொண்டதாக ஜே வி.பி. அமைந்தது. இப்புதிய கட்சி சிங்களம் பேசும் பகுதிகளை உள்ளடக்கிய சிங்களக் கட்சியாகவே இருந்தது. தமிழ் ஆதரவாளர் விரல்விட்டு எண்ணக்கூடியோர். இக்கட்சி முக்கியமாக கிராமப்புற குட்டிபூர்ஷா பகுதியைச் சேர்ந்த இளைஞர்களைக் கொண்டிருந்தது. இவ் வகுப்பினரின் தேவைகளையே ஜே. வி. பியின் தீவிர உழைப்பாளிகளிற் பலர் சிங்கள மொழி மூலம் கல்வி கற்றோராகவும் இடைநிலைக் கல்வித் தராதரம் உடையோராகவும் இருந்தனர். இவர்களில் பெரும்பாலோர் வேலையற்றவர். 1971-ம் ஆண்டு கிளர்ச்சியையும் ஜே. வி. பியையும் பற்றி ஜி. பி. கீரவெல பின்வருமாறு மதிப்பிடுவது பொருத்தமானதே. 'நெருக்கடிக்கு உள்ளான குட்டி பூர்ஷ்வா வர்க்கத் தீவிரவாத இளைஞர்களின் இடதுசாரி அறைகூவல்'' (கீரவெல 1980 : 48) என அவர் அக்கட்சியின் வர்க்கத் தன்மை பற்றிக் குறிப்பிட்டார்.



## பொருளாதார நெருக்கடியும் அரசியல் நெருக்கடியும்

1960ஆம் ஆண்டுகளின் பிற்பகுதியில் இலங்கையில் தொடர்ச்சியாகப் பொருளாதார நெருக்கடி நிலவியது. வர்த்தகம் பின்னடைந்தது. அந்நியச் செலாவணியின் வரவு குறைந்தமையால் இறக்குமதிக் கட்டுப்பாடு விதிக்கப்பட்டது. இதனுல் விலை உயர்ச்சியும் அத்தியாவசியப் பொருட்களுக்குத் தட்டுப்பாடும் ஏற்பட்டன. முதலீடுகள் குறைந்தன வேலை இன்மையும் தகுதிக்கேற்ற தொழில் வாய்ப்பின்மையும் முன்னெப்போதும் இல்லாதவாறு அதிகரித்தன. இவ்வருடங்களில் வர்த்தகப் பற்றுக் குறையை நிரப்புவதற்கு வெளிநாட்டு உதவி போதாதிருந்தமையால் வெளிநாடுகளிலிருந்து அரசாங்கம் பெருமளவில் கடன் வாங்கியது இத்தகைய நெருக்கடியால் மானியங்களும் பொதுநலச் சேவைகளும் கட்டுப்படுத்தப்பட்டன. 1968ஆம் ஆண்டு நவம்பர் மாதம் சர்வதேச நாணயச் சபையின் (I. M. F.) வற்புறுத்தலால் அரிசி மானியம் குறைக்கப்பட்டு ரூபாய் மதிப்புக் குறைக்கப்பட்டது. இதனுல் விலைகள் உயர்ச்சியடைந்தன.

இதன் பயனுகத் தொழிலாள வர்க்கத்தினர், குட்டி பூர்ஷ்வாக்களின் வாழ்க்கைத் தராதரம் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டது. 1960ஆம் ஆண்டுகளின் பிற்பகுதியில் தொழில் அமைதியின்மை ஏற்பட்டது. பெருந்தோட்டப் பகுதிகளிலும் அரசாங்க, தனியார் கம்பனிகளிலும் வேலை நிறுத்தங்கள் ஏற்பட்டன, அத்துடன் இக்காலத்தில் பல் கலைக் கழகத் தீவிரவாத மாணவர்களின் ஆர்ப்பாட்டங்களும் நாட்டு இளைஞரிடையே அமைதியின்மையும் தொடர்ச்சியாக ஏற்பட்டது.

1970ஆம் ஆண்டு ஜூலைத் தேர்தலில் எஸ். எல்: எப். பி. இடதுசாரிக் கட்சிகள் ஆகியவற்றின் ஐக்கிய முன்னணியை ஜே. வி. பியின் சில பிரிவினர் ஆதரித்தனர். ஆனுல் புதிய



படிப்பகம்

அரசாங்கத்தின் நிகழ்ச்சித் திட்டங்களால் ஜே. வி. பி. விரைவில் ஏமாற்றமடைந்து ஒரு ஆயுதக் கிளர்ச்சிக்கு திட்டமிட்டது. ஜே வி. பி. மீது அரசின் அடக்குமுறை தீவிரமாகிற்று. இக்கிளர்ச்சியின் ஆரம்பத்தில் ஜே. வி. பி. சில வெற்றிகள் பெற்றபோதும் அரசபடைகள் பின்னர் வெற்றி பெற்றன. இக்கிளர்ச்சி மிகக் கொடூரமாக அடக்கி ஒடுக்கப்பட்டது.

## ஜே. வி. பி.யின் கருத்தியல்

ஜே. வி. பி. புரட்சிகர சுலோகங்களை முன்வைத்து கியூபாப் புரட்சி, சேகுவராவின் நடவடிக்கைகள், சர்வதேசிய நோக்கும் கொண்டிருந்தது. அதன் ஆரம்ப ஆண்டுகளில் சிங்கள மேலாதிக்க வெறிவாதத்தையும் முன்வைத்தது. 1971இல் ஜே. வி. பியின் அரசியல் குழுவில் இருந்த 14 உறுப்பினரும் சிங்கள பௌத்தர்களே. இவர்கள் தேசப் பற்றும் தீவிரமும் நிறைந்த தென்பகுதியைச் சார்ந்தவர்களாகவும், தெற்கு மாகாண நகரங்களில் உள்ள பௌத்த பாடசாலைகளில் கல்வி கற்றோராயும் இருந்தனர். இவர்களில் ஒருவர் நீங்கலாக ஏனையோர், 1955 வரையில் "சிங்களம் மட்டும்" ஆர்ப்பாட்டங்கள், 1958ஆம் ஆண்டு இனக்கலவரம், 1960ஆம் ஆண்டுகளின் ஆரம்பத்தில் இடதுசாரிகளாலும் கடைப்பிடிக்கப்பட்ட சிறுபான்மையினருக்கு எதிரான மேலாதிக்க வெறிவாதம் ஆகியவற்றின் மத்தியில் வளர்ந்த இருபது வயது இளைஞர்களாயிருந்தனர்

ஜே.வி பி.யின் கருத்தோட்டம் முற்றிலும் மார்க்ஸிஸ—லெனினிஸ அடிப்படையில் வரையறுக்கப்படவில்லை. "ஆனால் ஸ்டாலினிஸம், மாவோயிஸம், கஸ்ரோயிஸம், சேகுவெராயிஸம் ஆகியவற்றின் பல்வேறு அம்சங்களை உள்ளடக்கிய பல்கூற்றுக் கலவையாக அமைந்தது. (கீரவெல 1980 : 46) ஜே. வி. பியின். கருத்தியலின் முக்கிய கூறுகளில் ஒன்றான சிங்களத் தேசியவாதத்தை, இவ்வரை விலக்கணம் கருத்தில் கொள்ளவில்லை. இச்சிங்களத் தேசியவாதம் ஜே.வி.பி, யின் சமூக அடிப்படையான குட்டி பூர்ஷ்வாக்கள் மத்தியில் பெரும் ஆதரவைப் பெற்றது.



## இந்திய விரிவாக்கம்

ஜே. வி. பியின் கொள்கைத் திட்டத்தில் பிரபலம் வாய்ந்த "ஐந்து பாடங்களில்" ஒன்றாக "இந்தியாவின் விரிவாக்கம்" அமைந்தது. இப்பாடத்தின்படி இந்திய விரிவாக்கம், இந்திய முதலீடுகளின் தேவைகளிலிருந்து ஏற்பட்டது என்றும், குறிப்பாக வர்த்தகம், பொருட்கள் கடத்தல், சமஷ்டிக் கட்சி, 'நாம் தமிழர்' இயக்கம், இந்திய கலாசார விரிவாக்கம், சட்டவிரோதக் குடியேற்றம், பெருந்தோட்ட இந்தியத் தொழிலாளர் முதலாக ஒன்றுடன் ஒன்று தொடர்புள்ள, பல காரணிகள் மூலம் இந்த முதலீடுகள் செயற்பட்டன என்றும் இப்பாடத்தில் கூறப்பட்டது. சேனன், குத்திகன், எல்லாளன் ஆகியோரின் வரலாற்றுக் காலங்களில் ஏற்பட்ட படை எடுப்புகள் இவ்விரிவுரைக்கான பின்னணியாக அமைந்தது. இந்திய விரிவாக்கத்தில் புதிய பயமுறுத்தல் சிங்கள தேசியவாதச் சூழலில் முன்வைக்கப்பட்டது: தென் இந்தியாவிலிருந்து அடிக்கடி ஏற்பட்ட பண்டைய படையெடுப்புகளின் தொடர்ச்சியாகவும் நோக்கப்பட்டது. இந்நோக்கு வரலாற்று ரீதியானதாகவும் ஜே. வி. பியினுடைய குட்டிபூர்ஷ்வா தளத்தின் குணும்சங்கள் கொண்டதாகவும் அமைந்தது. இந்திய விரிவாக்கம் பற்றிய கருத்துகள் பின்வருமாறு அமைந்தன:

(1) ஏற்றுமதி இறக்குமதி வர்த்தகத்தின் சில துறைகளில் இந்திய முதலீடு ஆதிக்கமும் தனியுரிமையும் கொண்டுள்ளது. இம்முதலாளிகள் தமது தளங்களை இந்தியாவில் வைத்துக்கொண்டு, இலங்கையைச் சுரண்டி, இந்திய முதலாளி வர்க்கத்தின் வளர்ச்சிக்கு உதவுகின்றனர்.

(2) இம் முதலாளிகள் கடத்தலிலும் ஈடுபடுகின்றனர். இலங்கையின் செல்வத்துக்கு ஊறு செய்யும் வகையில் இரு நாடுகளுக்குமிடையில் பொருட்கள் கடத்தப்படுகின்றன.



படிப்பகம்

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

(3) எல்லா இடங்களிலுமுள்ள சகல தமிழரையும் ஒன்று படுத்தும் நோக்குடைய தென்னிந்திய 'நாம் தமிழர்' இயக்கத்தின் விரிவாக்கமே சமஷ்டிக் கட்சியாகும். இதனுல் இவர்கள் ஐந்தாம் படையினராகவும் அந்நிய அதிகாரத்தின் முகவர்களாகவும் நோக்கப்பட வேண்டும்.

(4) திரைப்படம், சஞ்சிகைகள், இசை முதலியவற்றின் மூலம் கலாசார ஊடுருவல் இடம் பெறுகிறது. இது இந்திய விரிவாக்கத்தில் ஓர் அம்சமாகும். இலங்கையில் உள்ள சகல தமிழரும் எம். ஜி. ஆரை ஒரு வீரபுருஷனுக எண்ணுகின்றனர்.

## பெருந்தோட்டத் தொழிலாளர்

தோட்டத் தொழிலாளர் பற்றிய ஜே.வி. பியின் கருத்து இவ்விரிவுரையின் மிக முக்கிய அம்சமாகும். ஏகாதிபத்திய நலன்களுக்குச் சேவை செய்வதற்காக பிரிட்டிஷாரால் இலங்கைக்குக் கொண்டு வரப்பட்ட தோட்டத் தொழிலாளர் இலங்கையின் செழிப்பான பகுதிகளில் வாழ்ந்தனர் எனவும், கல்வி, வசிப்பிட சுகாதார வசதிகளை அனுபவித்தனர் என்றும் குற்றம் சாட்டப்பட்டது. பயிர்ச்செய்கையில் ஈடுபட்டுள்ள சிங்கள குடியானவரை விடத் தோட்டத் தொழிலாளர் உயர்வான வாழ்க்கைத் தரத்தைக் கொண்டிருக்கின்றனர் என்றும், அவர்களது அரசியல் விசுவாசமும் சமூகத் தொடர்பும் தாய் நாடான இந்தியாவுடனேயே உள்ளது எனவும் கூறப்பட்டது.

பெருந்தோட்டங்கள் பற்றி ஜே. வி. பி.யின் தலைவர் ரோகண விஜயவீர பின்வருமாறு கூறியதாகச் சொல்லப்படுகிறது: "தேயிலைச் செடி நெற்பயிரை அழித்து அதன் இடத்தையும் ரப்பர் மரம் குரக்கன் பயிற் செய்கையைக் கொன்று அதன் இடத்தையும் பிடித்துள்ளன. (ஜனதா சங்கமய, 1980 : 96) எனவே தன்னிறைவுள்ள பொருளாதாரத்தைக் கட்டி எழுப்பவேண்டுமெனில் பெருந்தோட்டத் துறை அழிக்கப்பட வேண்டும். புரட்சிகர இயக்கத்தினுள் பெருந்தோட்டத் தொழிலாளர் சேர்த்துக் கொள்ளப்படும் சாத்தியம் உண்டா? என்று கேட்கப்பட்டபோது, தேசிய சிறுபான்மையினரின் ஆதரவில் தங்கியிருக்கும் எந்தப் புரட்சிகர இயக்கமும் வெற்றிபெற முடியாது என்று விஜயவீரா வாதிட்டார். குர்திஷ்ய ஆதரவைப் பெற்றிருந்த ஈராக் கம்யூனிஸ்ட் கட்சி பாத் கட்சியால் தோற்கடிக்கப்பட்டதை அவர் உதாரணமாகக் காட்டினுர்.



தோட்டப்பகுதித் தமிழர்கள்இன்னும் தமிழ்நாட்டையே தாய்நாடாகவும் நேரு, காந்தி போன்ருேரைத் தலைவர்களாகவும் கொள்கிருர்கள் எனக் குற்றம் சாட்டப்பட்டது. தோட்டத் தமிழர்களுக்கு இலங்கையில் அக்கறை இல்லை எனவே இலங்கைப் புரட்சிக்கு அவர்களை ஒன்றிணைக்க முடியாது எனவும் வாதிக்கப்பட்டது. தோட்டத் தொழிலாளரின் பிரச்சினைகளைத் தனிப்பட நோக்காது இந்திய விரிவாக்கத்தில் ஒரு பகுதியாகவே நோக்கவேண்டும் எனவும் அழுத்திக் கூறப்பட்டது.

புரட்சிக்குப் பின்னர் தோட்டத் தொழிலாளரின் பாத்திரம் பற்றிக் குறிப்பிடும்போது அவர்கள் இலங்கைப் பிரஜைகள் ஆகி, பெருந்தோட்டத் துறையை மூடுவதை ஆதரிப்பின் கட்சி அவர்களை வரவேற்கும் என்று ஜே. வி. பி. கூறியது. அவ்வாறு செய்யாவிடில் அவர்கள் தொழிலாளராக இருந்தும் கூட எதிர்ப் புரட்சியாளராகவே கருதப்பட வேண்டும் எனக் கூறப்பட்டது, ஜெர்மன் படைகள் முக்கியமாக ஜெர்மன் தொழிலாளரைக் கொண்டு அமைந்திருந்த போதிலும் ஸ்டாலின் ஜெர்மன் படைகளை எதிர்த்தமை எடுத்துக்காட்டப்பட்டது. தோட்டத் தொழிலாளர் பற்றிய ஜே. வி. பியின் நிலைப்பாட்டைக் கண்டித்து கார்டியனில் ஒருவர் பின்வருமாறு எழுதினுர்:

> "இலங்கைத் தொழிலாளர் வர்க்கத்தில் அத்துமீறிய சுரண்டலுக்கு உள்ளாகும் பகுதியினரை இந்திய பூர்ஷ்வாக்களின் ஏஜண்டுகளாக நோக்குவதும் அவர்களை எமது சமூகத்தின் சுரண்டப்படும்



படிப்பகம்

இன்னோர் பகுதியினரான கூலி ஏழை விவசாயிகளுக்கு எதிரிகளாகக் கொள்வதும் அபத்தமானது. தொழிலாளர் - விவசாயிகள் ஒற்றுமைக்கு இவர்கள் இவ்வாறு ஆதரவளிக்கிறார்கள்''

(லங்கா கார்டியன் 15 ஜனவரி, 1979)

## மேலாதிக்க வெறிவாதப் போக்குகள்

''ஐந்து பாடங்களிலும்'' சிறுபான்மையினர் பற்றிய ஜே. வி. பியின் அணுகுமுறையானது சிந்தி, 'போரா' வர்த்தகர்கள், தமிழ் முதலாளிகள், தமிழ் விவசாயத் தொழிலாளர், இந்திய தமிழ்த் தோட்டத் தொழிலாளர் யாவரும் ஒரே இனக்குழு எனவும் இந்தியாவுக்கு விசுவாசமானவர்கள் எனவும் கொள்ளும் சிங்கள மேலாதிக்கத்தின் அடிப்படையிலேயே அமைந்திருந்தது. வர்க்க அடிப்படையிலோ அல்லது இந்தியர், இலங்கையர் என்ற அடிப்படையிலோ தமிழரைப் பிரித்துப் பார்க்கும் முயற்சி எதுவும் மேற்கொள்ளப்படவில்லை. சிங்களவர் அல்லாதவர்கள் எந்த வர்க்கத்தினராய் இருப்பினும் 'மண்ணின் மைந்தர்'களின் வர்த்தகம், தொழில் வாய்ப்புகளை அபகரித்துச் சுரண்டும் அந்நியர்களாகக்கருதும் சிங்கள மேலாதிக்கவாதக் கொள்கையுடன் ஒத்திருந்தது. ஜே. வி. பியின் கருத்தமைவில் இக்கொள்கை முக்கிய இடத்தை வகித்ததென்பது சிங்களவரது ஐதீகங்கள் சிலவற்றை அக்கட்சி ஏற்றுக்கொண்டதிலிருந்து வெளியாகியது: உதாரணமாக, சிங்கள - தமிழ் வேறுபாடுகள் ஆரியர் — ஆரியரல்லாதவர் என்று வரலாற்று முரண்பாடு கொண்டதாகக் கருதப்பட்டன. வடபகுதி ஹரிஜனங்கள் தமிழர்களால் அடிமைப் படுத்தப்பட்ட சிங்களவரின் வழித் தோன்றல்கள் என்று கூறப்பட்டது, காலனித்துவ கால கட்டத்தை மதிப்பிடும்போது காலனித்துவ அதிகாரத்திற்கு எதிராகப் போராடியவர் சிங்களவர் மட்டுமே என்றும் கூறப்பட்டது.

மேலும் இந்திய விரிவாக்கம் பற்றிய பாடத்தில் இனப் பிரச்சனைக்கான தீர்வு, ஜே. வி. பியின் சிங்களத் தேசிய



வாதச் சார்பையே கொண்டுள்ளது. இலங்கையின் சனத்தொகையை பரவலாக்கின் சிங்களவரும் தமிழரும் நாடெங்கிலும் பரந்திருப்பர் என்று இக்கட்சி கூறியது. வெவ்வேறு புவியியற் பிரதேசங்களில் இனக்குழுக்கள் குடியிருப்பதால் ஏற்பட்டுள்ள இனப்பிரச்சனையை இது தீர்க்கும் எனவும் கூறப்பட்டது. தமிழ் சிறுபான்மையினர் படிப்படியாக சிங்களப் பெரும்பான்மையருள் இணைந்துவிடுதல் என்ற கோட்பாட்டை இந்த ''இறுதித் தீர்வு'' அடிப்படையாகக் கொண்டதாகும்.

எனவே, எழுபதுகளின் நடுப்பகுதியில் இனப்பிரச்சனை தொடர்பான ஜே.வி. பியின் கருத்தியல் நாம் வரையறுத்த சிங்கள மக்களின் உணர்வுடன் ஒத்திருந்தது. ஜே. வி. பியினுடைய இக்கருத்தியலின் ஒரு தவிர்க்க முடியாத விளைவு, அது தன்னை இடதுசாரிக்கட்சி எனக் கூறியபோதும் வர்க்க அடிப்படையில் பிரச்சனைகளை நோக்காதும் சிறுபான்மையினருடைய ஆதரவைத் தேடாமலும் ஒரு சிங்களக் கட்சியாக இருந்தது, 1971ஆம் ஆண்டுக் கிளர்ச்சி நாட்டின் சிங்களப் பகுதிகளில் மாத்திரமே இடம் பெற்றமை இந்த உண்மையைப் பிரதிபலிக்கிறது.

## கொள்கை மாற்றம்

எழுச்சியைத் தொடர்ந்து, அடுத்தகாலப் பகுதியில் நடந்த சுயவிமரிசனத்தில் இனப்பிரச்சினை தொடர்பான தனது நிலைப்பாட்டை ஜே, வி. பி. மாற்றிக்கொண்டது. 'கற்பித்தல்' நிகழ்ச்சித் திட்டத்தில் இந்திய விரிவாக்கம் பற்றிய பாடம் கைவிடப்பட்டது. தேசியவாத நிலைப்பாட்டிற்கு தமது சிந்தனையில் ஏற்பட்ட ஸ்டாலினிஸ, மாவோயிச செல்வாக்கே காரணம் என்று கூறப்பட்டது. இத்தகைய சுயவிமர்சனம் நாட்டுப் பற்று, மார்க்ஸிஸ அடிப்படை அற்றது, மேலாதிக்க வெறித்தன்மை வாய்ந்தது என்று விபரிக்குமளவுக்குச் சென்றது. கட்சியால் வெளியிடப்பட்ட நீண்ட சுயவிமர்சனக் கட்டுரை பின்வருமாறு கூறியது: ''புரட்சிகர மார்க்ஸிஸ போதனைகள் அலட்சியப்

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

படுத்தப்பட்டதும் வர்ககப் போராட்டத்தைவிட்டு வர்க்க சமரசம் ஏற்பட்டதும் சர்வ தேசியக் கண்ணோட்டத்தை விட்டு குறுகிய மேலாதிக்க வெறிவாதமும், நாட்டுப்பற்றும் இடம் பெற்ற காலகட்டம் எமது வரலாற்றின் இருள் படிந்த அத்தியாயமாகும்.''

இக்கட்டத்தில் தமிழர் ஒரு தேசிய இனம், பெரும்பான்மையினரால் அவர்கள் ஒடுக்குதலுக்கு உள்ளாகின்றனர், அவர்கள் பிரிந்து செல்லும் எல்லை வரையிலான சுயநிர்ணய உரிமை உடையவர்கள் என்றும் ஜே. வி. பி. ஏற்றுக்கொண்டது. இக்கட்சி பிரிவினையை ஆதரிக்கவில்லை. இலங்கை என்ற அமைப்பிற்குள்ளேயே தமிழ்த் தேசிய இனத்தின் பிரச்சனைகள் தீர்க்கப்படலாம் என நம்பியது. ஆனால், இப் பிரச்சனை தொடர்பாக இடைக்காலத்தில் இது கடைப் பிடிக்கப்பட்ட நிலைப்பாட்டில் பல தத்துவார்த்த, நடைமுறைக் குறைபாடுகள் இருந்தன. எனினும் இலங்கைத் தமிழர் தோட்டப் பகுதித் தமிழர் மத்தியில் ஜே. வி பியினர் வேலை செய்ய வழிவகுத்தது. இதனால் ஜே. வி. பியின் நடவடிக்கைகளில் தமிழரும் இணைந்தனர். மாநகரசபைத் தேர்தல், மாவட்டசபைத் தேர்தல் ஆகியவற்றின் ஜே. வி. பி வேட்பாளர் பட்டியலில் தமிழ்ப் பெயர்களும் காணப் பட்டன. உதாரணமாக, 1981ஆம் ஆண்டு கொழும்பு உதவி மேயருக்கான தேர்தலில் ஜே. வி. பியின் வேட்பாளர் ஒரு தமிழராவர்.

ஆனால் இந்நிலைப்பாடு நீடிக்கவில்லை. சமீப வருடங்களில் கட்சி மீண்டும் சிங்கள மேலாதிக்க வெறிவாத அலைக்கு இடம் கொடுத்தது. 1982ஆம் ஆண்டு தொடக்கம் கட்சி இப்பிரச்சினை தொடர்பாக வெளியிட்ட பல அறிக்கைகளில் இது தெளிவாகிறது. 1982ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் ஜனாதிபதி தேர்தல் பிரசாரத்தில் ஜே. வி. பி. இனப் பிரச்சனை தொடர்பாக "தந்திரோபாயமாக மௌனத்''தைக் கடைப் பிடித்தது. இந்த மௌனம்



பின்னர் சிங்கள மேலாதிக்க வெறிவாதிகளின் கருத்துக்களிலிருந்து எவ்வகையிலும் வேறுபடாத மனப்பான்மைகளைக் கைக்கொள்வதாக மாறியது. இதனை அறிந்துகொள்ள ஏப்ரல் கிளர்ச்சியின் பதின்மூன்றாவது ஆண்டு நிறைவை ஒட்டி 1984ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட அறிக்கையைப் பார்க்கலாம். வட்டமேசை மாநாட்டை நிராகரித்தும் இனப்பிரச்சனையைத் தீர்ப்பதற்கு அதிகாரத்தை பரவலாக்கும் அனைத்து ஆலோசனைகளையும் நிராகரிப்பதாகவும் இவ்வறிக்கை அமைந்தது.

''இலங்கை மக்களுக்கு ஒரு செய்தி'' என்ற தலைப்பில் ரோகண விஜயவீராவால் சமீபத்தில் (1984இல்) வெளியிடப்பட்ட அறிக்கையால் இத்தகைய கருத்துகள் உறுதிப் படுத்தப்படுகிறது. இவ்வறிக்கை சிங்கள தீவிரவாதத்தின் சில உணர்வு பூர்வமான தொடர்களை முன் வைத்து தமிழருக்கு அதிகாரப் பரவலாக்கம் தருவதற்கு எதிர்ப்புத் தெரிவித்தது:

> ''வட்டமேசை மாநாட்டின் அடிப்படையிலும் மக்களின் புறமுதுகுப் பக்கமாகவும் நாட்டில் சமஷ்டி அமைப்புக்கொண்டு வருவதற்கு அரசால் எடுக்கப்படும் எந்த இரகசிய முயற்சியையும் நாம் முழுமையாக எதிர்க்கின்றோம். சமஷ்டி அமைப்பு இந்தியா போன்று மேலும் பிரிவினையை வளர்க்கவே உதவும்.''

தமிழர் விடுதலைக் கூட்டணியின் (T. U. L. F.) அரசியல் போராட்டங்களும், தீவிரவாதக் குழுக்களின் நடவடிக்கைகளும் ஏகாதிபத்திய சதியாகவே நோக்கப்பட்டது. ரோகண விஜயவீராவின் செய்தி நாடகத்தன்மையுடன் இதுபற்றிக் கூறியது: ''ஜே. வி. பியும் நானும் நாட்டைப் பிரிப்பதற்கான எந்த ஏகாதிபத்திய முயற்சிகளையும் முழுமையாக எதிர்க்கிறோம், நான் உயிருடன் இருக்கும் வரை, ஜே. வி. பி. இருக்கும் வரை நாட்டைப் பிரிக்க எந்த ஏகாதி



படிப்பகம்

பத்தியச் சக்தியையும் அனுமதியோம்'' இச்செய்தி பின்வருமாறு முடிவுறுகிறது: "நான் இலங்கையிலிருந்து ஓடவில்லை, தேசம் நெருக்கடியில் இருக்கும்போது நாட்டையும்(சிங்கள) இனத்தையும் நான் கைவிடமாட்டேன். எதிர் நோக்கும் அபாயத்திலிருந்து நாட்டையும் இனத்தையும் காப்பதற்கு நாம் எத் தியாகத்தையும் செய்யத் தயாராக உள்ளோம்.''

சிங்கள இன உணர்வின் எழுச்சியின் போது (சிறுபான்மையினர் பிரச்சனை தொடர்பாக) தம் முன்னைய நிலைப்பாட்டைப் பேணுவதற்கு பழைய இடதுசாரிகளால் முடியாமலிருந்தமை பற்றி முன்னர் விபரமாகக் கூறினேன். அவர்களது சந்தர்ப்பவாதத்திற்கு மாற்றாகத் தொடங்கிய ஜே.வி.பியும் இன்று அதே வழியில் செல்கிறது. அது சிங்கள மேலாதிக்கப் போக்கைத் தழுவியுள்ளது. "பழைய இடதுசாரிகள்' (கம்யூனிஸ்ட் கட்சி, எல்.எஸ்.எஸ்.பி.) பகுத்தறிவு கொண்ட நிலைப்பாட்டிற்கு வரும்வேளை ஜே. வி. பி, அதிகாரப் பரவலாக்கலை எதிர்ப்பது விசித்திரமானது. எவ்வாறாயினும் வர்க்க வேறுபாடுகள் உட்படச் சகல வேறுபாடுகளையும் புறக்கணித்த இன உணர்வின் பலம் முக்கிய வினாவாகும் — இன்று இடதுசாரிகளுக்கு முன்னுலுள்ள துல்லியமான தத்துவார்த்தப் பிரச்சனை இதுவாகும்.

## 10. 1970களில் சிங்கள பௌத்தக் கருத்தியலின் மேலாண்மை

காலனித்துவ ஆட்சிக் கட்டத்தைச் சேர்ந்த அனகாரிக தர்மபாலாவினதும் பிறரதும் கருத்துகள் தொடங்கி 1970 களின் பிற்பகுதியில் சிங்களவர் மத்தியில் அங்கீகாரம் பெற்றது வரை ஒரு நூற்றாண்டுக்கு மேலாக சிங்கள - பௌத்த கருத்தியல் உருவாகியமை குறித்து இதுவரை ஆராய்ந்தோம். இவ்வுணர்வின் மேலாதிக்கத் தன்மையால் இது சிங்கள பௌத்தரின் சகல வர்க்கங்களையும், தெற்கின் முக்கியமான அரசியற் கட்சிகளையும் தழுவியது. மேலும் 1972ஆம் ஆண்டு அரசியல் யாப்புகளில் சேர்த்துக்கொள்ளப்பட்டதால் சிங்கள பௌத்த மேலாண்மை சட்டபூர்வமாக்கப்பட்டது. இதனால் அரசியல் யாப்பின்படி இலங்கை சிங்கள தீபமாகவும் தர்ம தீபமாகவும் பௌத்தத்தைப் பாதுகாக்கும் தேர்ந்தெடுக்கப்பட்ட வர்களின் - சிங்களவரின் நாடாக மாறியது.



### அனைத்து வர்க்க மேலாண்மை

1970களிலும் 1980களின் முற்பகுதியிலும் சிங்களப் பௌத்தர்களின் சகல பிரிவினரையும் கவரக்கூடிய இனவாதப் பிரசாரம் நடைபெற்றது. பொதுவாக பௌத்தரைத் தூண்டக் கூடிய அம்சங்கள் இப்பிரசாரத்தில் இடம் பெற்றபோதிலும், குறிப்பாகச் சிங்கள பூர்ஷ்வாக்கள், தொழிலாள விவசாயிகள் போன்றோரைத் தூண்டக்கூடியதாக சிங்களவருக்கு இழைக்கப்படும் "அநீதிகள்'' எடுத்துக் கூறப்பட்டன. இப்பிரசாரம் சிங்களத்தில் நடைபெற்றது. சிங்களச் சங்கங்களின் கீழ்த்தரமான பிரசார அறிக்கைகள் கடிதமூலமோ நேரிலோ மக்களிடம் சென்றன. இவை புத்தகக் கடைகளிலோ. பத்திரிகைகளிலோ இடம் பெறவில்லை. சிங்கள மக்களில் செல்வாக்குள்ள பகுதியினரைச் சென்றடைந்தன. எனினும் வேறு மேலாதிக்கவாத விடயங்கள் சிங்களச் செய்திப் பத்திரிகைகளில் தொடர்ச்சியாகப் பிரசுரிக்கப்பட்டன. பல முக்கியமான பௌத்த பிக்குகளும் "கிளர்ச்சியை''த் தூண்டும் பல பிரசுரங்களையும் சஞ்சிகைகளையும் பிரசுரித்தனர், 1980களின் முற்பகுதியில் சிங்கள பௌத்த பாதுகாவலரின் பிரச்சாரம் சகல சிங்கள மக்களையும் தாக்கின.

### பௌத்த மதப் போராட்டம்

பௌத்த உணர்வைக் கிளர்ந்தெழச் செய்வதற்கு மேற்கொள்ளப்பட்ட பிரசாரத்தில் மிகவும் முக்கியத்துவம் பெற்ற விடயம், வடக்கிலும் கிழக்கிலும் இருந்த பௌத்த கோயில்களும், தொல்பொருள் எச்சங்களுமாகும். சிங்களவர்களே பௌத்தர்கள் என்ற கருத்தின் அடிப்படையில் (ஆரம்பத்தில் தமிழ்ப் பௌத்தர்கள் இருந்தமையையும் பல

ஆரம்பகால பௌத்த அறிஞர்களும் உரையாசிரியர்களும் தமிழர்களாக இருந்தமையையும் மறந்து) பௌத்த தலங்களைப் பாதுகாக்க தர்மயுத்தம் நடத்துமாறு சிங்களப் பௌத்தர்கள் வற்புறுத்தப்பட்டனர்.

> சிங்கள மன்னர் ஆட்சிக்காலத்தில் ராஜரட்டையின் பகுதியாகவிருந்த வடக்கிலும், ரோகண அரசின் பகுதியாகவிருந்த கிழக்கிலும் உள்ள தொல்பொருள் சின்னங்கள் இப்போது அழிக்கப்படும் அச்சுறுத்தல் உள்ளது என்பது இரகசியமல்ல. இவ் அழிவை நாம் மேலும் நீடிக்கவிட்டால், இவற்றைப் பார்த்தும் பார்க்காதிருந்தால், அல்லது சுயநலத்துடன் எமது தனிப்பட்ட விடயங்களிலேயே அக்கறை செலுத்தினல் மேற்குறிப்பிட்ட பகுதிகளில் இருந்த சிங்கள பௌத்த கலாசாரத்தின் சகல சான்றுகளேயும் அழித்தொழிக்கும் நோக்கமுள்ள பிரசாரத்திற்கு நாம் ஆதரவு கொடுப்பவர்களாவோம். (சிங்கலுணி: புது சகுனபேரகெனிங்: சிங்களவரே பௌத்த தர்மத்தைப் பாதுகாப்பீர்கள்: 1981, பக். 13.)

இது இலங்கைத் தமிழர் தமது "பாரம்பரியப் பிரதேசங்கள்'' பற்றி உரிமை பாராட்டுவதைத் தடுத்து நிறுத்தும் முயற்சியாக மாத்திரமன்றி பிரிவினைவாதம் பற்றி பௌத்தர்களை எச்சரிக்கும் முயற்சியாகவும் அமைந்தது.

> சிங்கள, தமிழ்ப் பகுதிகள் இலங்கை இரண்டாகப் பிரிபட்டால் சேருவில, தீபவாவி, கிரிவிகாரை, நாகதீபம் போன்ற பண்டைய பௌத்த தலங்களும், காடுகளால் மூடப்படாத ஏனைய வழிபாட்டுத் தலங்களும் தமிழருடைய கைக்குப் போய் விடும்.
>
> (கண்ணுக்குப் புலப்படாத பகைவர், 1970, பெப்ருவரி பக். 48)



## விவசாயிகளைக் கிளர்ந்தெழச் செய்தல்

சிங்களவரில் பல்வேறு வர்க்கத்தினரிடையேயும், குழுவினரிடையேயும் பிரச்சினைகளை எழுப்பி அவர்களைக் தூண்டுவதற்கு எடுக்கப்பட்ட முயற்சிகளுள் ஒன்று, கண்டிய சிங்கள விவசாயிகளை தோட்டத் தொழிலாளருக்கு எதிராகத் திருப்பியமை ஆகும். இத்தொழிலாளர்கள் பல வருடங்களாக அரசியல் உரிமை மறுக்கப்பட்டிருந்தவர்கள். ஆனுல் 1964ஆம் ஆண்டின் பின் ஒரு பகுதியினருக்கு பிரஜாவுரிமை கிடைத்தது: இன்னேர் பகுதியினர் இந்தியாவுக்குத் திருப்பி அனுப்பப்பட்டனர் ஆயினும் தோட்டத் தொழிலாளர் அரசியல், பொருளாதார கலாசார ரீதியாக சிங்களவரை இருட்டடிப்புச் செய்துவிடுவர் என்ற பழைய கருத்து இனவாத இலக்கியங்களில் தொடர்ந்து இடம் பெற்றது.

> விரைவாகப் பெருகி வரும் தமிழ்பேசும் இந்தியத் தோட்டத் தொழிலாளர்களுக்கு பிரஜா உரிமை அளிப்பதன் மூலம், சிங்களக் கலாசாரம், பௌத்தம், மலைநாட்டு கிராமவாசி யாவரும் விரைவாக, அழிக்கப்பட்டுவிடுவர்,
>
> (மேற்படி. பக். 5-7)

## வியாபாரிகளைத் தூண்டிவிடல்

இதுபோலவே சிறுபான்மை இனத்தைச் சேர்ந்த வியாபாரிகளுள் கடைக்காரருக்கும் எதிராகச் செய்யப்பட்ட பிரசாரம் அவர்களுடைய போட்டியாளர்களாகிய சிங்கள குட்டி பூர்ஷ்வாக்களிடமும், சிங்கள தொழிற்துறையாளர்களிடமும் ஒரு தாக்கத்தை உடனே ஏற்படுத்தியது.

இங்கு முக்கியமாகக் குறிப்பிடவேண்டியது யாதெனில் சில்லறை, மொத்த வியாபாரம் (இது 68 வருடங்களுக்கு முன்னர் கொழும்பு, சப்ரகமுக, மத்திய பகுதிச் சிங்களவரிடம் இருந்தது) முற்றிலும் இந்தியர்களிடமே உள்ளது. இது இயல்பாக ஏற்பட்ட மாறுதலல்ல. பணம் உட்பட ஏனைய வாய்ப்புக் கொண்ட இந்தியர் சிங்களவருக்குச்



படிப்பகம்

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

சொந்தமான தொழில்கள், கட்டிடங்கள் போன்றவற்றை வாங்குவதற்கு இந்திய தொழிற் சங்கங்களாலும் ஏனைய ஸ்தாபனங்களாலும் மேற்கொள்ளப்பட்ட திட்டமிட்ட நடவடிக்கையின் விளைவாகும். இத்தகைய தூர நோக்குடைய திட்டத்தினுல் சிங்கள வியாபாரிகளின் எண்ணிக்கை சுமார் 90 சதவீதத்தால் குறைக்கப்பட்டு அவற்றைத் தமிழ் வியாபாரிகள் வாங்கினர்.

### மாணவர்கள் கிளர்ச்சி

இனவாதப் பிரசாரத்திற்கு ஆளாகும், கருத்துப் பரப்பும் இன்னொரு பகுதியினர் மாணவர்கள், இளைஞர்கள், பட்டதாரிகளின் பெற்ருேர் ஆவர். சிங்கள இளைஞர்களுக்கு உயர்கல்வி, கௌரவமான தொழில்களை மறுக்கும் சதித் திட்டம் தமிழரால் தீட்டப்பட்டுள்ளது என்பதை இப்பிரிவினர் நம்பினர். ஒவ்வொரு வருடமும் பல்கலைக் கழகத்தில் சில ஆயிரம் வெற்றிடங்களுக்காகப் பெருந்தொகையான மாணவர் போட்டியிடும் ஒரு தீவிர போட்டி நிலையில், பல்கலைக் கழகப் பரீட்சை முடிவுகள் எதிர்கால தொழில்களை நிர்ணயிக்கும் நிலை இருந்தது. தமிழ் மாணவர்களுக்கு, தமிழ் ஆசிரியர்கள் உயர்ந்த புள்ளிகளை வழங்குகிருர்கள் என்பது "சிங்கள மாணவர்களினதும், ஆசிரியரினதும், பெற்ருேரினதும் இதயத்தில் வெடித்தெழும்,எரியும் பிரச்சினை ஆகியது." (கொடிய சதித்திட்டம்:தேதியிடப்படாதது 1980? பக். 23)

ஏககாலத்தில் ஏற்பட்ட கல்வியின் விரிவாக்கல், பொருளாதார நெருக்கடி, பட்டதாரிகளின் எண்ணிக்கையிலும் வேலைவாய்ப்புகள் குறைவாக இருந்தமை ஆகியவற்ருல் இனப் போர்க்களம் கல்வியைத் தளமாகக் கொண்டது. குட்டி பூர்ஷ்வாக்களும், சிங்கள பூர்ஷ்வாக்கள், உத்தியோகத்தர் ஆகியோரின் சில பகுதியினரும் இப்பிரச்சினையில் ஈடுபட்டதிலும் வியப்பில்லை. சிங்கள உத்தியோகத்தர் இன்று வெளிக்காட்டும் மேலாதிக்க உணர்வுகள் கல்வி வேலைவாய்ப்புக்காக ஏற்பட்ட உயர் மட்டப் போட்டிகளுடன் இணைந்தவையாகும்.



சிங்களப் புத்திஜீவிகளிலும், தீவிர, முற்போக்காளரிலும் மிகச் சிறு பகுதியினர் தவிர ஏனைய முழுச் சிங்கள இனமும் - தொழிலாளர், விவசாயிகள், குட்டி பூர்ஷ்வாக்கள் (மாணவர், இளைஞர் உள்பட) பூர்ஷ்வாக்கள் (பெரும் வியாபாரிகள், தொழிற்றுறையாளர், உத்தியோகத்தர்) ஆகியோர் நாட்டில் அலைபோல் கிளர்ந்த சிங்கள பௌத்த மேலாதிக்க வெறிவாதத்துக்குள் அகப்பட்டுள்ளனர். சிங்கள பௌத்த மேலாதிக்க வெறிவாதத்தின் அடிப்படையாக அமைந்த சிங்களவருக்கும் சிறுபான்மை இனங்களுக்கும் இடையே உள்ள முரண்பாடுகளைப் பின்வருமாறு சுருக்கிக் கூறலாம்:

(அ) 1977ஆம் ஆண்டு தொடக்கம் வேகமடைந்த திறந்த பொருளாதாரக் கொள்கையால் அதிகரித்த சிங்கள, தமிழ், முஸ்லீம் வாணிப முதலீடுகள். கைத் தொழிலாளர், பெருந் தொழில்கள் ஆகியவற்றுக்கிடையே ஏற்பட்ட போட்டிகள்.

(ஆ) சிங்கள தமிழ்ச் சமூகங்களின் உத்தியோகத்தருக்கிடை ஏற்பட்ட போட்டி.

(இ) சகல இனங்களையும் சார்ந்த சிறுதொழில் செய்வோர், கடைக்காரர், குட்டி வியாபாரிகள் முதலியோருக்கு இடையிலுள்ள போட்டி.

(ஈ) குறைவாக உள்ள அரசாங்க வேலைகளுக்கு, சிங்களவர் தமிழருக்கு இடையே ஏற்பட்ட போட்டி.

(உ) பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள் என்பவற்றில் நுழைவதற்கான தீவிர போட்டியும், இவ்விடயத்தில் சிங்களவருக்கும் தமிழருக்கும் இடையில் அதிகரித்த கசப்பான இனவாத குற்றச்சாட்டுகளும்

(ஊ) பணவீக்கம், வேலையின்மை, சிங்களப் பத்திரிகையுலகில் தொடர்ந்து நடைபெறும் இனவாதப்



படிப்பகம்

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

பிரசாரம் ஆகியவற்ருல் தொழிலாளர் வர்க்கத்தினரிடையே சிறுபான்மைத் தொழிலாளருக்கு எதிராக வளர்க்கப்பட்ட பகைமை யுணர்வு.

(எ) வியாபாரத் தொழிற் போட்டிகள், இனவாதப் பிரசாரம் ஆகியவற்ருல் சிங்கள கிராமப்புற மக்களுக்கும் பெரும் தோட்டத் தொழிலாளருக்கும் இடையே ஏற்பட்ட பகைமை உறவு.

## சிங்கள பௌத்த அரசியல் யாப்பின் அங்கீகாரம்

தமிழ்ச் சிறுபான்மையினருக்கு எதிராக பிரசாரப் போர் 1970களில் தீவிரப்பட்ட வேளை, சிங்கள பௌத்த கருத்தியல் பத்தாண்டுகளில் இடம் பெற்ற இரு புதிய அரசியல் யாப்புகளின் மூலம் (1972ஆம் ஆண்டு பண்டாரநாயக்காவின் அரசியல் யாப்பு, 1978ஆம் ஆண்டு ஜயவர்த்தனவின் அரசியல் யாப்பு ஆகியவை) சட்ட அங்கீகாரமும் பெற்றது.

எஸ். எல். எவ். பி., எல். எஸ். எஸ். பி., கம்யூனிஸ்ட் கட்சி ஆகியவை இணைந்த சிறிமா பண்டாரநாயக்கா தலைமையிலான இடதுசாரி ஐக்கிய முன்னணி 1970ஆம் ஆண்டு மாபெரும் வெற்றி பெற்றது. நெருக்கடி நிலையை அடைந்த இனப் பிரச்சினைக்கு அவ்வரசு தீர்வு ஏற்படுத்தும் என நம்பப்பட்டது. ஆனல் சிறுபான்மையினர் இக்கூட்டரசின் காலத்தில் (1970—1977) ஏமாற்றமேயடைந்தனர். குறிப்பாக 1972ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட அரசியல் யாப்பு மேலும் ஏமாற்றமளித்தது. அரசியல் யாப்பை எழுதியவரும், எல். எஸ். எஸ். பியின் தலைவரும்,யாப்பு அலுவல்கள் அமைச்சருமான கலாநிதி கொல்வின் ஆர். டி. சில்வா அந்த யாப்பின் தீவிர அம்சங்களுக்கு அழுத்தம் கொடுத்தார்: எதிர்பார்க்கப்பட்ட "சோஷலிச ஜனநாயகம்" சிறுபான்மையினரின் பார்வையில் சிங்கள பௌத்தர்களுக்கு மட்டும் உரியதாக அமைந்தது. இதனல் அது சோசலிசமாகவோ அல்லது ஜனநாயகமாகவோ அமையவில்லை. 1977ஆம் ஆண்டு யூ. என். பியின் மாபெரும் வெற்றிக்குப் பின்னர் 1978ஆம் ஆண்டு புதிய அரசியல் யாப்பு ஒன்று வரையப்பட்டது. இது ஜனநாயக சோசலிசத்தை அடிப்படையாகக் கொண்டதாகவும் சிறுபான்மையினருக்கு அதிகளவு உரிமைகளை வழங்குவதாகவும் கூறப்பட்டது. ஆனல் இந்த அரசியல் யாப்பு சிங்கள பௌத்தர்களுக்கே முதன்மையளித்தது என்பதில் சந்தேகமில்லை.



## சிங்களம் மட்டும்

1948ஆம் ஆண்டிலிருந்து 1972ஆம் ஆண்டுவரை அமுலிலிருந்த அரசியல் யாப்பு அடிப்படை உரிமைகள் பற்றியோ. மொழி, மதம் பற்றியோ எத்தகைய தீர்மானமும் கொண்டிருக்கவில்லை, ஆனல் இந்த யாப்பின் முக்கிய பகுதியான 29ஆம் பிரிவு (பி. சி.) ஏனைய சமூகத்தவருக்கோ, சமயத்தவருக்கோ இல்லாத கட்டுப்பாடுகளை இன்னேர் சமூகத்தையோ சார்ந்தவருக்கு விதிக்கும் சட்டங்களை பாராளுமன்றம் இயற்றமுடியாது என்றும், எந்த ஒரு சமூகத்தையோ, சமயத்தையோ சார்ந்தவர்களுக்கு இல்லாத சலுகைகளையும் வசதிகளையும் ஏனைய சமூகத்தவருக்கோ சமயத்தவருக்கோ பாராளுமன்றம் அளிக்கமுடியாது என்றும் கூறியது.

இடதுசாரிக் கட்சிகளின் முக்கிய பங்களிப்புடன் தயாரிக்கப்பட்ட 1972ஆம் ஆண்டு அரசியல் யாப்பு சிறுபான்மையினருக்கு இருந்த பாதுகாப்புகளை ஒழித்துக் கட்டியது. இந்த யாப்பு (7ஆவது பிரிவு) "இலங்கையின் அரசகரும மொழி, 1956ஆம் ஆண்டு அரசகரும மொழிச் சட்டத்தின் பிரகாரம் சிங்களமாகவே இருக்கும்" என்ற வசனத்தைக் கொண்டிருந்ததன் மூலம் 25 வருடங்களாக இருந்து வந்த "சிங்களம் மட்டும்" என்ற தத்துவம் நிலைநிறுத்தப்பட்டது. தமிழ் மொழியைப் பொறுத்தவரை "தமிழ்மொழியின் உபயோகம் 1958ஆம் ஆண்டு தமிழ்மொழி விசேட சலுகை சட்டத்துக்கு இணங்கியதாய் இருக்கும்" என இந்த யாப்பு



படிப்பகம்

www.padippakam.com

நன்றி - நூலகத்திட்டம்

அறிவித்ததுடன் இச்சட்டத்திலுள்ள எந்த விதியும் "எவ்விதத்திலும் யாப்பின் ஒரு சலுகையாகக் கொள்ளப்படக் கூடாது" பிரிவு 8 (2) என்று கூறியது. இவ்வாறு சிங்கள மொழிக்கு அரசகருமமொழி என்ற விசேட யாப்பு அந்தஸ்து வழங்கப்பட தமிழ்மொழி சாதாரண சட்ட அந்தஸ்தையே பெற்றது. இத்துடன் 1972ஆம் ஆண்டு யாப்பு "எல்லாச் சட்டங்களும் சிங்களத்திலேயே இயற்றப்படும்" எனவும், "அவற்றுக்குத் தமிழ் மொழி பெயர்ப்பு இருக்கும்" எனவும் கூறியது. மேலும் "இலங்கை எங்கிலும் நீதிமன்றங்களின் மொழி சிங்களம் எனவும், நீதிமன்ற ஆவணங்கள் சிங்கள மொழி மூலமே இருக்கும்" எனவும் கூறியது. (பிரிவு 9, 11) வடக்கிலும் கிழக்கிலும் விசாரணை அதிகாரம் உள்ள நீதிமன்றங்களில் தமிழ்மொழியைப் பயன்படுத்தவும் இப்பகுதி மக்கள் விண்ணப்பங்களைத் தமிழில் சமர்ப்பிக்கவும், விசாரணைகளிற் தமிழிற் பங்குபற்றவும் விதிகளை இயற்ற பாராளுமன்றத்துக்கு அதிகாரம் இருந்தது.

1978ஆம் ஆண்டு வரையப்பட்ட யாப்பு இந்த அம்சங்களில் குறிப்பிடத்தக்க சில மாற்றங்களைச் செய்தது; சிங்களம் யாப்பு ரீதியாக அரசகரும மொழியாகத் தொடர்ந்திருக்கும் அதே சமயம் தமிழும் சிங்களமும் "தேசிய மொழிகளாகவும்" ஏற்றுக்கொள்ளப்பட்டன. நிர்வாக மொழியாகவும் இலங்கையின் சகல பகுதிகளிலும் உள்ள நீதிமன்றங்களின் மொழியாகவும் சிங்களம் அமைந்தது. நிர்வாகப் பயன்பாடுகளுக்காகவும் பொது நிறுவனங்களால் மேற்கொள்ளப்படும் தொழில் கொடுக்கல் வாங்கல்களிலும் தமிழைப் பயன்படுத்துவதற்கு இடமிருந்தது. இதற்காக இரு மொழிகளிலும் எல்லாச் சட்டங்களையும் வெளியிடுவதற்கு இடமிருந்தது. மேலும் வட கிழக்கு மாகாணங்களில் நீதிமன்றங்களில் தமிழ் பயன்படவும் இடமளிக்கப்பட்டது.

இத்தகைய சலுகைகள் இருந்தும் சிங்களமொழிக்கும் பௌத்த சமயத்துக்கும் முதன்மையான விசேட அந்தஸ்தை



யாப்பு தெளிவாக அளித்தது, சிறுபான்மை இன சமயக் குழுக்களை இரண்டாந்தர இடத்துக்கே தங்கியது.

## பௌத்தம் மட்டும்

1972ஆம் ஆண்டின் அரசியல் யாப்பு பௌத்த மதத்துக்கு விசேஷ சலுகைகளை யாப்பின் 6ஆம் பிரிவு "பௌத்தத்துக்கு இலங்கை முதன்மையான இடம் கொடுக்க வேண்டுமெனவும், ஏனைய மதங்களுக்கு உரிமைகளைத் தரும் அதே சமயம் (சகல பிரஜைகளுக்கும் சிந்தனைச் சுதந்திரம், மத சுதந்திரம் உண்டு என 18ஆம் பிரிவு (1) கூறுகிறது. பௌத்த மதத்தைப் பாதுகாப்பதும் போஷிப்பதும் அரசின் கடமை" என்றும் கூறுகிறது. முன்பு இருந்த யாப்புகள் பௌத்தத்துக்கு இத்தகைய சலுகைகளைக் கொடுக்கவில்லை.

பௌத்தம் 'அரச மதமாக' ஆக்கப்படாவிடினும் அரசின் முன்னைய சமயச்சார்பற்ற தன்மை மாறியது. புகழ் பெற்ற றொட்ஸ்கியவாதியான கலாநிதி கொல்வின் ஆர். டி. சில்வா "இந்நாட்டு வரலாற்றில் பௌத்தம் முக்கியமான இடம் பெற்றுள்ளது. அந்த முக்கியத்துவம் அங்கீகரிக்கப்பட வேண்டும்" என்று கூறி, இச்சலுகையை யாப்பில் சேர்ப்பதற்குக் காலாக இருந்தார் என்பது முரண்நகைப்புத் தருவதாகும்.

1978ஆம் ஆண்டு யாப்பு பௌத்த மதத்தின் "முதன்மையான இடத்தை" மேலும் யாப்பு ரீதியாக உறுதிப்படுத்தியதுடன் பௌத்த சமய ஸ்தாபனங்களுக்கும் சிறப்பிடம் அளித்தது. பிரிவு 9 பின்வருமாறு கூறியது: சகல சமயங்களுக்கும் 10ஆம் 14ஆம் பிரிவில்(சிந்தனைச் சுதந்திரம், மதசுதந்திரம், எண்ணச் சுதந்திரம் ஆகியவற்றை அளிக்கும்) கூறப்பட்ட உரிமைகளை அளிக்கும் அதே சமயம் பௌத்த சமயத்துக்கு முதன்மையான இடத்தை அளிப்பதும் பௌத்த சாசனத்தைப் பாதுகாப்பதும் போஷிப்பதும் இலங்கைக் குடியரசின் கடமையாகும். இவ்வாறு



படிப்பகம்

www.padippakam.com

நன்றி - நூலகத்திட்டம்

1972ஆம் ஆண்டு 78ஆம் ஆண்டு யாப்புகள் சிங்கள பௌத்தத்தின் விசேடமாக, மேலாண்மை நிலையை அங்கீகரிக்குமாறு சிங்கள பௌத்தர்களின் வற்புறுத்தலுக்கு யாப்பு ரீதியான அமைதி வழங்கின.

## அடிப்படை உரிமைகள்

1972ஆம் ஆண்டு யாப்பில் வேறுபாடு காட்டும் சட்டம் யாதெனில் அடிப்படை உரிமைகள் தொடர்பாக "நபர்களுக்கும்" "பிரஜைகளுக்கும்" இடையில் ஏற்படுத்திய வித்தியாசமாகும். எல்லா நபர்களும் சட்டத்தின் முன் சமமானவர்கள் என்றும் சட்டத்தின்படி அன்றி எந்த நபருக்கும் வாழ்க்கை, சுதந்திரம், பாதுகாப்பு என்பவை மறக்கப்படவில்லை என்றும் பிரகடனம் செய்தபோதிலும்-(பிரிவுகள் 18 (அ) (பி) பிரஜைகள் மாத்திரமே சிந்தனை, கருத்து, மதம், பேச்சு, பிரசுரம், நடமாட்டம், வசிப்பிடத் தேர்வு ஆகியவற்றுக்கான சுதந்திரத்தையும், தமது சொந்தக் கலாசாரத்தை வளர்ப்பதற்கான உரிமையையும் உடையவர்கள் என்றும் கூறப்பட்டுள்ளது. மேலும் பிரஜைகள் இனம், சமயம், சாதி, பால் ஆகியவை பற்றி வேற்றுமைப் படுத்தப்படமாட்டார்கள்; சட்டப்படி அன்றி அவர்களைக் கைதுசெய்யவோ, சிறையிடவோ தடுத்து வைக்கவோ முடியாது.

(பிரிவு 181, சி-1)

பிரஜைகள் அல்லாதோருக்கு அடிப்படை உரிமைகளை மறுத்தமை, இலங்கைப் பிரஜாவுரிமை பெறாத இந்திய வம்சாவழியினரான நாடற்ற தோட்டத் தொழிலாளரையே முக்கியமாகப் பாதித்தது, குடி உரிமையில் அக்கறை கொண்டவர்கள். தொழிற்சங்கங்கள்,சிறுபான்மை அரசியல் ஸ்தாபனங்களாலும் யாப்பின் இப்பகுதி மிகவும் விமர்சிக்கப்பட்டது. இக்குழுவினரின் அடிப்படை உரிமைகளின் மறுப்பு 1978ஆம் ஆண்டு யாப்பில் திருத்தப்பட்டது. நபர்கள், பிரஜைகள் என்ற வேறுபாடு நீக்கப்பட்டது; சிந்தனை, கருத்து, சமயச் சுதந்திரம் அளிக்கப்பட்டது. சட்டத்தின்முன் யாவரும் சமம் எனப்பட்டது. கடைகள், ஹோட்டல்கள், வழிபாட்டுத் தலங்கள் ஆகியவற்றுக்கு எவரும் செல்லலாம் என்றும் கூறப்பட்டது. மேலும் எந்த நபர்களையாவது சித்திரவதைக்கோ மோசமான தண்டனைக்கோ ஆளாக்க முடியாது: அவர்களை சட்ட ஒழுங்குகளுக்கு மாறாக கைதுசெய்யவோ, தண்டிக்கவோ முடியாது என்றும் குற்றம் நிரூபிக்கப்படும்வரை அவர்கள் நிரபராதிகளாகவே கருதப்படுவர் என்றும் கூறப்பட்டது. மேலும் 10 வருடம் இலங்கையில் தொடர்ந்து வசிக்கும் 'பிரஜைகளும்', 'நபர்களும்' இனம், மதம், மொழி, சாதி, பால், அரசியற் கருத்து, பிறந்த இடம் ஆகியவற்றின் அடிப்படையில் வேறுபடுத்தப் படமாட்டார்கள் என்றும் பேச்சு, பிரசுரம், அமைதியாக ஒன்றுகூடல், நடமாட்டம், சொந்தக் கலாசாரத்தை முன்னேற்றுதல் சட்டரீதியாக தொழில் செய்தல் என்பவற்றுக்கு உரிமையுடையவர்கள் என்றும் கூறப்பட்டது. (பிரிவு 10 - 14)

1972ஆம் ஆண்டு 78ஆம் ஆண்டு யாப்புகள் சிங்கள மொழிக்கும், பௌத்த சமயத்துக்கும் விசேட அந்தஸ்து அளித்ததன் மூலம், சிறுபான்மையினரது உரிமைகளைப் பெரும்பான்மை இனத்துக்குக் கீழ்ப்படுத்தின. இதன் மூலம் ஒரு நூற்றாண்டுக்கு மேலாக வலிமை பெற்று வந்த சிங்கள பௌத்தரின் கோரிக்கைகளுக்கு சட்டபூர்வமான அங்கீகாரமும் கிடைத்தது.

## 11. இனஉணர்வின் தொடர்ந்த நீடிப்பு

இலங்கையில் 1983 யூலையில் தமிழர்களுக்கு எதிராக நடைபெற்ற படுகொலையின்போது சிங்களவரிடையே உள்ள பரந்த மனப்பான்மை உள்ளவர் அப்பயங்கர கொடுமைகள் கண்டு குற்ற உணர்வும் வெட்கமும் அடைந்தனர். சில அரசியல் கட்சிகளும் தொழிற் சங்கங்களும் பகளிர் குழுக்களும் சமய இயக்கங்களும் மனித உரிமை இயக்கங்களும் இப்பயங்கர செயலை கண்டு வெட்கமும் துக்கமுமடைந்தனர். பிசப் லக்ஸ்மன் விக்கிரமசிங்கா மட்டுமே சிங்கள மக்கள் அனைவரினதும்





படிப்பகம்

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

குற்ற உணர்வை ஓர் உணர்வு பூர்வ கடிதம் மூலம் தெரிவித்தார் அக்கடிதம் பரவலான விளம்பரம் பெற்றது. இவ்வாரம்ப நடவடிக்கைத் தொடர்ந்து பல்வேறு உயர்மட்டங்களிலும் அண்மைய வருடங்களில் வளர்ந்துவரும் இன வன்முறைக்குரிய காரணங்களை விவரித்தனர். அத்தோடு வர்க்க உணர்வின் வீழ்ச்சி பற்றியும் இனவுணர்வின் மேலாதிக்கம் எல்லா வர்க்கத்தினரிடையேயும் வளர்ந்திருப்பது பற்றியும் பலரிடையே பேசப்பட்டு வந்தது.

*1883 — 1983* வரலாற்றுக் காலகட்டத்தில் இனமுரண்பாடு காரணமாக சிங்கள பௌத்தர்களிடையேயும் ஏற்பட்ட வன்முறை பற்றி ஆராயும் முயற்சியே இதுவாகும். முன்னைய அத்தியாயங்களிலுள்ள ஆய்வுகளில் கூறப்பட்டபடி இக்கால கட்டத்தில் சிங்கள பௌத்தர்களின் கருத்தியல் தவறான நினைவூட்டங்களில் திரித்துக் கூறப்பட்டுள்ளது. அவற்றின் முக்கிய அம்சங்களை பின்வருமாறு சுருக்கிக் கூறலாம்:

1. வரலாற்றுப் பணிக்காகத் தேர்ந்த மக்கள் தாமே எனவும் பண்டைய சிறப்புக்களைக் கொண்ட இனத்தவர் எனவும் தம்மைக் கூறிக் கொண்டமை.

2. சிங்களவர் இப்பிரதேசத்தில் சிறுபான்மையினர் பூகோளப் பரப்பில் இங்கு மட்டுமே வாழ்பவர், அதற்கும் ஆபத்து வந்துள்ளது எனவும் எண்ணிக் கொண்டமை.

3. சிங்களவர் நீண்ட காலமாகவே கிராமியப் பொருளாதாரத்தில் தாம் சாதாரண விவசாய உற்பத்தியாளர் எனவும் பூமியின் மைந்தர் எனவும் உண்மையான மதம், ஒழுக்கம், சமாதானத்திலும் நம்பிக்கையுடையவர் எனவும் பிற இனத்தவர் பல்வேறு விதமாக ஒடுக்கவும் சுரண்டவும் இடமளித்த அப்பாவிகள் எனவும் தன்னுணர்வு கொண்டமை.



4. சிங்களர் அல்லாதவரும் பௌத்தரல்லாதவரும் எதிரிகள் என்ற பார்வை பிறர் இரத்தத்திலும் மதத்திலும் அந்நியர் தந்திரசாலிகள், பேராசையான உலோபிகள், எல்லாத் துறைகளிலும் அதர்ம முறையில் போட்டியிடுவோர், அப்பாவி சிங்கள மக்களின் வேலைவாய்ப்புகள், வாணிபம், கல்வி வாய்ப்புகளை பறித்தெடுப்போர் என்ற பார்வை.

மேற்கூறப்பட்ட சில அம்சங்கள் வழமையான கூக்குரல்களே ஆயினும் இப்பொய்மையான கருத்துக்கள் பல்வேறு தவறான விளக்கங்களைப் பெற்று சிறுபான்மையினருக்கு எதிரான வன்முறையை நீதிப்படுத்தப் பயன்பட்டன பல சிங்களவர் இவ்வினக் கலவரங்களை எதிர்பாராத நிகழ்வாக கண்டபோதும், சிறுபான்மையினரின் தீவிர எதிர்ப்புக்கு பெரும்பான்மை இனத்தவரின் பதில் நடவடிக்கை என சமாதானம் கூறினர். சிங்களவர், முஸ்லிம்களிடையே 1915-ல் நடைபெற்ற கலவரம் பற்றி அனகாரிய தர்மபாலா கூறினார்: அமைதியை விரும்பும் சிங்கள மக்கள் அந்நியர்களின் அவமதிப்பை இனிமேலும் பொறுக்க முடியாது எனக் காட்டினர். நாடு முழுவதும் ஒரே நாளில் முஸ்லிம்களுக்கு எதிராக திரண்டெழுந்தனர், இதற்கு மேலாக சிங்களவர்களில் ஒரு பகுதியினர் இனப்போராட்டத்தை பண்டையப் போராட்டத்தின் தொடர்ச்சியாகக் கண்டனர். சிங்களவரும் தமிழரும் சரித்திரகாலத்து எதிரிகள். துட்டுகைமுனுவுக்கும் எல்லாளனுக்கும் இடையில் நடைபெற்ற யுத்தம் சிங்கள தமிழரிடை ஏற்பட்ட அரசியல் போராட்டம், சோழர் படையெடுப்பை எதிர்த்த சிங்கள மன்னர்கள் அண்மைய பிரச்சாரத்தில் மீண்டும் உயிரூட்டப்பட்டு புகழப்பட்டனர். 1983 ஜூலைக்கு பின்னர் சிங்கள கட்சிகளின் தலைவர்களும் பௌத்த குருமாரின் பல அங்கத்தவரும் விடுத்த அறிக்கைகள் இதற்கு சான்றாகும்: சுருங்கக் கூறின், இவ்விளக்கம் தற்பாதுகாப்பு வன்முறையென நீதிப்படுத்துகின்றது.

தலைமறைவாகவும் நகரின் குடிசைப் பகுதிகளில் வாழும் குற்றவாளிகள், கேடிகள், உதிரிப்பாட்டாளிகள்



படிப்பகம்

www.padippakam.com 

(லும்பன்கள்) ஆகியோரே கலவரங்களுக்கு காரணமானவர் என்பது தவறான நம்பிக்கையாகும். இவர்கள் பரந்துபட்ட சிங்கள மக்களைப் பிரதிபலிக்கவில்லை என்று கூறப்பட்டது. தசாப்தங்களாக இலங்கையில் நடைபெற்ற கலவரங்களுக்கு இத்தகைய விளக்கங்கள் கூறப்பட்டன. 1915ல் நடைப்பெற்ற கலவரம் கொழும்பிலுள்ள குற்றவாளிகள், பிறபகுதிகளில் வாழ்ந்து வரும் இத்தகையோர் சார்ந்த இயக்கமே கொடுமைகள் புரிந்தன என்று உத்தியோகத்தரால் கூறப்பட்டது. 1958ல் நடைப்பெற்ற கலவரம் குண்டர்களால் நடத்தப்பட்டது, என்று பொலிசார் கூறினர். இவற்றைப் போலவே 1983 ஜூலையில் நடந்த தாக்குதல் குண்டர்களாலும் குற்றவாளிகளாலும் நடத்தப்பட்டது என்று கூறினர். இத்தகைய விளக்கங்களால் சிங்கள இனத்தவர் இக்கலவரத்திற்கு பொறுப்பில்லை, சட்ட ஒழுங்கை கடைப்பிடிக்காத சமூக விரோதிகளே காரணம் என்றும் கூறினர்.

## சதிச்செயல் என்ற கோட்பாடு

முன் கூறியவை போன்று இனக் கலவரத்திற்கு காரணம் இடதுசாரிகளே எனக் குறைகூறி மற்றொரு வாதமும் வைக்கப்பட்டது 1958லும் பின்னர் 1983லும் கலவரத்தில் ஈடுபட்ட குற்றவாளிகள் இடதுசாரி தீவிரவாதிகளால் (கிளர்ச்சியாளர்கள், நக்சலைட்டுகள், பயங்கரவாதிகள்) அரசை வன்முறையால் வீழ்த்துவதற்கு தூண்டிவிடப்பட்டனர் என்றும் கூறப்பட்டது. மேலும் 1958 கலவரம் சர்வதேச கம்யூனிச இடதுசாரி கூலிகளால் கிளப்பிவிடப்பட்டது போலவே 1983லும் நடைபெற்றது என்றனர். இனக் கலவரத்தின் நோக்கம் ஆளும் வர்க்கத்தின் நிலையை ஈடாட்டம் செய்வது என்ற முடிவுடன் இத்தகைய இனவன்முறை முரண்பாடுகளின்போது அரசிற்கு எதிராக சதி செய்யும் பல்வேறு கோட்பாடுகள் முன்வைக்கப்பட்டன. முதலாவது உலக யுத்த வேளையில் 1915ல் நடைபெற்ற கலவரம் ஜெர்மனியரால் தூண்டிவிடப்பட்டதாக பிரித்தானியர் சந்தேகித்தனர். இலங்கையிலும் வெளிநாட்டு சக்திகள் 1983 ஜூலையில் இலங்கை அரசை நிலைகுலையச் செய்ய முயன்றதாகக் கூறப்பட்டது.



இத்தகைய தவறான விளக்கங்களை நாம் எளிதில் ஒதுக்கிவிடலாம். ஆனால் நாம் மேலாதிக்க வெறிக்கும் பலமான சமூக பொருளாதார காரணங்களுக்கும் காரணமான கருத்தியல் ரீதியான உட்பொருளைக் காணவேண்டும், அப்பொழுதே சென்ற நூறு ஆண்டுகள் காலமான இனமுரண்பாடுகளின் பின்னணி அமைப்பைப் புரிந்துக்கொள்ள முடியும். ஆயினும் இவ்வேளையில் சமூக பொருளாதார யதார்த்தங்களுடன் கருத்தியல்கள் இணைந்திருப்பதையும் கருத்தியல்கள் எவ்வாறு தானியங்கியாக நிலைபெற முடியுமென்பதையும் ஆராய முடியும்.

## சமூக, பொருளாதார கருவிகள்

பொருளாதார சமூக பின்னணிப் பார்வை மூலம் இன வன் முறைக்கு முழுமையான விளக்கம் கூற முடியாது. ஆயினும் இதுவே பிரச்சினையை ஆராய்வதற்கு சில முக்கிய ஆதாரங்கள் தரமுடியும். காலனித்துவ, நவகாலனித்துவ சூழலில் உருவாகும் புறச் சுழலிலுள்ள (Periphery) நாடுகளில் முதலாளித்துவம் அதன் சமனற்ற அபிவிருத்தியும் பிற்போக்குத் தன்மையும் பெரும்பான்மை மக்களின் வாழ்க்கையை சீராக மாற்ற முடியாத தன்மையையும் ஆராய்வது இன முரண்பாட்டை நன்கு தெரிந்துக் கொள்வதற்கு உதவக்கூடிய முக்கிய அம்சங்களாகும். அத்துடன் ஒவ்வொரு வர்க்கத்தினதும் அரசியல் பொருளாதார உணர்வுகளையும் குறைபாடுகளோடு வர்க்க அமைப்பையும் புரிந்துகொள்வது அத்தியாவசியமாகும்; இவர்கள் அரசியல் செல்வாக்கு பெற முடியாத நிலைகளிலும் நாட்டுவளம் ஏற்றத்தாழ்வாக பகிர்ந்தளிக்கப்பட்ட சூழலிலும் உள்ளனர். இலங்கையின் காலனித்துவ காலத்திலும் பின்னரும் உள்ள பிரதான பிரச்சினை குறை அபிவிருத்தியும் நிலையற்ற பொருளாதாரமுமாகும். வறுமை, குறைந்த வளம், துரித வளர்ச்சியின்மை, வேலையில்லாத் திண்டாட்டம், பணவீக்கம் ஆகியன சமூக அமைப்பை பல்வேறு வகையில் அச்சுறுத்திய



படிப்பகம்

யதார்த்த நிலைகளாகும்; இந்நிலையால் பெரும்பகுதி மக்களுடைய அடிப்படை தேவைகளையும் வழங்க முடியாத நிலை ஏற்பட்டது. பொருளாதார பாதுகாப்பும் சமூக அந்தஸ்தும் மக்கள் தேவையைப் பூர்த்தி செய்ய முடியாத நிலையில் வாய்ப்பற்ற மக்கள் முழுச் சமூக அமைப்பையும் எதிர்க்காது தமது துன்ப நிலைக்கு சிறுபான்மையினர் பெற்ற வாய்ப்புகளை காரணமென்று உணர்ச்சி வசப்பட்டனர். பௌத்தர்களுக்கு வாய்ப்பு கிட்டாமைக்கு கிறிஸ்தவர்களைக் குற்றம் சாட்டினர். சிங்கள கடைக்காரர், வணிகர், சிறுவியாபாரிகள் ஆகியோர் தமது தொல்லைகளுக்கு முஸ்லிம்களும் இந்திய போட்டியாளருமே காரணம் என்றனர். வங்கிக் கடனைப் பெறமுடியாத கஷ்டத்திற்கு செட்டியார்களையும் பட்டாணியர்களையும் குறைகூறி வெறுத்தனர். வேலை வாய்ப்பின்மைக்கு (குறிப்பாக பொருளாதார மற்ற கால கட்டங்களில்) பெருந்தோட்டங்களிலும் நகர்ப்புறங்களிலும் வேலை செய்த இந்தியத் தொழிலாளரை வெறுத்தனர். கல்விக்கும் கௌரவமான தொழில்களுக்கும் ஏற்பட்ட முரண்பாட்டு அடிப்படையில் இலங்கைத் தமிழர்களை எதிர்த்தனர். சகல விடங்களிலும் பொருளாதாரத்திலும் சமூகத்திலும் ஏற்பட்ட வாய்ப்பின்மைக்கு சிங்கள மக்களின் சில் வகுப்பினர் சிறுபான்மையினரையே கருங்காலிகளாகக் கண்டனர்; இம்முறை பிரித்தானியருக்கும் சுதந்திரத்திற்கும் பின்னர் வந்த ஆட்சியாளருக்கும் பிரித்தாளும் கொள்கையை தொடர்வதற்கு இவ்வாறான கருத்துகள் எளிதாகப் பயன்பட்டது.

இத்தகைய பின்னணியில் இனக் கலவரத்திற்கு பல்வேறு விளக்கங்கள் கூறப்பட்டன. குடித் தொகையில் ஒரு பகுதியினரின் பொருளாதார சமூக அதிருப்தியினதும், விரக்தியினதும் வெளிப்பாடே இக்கலவரங்கள் என்றும் கூறப்பட்டது. இதற்கு மதம் அல்லது இனவேறுபாட்டு பிரச்சாரம் தூண்டிவிடப்பட்டது. 1915ஆம் ஆண்டுக் கலவரத்தை ஆராயும்போது அது முற்றிலும் சமய சண்டையல்ல. பொருளாதார சீர்குலைவு, பண்டங்களின் விலையேற்றம்,



அக்கால அரசியல் நிலை ஆகியவற்றின் பிரதிபலிப்பு என்றே கூறவேண்டும். இதே போலவே 1930களில் நடைபெற்ற மலையாளி எதிர்ப்பியக்கத்திற்கு அவ்வேளை நிலவிய பொருளாதார மந்த நிலையால் ஏற்பட்ட வேலையில்லாத் திண்டாட்டமே காரணமாகும். 1983 யூலை கலவரத்திற்கும் இவ்வாறே சிலர் காரணம் கண்டனர். 1975—1980 கால கட்டத்தில் தனியார் பகுதியின் மெய்கூலி ஏறக்குறைய இருமடங்காயிற்று. ஆனல் பணவீக்கத்தினுல் 1980—1983 காலகட்டத்தில் நாலில் ஒரு பங்காக இது குறைந்தது. இந்நிலையில் பெரும்பாலும் பாதிக்கப்பட்ட சிங்கள மக்கள் திறந்த பொருளாதாரக் கொள்கையால் தமிழ் மக்களே பயன் பெறுகின்றனர் என ஆத்திரமுற்றனர். மேலும் அரசுப் பகுதியில் நுழைய முடியாது தடுக்கப்பட்ட தமிழர் தனியார் பகுதியில் நுழைந்து சுயவேலையில் ஈடுபடுகின்றனர். இந்நிலையால் நிலையான கூலி உழைப்போர், விலையேற்றத்தால் பாதிக்கப்படுவது போல சுயதொழில் செய்வோர் பாதிக்கப்படவில்லை. இவ் ஒப்பீடும் வேலை வாய்ப்பின்மையுமே சிங்கள மக்கள் 1983 இனவன்முறைக்கு தூண்டிய ஒரு காரணியாக காணப்பட்டது.

1977ன் பின் ஏற்பட்ட இனக்கலவரம், பகைமை நிலை ஆகியவற்றுக்கு பொருளாதார முறையில் நியூட்டன் குணசிங்கா அவர்கள் விளக்கம் கூறும்போது திறந்த பொருளாதாரக் கொள்கை பல்வேறு குழுக்களையும் சமனற்ற நிலையில் முன்னேறச் செய்தது என்றார்: மேலும் இன அடிப்படையில் வளர்ச்சியும், தேய்வும் ஏற்பட்டதே இனப்பகை வெடித்ததற்கு காரணமென்றார். இவ்வாய்வில் அரசால் கட்டுப்படுத்தப்பட்ட பொருளாதாரம் திறந்த பொருளாதாரத்திற்கு மாறியதும் அமைப்பியல் மாற்றத்திற்கு வழிவிட்டது என்றார்.

முக்கியமானது என்னவென்றால்..... பொருளாதாரத்தில் ஏற்பட்ட அமைப்பியல் மாற்றமாகும்..... அத்தோடு பல்வேறு இன, மத, வகுப்புக்கள் வெவ்வேறு சமூக மட்டத்தில் நின்று போட்டியிடுவதாகும்: இப்போட்டா போட்டி கருத்தியல்

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

நிலையில் அரசியல் ஆதரவும் அரசாங்கத்தின் தலையீடும் பெறுகிறது. இந்நிலையில் திடீர் என போட்டாபோட்டி விதிகள் முறிவடைய வன்முறை வெளிப்படையாகத் தோன்றுகிறது. (குணசிங்கா 1984)

இந்நிலையில் கலவரத்திற்கு காரணமானவர்கள் பட்டினத்தில் வாழும் நகர்ப்புற ஏழைகளும், லும்பன் பகுதியினருமாவர்: இவர்கள் நாட்டின் அமைதியின்மையை பயன்படுத்தி தற்காலிக பயனடைபவர்களே: இவர்கள் தமக்குக் கிடைத்த அரிய சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி, தெருவுக்கு வந்து முதலாளித்துவ சமூகத்தின் சட்ட ஒழுங்கு முறைகளை உடைத்து ஓரிரு நாள் தமது சட்ட விதிகளின்படி செயலாற்றுபவர்களே: செல்வர்கள் மேல் தமக்குள்ள சீற்றத்தைக் காட்டி பிறர் சொத்துக்களை தம்முடைய தாக்குபவர் ஆவர். இந்நிலை தெற்கு ஆசியாவில் அடிக்கடி அதிகரித்து வரும் செயலாகும்: ஏனெனில் இங்கேயே பணக்காரருக்கும் ஏழைக்குமிடையில் பெரும் இடைவெளி உள்ளது. வாய்ப்பு கிட்டாது, ஒதுக்கப்பட்ட பகுதியினர் வகுப்பு வாதப் பிரச்சாரத்தால் கொள்ளை அடிப்பதற்கு லைசென்சு வழங்குகின்றனர். இக்கால கட்டங்களில் எதிரியாக காட்டப்பட்ட சிறுபான்மையினரைக் கொள்ளையடிக்கும் வாய்ப்பை ஏழைகள் பயன்படுத்துகின்றனர். பாதிக்கப்படும் சிறுபான்மையினர் இந்தியாவில் முஸ்லிம் அல்லது சீக்கியராக இருக்கலாம் அல்லது இலங்கையில் தமிழர் அல்லது முஸ்லிம்களாக இருக்கலாம்.

சமூக பொருளாதார காரணிகளே இன முரண்பாட்டில் முக்கிய பங்கு வகிக்கின்றன என பொதுவாக கூறப்பட்ட போதும் இனவன்முறை அளவில் கருத்தியலினுடைய பங்கு கவனத்தில் கொள்ளப்பட வேண்டும். கருத்தியல் என்பதற்கே வரைவிலக்கணம் கூறுமிடத்து அவை ஒருங்கமைக்கப்பட்ட முக்கிய நம்பிக்கைகளும் குறியீடுகளும் ஆகும்: இவை ஒரு குறிப்பிட்ட மக்கள் குழுவின் சமூக வாழ்வின் யதார்த்த சாரமாகும். சிங்கள பௌத்தர்களின் நம்பிக்கைகளையும் குறியீடுகளையும், பண்டைய வரலாற்றுக் காலத்து சிங்கள பௌத்தர்களின் உணர்வுகள், பண்பாடுகளின் அமைப்பையும் வளர்ச்சியையும், அத்துடன் காலனித்துவ காலத்திற்கும் பிற்பட்ட காலத்திற்கும் உள்ளவற்றை ஆராய்வது இலங்கையின் அண்மைய இனக் கலவரத்தைப் புரிந்துகொள்வதற்கு மிக முக்கிய அம்சங்களாகும்.



சிங்கள மக்களின் உணர்வின் கூற்றுக்களை காண்பதற்கு விழிப்பாக வரலாற்று ரீதியான ஆய்வு மேற்கொள்ளப்பட வேண்டும். அவ்வேளையே அவர்கள் சிந்தனையில் மறைந்திருக்கும் பொய்மை, தவறான விளக்கங்கள், புராணீகப் போக்குகளை அம்பலப்படுத்த முடியும். ஆனால் பொய்மைக் கதைகளும் வரலாறும் ஒன்றையொன்று இறுகப் பிணைக்கப் பட்டுள்ளது. கல்விகற்ற அறிஞர்கள் அண்மையில் இரண்டையும் பிரித்து இலங்கை வரலாற்றுக்கு விஞ்ஞான ஆராய்ச்சி வழங்க முற்பட்டபோது துரோகிகளாக, பிற்போக்காளர்களாலும் பழமை விரும்பிகளாலும் கண்டிக்கப்பட்டனர். இவர்கள் முதலாளித்துவ நலன் விரும்பிய வகுப்புவாத அரசியல் வாதிகளாக, வரலாற்றை தவறாக தம் செயல்களை நீதிப்படுத்தப் பயன்படுத்து பவர்களாவர். (இனவாதமும் சமூக மாற்றமும் பார்க்க, இந்நூல் பற்றி அக்டோபரிலிருந்து டிசம்பர் 1984 வரை ஞாயிறு 'திவைன' என்ற பிரபல இதழில் கடுமையாகத் தாக்கப்பட்டுள்ளது.)

இதே நிலையே அண்டைய நாடுகளின் அனுபவமாகவும் இருந்தது. இந்தியாவில் வரலாற்று அறிஞர்களான ரோமிலா தாப்பர், H. முக்கியா, B. சந்திரா ஆகியோர் இந்திய வரலாற்றுக்கு வகுப்புவாத விளக்கம் தருவதை எதிர்த்து பள்ளிப்பாட நூல்களைத் திருத்தி எழுதினர். அவ்வேளை இந்து வெறியர்களும், பழமை விரும்பிகளும் அவை முஸ்லிம்களையும் கம்யூனிஸ்டுகளையும் சார்ந்து எழுதப்பட்டதாக கூறி அப்பாட நூல்களை நீக்கும்படி பிரச்சாரம் செய்தனர். இதே போலவே தமிழ்நாட்டிலும் முற்போக்கான அறிஞர்கள்வரலாற்றுப் பொய்மைகளான பாண்டிய, சோழ ஆட்சிகளை புகழாரம் சூட்டியும் வீரச்செயலாக்கிய பொய்மைகளைக் களைந்தனர். (வரலாற்று உண்மைகளில் நின்று



படிப்பகம்

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

புராண இதிகாசத் தன்மையைப் பிரித்தல்): அத்தோடு திராவிட இயக்கத்தின் அடிப்படையை, சமூகப் பொருளாதார ரீதியில் ஆராய்ந்தனர்: இவர்கள் எதிரிகளாக கண்டிக்கப்பட்டனர். இலஙகையிலும் க. கைலாசபதி போன்ற தமிழறிஞர்கள் சங்க காலத்தை 'பொற்காலம்' என கூறுவதை மறுத்தபோதும் பிரித்தானிய ஆட்சியை சார்ந்து சாதி மனோபாவமும் கொண்டு நின்ற ஆறுமுகநாவலர் போன்றோரை நலஞய்வு நோக்கில் க. சிவத்தம்பி மீளாய்வு செய்தபோதும் எதிர்ப்புக்கு உள்ளாகினர், ஆன்மீகத் தலைவர் நலஞய்வுக்கு அப்பாற்பட்டவர் என தமிழ் பண்டிதர்களின் கண்டனத்திற்கு உள்ளாகினர்: இவ்வாறு இனவாதம் சிங்களவரோ தமிழரோ, பௌத்தரோ, இந்துவோ பழமையிலேயே ஊறி நிற்கிறது.

இத்தகைய ஆய்வு முறையும் புதுமை விளக்கங்களும் காலனித்துவ சுதந்திர காலகட்டங்களுக்கு விரிவாக்கப்பட வேண்டும்: பிரித்தாளும் ஏகாதிபத்திய தந்திரங்கள் மீளாயப்படவேண்டும்: ஆளும் வர்க்கங்கள் பரவலான ஆதரவு பெறுவதற்காக இனவேறுபாடுகளைப் பயன்படுத்தும் யுக்திகளும் மீளாயப்பட வேண்டும். முரண்பாட்டின் கருத்தியல் மூலங்களை ஆராயும்போது கருத்தியலின் தன்னியக்கமும் உணர்வின் வடிவங்களும் பொருளாதார அடிப்படையோடு எவ்வாறு இணைந்துள்ளன என்பதும் விவாதத்திற்கு உரியதாகும். சிலரின் கூற்றுப்படி இனவேறுபாடு கருத்தியலின் ஒரு கூருக காணப்பட வேண்டும் என்பதாகும்: இது பொருளாதார மாற்றத்திற்கு அப்பாற்பட்டதும் பழமையில் வேரூன்றியதும் என்கின்றனர் சிலர்.

தேசியம், இன வேறுபாடுகள் ஆகிய சொற்கள் பற்றிய கோட்பாடுகள் மாக்ஸீய அறிஞர்களது கவனத்தை தற்போது ஈர்த்துள்ளது; மாக்ஸினதும் லெனினினதும் தேசீயம் பற்றிய ஆய்வுகள் இன்றைய நிலையில் போதிய விளக்கம் தருவன அல்ல என்கின்றனர். உதாரணமாக எரிக் ஹோப்ஸ்வாம் (ERIC HOBSBAWM) பின்வருமாறு கூறுகின்றனர்: மாக்ஸீச இயக்கங்களும் அரசுகளும் வடிவத்தில் மட்டுமல்ல



சாரத்திலும் தேசியமாக மாறியுள்ளனர். அதாவது தேசியத் தன்மை.

பெனடிக் அன்டர்சன் என்பவர் சோஷலிசம் சாராத உலகத்தில் பொருளாதாரம் அல்லது கருத்தியல் பண்பாட்டு காரணிகளுக்கு ஒருவர் எத்தனை அழுத்தம் கண்ட போதும் இன, வர்க்க உணர்வுகளும் அவற்றிடையே ஏற்படும் பொருளாதார அரசியல் காரணங்களும், கருத்தியல்களும் ஆழமாக ஆராயப்படவேண்டும். முதலாளித்துவத்திற்கு முற்பட்ட காலத்துக்குரிய கருத்தியல்கள் சாதி, மத, இன வேறுபாடுகளின் அடிப்படையானது, முதலாளித்துவத்தின் வளர்ச்சியுடன் இவை மறைந்துவிடும் அல்லது குறைந்துவிடும் என்ற கருத்தும் கவனிக்கப்பட வேண்டும்: அபிவிருத்தி அடையும் காலகட்டத்தில் இனவுணர்வு நிலைபெற்று மேலும் வளர்ச்சி அடைவதற்குரிய முக்கிய காரணத்தை அறிந்து கொள்ள வேண்டும். முதலாளித்துவ காலகட்டத்தில் நாட்டில் கல்வி ஊடுருவி நிற்கிறது; விஞ்ஞானம், தொழில் நுட்ப அறிவு பரவலாகி கோட்பாட்டளவில் பகுத்தறிவு பொருளாதாரத்தை மீறிநிற்கிறதா? இலங்கையிலுள்ள இடதுசாரிகள், பரந்துபட்ட தொழிலாளி வர்க்கம் பற்றி, புரிந்துகொள்ள வேண்டியது ஒன்றுண்டு. அனைத்து இனங்களையும் சார்ந்த தொழிலாள வர்க்கத்தினர் ஐக்கியப்பட்டு தீவிர வர்க்கப் போராட்டத்திற்கு தலைமை தாங்குமளவில் வர்க்க உணர்வின் மட்டம் வளர்ந்தபோதும் இப்போதும் இனவேறுபாடுகளுக்கு ஏன் அடிமையாயினர்?

இனவேறுபாட்டில் மக்கள் பிரிவது தொழிலாள வர்க்கத்தின் நலனைச் சார்ந்ததல்ல: இனப்பகையை வளர்ப்பதும் வன்முறை வெடிப்புக்களும் முதலாளிகளுக்கும் நலன் தருவதில்லை.. இன்றைய திறந்த பொருளாதார தேவைகளிலும் அவற்றின் வெற்றிகளும் வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு கவர்ச்சி தருவதாகும். ஆனல் இதே திறந்த பொருளாதார கொள்கையின் பின்னல் நிற்கும் முதலாளித்துவ வர்க்கத்தின் சில பகுதியினரே இனவுணர்வை தூண்டி



படிப்பகம்

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

விடுதற்கு பொறுப்பானவர் மட்டுமல்ல இனப் பிரச்னைக்கு அமைதியான தீர்வு காண்பதற்கும் எதிர்ப்பாக உள்ளனர், இந்நிலையில் முதலாளி, பாட்டாளிகளான இருவர்க்கத் தவரும் இதே நிலையே பிரதிபலிப்பதாகக் கூறுகின்றனர். பழைய பல தேசங்கள், ஒரு காலத்தில் ஒன்றிணைந்தவை, தற்போது தமது எல்லைகளுக்குள்ளேயே பிற தேசியங்கள் எதிர்ப்பதைக் காண்கின்றனர் — தேசியங்கள் இயல்பாக வளர்ந்து ஒரு நல்ல நாளில் பிரிந்து செல்வதைக் கனவு காண்கின்றனர். உண்மையில் இத் தேசிய உணர்வு எமது கால அரசியல் வாழ்வில் உலகம் முழுவதும் மதிப்புப் பெறுவதை அன்டர்சன் காண்கிறார்.

தேசியம், இனவேறுபாடு பற்றி தற்போது நிலவும் பல்வேறு ஆய்வுகளின் குறைபாடு பற்றி அன்டர்சன் கூறும் வேளை தேசியம் என்ற கோட்பாடு கற்பனையில் தோன்றிய அரசியல் சமூகம் என்றும் ஒருவரை ஒருவர் நன்கு அறிந்த குடும்பம், குலக்குடிக்கு மாறுபட்டது என்றும் கூறினார்:

> சிறிய தேசத்தில் வாழ்பவரும் ஒருவரை ஒருவர் அறிந்திருக்க மாட்டார். நேரில் கண்டோ, கேட்டிருக்க மாட்டார் என்பதினாலேயே கற்பனையானது: ஆயினும் சிந்தையில் மட்டும் ஒரே சமூகத்தில் வாழ்பவர் என்ற படிமம் ஒவ்வொருவரது நினைவிலும் உள்ளது: உண்மையில் சமனின்மையும் சுரண்டலும் ஒவ்வொரு சமூகத்திலும் நிலவிய போதும் தோழமையாக வாழ்வதாக எண்ணிக் கொள்கின்றனர் இறுதியில் இத்தகைய சகோதரத்துவமே சென்ற இரண்டு நூற்றாண்டுகளிலும் பல கோடி மக்கள் இத்தகைய கற்பனையான எண்ணங்களுக்காக உயிரை விடுவதற்கு தூண்டியுள்ளது.

அன்டர்சன் மேலும் கூறினார்:

> இத்தகைய மரணங்கள் தேசியம் எழுப்பிய முக்கிய பிரச்சினையை நேருக்கு நேராகக் கொண்டு வருகின்றது: அண்மைய வரலாற்றின் (இரு நூற்றாண்டுகளில்) சுருங்கிய கற்பனைகள் இத்தகைய மிகப் பெரிய தியாகங்கள் ஏற்படுத்துவதற்கு காரணம் என்ன?



இதற்குரிய விடை தேசியத்தின் பண்பாட்டு வேர்களிலேயே ஆரம்பமாகிறது என அன்டர்சன் நம்புகின்றார்.

(அண்டர்சன் 1983; 15—16)

இனவுணர்வை தூண்டிவிடக்கூடிய பலம் பெற்றிருப்பது ஏன்? இவ்விரு வர்க்கத்தவரும் தமது வர்க்கப் பகைமையினையும் மறந்து ஒரு இனத்தவர் மற்றய இனத்தவருடன் மோதுவது ஏன்? நாம் விடைகாணவேண்டிய அடிப்படைவினுக்கள் இவையாகும்.

இனவுணர்வு வேறுபாடுகள் இலங்கைக்கு மட்டும் விசித்திரமானது என்று நாம் எண்ணிக்கொள்ள முடியாது இன முரண்பாடுகள் காலத்திற்குக் காலம் இந்தியாவின் பல பகுதிகளில் வெடிக்கின்றன: மலேசியாவில் வேகமான பொருளாதார வளர்ச்சி இருந்தபோதிலும் 1969ல் மோசமான வகுப்புக் கலவரங்கள் ஏற்பட்டன, இன்று 'பூமியின் புதல்வர்கள்' என்ற கோட்பாடு அவர்கள் வெறுத்த சீனர்களை ஏற்றுக்கொள்ளச் செய்துள்ளது. புதிதாக சுதந்திரம் பெற்ற பிறநாடுகளில் சிலவற்றைப் போல இலங்கையிலும் காலனித்துவத்தின் பின் தேசத்தைக் கட்டியெழுப்பும் பணி ஆரம்பமாகிறது: இக்கால கட்டத்தில் பெரும்பான்மை இனத்தைச் சார்ந்தவர்கள் தம்முடைய இனத்தின் தனித்துவத்தையே தேசத்தின் தனித்துவ இனமாக காட்ட முயல்கின்றனர். இலங்கையில் சிங்களவர் போல சூடானில் அராபியரும் கென்யாவில் கிதவுமும் சிம்பாவேயில் சோனுவும் நைஜீரியாவில் பூலானி இனத்தவரும் தம்மின மேலாதிக்கம் மூலம் தேசிய ஒருமைப்பாட்டை நிலைநாட்ட முயலுகின்றனர். இந்நிலை பிற சிறுபான்மை இனங்களின் விரக்தியை வெளிப்படுத்தி அதன் மூலம் பெரும்பான்மையினரின் இனவுணர்வு மட்டத்தை



படிப்பகம்

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

உயர்த்தி விடுகிறது. இத்தகைய போக்கு காலனித்துவ ஆட்சியின் வேலை அடங்கியிருந்த பகைமை, கலவரங்களுக்கும் கொரில்லா யுத்தத்திற்கும் மட்டுமல்ல உள்நாட்டு யுத்தத்திற்கும் இட்டுச் செல்கிறது.

* * * *

இவ்வாய்வின் முற்பகுதிகளில் இலங்கையில் இனப் பகைமை சென்ற ஒரு நூற்றுண்டில் பல்வேறு காலக்கட்டங்களிலும் தோன்றியதற்கு சில விளக்கங்கள் தரப்பட்டுள்ளன. இன தேசிய உணர்வுகளின் தோற்றம், அவற்றிடையே ஏற்படும் மோதல், உணர்வுகளிலும் கருத்தியலிலும் பொருளாதார அரசியல் காரணிகள் ஏற்படுத்தும் விளைவுகள் பற்றி ஆழமாகக் கற்பது அவசியமாகும், பெரும்பான்மை வகுப்பினரிடை ஏற்படும் இனவாதம் பற்றியும் இத்தகைய இனவெறி சிறுபான்மையினர் மேல் ஏற்படுத்தும் தாக்கம் பற்றியும் சகல இனத்தவரிடையேயும் உள்ள அறிஞர்களால் ஆராயப்பட வேண்டும்: இவர்கள் நல்நோக்கமும் பகுத்தறிவு கொண்டவர்களாகவும் இருக்க வேண்டும். உயர் கல்வியாளரும் ஆராய்ச்சியாளரும் தாக்குதலுக்கும் ஐயப்பாட்டுக்கும் பொய்ப் பிரச்சாரத்திற்கும் உட்படாத சூழலிலேயே இத்தகைய ஆய்வுகள் பயன்தரத்தக்க முறையில் நடைபெற முடியும்.

இனவாதம் பரந்துபட்ட தொழிலாள வர்க்கத்திற்கோ இடதுசாரி கோட்பாட்டின் நலனுக்கோ உகந்ததல்ல, என முடிவாக அழுத்தமாக கூறவேண்டும். இலங்கைத் தொழிலாளர்கள் 1890—1930 ஆகிய நாற்பது ஆண்டுகளில் அவர்களது இயக்கங்கள் ஒன்றுபட்ட வர்க்கப் போராட்ட கொள்கையையே கொண்டிருந்தன: மறுமலர்ச்சியாளர்கள் சிறுபான்மையினத்திற்கு எதிராக பகைமையை வளர்க்க முற்பட்டபோது தொழிலாளர் ஐக்கியம் குறைக்கப்படவில்லை. 1920களில் இருந்த தொழிலாள வர்க்க தலைவர்கள் 1930களில் வகுப்புவாதிகளாய் மாறியபோதும் அடுத்த தசாப்தங்களில் தொழிலாளர் இனவேறுபாடுகளை மறந்து இடதுசாரிகளின் தலைமையில் பல்வேறு தீவிர



போராட்டங்கள் மூலம் தமது வர்க்க உணர்வை வெளிப்படுத்தினர். இன்றும் தொழிலாள வர்க்கத்தின் முற்போக்கான பகுதியினரும் விவேகம் மிக்க பகுத்தறிவாளரும் இனப்பகையால் வீழ்ச்சியடையும் நாட்டை மேலே உயர்த்தி முன்னேற்றுவதில் உதவ முடியும். தற்போது பகுத்தறிவு தாழ்நிலையில் உள்ளது. ஆரிய இனத்தவர் என்ற ஐதீகமும், விஜயன் வம்சத்தவர் என்ற பொய்மையும், துட்டகைமுனு போல இன வீரபுருஷர்களை உருவாக்குகிறோம் என்ற கூற்று ஆகியவை இன்று புத்துயிர் பெற்றுள்ளன: இவை மீண்டும் இனவெறியைத் தூண்டும் பலமிக்க குறியீடுகளாக உள்ளன.

பத்திரிகைகள் எல்லாம் இனவாதமும் பகட்டான தேசீயக் கொள்கையும் கொண்டவையாக உள்ளன. அதே வேளை சோதிடப் பலாபலன் கூறுவதோடு பேய்பிசாசு கதைகளையும் வெளியிடுகின்றன. குழப்பமேற்பட்ட இக்கால கட்டத்தில் அமைதியின்மையையும் உறுதியின்மையையும் பிரதிபலிப்பதாக தெய்வாம்சம் பொருந்திய மனிதர்களும் பொய்மையான ஆயர்களும் பௌத்தசாமிமாரும் ஆசிரியர்களும் பழமையை போற்றுபவர்களும் சுறுசுறுப்பாக செயலில் ஈடுபட்டுள்ளனர். ஆகவே போராட்டம் நீண்டதாகவும் கடுமையானதாகவும் இருக்கும்: ஆயினும் நீதி விரைவாகவோ அல்லது சிறிது காலம் தாழ்த்தியோ நிலைபெறும் என நம்புகிறேன்.

———



படிப்பகம்

50/-

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

# இலங்கையின் இன, வர்க்க முரண்பாடுகள்

டாக்டர் குமாரி ஜெயவர்த்தனு இலங்கையின் மார்க்சிய அறிஞர்களில் ஒருவர். இலங்கையின் அரசியல், சமூக, தொழிலாளர் இயக்கங்களின் வளர்ச்சியிலும் அவற்றின் விஞ்ஞான அடிப்படையான ஆய்விலும் ஆர்வம் கொண்டவர்; பெண் விடுதலை இயக்கங்களில் முன்னிற்பவர்.

இந்நூல் சிங்கள—பௌத்த விழிப்பு நிலையின் 100 ஆண்டு கால (1883—1983) வரலாற்றை அரசியல், பொருளாதார, சமூக விஞ்ஞான ரீதியில் ஆராய்கிறது.

1883ன் கிறிஸ்தவ எதிர்ப்பியக்கம், 1915ன் முஸ்லிம் களுக்கெதிரான வன்முறைக் கலவரம், 1930களில் மலையாளிகளை நாட்டை விட்டு விரட்டுதல் ஆகியவற்றேடு நின்று விடவில்லை. 1948ல் மலையகத் தமிழரை நாடற்றவராக்கியபின் 1956ல் இலங்கைத் தமிழருக்கெதிராக ஆரம்பித்த இனக் கலவரம், தொடர்ந்து இடையிடை வன்முறை வடிவமெடுத்து, 1983ல் அதன் உச்சக் கட்டத்தை அடைகிறது. சிங்கள பௌத்தரின் இவ் வரலாறு ஆதாரங்களுடன் இந்நூலில் அலசப்படுகிறது.

மேலும், சித்தாந்த ரீதியில் இந்நூல் 'தேசியம்' என்ற கோட்பாடு காட்டும் 'கற்பனைச் சமூகத்'திற்காக உலகில் நடைபெற்ற மரணங்கள், 'தியாகங்கள்' பற்றிய அறிஞர் கூற்றுக்களையும் இறுதி அத்தியாயத்தில் ஆராய்கிறது.

படிப்பகம்